(1479)

T. N. L. A. Debates

Official Report

Vol. 1 No. 6

1980

V211,31 N80
N81.1.6.
123051

310/82
1479

வெளியீடு 27–10–1980] [Issued 27–10–1980

...SIONER OF TAMIL NADU
...AND HISTORICAL RESEARCH
2 ... 1980
... MADRAS...

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை 1980 ஜூன் 27—தொகுதி I—எண் 6
Friday 27th June 1980—Volume I—No. 6

©
தமிழ் நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1980

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை–600 009
Assembly Department, Fort, St. George, Madras-600 009.

விலை 3-15 காசுகள்] [Price 3-15 Paise

V21.31 N58

N21.1.6

123051

## உள்ளடக்கம்

27—6—1980


| | பக்கங்கள் |
|---|---|
| **வினாக்கள்—விடைகள்—** | 223—225 |
| உடுக்குறியிட்ட வினா | |
| **ஒழுங்குப் பிரச்னை—** | 226—230 |
| விதிமுறைகள் குறித்த சுற்றறிக்கை .. | |
| **அறிவிப்புகள்—** | |
| (அ) 1980—81ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை அளிக்க ஆளுநர் நாள் குறிப்பிட்டுள்ளது .. | 231 |
| (ஆ) முக்கிய எதிர்கட்சி, எதிர்கட்சித் தலைவரை அங்கீகரித்தல் .. .. | 231 |
| ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்— .. .. | 231—411 |
| விவாதம்—(தொடர்ச்சி) .. .. | 231—241 |
| திரு. அ. ரகுமான்கான் .. .. | 242—236 |
| மாண்புமிகு டாக்டர் திரு. இரா. நெடுஞ்செழியன் .. | 391—392, 242—247 |
| திரு. கோவைத்தம்பி .. .. | 248—252 |
| திரு. எஸ். சிவராமன் .. .. | 252—259 |
| திரு. குமரி அனந்தன் .. .. | 259—265 |
| திரு. கோ. விஸ்வநாதன் .. .. | 265—272 |
| திரு. கி. சட்டநாத கரையாளர் .. | 272—280 |
| திரு. எம். செல்லமுத்து .. .. | 281—284 |
| திரு. மி. வின்சென்ட் .. .. | 284—289 |
| திரு. பொ. உத்திராபதி .. .. | 295—299 |
| திரு. ப. தனபால் .. .. | 299—301 |
| திரு. ஏ. சாகுல் ஹமீது .. .. | 301—307 |
| திரு. பெ. சு. திருவேங்கடம் .. .. | 307—309 |
| திரு. மு. ஜான் வின்சென்ட் .. .. | 312—319 |
| திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் .. | 320—323 |
| திரு. தி. அன்பழகன் .. .. | 323—224 |
| திரு. எஸ். என். இராமசாமி .. .. | |

| | | பக்கங்கள் |
|---|---|---|
| 4. | ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி | |
| | திரு. ஜே. சி. டி. பிரபாகரன் .. .. | 324—327 |
| | திரு. ஏ. டி. குலசேகர் .. .. | 327—329 |
| | திரு. ந. குலசேகர பாண்டியன் . | 329—336 |
| | திருமதி. டி. யசோதா .. .. | 336—341 |
| | திரு. சேலம் மு. ஆறுமுகம் .. .. | 341—348 |
| | திரு. கு. ரமணி .. .. | 348—356 |
| | திரு. டாக்டர் கே. பி. இராமலிங்கம் . | 357—360 |
| | திரு. எம். ஆறுமுகம் .. .. | 360—365 |
| | திரு. கே. குப்புசாமி .. .. | 365—370 |
| | திரு. பாபு ஜனார்த்தனன் .. .. | 371—375 |
| | திரு. ரா. கு. பெருமாள் .. .. | 375—79 |
| | திரு. ஜி. மூர்த்தி .. .. | 379—382 |
| | திரு. ஏ. எம். சேதுராமன் .. .. | 383—386 |
| | திரு. டி. வெங்கடரெட்டி .. .. | 387—389 |
| | | 391—393 |
| | மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு .. | 389—390 |
| | திரு. பொ. விஜயராகவன் .. .. | 393—399 |
| | திரு. எஸ். ஜகத்ரட்சகன் .. .. | 399—402 |
| | திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் .. | 402—407 |
| | திருமதி. தா. ரோசாம்பாள் .. .. | 407—411 |
| 5. | பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.. . | 411—412 |


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**வெள்ளிக்கிழமை, 1980 ஜூன் 27.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்"

சொற்களில் பயனுடைய சொற்களை மட்டும் சொல்லுதல் வேண்டும்; பயனற்ற சொற்களைச் சொல்லுதல் கூடாது.

### 1. வினாக்கள்-விடைகள்.

**உடுக்குறியிட்ட வினா.**

**நெய்வேலி இரண்டாவது சுரங்கப் பணிகளுக்கென நில ஆர்ஜிதம்.**

*இ. கா. வி. எண் 1—**திரு. ஆர். தியாகராசன் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் பின்வரும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலி இரண்டாவது சுரங்கப் பணிகளுக்கென விவசாயிகளிடமிருந்து ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு ஈட்டுத் தொகையும், அவர்களுக்கு வேலைவாய்ப்பும் குடியிருப்பு மனையும் வழங்கப்படும் என்று அறிவித்திருந்தும், நடவடிக்கை மேற்கொள்ளப்படாததால், வேலை ஆரம்பித்த நேரத்தில் மறியல் ஏதும் நடைபெற்றதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பெற்ற நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** (அ) ஆம்.

(ஆ) சம்பந்தப்பட்ட விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி சுரங்க நிறுவனத்தினருடனும், தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர், தொழிற்துறை மற்றும் வருவாய்த் துறைகளின் செயலர்களுடனும், இதுபற்றி பேச இருக்கின்றேன். சுமுகமான முடிவு ஏற்படுமென நம்புகின்றோம்.

[1980 ஜூன் 27

**திரு. ஆர். தியாகராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நெய்வேலி இரண்டாவது சுரங்க வேலை ஆரம்பிப்பதற்காக அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகளின் நிலங்களுக்கு குறைந்த விலை நிர்ணயம் செய்து, கிரயம் கொடுத்திருக்கிறார்கள். ஒன்றரை வருடம் ஆகியும் அவர்களுக்கு மாற்று இடம், மாற்று மனை, வேலைவாய்ப்பு போன்றவைகளுக்கு இன்று வரையில் அந்தப் பகுதி மக்களுக்கு உறுதியளிக்கப்படவில்லை. ஆகவே, அங்கே வேலையை ஆரம்பிக்கச் செல்லும்போது அங்குள்ள மக்கள் எங்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளுக்கு உத்தரவாதம் அளித்த பிறகு வேலையைத் தொடங்குங்கள் என்று மறுப்புத் தெரிவித்தார்கள். அதன் காரணமாக அங்கே சில சச்சரவுகள் ஏற்பட்டு, 55 கிராமவாசிகள் போலீசாரால் கைது செய்யப்பட்டு, போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விளக்கம் வேண்டாம்; கேள்வியைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. ஆர். தியாகராசன் :** அந்தப் பகுதி மக்களுக்கு இன்றுவரையில் உத்தரவாதம் அளிக்கப்படவில்லை. மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்ட போது நான் வாய்மொழியாக உத்தரவாதம் அளிக்க முடியுமே தவிர எழுத்து மூலமாகக் கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார். எனவே அந்தப் பகுதி மக்களுக்குச் சேரவேண்டிய உரிமை அவர்களுடைய நிலங்களுக்கு நியாயமான விலை நிர்ணயம், வீடுகளுக்கு நியாயமான விலை நிர்ணயம், அங்கே வாழக்கூடிய ஏழைக் குடும்பங்களுக்கு வீட்டுக்கு ஒருவருக்கு வேலை வாய்ப்பு போன்றவைகளுக்கு நம்முடைய தமிழக அரசு உத்தரவாதம் அளிக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவரவர்களே, விவசாயிகளுடைய நலன்களைப் பாதுகாப்பதற்காகத்தான், அதுபற்றிப் பேசுவதற்காகத்தான் நெய்வேலி சுரங்க நிறுவனத்துடனும், அதைப்போல மாவட்ட ஆட்சித் தலைவர், தொழில் துறை செயலர், வருவாய்த்துறைச் செயலர் ஆகியோருடனும் இன்று மாலை பேச இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** தலைவரவர்களே, விவசாயிகளிடமிருந்து ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு ஈட்டுத்தொகை வழங்குவது பற்றியும், அவர்களுக்கு வேலைவாய்ப்பு, வீட்டு மனை ஆகியவை வழங்கப்படுவது பற்றியும் குறிப்பிடப்படுகின்றபோது அது எந்தக் காலத்தில் முடிக்கப்படும் என்பதை அரசு தெரிவிக்குமா ?



980 ஜூன் 27]

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** சட்டப் பேரவைத் தலைவர்களே, இப்போது பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே எப்போது தேவையோ அந்த நேரத்தில் அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நெய்வேலியில் இந்த அமைப்பு ஏற்படுவதால் எத்தனை விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். எத்தனை ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது. அந்த விவசாயிகளுக்கு அரசு மாற்று உதவி செய்வதற்கு என்ன திட்டம் வைத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவரவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. என். வரதராஜன் :** தலைவரவர்களே, நில ஆர்ஜிதம் செய்கிற போது ஏற்படுகிற இழப்புக்கும், எதிர்கால வாழ்க்கையில் ஏற்படுகிற இழப்புக்கும் தகுந்தாற்போல அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தப்பட வேண்டும்.. இன்னும் அதிலே சரியான முறை பின்பற்றப்படவில்லை. ஆகவே இது குறித்து மத்திய அரசின் 'கைட் லைன்' என்ன ? இனிமேலாவது இதிலே ஒரு மாறுதல் ஏற்படுத்துவதற்கு மாநில அரசு முயற்சிகள் மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவரவர்களே, நில ஆர்ஜிதச் சட்டத்தின் கீழ் மாநில அரசு அதிகாரிகளால் ஏற்கெனவே நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு காம்பன்சேஷன் கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் காம்பென்சேஷன் கொடுத்தது போதாது என்றும் அதிகமாக வேண்டும் என்றும் விவசாயிகள் கேட்கிறார்கள். ஆகவே நிலக்கரி சுரங்க நிறுவனத்துடன் விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கின்ற காம்பென்சேஷனை அதிகப்படுத்தித் தருவதற்காகத்தான் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒழுங்குப் பிரச்சினை

### விதிமுறைகள் குறித்த சுற்றறிக்கை

**திரு. ஈ. உமாநாத் :** தலைவரவர்களே, மிக முக்கியமான ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர். எங்களுக்கு சர்குலர் பண்ணிய பேப்பரிலே 312-வது விதியின் கீழ் சில மாற்றங்கள் அனுப்பி இருக்கிறீர்கள். அதைப் பார்த்துப் பார்த்தேன். அந்த மாற்றங்கள் வைப்பேட்டில் ரூல் 312 என்பது என்னவென்று தந்தது. அந்த ரூலைப் பொருத்தவரையில் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

"All matters not specially provided for in the Constitution or in these rules and all questions relating to the detailed working of these rules shall be regulated in such manner". Residuary powers of the Speaker : : : :

அதிலே மிச்சம், சொச்சம் விஷயங்கள் சம்பந்தமாக ரூல் போடுவதற்கான அதிகாரம் என்று இருக்கின்றது.

அதிலே இரண்டு விஷயங்களிலேதான் நாங்கள் தலையிட்டு மாற்றங்கள் கொடுக்கலாம். ஒன்று, விதிகள் இல்லை என்றால் நீங்கள் ஒரு விதியைப் பிறப்பிக்கலாம். அல்லது இருக்கும் விதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஏதாவது மாற்றம் தேவை என்று சொன்னால் நீங்கள் நிச்சயமாகச் செய்யலாம். இதிலே என்னுடைய கருத்து என்னவென்றால் இந்த இரண்டு ஷரத்துக்களையும் உங்களுடைய மாற்றம் மீறி இருக்கிறது என்பதுதான். நீங்கள் அனுப்பி இருக்கிற மாற்றத்திலே என்னுடைய இரண்டாவது பாயிண்ட் ஆப் ஆர்டரைச் சொல்கிறேன். அதாவது ஒரே நாளில் இரண்டிற்கு மேற்பட்ட அறிவிப்புக்கள்—நோட்டீஸ்—வரப்பெறின் அவற்றில் மிக அவசர முக்கியத்துவம் வாய்ந்த இரண்டுக்கு மட்டும் முன்னுரிமை கொடுக்கப்படும் என்றும் மற்ற அறிவிப்புக்கள் செயலற்றதாகிவிடும், அதாவது லேப்ஸ் ஆகிவிடும் என்று கூறியிருக்கிறீர்கள். ஆனால் ஏற்கெனவே ரூல் இருக்கிறது. அந்த ரூலில் லேப்ஸ் ஆவதைப் பற்றி சம்பந்தமாக என்ன சொல்லப்பட்டிருக்கின்றது என்று சொன்னால்

"Rule 54, sub-section (7) says, "In the event of more than two matters being presented for the said day, priority shall be given to the two matters which in the opinion of the Speaker are more urgent and important".



1479.

(பத்திகள் 9-10)

The other notices may either be taken up on any subsequent day to be fixed by the Speaker, or if such notices could not be taken up within the duration of the sittings, the statements in respect of the notices not taken up may be circulated to the members.

MR. SPEAKER : I will give my answer. Hon. Members may renew it if they want to pursue. There is a possibility of bringing it again.

**திரு. ஈ. உமாநாத் :** பாலிஸி இல்லை. பேரவைக்கு என்ன அதிகாரம் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு வருகிறேன். விதியை மாற்றுவதற்கு உங்களுக்கு அதிகாரம் கிடையாது. இந்த அவைக்குத்தான் அதிகாரம்; ஆனால் மாற்றியிருக்கிறீர்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த விதி மாற்றப்படவில்லை. விதிக்கான விளக்கங்கள்தான் கொடுக்கப்படுகிறது. இண்டர்பிரடேஷனை எப்படி வேண்டுமானாலும் கொடுக்கலாம். சரியானதைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**திரு. ஈ. உமாநாத் :** விதி மாற்றப்பட்டிருக்கிறது என்பது இங்கே தெளிவாக இருக்கிறது. விதியிலே என்ன சொல்லப்படுகிறது என்றால், அந்த இரண்டு நோட்டீஸைத் தவிர".

"Other notices may either be taken up on any subsequent date to be fixed by the Speaker".

விதியிலே லேப்ஸ் ஆகும், செயலற்றுப் போகும் என்கிற பேச்சே இல்லை. உங்கள் வசமே 'பெண்டிங்' இருந்தால், நீங்கள் அதைப் புதுப்பிக்கலாம் என்பதுதான். அந்த ரூலை நீங்கள் மாற்றுகிறீர்கள். அதை மாற்றுவதற்கு உங்களுக்கு அதிகாரம் இல்லை. இந்த அவைக்குத்தான் அதிகாரம். 'லேப்ஸ்' ஆனதைத் தேவைப்பட்டால் மட்டுமே புதுப்பிக்கலாம் என்று சொன்னால் நீங்கள் அதை 'லேப்ஸ்' பண்ணி விடக்கூடாது. உங்களுக்கு எக்ஸ்ட்ரா செக்ரட்டேரியட் இருக்கிறது. எங்களுக்கு என்ன இருக்கிறது?

இரண்டாவது என்ன என்று சொன்னால், ஏற்கெனவே இருக்கும் விதிகளுக்கு நடைமுறை இல்லாவிட்டால், நீங்கள் புதிய நடைமுறைகளைக் கொண்டு வரலாம்; லோக் சபாவிலே செயல்படுத்துவதற்கு என்று

(திரு. கா. உமாநாத்) [1980 ஜூன் 27

“டைரக்ஷன் ஆஃப் தி சேர்மன்” என்று “ஸ்பீக்கர் டைரக்ஷன்” செயிஞ்ச் பண்ணி இருக்கிறது. நான் ரூலில் ஸ்பீக்கர் டைரக்ஷன் என்று செயிஞ்ச் ஆக இல்லை. நீங்கள் அதைக் கொண்டுவரப் போகிறீர்கள். நல்லது வரவேற்கிறோம்.

கால் அட்டென்ஷனைப் பொறுத்தவரைக்கும் எடுக்கக்கூடிய பொருள்கள் எல்லாப் பொருள்களுக்கும் பொருந்தும். ஆளுக்கொரு கொஸ்டின் கொடுக்கலாம். அட்ஜர்ன்மெண்ட் மோஷனில் ஒரு ஆள்தான் கொடுக்கமுடியும்.

அடுத்தபடி, ஒரு நோட்டீஸை நான்கைந்து பேர்கள் கையொப்பம் இட்டு அனுப்பியிருந்தால், முதலில் கொடுக்கப்பட்ட உறுப்பினரின் பெயரால் கொடுக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படும் என்று சொல்லப்படுகிறது.

ஒரு பொருள் பற்றி அறிவிப்பு ஒரு உறுப்பினரிடமிருந்து வரப்பெற்றால், மேலும் இரண்டு மூன்று பேர்கள் அதே பொருள் பற்றியே கொடுத்திருந்தால், நிகழ்ச்சி நிரலில் சேர்ப்பதற்கு ஒரு நபர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும் அப்படித் தேர்ந்தெடுப்பது சட்டமன்றத்துறை செயலாளரால் எடுக்கப்படும் என்றும் சொல்லப்படுகிறது. அது சரியல்ல, எங்கள் எக்ஸிஸ்டிங் ரைட்டையே அது பாதிக்கிறது. தொகுதியிலே முக்கியமான விஷயம் நடைபெறுகிறது. நான் அதை கால் அட்டென்ஷனிலே கொடுக்கிறேன். மேலும் 10 பேர்கள் கொடுக்கிறார்கள். ஒருவர் பெயர்மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால், அதில் என் பெயர் விடப்பட்டிருந்தால், நான் அந்தப் பிரச்சினையையே ரைஸ் பண்ணவில்லை என்றுதான் தொகுதி மக்கள் நினைத்துக்கொள்வார்கள்.

பாலட்டில் என் பெயர் வரவில்லை என்பது மக்களுக்குத் தெரியுமா? ஆகவே எங்களுக்கு இருக்கிற ‘ரைட்ஸ்களை’ பறிக்கக் கூடாது. தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, நாங்கள் மகிழ்ச்சியோடு சொன்னோம், நாடாளுமன்றத்தில் உள்ள சில வசதிகள் கூடுதலாக இங்கும் கொடுக்கப் படவேண்டும் என்று சொல்லி;

ஆகவே இருக்கிற உரிமைகளைத் தயவுசெய்து பறிக்கக் கூடாது. இங்குள்ள முறைகள் வேறு விதத்தில் வேறு முறைகளாக இருக்கின்றன. ஆகவே இவை பற்றி நாம் ‘க்ளோஸ் க்வார்ட்டர்ஸ்’ல் பேசி முடிவு செய்வது நல்லது. அதுவரையில் இதை ‘அபெயன்ஸ்’ல் வைப்பது நல்லது.



1980 ஜூன் 27]

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அவையில் தொடர்ந்து நாங்கள் அனுபவித்து வந்த உரிமை எடுக்கப்படுகிற ஆபத்து இதில் இருக்கிறது என்பதை திரு. உமாநாத் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். கால் அட்டென்ஷன் கொண்டு வரும்போது ஒரு நாளைக்கு பல ‘கால் அட்டென்ஷன்ஸ்’ வந்தாலும் இரண்டு எண்ணைத்தை எடுத்துக் கொள்ளும் என்பதை எந்தக் காரணத்தைக் கொண்டும் நீங்கள் எடுத்துவிட முடியாத முறையில் இங்கே உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது.

Rule 54, sub-clause (6) : Not more than two matters shall be raised.

இரண்டு கால் அட்டென்ஷனுக்கு மேல் எடுத்துக் கொள்வதில்லை என்று தெளிவாக உள்ளது. இப்போது நீங்கள் போட்டிருக்கிற டயரக்டிவ் பிரகாரம் இரண்டு இருக்காது, ஒன்றுதான் எடுத்துக்கொள்ளப்படும் என்ற நிலை இருக்கிறது. தலைவர் அவர்களுடைய ‘டிஸ்கிரிஷனரி பவர்ஸ்’படி

You have got certain limits, but you have gone beyond the limits. I put it in a very mild way with all respect to the Chair that you are going beyond that residuary power and taking away the original power to amend the clause.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரண்டு என்பது இருக்கத்தான் இருக்கிறது.

THIRU K. RAMANI : “Not more than 2 matters shall be raised”. Two matters are there for us. Nobody can take that away from us.

MR. SPEAKER : We are not taking it out. The hon. member can go through it again.

THIRU K. RAMANI : Not simply to regulate this thing. If you make some arrangements or rules to regulate the whole proceedings we have no objection. That is not the matter. The thing is, we have a right to raise two matters of “calling attention in a day. That is restricted now. This is not correct. This is most important.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரண்டு என்பது குறைக்கப்படவில்லை.

We are not curtailing it. The expression “two” is still there. “Not more than two matters”. என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, இரண்டு என்பது குறைக்கப்படவில்லை.

**திரு. கு. ரமணி :** அப்படிப்பட்ட என்க்ரோச்மென்ட் வரக் கூடாது. உறுப்பினர்களது 'எக்ஸிஸ்டிங் ரைட்ஸ்' போகக் கூடாது. எவ்வளவோ பேர்கள் பல விஷயங்கள் குறித்து நோட்டீஸ் கொடுக்கிறோம். அவர்கள் பெயர்களாவது இந்த அவைக்குள்ளே வரவேண்டும். உறுப்பினர்களின் உரிமைகள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படக் கூடாது. அவர்கள் உரிமைகளைக் காக்க வேண்டியது தங்கள் கடமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்களுடைய உரிமைகளை, எந்தவிதத்திலும் பாதிக்கக்கூடாது, காத்துக் கொடுப்பது என் கடமை—அதை உணர்த்தியதற்காக நன்றி. செயலற்றதாகிவிடும் என்று போட்டிருப்பதற்குக் காரணம் முறையாக அனுமதிக்காது விட்டு விட்டால் அந்தப் பொருளே காலாவதியாகிவிடும். செயலற்றதாகப் போய் விட்டதை மேலும் திரும்பக் கொண்டு வருவதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. ஆகவே, இதுபற்றி நாம் நீண்ட நேரம் விவாதம் செய்து நேரத்தை வீணாக்க வேண்டாம். அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில், எல்லோரையும் கலந்து, உறுப்பினர்கள் எந்தமாதிரி விரும்புகிறார்களோ அந்தமாதிரி செய்து கொள்ளலாம்.

**திரு. கு. ரமணி** உங்கள் டயரக்டிவ், 'ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட அறிவிப்புகள் பேரவைத் தலைவர் அவர்களால் அனுமதிக்கப்பட மாட்டாது' என்பதாகும். தாங்கள் இதை கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் இதைப்பற்றி விவாதித்து முடிவு எடுக்கும்போது முதலில் இதை எடுத்துக்கொள்ள வேண்டும். ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட அறிவிப்புகள் பேரவைத் தலைவர் அவர்களால் அனுமதிக்கப்பட மாட்டாது என்றால் இது எப்படிப் போய் முடியும்? இதன் 'இம்ப்ளிகேஷன்' என்ன?

**திரு. மு. அம்பிகாபதி :** கவன ஈர்ப்பு, ஒத்திவைப்புத் தீர்மானம் என்பவை அரசாங்கம் சரியாக நடைபெறுவதற்காக எதிர்கட்சிகள் அரசாங்கத்தினுடைய கவனத்தை திருப்புவதற்காகக் கொண்டுவரக் கூடிய முக்கியமான விஷயங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த அடிப்படையை நான் புரிந்து கொண்டிருக்கிறேன். இப்பிரச்சினைகள் குறித்து பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் பேசிக்கொள்ளலாம்.

**திரு. மு. அம்பிகாபதி :** நன்றி.



(முற்பகல் 9-20)

### 3. அறிவிப்புகள்.

#### (அ) 1980-81 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை அளிக்க ஆளுநர் நாள் குறிப்பிட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1980-81 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு அளிக்க, பேரவை விதி 196, உள்விதி (1)-ன்கீழ், 2—7—1980 ஆம் நாள் முற்பகலை ஆளுநர் அவர்கள் குறித்திருக்கிறார்கள் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

#### (ஆ) முக்கிய எதிர்க்கட்சி, எதிர்க்கட்சித் தலைவரை அங்கீகரித்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு மேலும் ஒரு அறிவிப்பு.

பேரவை குறைவெண்ணிற்குத் தேவையான எண்ணிக்கைக்கு அதிகமாக இப்பேரவையில் இரு கட்சிகள் உள்ளன. அவையாவன—திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ் (இ) ஆகியவை ஆகும். அவ்விரு கட்சிகளில் பெரும்பான்மை எண்ணிக்கையான 38 உறுப்பினர்களைக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழக கட்சியை இப்பேரவையில் முக்கிய எதிர்க்கட்சியாக அங்கீகரிக்கிறேன். அதனுடைய தலைவர் டாக்டர் மு. கருணாநிதி அவர்களை எதிர்க் கட்சித் தலைவராக அங்கீகரிக்கிறேன். அக் கட்சியின் துணைத் தலைவராக திரு. க. அன்பழகன் அவர்கள் இயங்குவார்கள்.

### 4. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி).

**திரு. அ. ரகுமான்கான் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற இந்தத் தீர்மானத்தை கழகத்தின் சார்பாக, நான் சார்ந்திருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களை இந்த மாமன்றத்தினுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். இடைவேளைக்குப் பிறகு மீண்டும் சினிமா ஆரம்பிப்பது போல்

(திரு. அ. ரகுமான்கான்) [1980 ஜூன் 27

அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்சி இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறது. ஜனநாயக சம்பிரதாயத்தை ஒட்டி, இந்த புதிய ஆட்சிக்கு நான் வாழ்த்துச் சொல்கிறேன்.

ஆளுநர் உரையைப் பற்றி இந்த மன்றத்திலே இருக்கக்கூடிய உறுப்பினர்களுக்குத் தெரியும். ஆளுநர் உரை என்று சொல்வது அரசாங்கத்தினுடைய கொள்கைகளை அறிவிப்பதாகும். அரசாங்கம் என்ற கப்பல் எந்தத் திசை நோக்கிச் செல்கின்றது என்பதைக் கோடிட்டுக் காட்டக்கூடிய திசை காட்டும் கருவி ஆளுநர் உரை. இன்னும் சொல்லப் போனால், உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் சினிமாவில் கதாநாயகனாக வருகிறார்; பாடுகிறார். அவர் பாடுகிறார் என்று சொன்னால் அது அவரது சொந்தப் பாடல் அல்ல. அவர் வாயை அசைப்பார், பின்னணிப் பாடகர் குரல் கொடுக்கிறார். அந்தப் பாடலை பாடலாசிரியர் எழுதுவார்; இசை அமைப்பாளர் இசை அமைக்கிறார். அதுபோலத்தான் இந்த ஆளுநர் உரை என்பது இந்த அரசாங்கத்திற்குச் சொந்தமான உரை. ஆளுநர் உரைக்கும், கவர்னருக்கும் சம்பந்தமில்லை. இதை மன்ற உறுப்பினர்கள் தெளிவாக அறிவார்கள்.

ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் எல்லாம், இந்த உரையிலே எல்லா அம்சங்களும் அமைந்திருக்கிறது என்று சொன்னார்கள். அவர்களுடைய தோழமைக் கட்சிக்காரர்கள் பெரிதும் பாராட்டினார்கள். அவர்களுடைய நிலைமை என்ன என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. காரணம், ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களும், அவர்களை ஆதரிக்கின்ற தோழமைக் கட்சிக்காரர்களும் இதை ஆதரித்துப் பேசவேண்டிய நிலையிலே இருக்கிறார்கள். எனவே, அவர்கள் அப்படித்தான் பாராட்டித் திருவார்கள்.

இந்த நேரத்தில் நான் ஒன்றை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். ஆளும் கட்சிக்காரர்கள் கேட்கலாம்—எதிர்க் கட்சி என்பதற்காகவே எல்லாவற்றையும் எதிர்ப்பது முறை தானா என்று. ஆனால் எங்கள் கழகத்தைப் பொறுத்தவரையில் எல்லாவற்றையும் எதிர்ப்பது என்பது எங்கள் கொள்கை அல்ல. நல்ல அம்சங்கள் இருந்தால், அதை ஆதரிப்போம். தவறான அம்சங்கள் இருக்குமானால், அதை மக்கள் மன்றத்திலே சுட்டிக்காட்டி, அந்தத் தவறுகள் நடக்காமல் இருப்பதற்கு நாங்கள் போராடுவோம். அந்த அடிப்படையிலே இந்த ஆளுநர் உரையிலே சில நல்ல கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்குமானால், நிச்சயமாக நாங்கள் வரவேற்போம். அந்த அடிப்படையிலே,



1980 ஜூன் 27] (திரு. அ. ரகுமான்கான்)

இங்கே தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவப்படும் என்று இந்த அரசு அறிவித்திருக்கிறது. கழகத்தின் சார்பாக நான் அதை வரவேற்கிறேன். அதுபோல, இந்த தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்து எங்கள் தேர்தல் அறிக்கையிலேயும் சொல்லப்பட்டிருக்கிறது. அதையடுத்து, வேலையற்ற பட்டதாரிகளுக்கு நிவாரணம் கொடுக்கப்பட இருப்பதையும் நாங்கள் ஆதரிக்கிறோம். மேற்கு வங்காளத்தில், கேரளாவில், திரிபுராவில் இந்தத் திட்டம் இப்போதல்ல, ஏற்கெனவேயே, அமுல் படுத்தப்பட்டிருக்கிறது. எங்களுடைய தேர்தல் அறிக்கையிலே 100 ரூபாய் வேலையற்ற பட்டதாரிகளுக்கு, உதவித் தொகையாக வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறோம். ஆக அந்த அடிப்படையில் இந்த இரண்டு கருத்துக்களையும் நாங்கள் எங்கள் கட்சியின் சார்பாக ஆதரிக்கிறோம். ஆனால், அதே நேரத்தில், இந்த ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கின்ற வாக்குறுதி நிறைவேற்றப்படுமா என்பதை அருள்கூர்ந்து பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இப்போது நடைபெற்ற தேர்தலின்போது கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமென்பதைக் கூட இரண்டாவது கட்டமாக எடுத்துக் கொள்கிறேன். இடையில் ஆட்சி கலைக்கப்பட்டு அவர்கள் மீண்டும் வந்திருக்கிறார்கள். அதற்கு முன்பு தொடர்ந்து இரண்டரை ஆண்டு காலம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தார்கள்.

இதற்கு முன்பு நடந்த தேர்தலின்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பலவித வாக்குறுதிகளை வழங்கினார்கள். அவர் கொடுத்த வாக்குறுதிகளை அந்த இரண்டரை ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றியிருக்கிறார்களா?

நம்முடைய முதல்வர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். விவசாயிகளுக்கு மாதச் சம்பளம் தருவோம், போனஸ் தருவோம். அரிசி ஆலைகளைத் தேசியமயமாக்குவோம், பத்தாயிரம் பேருக்கு போலீசில் வேலை தருவோம்; விபசாரத் தடைச் சட்டத்தால் பெண்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகையால் விபசாரத் தடைச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வரப்படும், மக்கள் பிரதிநிதிகள் தவறு செய்வார்களானால் ஐந்தாண்டு காலத்திற்குள்ளாகவே அதே மக்கள் அவர்களைத் திரும்ப அழைக்க (ரைட் டு ரீகால்) வழிவகைகள் செய்ய முயற்சி செய்வோம் என்றெல்லாம் நடந்த தேர்தலின்போது வாக்குறுதிகள் கொடுத்தார்கள். ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு வெளிநாடுகளில் வேலை தேடிப் போகிறவர்களுக்கு ஓவர்சீஸ் எம்ப்ளாய்மென்ட்டுக்கான வாய்ப்பை உருவாக்குவோம் என்று சொன்னார்கள். இந்த வாக்குறுதிகள் எல்லாம்

நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா என்றால் நிச்சயமாக இல்லை. அப்படி நிறைவேற்றப்படாமல் இருக்க என்ன காரணம்? வழக்கம்போல் ஏமாற்றி ஆட்சிப் பொறுப்புக்கு வந்தார்கள். இப்போதும் அதே நிலைமைதான் நடைபெற்றிருக்கிறது.

தேர்தல் நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் கேட்ட கேள்வி—'உங்கள் கூட்டணியைச் சேர்ந்த இந்திரா காங்கிரஸ் கட்சி மத்தியில் ஆள்கிறது. தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றினார்களா? விவசாயக் கடன்களை ரத்து செய்யப்பட்டனவா? விலைவாசி விஷம் போல் ஏறுவது தடை செய்யப்பட்டதா? தாலிக்குத் தங்கம் தரப்பட்டதா? என்றெல்லாம் கேட்டார்கள். இந்திரா காந்தி அம்மையார் ஆட்சிப் பொறுப்பேற்று ஐந்து ஆண்டு காலமா முடிந்து விட்டது? நான்கு மாத காலந்தான் ஆகியிருக்கிறது. இப்போதுதான் திருமணமாகியிருக்கிறது. திருமணமான இரவே குழந்தை எங்கே என்று கேட்கலாமா? இந்திரா அம்மையார் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு நான்கு மாத காலத்தில் நடந்த சட்டமன்றத் தேர்தலின்போது முதலமைச்சர் அவர்கள் அந்தக் கேள்விகளைக் கேட்டார்கள்.

தேர்தல் நேரத்தில் பேசுகிறபோது முதலமைச்சர் சொன்னார்—'தாலிக் கயிறு இங்கே, தங்கம் எங்கே?' என்று கேட்டார். கருணாநிதி தாலிக்குத் தங்கம் தர மானியம் தருவதாகச் சொல்லுகிறார், நடக்கிற காரியமா என்று கேட்டார். பாண்டிச்சேரி முதலமைச்சர் ராமச்சந்திரன் தங்கம் தருவோம் என்று சொல்லுகிறார், அது நடக்காது. வெங்கட்டராமன் அவர்கள் அப்படி ஒரு திட்டம் இல்லையென்றே அறிவித்து விட்டார் என்றார். தாலிக்குத் தங்கம் தருகிறோம் என்று சொல்லுவது மக்களை ஏமாற்றுகிற திட்டம் என்று முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் பேசினார். அதை மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். அவர்களுடைய கட்சியினர்—'ராமாயி வயசுக்கு வந்துட்டா, தாலிக் கயிறு இங்கே, தங்கம் எங்கே' என்று கேட்டார்கள். கலைஞர் கூறினார்—'ராமாயி வயசுக்கு வந்து விட்டால் கல்யாணத்திற்கு அவ்வளவு அவசரமா, கொஞ்சம் பொறுங்கள், நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு முயற்சிக்கிறோம்' என்றார். முதலமைச்சர் அவர்கள் கிண்டல் செய்தார்கள்.

ஆனால் அவர்களுடைய தேர்தல் அறிக்கையில் என்ன சொல்லியிருக்கிறார்கள்? தாலிக்கு 22 காரட் தங்கம் மலிவாக வழங்கப்படும் என்று அகில இந்திய அண்ணா தி. மு. க.வின் அதிகாரபூர்வமான தேர்தல் அறிக்கையில் சொல்லி



யிருக்கிறார்கள். அதனால் பொற்கொல்லர்களுக்கும் வேலை கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அன்று 'ராமாயி வயசுக்கு வந்துட்டா' என்று சொன்னார்கள். இன்று ராமாயிமட்டுமல்ல, ராக்காயியும் வயசுக்கு வந்துட்டா, சர்க்கார் தாலியைத் தயாரிக்கும் வேலையில் எப்போது ஈடுபடப் போகிறது? ஆளுநர் உரையில் அதைப் பற்றிக் குறிப்பிடவில்லையே. இல்லையென்றால் மக்களை ஏமாற்றும் திட்டமா?

மக்கள் ஓட்டுப் போட்டுவிட்டார்கள் என்று சொல்வார்கள். நீதிமன்றத்தில் கூட சில நேரத்தில் கொள்ளைக்காரர்கள், கொலைகாரர்கள், திருடர்கள் கூட தப்பித்துவிடலாம். நான் நீதிமன்றத்தைக் குறை சொல்லவில்லை. குற்றவாளிகள் தப்பிவிடலாம். அதனால் தப்பே செய்யவில்லை என்று பொருள் அல்ல.

தேர்தல் நேரத்தில் சில நேரங்களில் தவறான தீர்ப்பு வழங்கப்பட்டு விடுகிறது. மாண்புமிகு நாவலர் அவர்களுக்கு சிலப்பதிகாரம் நன்றாகத் தெரியும். கோவலன் குற்றம் சாட்டப்பட்டான். பாண்டியன் நெடுஞ்செழியன் குற்றம் சாட்டப்பட்ட கோவலனைக் கொன்று விடும்படி உத்தரவிட்டான். பின்னர் நெடுஞ்செழியன் சிந்தித்துப் பார்த்தான். யோசித்துப் பார்த்தான், பிறகு தவறை உணருகிறான்.

(முற்பகல் 9-30)

"யானோ வரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என் முதற் பிழைத்தது. . ."

என்று சொல்லப்பட்டிருக்கிறது. நெடுஞ்செழியன் நிலையிலே நாட்டு மக்கள் இருக்கிற காரணத்தாலே சில நேரங்களிலே தவறுகள் நடந்துவிடும். ஆகவே கொற்றவன் சொன்னதெல்லாம் வேதமல்ல என்ற வாக்கியத்திற்கிணங்க எல்லாம் சரியாகிவிட்டது என்று சொல்லிவிடமுடியாது. நம்முடைய மரியாதைக்குரிய முதலமைச்சர் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள் . . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு விளக்கத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். சிலப்பதிகாரத்திலே, அந்தச் சிலம்பு கையில் இருக்கிறது என்று சொல்கிறபோது, பாண்டியன் நெடுஞ்செழியன் கட்டளையிட்டது, "கன்றிய கள்வன் கையதாகிற் கொன்றச் சிலம்பு கொணர்க. . ." என்றுதான் சொன்னான். ஆகவே இன்வெஸ்டிகேஷன் ஆபீசர் தவிர, அவன் இட்ட

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1980 ஜூன் 27

கட்டளை தவறானது அல்ல. அவன் இட்ட கட்டளை, கோப்பெருந்தேவியின் காற்சிலம்பு அவன் கையது ஆயின்—அவன் கையிலே இருந்தானால்—என்று 'பிக், இஃப்' [--Big if--] போட்டுத்தான் சொல்லியிருக்கிறான். ஆனால், அங்கே சென்றவர்கள் தவறு செய்ததற்குப் பிறகு, கொன்றது தவறு என்று தெரிந்ததற்கு பிறகு அதற்கான 'ரெஸ்பான்ஸிபிலிட்டி' பொறுப்பை அவன் ஏற்றுக்கொள்கிறான். ஆனால்,

"மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் னாயுளென. . ."

என்று சொல்லி உயிரை விட்டான். அவன் தவறு செய்யவில்லை. பின்னால் கண்ணகியே பாண்டியனைப் பற்றிச் சொல்கிறாள்; 'தென்னவன் தீதிலன் அவன் என் தந்தை' என்று அவளே தம் கருத்தைத் தெரிவித்து இருப்பதனால் பாண்டியன் நெடுஞ்செழியன் எந்தத் தவறும் செய்யவில்லை என்ற விளக்கத்தை மட்டும் நான் சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. மு. அம்பிகாபதி :** தலைவர் அவர்களே, அது சரியாக இருக்காது என்று நினைக்கிறேன். ஏனென்றால் பாண்டியன் அந்தச் சிலம்பை அவைக்குக் கொண்டுவரச்சொல்லி, அது கோப்பெருந்தேவியினுடைய சிலம்புதானா என்று அறிந்த பிறகு தான் தண்டனை அளித்திருக்க வேண்டும். ஆகவே அந்த முறை எனக்குச் சரியாகப் படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, நாங்கள் பொற்கொல்லர்களுக்கு விரோதிகள் அல்ல. எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் பூம்புகார் சினிமாவிலே பொற்கொல்லர் அதற்குக் காரணம் அல்ல என்று மாற்றியமைத்து இருக்கிறார்கள். ஆனால் நான் சிலப்பதிகார வரிகளை மாண்புமிகு நாவலர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 'பொன்செய் கொல்லன், தன்சொல் கேட்ட யானோ அரசன், யானே கள்வன்' என்று பாண்டியனே சொல்கிறான். "நான் சிந்திக்கவில்லை, நான் எண்ணிப்பார்க்கவில்லை, நான் என்போயத்தைக் கூட்டவில்லை, அது சரிதானா என்று பார்க்கவில்லை, ஏதோ ஒரு வஞ்சகன் சொல்கிற வார்த்தைகளை நம்பினேன். அதுதான் உண்மை என்று கருதி அந்தத் தப்பைச் செய்துவிட்டேன். இனி நான் இருக்கக்கூடாது" என்று அந்த நெடுஞ்செழியன் கண்ணை மூடிவிட்டான்.



1980 ஜூன் 27] (திரு. அ. ரகுமான்கான்)

நான் எதற்காகச் சொல்கிறேன் என்று சொன்னால் மக்கள் தீர்ப்பு சில நேரங்களிலே தவறாகக்கூட இருக்கலாம். உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். தர்மபுரி இடைத்தேர்தல் நடைபெறுகிறது. நம்முடைய முதல்வர் அப்போது திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிறார், அறிஞர் அண்ணா அவர்கள் இருக்கிறார்கள். அன்றைக்கு நடந்த பெரிய போராட்டம் இந்தி எதிர்ப்புப் போராட்டம் ஆகும். இந்த நாட்டிற்கு இந்தி தேவையில்லை என்ற போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. என்னுடைய அருமை நண்பர் திரு. காளிமுத்து அவர்களும் திரு. காமராஜ் போன்றவர்களும் சட்டத்தை எரித்து மாணவப் பருவத்திலேயே சிறையிலே வாடுகிறார்கள். சாரங்கபாணி போன்ற தோழர்கள் சாகவேண்டிய சூழ்நிலை, சிதம்பரத்திலே அங்கே உள்ள வீதிகளிலே சிவந்த ரத்தம் ஓடுகிற சூழ்நிலை. துப்பாக்கிப் பிரயோகம், தமிழகமே எதிர்த்துப் போரிடுகிறது. அன்று கலைஞர் அவர்கள் பாளையங்கோட்டை சிறையிலே அடைக்கப்பட்டார்கள். கழகக் கண்மணிகள் பலர் சிறைப்படுத்தப்பட்டார்கள். அந்த நேரத்திலே இந்தி தேவையா இல்லையா என்று மக்களிடம் ரெபரண்டம் வைக்கிற மாதிரி, பொது ஜன வாக்கெடுப்பு எடுக்கப்படுகிற நிலையிலே தேர்தல் நடைபெற்றது. அப்போது அண்ணா அவர்கள் உயிரோடு இருந்து, முதலமைச்சர் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்து, கலைஞர் அவர்கள் இருந்து, இவ்வளவு சக்திகளுக்குப் பின்னாலேயும் அந்தத் தேர்தலிலே தோற்கடிக்கப்பட்டோம். அப்போது தோற்கடிக்கப்பட்டோம் என்று சொன்னால், அப்போது அறிஞர் அண்ணா அவர்கள் மிகுந்த வேதனைப்பட்டு கண்ணீர்விட்டுச் சொன்னார்கள். அதற்காகக் கவலைப்பட வேண்டாம். மக்கள் தீர்ப்பு சில சமயங்களிலே தவறாகிவிடலாம். ஒரு அரசியல் இயக்கத்திற்கு, கொள்கை ரீதியான ஒரு இயக்கத்திற்கு எதிராக தேர்தல் தீர்ப்பு இருந்தாலும் அது அந்த இயக்கத்திற்கு எதிராக எழுதப்பட்ட மரண சாசனம் அல்ல, நீதி தேவன் மயக்கம் நிரந்தரமானதல்ல. ஒவ்வொரு அமாவாசைக்குப் பிறகும் ஒரு பௌர்ணமி காத்திருக்கிறது என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

**டாக்டர் கே. சமரசம் :** தலைவர் அவர்களே, ஒரு விளக்கம் . . .

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, நான் இப்போது தான் ஆரம்பித்திருக்கிறேன், அதற்குள்ளாக குறுக்கீடா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் மட்டும் தான் குறுக்கிட்டு விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். வேறு யாரும் குறுக்கிடவில்லை.

[1980 ஜூன் 27

**டாக்டர் கே. சமரசம் :** தலைவர் அவர்களே, நான் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புகிறேன். அன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் இந்தி வேண்டுமா, வேண்டாமா என்பதற்காக தேர்தலில் போட்டியிட்டது என்று சொன்னார்கள். அப்போது தர்மபுரி பாராளுமன்றத் தொகுதிக்காக இருக்க வேண்டியது தர்மபுரியா, கிருஷ்ணகிரியா என்ற பிரச்சினையை வைத்துத்தான் அங்கே போட்டி நடந்தது. அதனால் தான் தர்மபுரியிலே அன்றைக்கு காங்கிரஸ் வெற்றிபெற்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவரவர்களே, அண்ணா எழுதிய கட்டுரையை ஆதாரத்தோடு சொல்லிப் பேசுகிறேன். இது அந்த இயக்கத்தின் பழம்பெரும் தலைவர்களுக்குத் தெரியும், அவர்கள் புரிந்து கொள்வார்கள், திரு. சமரசம் அவர்களும் புரிந்து கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

அதைப்போலவே, நம்முடைய முதலமைச்சரவர்கள் ஒரு அற்புதமான திட்டத்தைத் தேர்தல் நேரத்திலே சொன்னார்கள். நான் இந்த மன்றத்திலே கேட்கிறேன். சொன்னால் கோபித்துக் கொள்கிறார்கள், கடுமையாக விமர்சனம் செய்கிறோம் என்று வருத்தப்படுகிறார்கள். முதலமைச்சரவர்கள் டெலிவிஷனில் பேசும்பொழுது சொன்னார்கள், நானும் கேட்டேன். பெரிய ஜாதியைச் சேர்ந்தவர்கள்கூட வறுமையாலே வாடிக்கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய கட்சிக்கு அண்மையிலே வந்து சேர்ந்த ஒருவர் சித்தாளாக இருப்பவர். அவரை யார் என்று கேட்டேன், இந்தத் தேசத்திலே இருக்கக்கூடிய பிராமண சமுதாயச் சேர்ந்தவர்கள்கூட வறுமையிலே இருக்கிறார்கள், சித்தாளாக இருக்கிறார்கள். ஆகவே, யாரையும் பட்டினியால் சாக விட மாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள். தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்று பாரதியார் பாடியிருக்கிறார்கள், எனவே என்னுடைய ஆட்சி உருவாகுமேயானால் நிச்சயமாக யாரையும் பட்டினியால் சாகவிட மாட்டேன், அதற்கான திட்டம் வைத்திருக்கிறேன் என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். வெற்றியுடன் நிறைவேற்றுவேன் என்று சொன்னார்கள். அந்த வேடிக்கையான திட்டம் என்ன தெரியுமா ? பட்டினி கிடக்கும் அவலநிலை யாருக்கேனும் ஏற்பட்டால் அத்தகையவர்கள் அதிகாரியைச் சந்தித்துத் தங்களுடைய பட்டினி நிலைமையை விளக்கினால் அவர்களுக்கு நூறு ரூபாய் தரப்படும். இதை அதிகாரிகள் கொடுத்து விடுவார்கள். அதுமட்டுமல்ல அவர்களுக்கு உடனே வேலையும் போட்டுக் கொடுப்பார் என்று சொன்னார்கள். இந்த ஆளுநர் உரையிலே பார்க்கும்பொழுது அது எங்கே, எந்தத் திசையில் போகிறது என்று தெரியவில்லை. யாரையும் பட்டினியால் சாக விட மாட்டோம் என்று டெலிவிஷனிலே பேச்சு, தேர்தல் அறிக்கை, மேடையிலே பேச்சு. ஆனால் மக்களின்



வாக்குகளைப் பெற்று அதிகாரத்தைக் கையிலே வைத்திருக்கும் நீங்கள் அதை நிறைவேற்றுகின்ற முறையில் என்ன முயற்சிகளைச் செய்யப் போகிறீர்கள் ? இந்தத் திட்டம் சாத்தியமானதுதானா ? பட்டினியால் வாடுபவர்கள் தமிழ் நாட்டில் எத்தனை இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள், அத்தனை பேர்களுக்கும் நூறு ரூபாய் கொடுக்க முடியுமா ? அதற்கான நிதி ஆதாரம் இருக்கிறதா ? அது ஒரு நாளைக்கா ? அதிகாரி கொடுப்பார் என்றால் எந்த அதிகாரி ? பட்டினி கிடப்பவர்கள் அவரை எங்கே சந்திப்பார்கள் ? அவர்களுக்கு நூறு ரூபாய் என்றால் எதுவரையில் கொடுப்பீர்கள் ? அவர்களது பட்டினி தீரும் வரையிலா ? நன்றாக இருப்பவர்கள்கூடப் பட்டினி கிடக்கிறோம் என்று சொன்னால் அந்த அதிகாரி அவர்கள் பட்டினியால் கிடக்கிறார்கள் என்பதை எப்படிக் கண்டுபிடிப்பார் ? இவ்வளவு பேர்கள் பட்டினி என்று, மஸ்டர் ரோலில் செய்ததைப்போல ஏற்பட்டால் அந்த நிலைமைகளை எப்படி சமாளிப்பீர்கள். எனவே, இது ஊரை ஏமாற்றும் திட்டம் இல்லையா ? பாமர மக்களை ஏமாற்றுகின்ற திட்டம் இல்லையா ? இல்லை, இவைகளை நாங்கள் நிறைவேற்றுவோம் என்றால் ஏன் அதைப்பற்றி ஆளுநர் உரையில் சொல்லவில்லை. சினிமாப் பாட்டுப் புத்தகத்தில் கதைச் சுருக்கத்தை மட்டும் சொல்லி, மீதியை வெள்ளித் திரையில் காண்க என்று போடுவதைப்போல, ரகுமான்கான், நீங்கள் கவலைப்படாதீர்கள், கவர்னர் உரையில் அவைகளைக் குறிப்பிடாமல், வெள்ளித் திரையில் காண்க என்பதைப்போல் பட்ஜெட்டில் பார்க்க, என்று சொன்னால் அதை நான் வரவேற்கத் தயாராக இருக்கிறேன்.

அதைப்போல ஒன்றா, இரண்டா, எவ்வளவு திட்டங்கள். என்.ஜி.ஓக்களுக்கு மத்திய சர்க்கார் அகவிலைப்படி கொடுப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு 60 வயதானால் முதியோர் பென்ஷன் வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இருப்பதற்கு இடம் இல்லாத எல்லா ஏழைகளுக்கும் மனைப்பட்டா கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல, வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பத்தினர் 5 கிலோ அரிசி வாங்கினால் ஒரு கிலோ அரிசி இனாமாகத் தருவோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதில் எவ்வளவு கோமாளித்தனம் அடங்கியிருக்கிறது. வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்கள் என்றால், முதலமைச்சரவர்களுக்குத் தெரியும், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் 5 கிலோ அரிசி எப்படி வாங்க முடியும் ? 5 கிலோ அரிசி அப்படியுள்ளவர்கள் யாராவது வாங்க முடியுமா ? வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள்—ஒருவேளை முதலமைச்சர் இப்படியும் நினைத்திருக்கலாம்—பட்டினி கிடப்பவர்கள் அதிகாரிகளிடம் சென்று ரூ. 100 பெற்று, அதிலேயிருந்து

ஐந்து கிலோ அரிசி வாங்கும்பொழுது ஒரு கிலோ அரிசி இனாமாகப் போடலாம் என்று நினைத்திருக்கலாம். காரணம், வீடு தேடி மூன்று சக்கர வண்டியிலே காய்கறி வழங்கப்படும், அதற்காக ஒரு தொழிற்சாலை துவங்கப்பட்டு வேலைவாய்ப்பு அளிக்கப்படும், கிராமப்புறங்களிலுள்ள காய்கறிகளை எடுத்து வர லாரி, சென்னையிலே இருக்கும் எல்லா இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்பு, இப்படி ஒரு அற்புதமான திட்டம். தாய்மார்களே, கவலைப் படாதீர்கள், வீடு தேடி காய்கறி வருகிறது. இன்றைக்கு அந்தக் காய்கறித் திட்டம் எப்படியிருக்கிறது? மூன்று சக்கர வண்டி எங்கே? தொழிற்சாலை எங்கே? லாரிகள் எங்கே? அதைப்போலத்தான் இதுவும் ஒரு மாதிரியான திட்டம். இப்படிப் பல்வேறு திட்டங்கள்.

அடுத்து நான் ஒன்றைக் கேட்கிறேன். மத்திய அரசாங்கத்தை நம்முடைய முதலமைச்சரவர்கள் குறை சொல்கிறார்கள். இந்த நேரத்தில் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன், தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக நிச்சயமாக நல்ல பொருளாதாரத் திட்டங்களை, தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் சூழ்நிலைகளில், நியாயமான கோரிக்கைகளைக் கேட்கும்பொழுது எங்கள் கட்சி உங்கள் பக்கம் இருக்கும். கட்சி வித்தியாசம் அதில் இல்லை. தமிழ்ச் சமுதாயம் முன்னேற வேண்டும். அரசு அதிகாரத்தை அதற்காகப் பயன்படுத்த வேண்டும் என்ற நிலைமையில் நிச்சயமாக நாங்கள் ஒத்துழைப்போம். அதற்கு மத்திய உதவி வேண்டும் என்பதற்காக மத்திய அரசோடு நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராட வேண்டும் என்ற நிலைமையில் நிச்சயமாக நாங்கள் உங்கள் பக்கம் இருப்

(முற்பகல் 9-40)

போம். ஆனால், ஒன்றை நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். மத்திய சர்க்கார் இங்கே சரியான முதலீடு செய்யாத காரணத்தினாலேதான் இங்கே பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்படாமல் போய் விட்டிருக்கின்றன என்று சொல்லி இருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரமாகிவிட்டது. வேறு பல சந்தர்ப்பங்களும் இருப்பதால் மற்றவற்றை அப்பொழுது பேசலாம்;

**திரு. அ. ரகுமான்கான் :** 2 நிமிஷத்திலே முடித்து விடுகிறேன். மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இங்கே மத்திய சர்க்கார் முதலீடு செய்ய வேண்டுமென்பதை நான் வரவேற்கிறேன். ஆனால், மத்திய நிதியமைச்சர் திரு. வெங்கட்ராமன் அவர்கள் ஒன்றைச் சொல்லி இருக்கிறார்கள். ஏற்கனவே,



இங்கே "அசோக் லேலண்ட்" விஸ்தரிக்கப்படவேண்டும், அதனாலே இங்கே பலருக்கு வேலை வாய்ப்பு இருக்கும் என்ற திட்டம் கொடுக்கப்பட்ட போது, உங்களுடைய அகில இந்திய அண்ணா தி.மு.க. சர்க்கார், அதிலே அஜாக்கிரதையாக இருந்த காரணத்தினாலே, அது மத்தியப் பிரதேசத்திற்குப் போயிருக்கிறது என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

அதைப் போலவே, ஒரு "கோச் பேக்டரி" இங்கே தமிழகத்திற்கு வர வேண்டியது, உங்களுடைய சர்க்காரின் கவனக் குறைவாலே, இங்கே வரமுடியாமல் போய்விட்டது. அதைப்போலவே, 1977-78 ஆம் ஆண்டிலே சட்டமன்றத்தின் அனுமதி பெற்று ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 199 கோடி செலவழிக்கப்படவில்லையென்று ஆதாரத்துடன் இந்தமன்றத்திலே சொல்லியிருக்கிறோம். ஆகவே, இங்கே ஏற்கனவே பேசிய தலைவர் அவர்கள் Report of the Comptroller and Auditor-General of India என்ற அந்த அறிக்கையிலிருந்து அந்தப் புள்ளி விவரங்களையெல்லாம் எடுத்துச் சொல்லி, எப்படி மக்களுக்கு அந்தத் திட்டத் தொகை போய்ச் சேரவில்லை, செலவழிக்கப்படவில்லையென்பதை எடுத்துச் சொன்னார்கள்.

கிருஷ்ணா நதித் திட்டம் வருகிறது என்று சொன்னீர்கள்... ஏறத்தாழ ரூ. 50 இலட்சம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கிருஷ்ணாநதித் தண்ணீர் சென்னைக்கு வந்து சேர மிகுந்த காலம் ஆகும்; முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** ஒரே ஒரு நிமிஷத்திலே முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எத்தனை ஒரு நிமிஷம், ஒரு நிமிஷம் என்றால் எவ்வளவு நேரம் என்று தெரியவேண்டும்.

**திரு. அ. ரகுமான்கான் :** உங்களுடைய அனுமதியோடு இரண்டே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். ஒன்றை மட்டும் நான் கடைசியாகச் சொல்லிவிடுகிறேன். ஆக, நான் கடைசியாக என்பேச்சை முடித்துக்கொள்கிறபொழுது ஒன்றே ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன். மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இங்கே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அருமை நண்பர் திரு. வரதராஜன் அவர்கள் அகில இந்திய அண்ணா தி.மு.க. சர்க்காரைக் கலைக்க முயற்சி செய்த கருணாநிதியை "வேட்டை நாய்" என்றார். அப்படியானால் ஒரு அரசைக் கலைக்க முயற்சி எடுத்துக் கொண்டவர்கள் வேட்டை நாய் என்றால், அன்றைக்கு தி.மு.க. சர்க்காரைக் கலைக்க முயற்சி எடுத்துக் கொண்டவர்கள் "சொறி நாய்களா" என்று நான் தெரிந்துகொள்ள விரும்பி,

(திரு. அ. ரகுமான்கான்) [1980 ஜூன் 27

அகில இந்திய அண்ணா தி.மு.க. சர்க்கார் கலைக்கப்பட்டது என்பது வேறு விவகாரம். (குறுக்கீடு) "வேட்டை நாய்" என்பது பத்திரிகையிலும் வந்திருக்கிறது. குறிப்பேட்டிலும் இருக்கிறது. "வேட்டை நாயும்", "சொறி நாயும்" ஒன்று தான். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** "வேட்டை நாய்", "சொறி நாய்" பிரச்னையெல்லாம் அவையிலே வருவது முறையல்ல;

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவரவர்களே, நேற்று அவையிலே 'வேட்டை நாய்' இடம் பெற்றிருக்கிறது. அதனால், 'சொறி நாயும்' இடம் பெறுவதில் தவறில்லை.

**திரு. அ. ரகுமான்கான் :** ஒரு சர்க்கார் கலைக்கப்பட வேண்டுமென்று நாங்கள் விரும்பவில்லை. 8 மாநிலங்களிலே கலைத்தது சரிதான் என்று தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இங்கு அந்நிலை மாறி இருப்பதால், நேர்மை, நாணயத்திற்கு வெற்றி என்று சொல்ல முடியாது. காரணம், நான் கேட்கிறேன். ரூ. 78 இலட்சம் கருப்புப்பணத்தைச் சாண்டர் செய்த ஒரு முதல்வர் அவர்கள் எப்படி நேர்மையின் சின்னமாக இருக்க முடியும் ?

* **திரு. கோவைத்தம்பி :-** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கத்திற்குரிய எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்தித் தந்த என்னுடைய தொகுதி மக்களுக்கும் ஜனநாயகத்தில் அங்கம் வகித்து ஆலோசனை வழங்குவதற்கு, பணியாற்றுவதற்கு, வாய்ப்பளித்த எங்களது இதய தெய்வம் புரட்சித் தலைவருக்கும் எனது இதயபூர்வமான வணக்கத்தை நான் முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

நடந்து முடிந்த தேர்தலுக்குப் பிறகு மீண்டும் அதே ஆட்சி, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தலைமையில் துவங்குகிறது என்பதைப் பெரு மகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்துப் பெருமக்கள் மீண்டும் தெரிந்திருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கானுடைய மொழியில், இடைவேளைக்குப் பிறகு சினிமா ஆரம்பித்திருக்கிறது என்பதை நானும் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இடைவேளை ஓய்வுக்குப் பிறகு, சினிமா பார்க்கின்றவர்கள் மிகவும் உற்சாகத்தோடு சினிமா பார்ப்பதற்கு உட்கார்ந்திருப்பார்கள். அதே மாதிரி, இடைவேளை ஓய்வுக்குப் பிறகு, புரட்சித் தலைவர் அவர்கள் சினிமா, அவர் நடித்த படம், இப்போது நடக்க ஆரம்பித்திருக்கிறது என்பதைப் பணிவோடு இந்த மாமன்றத்திற்குத்



1980 ஜூன் 27] [திரு. கோவைத்தம்பி]

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் நடிக்கின்ற படத்தில் முடிவு, வில்லனுக்கு எப்படி ஏற்படுகிறதோ, அந்த நிலைமை மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் நினைக்கின்றபடி, புரட்சித் தலைவர் படத்தில் ஏற்படக்கூடாது என்பதுதான் என்னுடைய பணிவான கருத்து என இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரவல் குரலில் புரட்சித் தலைவர் பாடுவதாகவும் சொந்தக் குரலில் பாடவில்லை என்றும் ஆட்சியை சினிமாவை ஒப்பிட்டுப் பேசினார்கள். மனித உரிமைகளின் மௌனகீதங்கள், மகாத்மாக்களின் ஜீவராகங்களால் இசைக்கப் படுகின்றன. புரட்சித் தலைவர் அவர்கள் சொந்தக் குரலிலே பாடவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் எந்த ராகங்களை அமைத்துத் தந்தார்களோ, அந்த ராகங்களில்தான் இன்று புரட்சித் தலைவர் அவர்கள் இசைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாமன்றத்தில் ஆளுநர் உரையைப் பற்றி விவாதம் நடத்துகின்ற ஒரு வாய்ப்பு பெற்றமைக்காக, வரவேற்பு நல்கும்போது சத்தியத்தையும், உண்மையையும் காப்பாற்றுகின்ற உணர்வு இந்த நாட்டுமக்களுக்கு ஏற்பட்ட பிறகு இந்த மாமன்றத்தின் புதிய உறுப்பினர்களை வரவேற்று அவர்களை உபசரிப்பதில் நான் பெருமைப் படுகிறேன் என்று ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த உரையைப் பார்க்கும்போது எங்களுக்கு வாழ்த்துப் பா கூறி இந்த மன்றத்தில் வரவேற்பது போன்ற உணர்வு ஏற்படுகின்றது என்பதையும், அந்த வாழ்த்துப் பாக்களை நினைக்கும்போது எங்களுடைய கழக உடன்பிறப்புக்கள் எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் இல்லங்களிலே இனியும் கொடூரமான அந்த ஒப்பாரிகளுடைய நினைவுகள் நெஞ்சத்திலே இருக்கிறது என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதைச் சொல்லுவதற்குக் காரணம், நேற்றுகூட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ரௌடிகளால் நாங்கள் தாக்கப்பட்டோம் என்று சொன்னார்கள். அந்த நிலை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தேர்தல் காலகட்டங்களில் ஏற்பட்டதா என்று சொன்னால், எப்படி ஏற்பட்டது என்பதை நாட்டு மக்கள் நன்றாக அறிவார்கள். இன்று திறமைக்குக் கிடைத்த வெற்றியாக, சத்தியத்திற்குக் கிடைத்த வெற்றியாக, நியாயத்திற்குக் கிடைத்த வெற்றியாக, கொள்கைக்குக் கிடைத்த வெற்றியாக இந்த வெற்றியை நினைத்துப் பெருமைப் பட்டுக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், நிர்வாக இயந்திரத்தை முடுக்கிவிட்டு, முன்னேற்றத்தைக் தமிழகத்தில் காணவேண்டும் என்று பிரியப்படுகிறவர்கள், அந்த நிர்வாக இயந்திரம் வெறும் அமைச்சர்களாலும் அல்லது மாண்புமிகு முதலமைச்சர்

அவர்களாலே நடைபெறுகிறது என்ற நினைப்பில், பங்காளிகளாக அல்லது பார்வையாளர்களாக இருக்கின்றவர்கள் எதிர்க்கட்சியிலே இல்லை என்ற நினைப்பில் மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் பல குற்றச்சாட்டுக்களைச் சொன்னார்கள். அவதூறுகளை அள்ளி வீசினார்கள். அவமானப்படுத்துவதிலே, அச்சுறுத்துவதிலே, வசைமாரி பெய்வதிலே, எள்ளி நகையாடுவதிலே ஏற்றம் பெறக்கூடிய ஒரு சமுதாய அமைப்பை தமிழ்நாட்டிலே உருவாக்க முடியும் என்ற எண்ணம் அவர் மனதிலே இருக்குமேயானால், அதைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. ஆனால் ஒன்றை மட்டும் இந்த நேரத்தில் நான் ஞாபகப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அவமானப் படுத்துவதிலேயும், அச்சுறுத்துவதிலேயும், ஏளனப்படுத்துவதிலேயும், எள்ளி நகையாடுவதிலேயும் தமிழ்ச் சமுதாயத்தை அல்லது நமது பண்பாட்டை, கலாசாரத்தைக் காப்பாற்றுவதற்கு என்று இன்று மக்களாலே சிறப்பு பெற்று வந்திருக்கிற ஒரு கட்சியை ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சர்க்கார் அல்லது புரட்சித் தலைவர் தலைமையிலே இருக்கிற இந்தத் தமிழக அரசைக் கலைத்து விடலாம் என்ற நம்பிக்கை அவரிடம் ஏற்படக் கூடாது என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

எங்களை அடையாளம் காட்டுகிறபோது, நேற்று கூட ஒரு சில உறுப்பினர்கள் கேவலமாக அடையாளம் காட்டினார்கள். பார்ப்பவர்கள் எள்ளி நகையாடுகிற அளவுக்கு அவமானம் காட்டினார்கள்; அவர்கள் எங்களை விட்டில் பூச்சிகள் என்று நினைத்துக் கொண்டு பேசினார்கள். இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் பேசினார்கள், தமிழ்நாட்டில் உள்ள தெய்வத்தின்மீது நம்பிக்கை இல்லாமல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மங்களூர் மகேஸ்வரியை வணங்கலாமா என்று பேசினார்கள். இது தர்மமா என்று கேட்டார். தேசிய நீரோட்டத்திலே தன்னை ஒப்படைத்துக் கொண்டுள்ள அந்தக் கனம் உறுப்பினர் அவர்கள் அப்படிப் பேசியது தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால் இந்தியாவின் ஏதோ ஒரு மூலையிலே விளைகிற பருத்தியை எடுத்து, நூலாக மாற்றி தன்னுடைய மேனிக்கு கதராடையாக அணிந்து அழகு பெறுகின்ற அந்த மாண்புமிகு உறுப்பினர், எங்கோ கோளாவில் கிடைக்கின்ற வாசனை திரவியத்தை எடுத்து உடலுக்கு போட்டு அழகு பார்க்கின்ற அந்த மாண்புமிகு உறுப்பினர், கான்பூரிலே செய்கின்ற செருப்பைத் தன்னுடைய காலுக்குப் போட்டு அழகு பார்க்கின்ற அந்த உறுப்பினர், மங்களூரிலே இருக்கும் மகேசுவரியை வணங்குவது நியாயம் தானா என்று கேட்பது தவறு என்று நான் சொல்லவில்லை, அப்படிக் கேட்கலாமா என்பதை அவர் யோசிக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய



தாழ்மையான அபிப்பிராயம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மங்களூர் சென்று மகேசுவரியையும் வணங்கலாம், பெங்களூர் சென்று திருநீர் தீர்த்தத்தையும் குடிக்கலாம். யார் யார் மங்களூர் செல்கிறார்கள், யார் யார் பெங்களூர் செல்கிறார்கள் என்பதைப்பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. நமக்குத் தேவை, நம்முடைய பண்பாட்டை, கலாச்சாரத்தைக் காப்பாற்ற கண்ணியம் மிக்க ஒரு ஆட்சியாக இந்த ஆட்சியை அமைத்துத் தந்தவர்களுக்கு ஆலோசனை வழங்கவேண்டும் என்பதைத்தான் நாம் எதிர்க் கட்சி வரிசையில் இருந்து எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் என் எண்ணங்கள் எல்லாம் பாழாகின்ற வகையில் தனிப்பட்ட முறையில் விமர் சனங்களுக்கு, கடுமையாக ஆளாக்கப்பட்டது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக மாண்புமிகு உறுப்பினர்களாகிய நாங்கள், என் பதை இந்த மாமன்றத்திற்கு நான் ஞாபகப்படுத்த கடமைப் பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 9-50)

இல்லாமையை ஒழிப்பதுதான், கல்லாமையை அகற்றுவதுதான், இயலாமையை முடிப்பதுதான், அறியாமையை நீக்குவதுதான், தீண்டா மையை வெளியேற்றுவதுதான், பேரறிஞர் அண்ணா அவர்களின் தத்துவம். அந்தத் தத்துவத்தை அடிப்படையாக வைத்துத்தான் இன்றுள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் தலைமையில் இயங்கிக் கொண்டு இருக்கிறது என்பதை இந்த மன்றத்தில் நான் எடுத்துச் சொல்லி தெரிய வேண்டியது அவசியம் கிடையாது என்று நான் எண்ணுகிறேன்.

தேர்தல் வாக்குறுதி பற்றி பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் கூறினார்கள். மக்களை ஏமாற்றி விட்டார்கள் என்று குற்றச்சாட்டு சொன்னார்கள். மக்களை ஏமாற்றவில்லை. 500 ஆண்டுகளுக்கு முன்பு அக்பர் பாதுஷா தலைமையில் ஆண்ட அந்த சாம்ராஜ் யத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சிதான் என் நினைவுக்கு வருகிறது. பெருமதிப்பிற்குரிய ராஜா மான்சிங் அக்பர் பாதுஷாவின் ராஜ பாதுகாவல ராக இருந்தார். அக்பர் பாதுஷாவின் அருமைப் புத்திரன் சலீம் சாதாரண நடனமாதுவை காதலித்த குற்றத்திற்காக ராஜா மான்சிங் அந்த அக்பர் பாது ஷாவின் உத்தரவு என்று சொல்லி, அக்பர் பாதுஷாவின் கீழே வேலை செய் கிறேன் என்று சொல்லி, சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வை ஒழிக்கிறேன் என்று சொல்லி சாதாரண ஏழை அனார்கலியை காதலித்த அந்த சலீமைக் கொண்டு வந்து நிறுத்தி, அந்த சலீம் கண்ணீர் வடிக்க வடிக்க அனார்கலியை உயிரோடு சமாதி செய்து, தன்னுடைய ராஜ விஸ்வாசத்தை அக்பர் பாதுஷாவுக்கு ராஜா

மான்சிங் செய்து காட்டியதுபோல பெருமதிப்பிற்குரிய ரகுமான்கான் அவர்கள் தன்னுடைய எஜமான விஸ்வாசத்தைக் காட்டுவதற்காக, ஏற்றத்தாழ்வை ஒழிப்பதற்காக, அனார்கலியை காதலித்த சலீமிற்கு ஏற்பட்ட கதியை தயவு செய்து தமிழக மக்களுக்கு ஏற்படுத்தி விடாதீர்கள் என்று கேட்டுக்கொள் கிறேன். தமிழக மக்களின் உள்ளத்தில் குடிகொண்டு இருக்கின்ற கொடுத்துச் சிவந்த கரத்திற்குச் சொந்தக்காரராகவும் 20-ம் நூற்றாண்டின் கடைசி பகுதியில் இருண்ட இந்தியாவில் ஒளி விளக்காகவும் விளங்குகின்ற புரட்சித் தலைவரின் ஆட்சி புனிதப்படுத்துகின்ற ஆட்சி, அதனைக் களங்கப்படுத்தா தீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கப்பல் பேர ஊழல் கப்பலேறி விட்டது என்று மாண்புமிகு மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசினார்கள். கப்பல் தொங்குகிறது, எப்போது கீழே விழும் என்று சொன்னார்கள். அதைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. கப்பல் எப்போது, எங்கே விழப் போகிறது என்பது தேவையில்லை. தமிழ்நாட்டு மக்கள் என்ன தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள் என்பதுதான் சிந்தித்துப் பார்க்க வேண்டிய தோன்றாகும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

கொள்கையையும், லட்சியங்களையும் சொல்கிறபோது, நியாய உணர்வு களை எடுத்துச் சொல்கிறபோது, மனித உரிமைகளைச் சொல்கிறபோது, மன மாற்றங்களைப்பற்றிச் சொல்கிறபோது, ஏற்பட்ட நிலைமைகளைச் சொல்கிறபோது, நடந்த விவாதங்களைப் பற்றிச் சொல்கிறபோது, சட்ட மன்றத்தில் முடிந்து போன சங்கதிகளைச் சொல்கிறபோது, அவற்றை எல்லாம் உன்னிப்பாகக் கேட்டுக்கொண்டு இருந்த அந்த மக்கள் மன்றம் அளித்த மாபெரும் தீர்ப்பிற்குப் பிறகுதான் புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சர் அவர்களாகப் பொறுப்பேற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நிலையில் இன்றைக்கு வந்துள்ளார் என்பதை இந்த மாமன்றத்தில் நான் எடுத்துச் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியத்தில் இந்த மன்றத்தில் யாரும் இல்லை என்பதை நான் உணர்கிறேன்.

நீங்கள் திருந்துவதற்காகத்தான் மக்கள் உங்களை மெஜாரிட்டியிலிருந்து மைனாரிட்டிக்குக் கொண்டு வந்து இருக்கிறார்கள். மக்கள் எங்களுடைய கொள்கைகளை, நோக்கங்களை, அடிப்படைச் சித்தாந்தங்களை ஏற்றுக் கொண்ட பிறகுதான், பல்கேரிய கப்பல் பற்றி நீங்கள் மக்களிடத்தில் சொன் னீர்கள். தாலிக்குத் தங்கம் பற்றி நாங்கள் சொன்னோம். மக்கள் மன்றத்தில் பல வாக்குறுதிகளைத் தந்தோம். அந்த வாக்குறுதிகளை புரட்சித் தலைவர் அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையில்தான் இன்று சட்ட



மன்றத்தில் மெஜாரிட்டி கொடுத்து இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் ஞாபகமூட்ட விரும்புகிறேன். இந்த வெற்றி உண்மைக்கும், தர்மத் திற்கும், நேர்மைக்கும் தமிழகம் தந்த மிகப் பெரிய பரிசு. இந்த ஆளுநர் உரையில் திருச்சிக்கும், கோவைக்கும் பல்கலைக்கழகம் என்று குறிப்பிட்டு இருப்பதை மிகவும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறோம்.

பாரதத்தின் ஒற்றுமையைக் காப்பாற்றுவதற்கும், இருமொழிக் கொள்கையை நிலைநாட்டுவதற்கும், வறுமைக்கோட்டின் கீழே வாழ்பவர்கள் வாழ்வில் ஒளி விளக்கு ஏற்றுவதற்கும், வேலைக்கு உணவுத் திட்டம் கொண்டு வந்ததற்கும், நெல் கொள்முதலுக்கு சப்சிடி கொடுத்ததற்கும், ஏழை விவசாயி களின் கடன்கள் ரத்து செய்ததற்கும், ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள், கூட்டுறவு நிறுவனங்கள் சீரமைப்பிற்கும், கேரள அரசோடு மின்சார அலுமினிய ஒப்பந்தம் பற்றிக் குறிப்பிட்டதற்கும், ஏழை நெசவாளர்களை வாழ்விப்பதற்காக 5 கோடி ஒதுக்கியது பற்றியும் இந்த ஆளுநர் உரையில் குறிப்பிட்டு இருப்பது வரவேற்கத்தக்கது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தலைவர்கள் பேச இருப்பதால் நேரம் அதிகம் இல்லை. உறுப்பினர் விரைவில் பேச்சை முடிக்க வேண்டும்.

**திரு. கோவைத்தம்பி:** ஆகவே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கிற இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். புரட்சித் தலைவர் தலைமையில் தமிழகத்து மக்கள் பெரு நம்பிக்கை வைத்து இருக்கிறார்கள். அந்த நம்பிக்கையின் அடிப்படையில்தான் இந்த ஆட்சி அமைக்கப்பட்டு இருக்கிறது. சமுதாய மறுமலர்ச்சிக்காகவும், நாட்டில் இருக்கும் ஏற்றத் தாழ்வை ஒழிப்பதற்காகவும், வறுமையை வெளியேற்றுவதற்காகவும், வேலை இல்லாத் திண்டாட்டத்தை நீக்குவதற்காகவும், அறிவுக்கு ஏற்ற அந்தஸ்தை வழங்குவதற்காகவும் அயராது பாடுபடும் என்று சொல்கிற வகையிலும் அரசு ஊழியர்களாக ஆசிரியப் பெருமக்களை மாற்றி இருப்பதற்காகவும், அவர் களுக்கு ஏற்பட்டு இருக்கின்ற கஷ்ட நஷ்டங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்ற வகையிலும், நல்ல பல திட்டங்களை பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையில் குறிப்பிட்டு இருக்கின் றார்கள். அந்த நல்ல திட்டங்களை மனப்பூர்வமாக விரும்பி வரவேற்று, என் கன்னிப் பேச்சு கொஞ்ச இடங்களில் கொன்னிப் போய் இருக்கும். ஆனால் இந்தக் கன்னிப் பேச்சு கன்னிப் போச்சு என்று யாரும் சொல்லாத அளவிற்கு என்னுடைய பேச்சை இத்தோடு முடித்து விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னை முதன் முதலாக காங்கிரஸ் கட்சியின் சார்பாக சின்னசேலம் தொகுதியிலே இருந்து தேர்ந்தெடுத்து, இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த என்னுடைய தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கு நன்றி தெரிவித்து என்னுடைய உரையை ஆரம்பிக்கிறேன்.

தமிழ்நாட்டிலே இப்போது அண்ணாவின் ஆட்சி நடந்து வருவதாகச் சொல்கிறார்கள். இந்த அண்ணா ஆட்சி நடக்கும்போது, இந்த மாமன்றத்தை முதலமைச்சராக இருந்த கர்ம வீரர் காமராஜர் அவர்களும், திரு. அண்ணாதுரை அவர்களும் அலங்கரித்துக்கொண்டிருக்கிறார்கள். 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்று அண்ணா சொல்வார்கள். அதைப்போன்று தந்தை பெரியார் அவர்களின் பெயரால், தந்தை பெரியார் மாவட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது ; அது சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கர்ம வீரர் காமராஜர் ஏழை எளிய மக்களுக்குக் கல்வி கொடுக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தினால் கல்வியை முதன் முதலாக நாட்டு மக்களுக்குப் பரப்பி வந்தார்கள். அவர்கள் பெயரால் மாவட்டம் ஒன்று ஏற்படுத்தப்படும் என்று இதற்கு முன்பு புரட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால், என்ன காரணத்தினாலோ கர்மவீரர் காமராஜர் பெயரால் மாவட்டம் அமைப்பது நிறைவேற்றப்படாமல் நின்று விட்டது. இப்போதாவது விருதுநகரைத் தலைநகராகக் கொண்டு, இராமநாதபுரம் மாவட்டத்தை கர்ம வீரர் காமராஜர் மாவட்டம் என்று மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு செங்கற்பட்டு மாவட்டத்தின் பெயரையும் மாற்றியமைக்க வேண்டும். காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு செங்கற்பட்டு மாவட்டம் இயங்குகிறது. காஞ்சிபுரத்திலே அண்ணாதுரை அவர்கள் பிறந்திருக்கிறார்கள். அவர்கள் வழிவந்தவர்கள்தான் இங்கே இருக்கிற அமைச்சர் பெருமக்களும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினரும். ஆகவே, காஞ்சிபுரத்தை தலைநகராகக் கொண்டு இயங்கிவரும் செங்கற்பட்டு மாவட்டத்தை 'அண்ணா மாவட்டம்' என்று மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சின்னசேலம் தொகுதி மிகவும் பிற்பட்ட தொகுதி. அது தென்னாற்காடு மாவட்டத்திலேயே ஒரு வறட்சியான பகுதியாக இருக்கிறது. இங்கே இருக்கிற மாண்புமிகு அமைச்சர்கள் திரு. எஸ். இராமச்சந்திரன் அவர்களும், திரு. குழந்தைவேலு அவர்களும் அந்தப் பகுதியிலே சுற்றுப்பயணம்





செய்திருக்கிறார்கள். அப்போது அங்கிருக்கிற ஏழை எளிய மக்களை கண்டிருக்கிறார்கள். இருந்தும் அந்தப் பகுதி மக்களின் கடனை இன்னும் ரத்து செய்ததாகத் தெரியவில்லை.

குறிப்பாக, ஆளுநர் உரையிலே சிறு விவசாயிகளுக்கு கடன்களை ரத்து செய்வோம் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் முதலமைச்சரவர்கள் தேர்தல் காலத்திலே விவசாயிகள் கடன்களை ரத்து செய்வோம் என்று சொன்னார்கள். ஆனால் இங்கே பார்க்கும்போது சிறு விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று காட்டி, விவசாயிகளைப் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள். சிறு விவசாயிகளால் உற்பத்தியைப் பெருக்க முடியாது. பெரிய விவசாயிகள் தான் உற்பத்தியைப் பெருக்கி, இந்த நாட்டுக்கு உணவு கொடுக்கின்ற ஒரு சக்தியைப் படைத்திருக்கிறார்கள்.

1972-லே ஏற்பட்ட வறட்சியின் காரணமாக இந்த நாட்டிலே பெரிய பாதிப்பு ஏற்பட்டது. அந்த நேரத்திலே தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவும், மத்திய வங்கிகள் மூலமாகவும் கிணறு வெட்டுவதற்காகவும் டிராக்டர் வாங்குவதற்காகவும் கடன் வாங்கியிருக்கிறார்கள். அந்தக் கடன்களை அவர்களால் திருப்பிச் செலுத்த முடியவில்லை. உற்பத்தி பாதிக்கப்பட்டதுதான் அதற்குக் காரணம். ஆகையால் வங்கிக் கடனை செலுத்த முடியாமல் வட்டியும், கூடுதல் வட்டியும் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. அவ்வாறு கட்டிய வட்டி அசலைவிட கூடுதலாக இருக்கிறது. இரண்டையும் சேர்த்துப் பார்த்தால்—இன்னும் கட்ட வேண்டிய வட்டியையும் கடனையும் சேர்த்துப் பார்த்தால்—டிராக்டர்களை விற்றால்கூட போதாது ; அவர்களுடைய நிலங்களை விற்றால்கூட போதாது ; வீட்டையும் சேர்த்து விற்றாலும்கூட கட்ட முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அத்தகைய விவசாயிகள் கடன் முழுவதையும் ரத்து செய்யாவிட்டாலும் அரசாங்கத்திலே பெற்றிருக்கிற கடன், அதிக வட்டி—இந்த இரண்டையும் ரத்து செய்து, அசலை தவணை முறைகளில் கட்டுவதற்கு இந்த அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியாகிய சின்னசேலம் தொகுதியை அடுத்து சேலம் மாவட்டமும் தென்னாற்காடு மாவட்டமும் இருக்கின்றன. இந்தப் பகுதியிலே மரவள்ளிக்கிழங்கு பயிர் செய்யப்படுகின்றது. எனது தொகுதியிலே கிட்டத்தட்ட 22 ஆயிரம் ஏக்கர் நிலத்திலே மரவள்ளிக்கிழங்கு

பயிரிடப்பட்டிருக்கின்றது. கள்ளக்குறிச்சி தாலுக்காவிலே அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றது. அங்கிருந்து சேலத்திற்கும் வடாற்காடு மாவட்டத்திற்கும் கிழங்கு எடுத்துச் செல்லப்படுகின்றது. அவ்வாறு எடுத்துச் செல்லப்பட்டு அந்தப் பகுதிகளிலே ஜவ்வரிசி மற்ற மாவுகள் எல்லாம் தயார் செய்யப்படுகின்றன. ஆனால் தொழில்கள் ஏற்படுத்த வேண்டும் என்கின்றபோது கள்ளக்குறிச்சி தாலுக்காவிலே சிறு தொழில்கள் ஏற்படுத்த வேண்டும் என்ற அளவில் ஆலோசனை செய்து அங்கே ஒரு குளுகோஸ் ஃபேக்டரி ஏற்படுத்தலாம் என்று பரிந்துரை இருந்ததாகத் தெரிய வருகிறது. ஆனால் பின்னர் அந்த குளுகோஸ் பேக்டரியானது அங்கே நிறைவேற்றப்படாமல் சேலம் மாவட்டத்திற்குச் சென்றுவிட்டதாகத் தெரிய வருகிறது. அதிலும் தனியார் துறைக்குச் சென்று விட்டதாகப் பேசப்படுகிறது. எனவே, ஏழை எளிய விவசாயிகள் வாழ்கின்ற பிற்படுத்தப்பட்ட பகுதியான எங்களது பகுதியிலேயே அந்த குளுகோஸ் தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுத்தால் அங்கு இருக்கக்கூடிய படித்து வேலையில்லாதிருப்போருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும்.

அதே நேரத்திலே மாநில அரசு சிறு தொழில்களை ஆரம்பிக்கின்றவர்கள் கிராமப்புறங்களில் ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறது. மத்திய அரசும் கிராமப்புறங்களில் சிறு தொழில்களை ஊக்குவிக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறது. கிராமப்புறங்களில் தொழிற்சாலைகள் வளர்ச்சி அடைந்தால்தான் நகரங்கள் வளரும் என்றும் மக்களுடைய வாழ்க்கைத்தரம் உயரும் என்றும் மத்திய அரசும் மாநில அரசும் சொல்லிக் கொண்டு வருகின்றன. ஆகவே, அந்த அளவிலே சின்னசேலம் தொகுதியிலே அந்தக் குளுகோஸ் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும், அதிலும் குறிப்பாக அரசாங்கத் துறையிலேயே அதை ஏற்படுத்த வேண்டும் என்றும் அதற்கான முயற்சிகளை இந்த அரசாங்கம் எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எனது தொகுதியில் சின்னசேலம், சங்காரபுரம் போன்ற பகுதிகளில் உள்ள கிராமங்கள் நகரங்களோடு தொடர்பு கொள்ள முடியாத அளவுக்கு போக்குவரத்து தொடர்பே இல்லாத நிலையில் இருக்கின்றன. அங்கு மினி பஸ் வசதி கூட கிடையாது. நகரங்களுக்கு வரவேண்டும் என்றால் 10 மைல், 15 மைல் தூரம் நடந்துதான் பஸ் ஏற வேண்டி இருக்கின்றது. 1976 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன், அப்போது அங்கே பெரியார் போக்குவரத்து டெப்போ ஒன்று ஏற்படுத்துவது சம்பந்தமாக அதிகாரிகள் வந்து இரண்டு இடங்களைப் பார்வையிட்டார்கள். அவ்வாறு பார்வையிட்டு



அரசாங்கத்திற்கு பரிசீலனைக்காக அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் அங்கு இருக்கக்கூடிய பஸ் முதலாளிகள் தலையிட்டு அங்கே டெப்போ ஏற்படுத்த வேண்டாம் என்று கூறியதன் காரணத்தால் ஏற்படுத்தப்பட வில்லை என்று குறிப்பாகப் பேசப்படுகிறது. அவ்வாறு இருப்பின் அந்த நிலையை மாற்றி அங்கே மினி பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் அல்லது டவுன் பஸ் விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் இந்த அரசாங்கத்திற்கு நாட்டு மக்கள் நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, குருவிக்குக் கூட கூடு இருக்கிறது, ஏழை மக்களுக்குக் குந்து வதற்குக் கூட குடிசை இல்லை என்று சொல்வார்கள். அதேபோல எனது பகுதியிலே கள்ளக்குறிச்சியிலேயும் மற்ற பகுதிகளிலேயும் நிலப் பட்டாக்கள் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டு வருகிறது. அது குறித்து மனுக்கள் எல்லாம் அனுப்பப்பட்டிருக்கின்றன. அந்த மக்களுக்கு பட்டா வழங்க வேண்டும் என்று அதிகாரிகள் சொல்லுகின்றபோது அங்கே இருக்கக் கூடிய சிலரது தலையிட்டால் பட்டா கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப் பட்டிருக்கின்றது. குறிப்பாக தையல் தொழிலாளர்கள் சங்கம் என்று ஏற்படுத்தப்பட்டு கிட்டத்தட்ட 50 தையல் தொழிலாளர்கள் அந்தப் பகுதி யிலே இருக்கின்றார்கள். அந்த ஏழை எளியவர்களுக்கு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட வேண்டும் என்று மனுக்கள் அனுப்பியும் இதுவரை மனைப் பட்டாக்கள் கொடுக்கப்படவில்லை. ஆகவே அந்த மாதிரியான கால தாமதங்களைத் தவிர்த்து அந்தத் தையல் தொழிலாளர்களுக்கு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, சின்னசேலம் பகுதியிலும், கள்ளக்குறிச்சி பகுதியிலும் குடிநீர் பிரச்சினை என்பது நீண்ட நெடுங்காலமாக இருந்து வருகிறது. அவசரகால நிலை இருந்த நேரத்திலே நான் அந்தப் பகுதியிலே குடிநீர் சம்பந்தப்பட்ட அதிகாரியையும், எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரையும் சந்தித்து சின்ன சேலம், கள்ளக்குறிச்சி பகுதிகளிலே இருக்கக்கூடிய குடிநீர் பிரச்சினையை எடுத்துச் சொன்னேன். அதன் பிறகு நடவடிக்கை எடுக்கப்பட்டு அது இப்போது அரசின் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறது. சின்னசேலத்தி லிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கோமுகி அணையிலிருந்து குடிநீர் கொண்டு வந்தால் வழியில் இருக்கும் கிராமங்களும், சின்னசேலம் பகுதியும் குடிநீர் வரட்சி தீர்க்கப்பட்டு பயன் அடையும். ஆகையினால் இதை உடனடியாக கவனித்து, இந்தப் பகுதி மக்களுக்கு நல்ல குடிநீர் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எஸ். சிவராமன்] [1980 ஜூன் 27

ஆளுநர் உரையில் கூறப்பட்டுள்ளதுபோல் கிராமப்புற மேம்பாட்டில் அக்கறை கொண்டுள்ள இந்த அரசு வழியில் உள்ள கடத்தூர், தெங்கியாநத்தம் போன்ற 10 கிராமங்களுக்கு தண்ணீர் எடுத்துக் கொள்கின்ற வசதியை, கோமுகி அணையிலிருந்து குடிநீர் கொண்டு வந்தால் ஏற்படுத்த முடியும், கிராமப்புற மக்களுக்கு குடிநீர் பஞ்சமின்றி பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்க வசதியாயிருக்கும், ஆகையால் இத்திட்டத்தை துரிதப்படுத்த வேண்டுகிறேன்.

அதேபோல் கள்ளக்குறிச்சி பகுதியில் குடிநீர் பஞ்சம் தீர, மணிமுத்தாறு அணையிலிருந்து குடிநீர் கொண்டு வந்தால் குடிநீர் வாட்டிப் பிரச்சினையை தீர்ப்பதற்கு வசதியாக இருக்கும் என்று கூறிக் கொள்வதோடு, இந்த ஆளுநர் உரையில் விவசாயிகள், தொழிலாளிகள், சமுதாயத்தில் பின்தங்கிய மக்கள் இவர்கள் பிரச்சினைகளைப்பற்றி தெளிவான கண்ணோட்டத்தில் எதுவும் இல்லாததால் இதை நான் எதிர்க்கிறேன் என்று கூறிக் கொண்டு அமர்கிறேன்.

* **திரு. குமரி அனந்தன் :** வணக்கத்திற்குரிய சபாநாயகர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது, காந்தி காமராஜ் தேசிய காங்கிரசினுடைய சார்பில் என்னையும் பேச அனுமதித்ததற்கு நன்றி தெரிவித்து, நல்ல பல திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று சொல்கிற ஆர்வமும் ஆசையும் நமது ஆளுநர் அவர்களுடைய உரையிலே இருப்பதை காண்கிறேன். சான்றாகச் சொல்ல வேண்டும் என்று சொன்னால், தேர்தலுக்கு சில தினங்களுக்கு முன்பு கூட நடைபெற்ற ஒரு மாபெரும் மாநாட்டில் ஆசிரியர்களுக்கு, "நாங்கள் ஆட்சிக்கு வந்தால் உங்களை அரசாங்க அலுவலர்களாக மாற்றுவோம்" என்று முதல்வர் அவர்கள் அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படும் என்று இங்கே சொல்லப்பட்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறோம்.

இளம் வயதினராக இருந்தாலும் அரசியல் அறிவு பெற்ற மக்களாக, நமது நாட்டில் இளைஞர்கள் இருக்கிற காரணத்தினால் 18 வயது வந்த ஆணும் பெண்ணும் வாக்குரிமை பெற வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வந்திருக்கிறது. என்னைப் பொறுத்தவரையிலும், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், கல்லூரி மாணவ மாணவிகள் கையெழுத்திட்டு வாக்குரிமை வேண்டும் என்று கேட்கப்பட்ட மனு ஒன்றை எடுத்துக்கொண்டு போய், டெல்லி பாராளுமன்ற சபாநாயகர் அவர்களிடம், மாணவர் தலைவரும், நானும் கொண்டு போய் சமர்ப்பித்தோம். அது இன்று நிறைவேற இருக்கிறது என்பதைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



1980 ஜூன் 27] [திரு. குமரி அனந்தன்]

அதேபோல, கல்விக்கு ஆற்றுகிற பணியை தனது தலையாய கடமையாக எண்ணியிருந்த பெருந்தலைவர் காமராசர் அவர்களின் தொண்டன் என்ற முறையில், கோவை, திருச்சி ஆகிய நகரங்களில் புதிய பல்கலைக் கழகங்கள் நிறுவ இருப்பது பற்றியும், காரைக்குடியில் உள்ள கல்விக் கூடங்களை இணைத்து பல்கலைக் கழகம் ஒன்றை உருவாக்கும் முயற்சியையும், சென்னை, மதுரை அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களின் நிர்வாக சீரமைப்பு கொண்டு வருவதைப் பற்றியும் பெரிதும் மகிழ்ச்சியும் பூரிப்பும் அடைகிறேன். என்னுடைய பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் ஒன்றை குறிப்பிடாமல் விட்டிருக்கிறார்களே என்று நினைவில் அதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சிறந்த கவிஞராக விளங்கிய திரு. குழந்தைசாமி அவர்கள், துணை வேந்தராக மதுரை பல்கலைக் கழகத்தில் இருந்தபோது, பல்கலைக் கழகத்திற்கு ஒரு விரிவாக்க மையம் ஒன்றினை ஏற்படுத்த வேண்டும் என்று விரும்பினார். பல்கலைக் கழகத்தினுடைய விரிவாக்க மையம், அதாவது "எக்ஸ்டென்ஷன் சென்டர்" என்ற பொருளில் சொல்கிறேன். அதனை பரிசீலித்த சுந்தர் சிங் அவர்கள், அதற்கான 300 ஏக்கர் நிலம் ஒன்றினை கூட பார்வையிட்டார்கள். இப்பொழுது அப்பல்கலைக் கழகத்தில் துணை வேந்தராக இருக்கும் திரு. வ. சுபமாணிக்கம் அவர்கள்கூட ஒரு சிறந்த தமிழ் அறிஞர் என்பதை அனைவரும் அறிவோம்.

(முற்பகல் 10-10)

எனவே நெல்லை மாவட்டத்திலே அந்த விரிவாக்க மையம் அமைவதற்குரிய முயற்சிகள் விடுபட்டுவிடாமல் மீண்டும் தொடரப்படவேண்டும், அது நிச்சயமாக நிலை நாட்டப்பட வேண்டும் என்பதனை நான் இந்த அரசுக்கு என் வேண்டுகோளாக விடுக்கிறேன். அது மட்டுமல்லாமல், '. . . . தேடு கல்வியிலாததொ ரூரைத் தீயினுக்கிரை யாக மடுத்தல் கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்' என்று சரஸ்வதிக்கு செய்கிற மாபெரும் காணிக்கையாக பாரதி சொன்னான். அந்த மகாகவி பாரதியின் நூற்றாண்டு விழா வருகிற நேரத்தில் அந்த மாபெரும் கலைஞன் பிறந்து உலாவிய அந்த புண்ணிய பூமியில் ஏற்படுகிற அந்தக் கல்வி நிலையம் அல்லது அந்த விரிவாக்க மையத்திற்கு பாரதியின் பெயரைச் சூட்டுகிற வகையில் அரசாங்கம் எல்லாக் காரியங்களையும் செய்யவேண்டும் என்று சொல்கிற என் வேண்டுகோளையும் நான் இதன் மூலம் வைக்கிறேன்.

[திரு. குமரி அனந்தன்] [1980 ஜூன் 27

மிக முக்கியமான ஒரு செய்தியை ஆளுநர் அவர்கள் உரையில் நான் பார்த்தேன். வெளி உலகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஆராய்ச்சி நுணுக்கங்களையும் நம் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆராய்ச்சி களையும் ஒருங்கிணைத்து அந்தச் செல்வங்களை எல்லாம் ஒரேயிடத்தில் குவித்து வைத்து அந்தச் செல்வங்களிலிருந்து கிடைக்கிற சிந்தனைகளின் விளைவுகளை செயலாக்க வடிவமாக மாற்றி தொழில்களை மேம்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு அதற்கென ஒரு தொழில் நுணுக்க மையம் ஏற்படுத்தப்போகிறோம் என்ற செய்தியும் ஆளுநர் அவர்கள் உரையில் காணப்படுகிறது. அது வரவேற்கத்தக்கது, பாராட்டத்தக்கது. அது விரைந்து வரவேண்டும் என்ற ஆசையும் நமக்கு இருக்கிறது. ஆனால் சில யிடங்களில் ஒரே ஒரு இடத்தில் ஒரு மையம் வைத்துவிட்டோம் என்று சொல்கிற பெருமையை விட்டு எல்லாயிடங்களிலும் பரவலாக தொழில்கள் வர வேண்டும் என்று சொல்கிற ஆசை இந்த அரசுக்கு இருக்கிறது என்ற நம்பிக்கையின் அடிப்படையில் எங்களது வேண்டுகோளை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில் பஞ்சாயத்து யூனியன்கள் என்று அழைக்கப்படுகிற வட்டாரங் கள் 370 என்கிற அளவுக்கு மேல் இருக்கின்றன. ஆங்காங்கு என்னென்ன மூலப்பொருள்கள் கிடைக்கின்றன, எந்தெந்த மூலப்பொருள்களை வைத்து எந்தெந்தத் தொழில்களை நாம் செய்ய முடியும், அந்தத் தொழில்களைச் செய்வதற்கு அரசாங்கம் என்னென்ன உதவி செய்கிறது அல்லது செய்யக்கூடும் என்று சொல்கிற விவரங்கள் அனைத்தும் அடங்கிய குறிப்பு ஒவ்வொரு பஞ்சாயத்திலும் இருத்தல் வேண்டும். மீண்டும் அதை அழுத்திச் சொல் கிறேன். ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட எல்லைக்குள்ளும் என்னென்ன மூலப்பொருள்கள் கிடைக்கின்றன, எந்தெந்த மூலப்பொருள்களை வைத்து என்னென்ன தொழில்களைப் பெருக்கமுடியும், அதற்கு எந்த அளவிற்கு முதலீடு இருந்தால் போதும். அதற்கு எந்த அளவிற்கு அரசாங்க உதவி கிடைக்கும் என்பன போன்ற விவரங்கள் அனைத்தும் உள்ள குறிப்பு ஒவ்வொரு பஞ்சாயத்திலும் இருத்தல் வேண்டும். அப்படி ஒவ்வொரு ஊராட்சியிலும் இருக்கவேண்டும் என்று சொல்கிறேன். காரணம், வேலை யில்லாத் திண்டாட்டத்தை போக்கவேண்டும் என்று சொல்கிற எண்ணம் நம் எல்லோருக்கும் இருக்கிறது. அப்படி வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு அந்தந்த இடத்தில் தொழில் பெருகிவருகிறபோதுதான் கணிசமான முறையில் செய்து முடிக்கமுடியுமே தவிர ஒன்றிரண்டு இடங்களில் தொழில்கள் துவங்குவதன் மூலம் அதைச் செய்ய முடியாது. படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்பது



1980 ஜூன் 27] [திரு. குமரி அனந்தன்]

ஒன்று. அப்படி படித்து பட்டம் பெற்ற இளைஞர்கள் ஓரளவிற்கு திறமை யுடையவர்களாக, வசதியுடையவர்களாகவும் இருப்பார்களேயானால் அவர்கள் சொந்தத்தில் தொழில்கள் துவங்குவதற்குரிய முயற்சியில் ஈடுபட இப்படிப்பட்ட ஊக்கம் பயனளிக்கும் என்று தெரிகிற காரணத்தினால் ஒவ்வொரு ஊராட்சி யிலும் அந்தக் குறிப்புகள் இருத்தல் வேண்டும். எந்தத் தொழிலையும் பற்றி தெரிந்து கொள்ள ஒருவர் விரும்பினால் அது குறித்து தெரிவிக்க அதிகாரி ஒருவரும் இருத்தல் வேண்டும். இதன் மூலம் வேலை வாய்ப்பு பெருக வாய்ப்பிருக்கிறது. 14,000 பஞ்சாயத்துகளிலும் இப்படிப்பட்ட அதிகாரிகள் இருப்பார்களேயானால், அதிலும் வேலை வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்திற்காக இதனைச் சொல்ல விரும்புகிறேன்.

கிராமங்கள் என்று வந்துவிட்ட காரணத்தால் அங்கிருந்து நமக்கு உணவைத் தந்து, உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என்று சொல்கிற உயர் தத்துவத்தை நிலைநாட்டிக்கொண்டிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் அவர்கள் வாழ்வில் ஏற்பட்டிருக்கக்கூடிய எவ்வளவோ சோதனைகள், அந்த சோதனைகளின் அடிப்படையில் நாம் சில காரியங்களைக் கடைப்பிடிக் காத காரணத்தினால், ஆமாம், நாம் செய்து கொடுக்கவேண்டியதை செய்து கொடுக்காத காரணத்தினால் அவர்கள் வேதனை விளிம்பில் நின்று கொண்டு வாடிவதங்கிக் கொண்டிருக்கிற காட்சியை நாம் இன்று கண்டு கொண்டிருக்கிறோம். அவர்களுக்கு இன்று அமைந்திருக்கிற அரசாங்கம் பல உறுதிமொழிகளைக் கொடுத்தது என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். அந்த உறுதிமொழிகளை நிறைவேற்றுவதுதான் இந்த அரசின் கடப்பாடாக இருக்கவேண்டும், அதை அவர்கள் நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையும் உண்டு. நிறைவேற்றவேண்டும் என்று நாங்கள் தூண்டிக்கொண்டேயிருப்போம், நிறைவேற்றவில்லை என்று சொன்னால் அதைச் சுட்டிக்காட்டிக் கொண்டிருப்போம், நிறைவேற்ற மறுத்தால் ஏன் என்று தட்டிக் கேட்டுக் கொண்டிருப்போம் என்ற செய்தியினை நான் இங்கே நினைவுபடுத்த விரும்பு கிறேன். ஆக, மக்களின் வாக்குகளைப் பெற்று வந்த ஒரு அரசாங்கம், நல்ல முறையில் செயல்படப்போகிற காலத்தில் அதைக் கட்டிக் காக்க வேண்டிய கடமையும் உண்டு, அதைச் செய்யத் தவறியிருக்கிறார்கள் என்றால் சுட்டிக் காட்ட வேண்டிய கடமையும் உண்டு என்ற காரணத்திற்காகத்தான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன். விவசாயப் பெருங்குடி மக்கள் இன்று பலவற்றை நம்மிடமிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனெனில், அவர்களுடைய வாழ்க்கை இன்று மற்றவர்கள்போல் இல்லாது, மிகுந்த சிரமத்தோடு இருந்து கொண்டிருக் கிறது.

[திரு. குமரி அனந்தன்] [1980 ஜூன் 27

'இன்-புட்ஸ்' அதாவது உள்ளீட்டுப் பொருள்கள் எதுவாக இருந்தாலும், உரம் போன்ற மூலப் பொருள்கள் எதுவாக இருந்தாலும், மத்திய அரசு பெட்ரோலியம் போன்ற பொருட்களின் விலையை இன்னும் கூட்டியிருக்கின்ற காரணத்தால், அவர்கள் வாங்கி உபயோகிக்கின்ற பொருள்களினால் விவசாயப் பொருள்களின் விலை ஏறி, ஏறி கட்டுப்படியாகாமல் இருக்கின்றது. கட்டுப்படியாகக்கூடிய விலைக்கு வாங்குகிறோம் என்று சொன்னாலும், அவர்களுக்கு அதிக ஆதாயம் கிடைக்கின்ற நிலைக்கு இப்போது வரவில்லை. கட்டுப்படியாகக்கூடிய விலை என்று சொன்னால், அவர்கள் போட்டதை எடுக்கக் கூடிய நிலை என்ற அளவில் இருந்தால், அவர்கள் வாழ்வில் மேம்படைய முடியாது. மற்றத் தொழில்களுக்கு அவ்வாறில்லாத நிலையில், இந்த ஒரு தொழிலுக்கு மட்டும் கட்டுப்படியாகக் கூடிய விலை என்று சொன்னால், என்ன காரணம் என்பதைச் சிந்தித்துப் பார்த்து, அவர்களுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கின்ற அளவில், லாபம் கிடைக்கின்ற அளவில் செய்து, அவர்கள் வாழ்வில் மேம்பாடு அடைவதற்கு உரிய எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு கடன் ரத்து செய்யப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. மத்திய அரசினுடைய இன்றைய போக்கு மன நிறைவு அளிப்பதாக இல்லை. விவசாயிகளுடைய துன்பத்தை, துயரத்தை அறிந்து அவர்களுடைய துயரத்தைத் துடைக்கின்ற அளவில், அதற்குத் தகுந்தவாறு செயல்படுவதாகத் தெரியவில்லை. எனவே, மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துவதில், விவசாயக் கடன்களை ரத்து செய்வதில் இயன்ற அளவு என்று சொல்ல மாட்டேன், இந்தக் கருத்தைப் பெற்ற அத்தனை பேர்களும் இந்தக் கடன் ரத்து செய்வதிலே இந்த மாமன்றம் அரசுக்கு துணை நிற்கும், மத்திய அரசை அறிவுறுத்துகின்ற, நினைவுபடுத்துகின்ற வகையில், எல்லைக் கோட்டைக் கடந்து எல்லோரும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும் என்ற வேண்டுகோளை விடுக்கின்றேன். ஏனென்று சொன்னால், விவசாயிகள் சேற்றிலே காலை வைக்கவில்லை என்று சொன்னால், பட்டணத்திலே பத்து அடுக்கு மாளிகையிலே இருப்பவனாயினும் யாரும் சோற்றிலே கை வைக்க முடியாது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த அவை, இந்த விவசாயிகளைப் பொறுத்தவரையில் எல்லைக் கோட்டைத் தாண்டி, இந்த அரசுக்கு துணை புரிவதற்கு தோள் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும். எங்களைப் பொறுத்தவரையில் நாங்கள் இருப்போம்; மற்றவர்களும் அவ்வாறு இருக்க வேண்டும் என்று என்னுடைய எண்ணத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1980 ஜூன் 27] [திரு. குமரி அனந்தன்]

அடுத்த செய்தியாக, தமிழ் நாடு முழுவதும் இங்கே இருக்கின்ற எல்லாத் தலைவர்களும், சமுதாயத் தொண்டர்களும், அரசியல் கட்சித் தலைவர்களும் இந்தத் தேர்தல் நேரத்தின்போது சுற்றுப்பயணம் செய்திருப்பார்கள். அந்தச் சுற்றுப்பயணத்தின்போது மொத்தமாக நாம் காண்பது என்ன? எங்கு பார்த்தாலும், குறைகளைப் பார்த்தோம். மின் விளக்கு எரியவில்லை என்ற குறை, எங்களுக்கு சாலை வசதி இல்லை என்ற குறை, பாதை இல்லை என்ற குறை, போக்குவரத்து எல்லா இடங்களுக்கும் இல்லை என்ற குறை, குடி தண்ணீர் இல்லை என்ற குறை, இத்தனை ஆண்டுகள் ஆகியும் இன்னும் குடி தண்ணீர் இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லுகின்ற இந்த நேரத்தில், இந்தப் பிரச்சினைகளை எல்லாம் நாம் மனதிலே இருத்தி, ஏழை மக்களுடைய குறைகளை, தேவைகளையெல்லாம் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அடித் தளத்திலே இருக்கின்ற மக்களுக்கு நாம் ஏராளம் செய்ய வேண்டியிருக்கின்ற காரணத்தினால், அந்த மக்களின் தேவைகள் என்ன என்பதை நாம் ஆழ்ந்து சிந்தித்து, அதற்குத் தகுந்த தொலைநோக்குத் திட்டங்களையும், உடனடியாகச் செய்யவேண்டிய அத்தகைய திட்டங்களையும் செய்தாக வேண்டுமென்று அந்த வகையிலும் இந்த அரசாங்கம் முனைந்து செய்யும் என்று எண்ணுகிறேன்.

அடுத்து, ஒரு முக்கியமான செய்தி, கடலும், அதனைச் சார்ந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்களின் வாழ்க்கையை, அவர்களது அவல நிலையைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். கட்டுமர மீனவர்கள் ஒவ்வொரு நாளும் செத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்புகூட கடல் கொந்தளிப்பு ஏற்பட்ட நேரத்திலும்கூட, கடல் கொதித்தது என்று சொன்னால் கூட தவறில்லை, அப்படி கொதித்த நேரத்திலும்கூட,

"சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்—வெறுஞ்
சோற்றுக்கோ வந்ததிந்தப் பஞ்சம்?"

என்று பாரதியார் சொன்னார். சோற்றுக்காக வயிறு கொதிக்கின்ற காரணத்தினால், கடல் கொதிக்கின்றதையும் பொருட்படுத்தாது, கட்டுமரமேறிச் சென்றதால், அலை மோதலுக்குட்பட்டு, கடலில் செத்த காட்சியை நான் திருவொற்றியூரிலே கண்டேன். அப்படி இயற்கையை எதிர்த்துப் போராடுவது ஒரு பக்கம் இருந்தாலும், அந்நியச் செலாவணியை ஈட்டுவது தேவை என்றாலும், தேவையில்லை என்று நான் சொல்லவில்லை, அது தேவைதான் என்று சொன்னாலும், அதற்கு விசைப் படகுகள் தேவை என்று சொன்னாலும், அந்த விசைப் படகுகள் எல்லைக் கோட்டை மீறி, , உள்ளே நுழைந்து கடலோரத்திலே இருக்கின்ற கட்டுமர மீனவர்களின் வலைகளை கிழித்தெறிந்து

சின்ன சின்ன மீன்களையெல்லாம் இறந்துவிடச் செய்கின்ற காரணத்தினாலே, முட்டைகளையும் நசுக்கி வீழ்த்துகின்ற காரணத்தினாலே, இந்த விசைப் படகுகள் கட்டுமர மீனவர்கள் வாழ்விலே விஷப் படகுகளாக சில இடங்களில் காட்சி அளிக்கின்றன. சில இடங்களில் இவ்வாறு நடந்து கொண்டிருக்கின்றது என்று சொல்வதுகூட தவறு. எல்லா இடங்களிலும் நாம் இதைக் காண்கிறோம். ஆனால், அரசாங்கத்தின் ஆணை இருக்கிறது. அதிலே இந்த எல்லைக் கோட்டிற்குள் வரக்கூடாது. இந்த நேரத்திற்கு மேல் வரக் கூடாது என்று அரசாங்கம் ஆணை போட்ட பிறகும்கூட, அந்த ஆணை முறையாக செயல்படுத்தப்படுகின்றதா என்பதைப் பார்க்கவேண்டும். இந்த ஆணை போட்ட பிறகும், செயல்பட வில்லை என்று சொன்னால், இன்னும் அதற்கு மேல் சட்டம் கொண்டு வந்து, இந்த முறையீடுகளைப் பரிசீலனை செய்வதில் இந்தத் தமிழ் பூமியில் பிறந்திருக்கும் அத்தனை பேரும் நல்லபடியாக வாழ என்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

அடுத்த சேதியாக நம்முடைய ஆளுநர் அவர்கள் சொல்லியிருப்பது, தொழில் தொடங்குவதற்கும் மற்றவைகளுக்கும் மத்திய அரசாங்கம் ஒதுக்க வேண்டிய அளவு பணத்தை 1969-ல் இருந்து ஒதுக்கவில்லை என்றெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். பல நன்மைகளைச் செய்யத் துடித்துக் கொண்டிருக்கும் நாம், இந்தச் சட்டமன்றத்தில் இருக்கும் எதிர் வரிசையில் இருந்து கொண்டிருப்பவர்களும் தமிழ் மக்களின் நலன் நாடுபவர்கள்தான். இந்தத் தமிழ் பூமியில் பிறந்திருக்கும் அத்தனை பேரும் நல்லபடியாக வாழ வேண்டுமென்று சொல்லுகிற சிந்தனை இருப்பவர்கள்தான்.

இறுதிப் பத்தியில் கவர்னர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்—எளியவர்கள் வாழ்வு மேம்பட வேண்டுமென்று. எளியவர்கள் வாழ்வு மேம்பட வேண்டு மென்று சொன்னால் இடைவிடாது, சட்ட மன்ற உறுப்பினர்கள் மட்டுமல்லாது, அதிகாரிகள் மட்டுமல்லாது, அரசாங்கத்தை நடத்துகிறவர்கள் மட்டுமல்லாது எதிர் வரிசையில் இருக்கும் நாமும் சேர்ந்து அதற்கு உழைத்தாக வேண்டும். அந்த உழைப்பைக் கொடுத்து தமிழகம் மற்ற மாநிலங்களுக்கும் வழிகாட்டியாக இருக்கும் வகையிலும், தமிழகத்திலே இந்தத் தேர்தல் நடந்தபோது கொடுக்கப் பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுகிற வகையிலும் இந்த மாமன்றம் விழிப் போடு இருந்து செயல்படும் என்ற நம்பிக்கையை கவர்னர் அவர்கள் உரை இங்கே சுட்டிக் காட்டி இருக்கும் காரணத்தாலே அந்தப் பாராட்டைத் தெரிவித்து, தீர்மானத்தின் அடிப்படையில் நானும் எனது பாராட்டைத்





தெரிவித்து, எனது கட்சியின் சார்பில் பாராட்டும் அதே நேரத்திலே செய்யப் பட வேண்டியவை இவை இவை இருக்கின்றன என்று சொல்வதற்குக் கிடைத்த வாய்ப்புக்கும் மற்றும் அனைத்துக்கும் நன்றி தெரிவித்து அமைகிறேன். வணக்கம்.

**திரு. கோ. விஸ்வநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் கவர்னர் உரையின்மீது நடக்கின்ற முதல் விவாதத்தில் என்னுடைய 'மெய்டன் ஸ்பீச்' என்ற அளவுக்கு முதல் பேச்சைத் துவக்கு வதில் பெருமைப்படுகிறேன். நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் பற்றி ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்—

"This Seventh Assembly of Tamil Nadu is the gift by the people of Tamil Nadu for truth, justice and honesty, offered to the whole of India."

என்று அவர்கள் மிகச் சிறந்த முறையில் குறிப்பிட்டிருப்பதற்கு எவ்வளவு பாராட்டுகளையும், நன்றிகளையும் சொன்னாலும் தகும். நடந்து முடிந்த தேர்தல் முடிவுகளைப் பற்றி ஒரே ஒரு வரியில் சொல்ல வேண்டுமென்றால்— "எலக்ஷனில் எம்.ஜி.ஆர். வெற்றி பெற்றார் ; கலெக்ஷனில் கருணாநிதி வெற்றி பெற்றார்" என்று சொல்லி முடித்து விடலாம்.

நான் நினைத்துப் பார்க்கிறேன். ஏடுகளைப் புரட்டிப் பார்த்தேன். 1980-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடந்து ஒரே ஒரு முறைதான் இந்த மாமன்றம் கூடியிருக்கிறது. அப்போது பேசிய தி.மு.க. உறுப்பினர்கள் பேசிய பேச்சையெல்லாம் கொஞ்சம் கவனமாகப் பார்த்தேன். கவனர் உரை மீது நடந்த விவாதத்தில் அவர்கள் என்னென்னவெல்லாம் பேசியிருக்கிறார்கள் என்று கொஞ்சம் கூர்ந்து பார்த்தேன். 'இந்த கவர்னருக்கு உரையாற்றுவதற்கு மாரல் அத்தாரிடி இல்லை' என்று சொல்லி யிருக்கிறார்கள். 'கோடம்பாக்கம் அழைக்கிறது, கோட்டை விடை தருகிறது' என்று ஒருவர் பேசியிருக்கிறார். 'மானம் இழப்பதற்கு முன் மரியாதையாக ராஜினாமாச் செய்யுங்கள்' என்று ஒருவர் ஏளனமாகப் பேசி யிருக்கிறார்.

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 'அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல்' பொறுத்துக் கொண்டிருந்தார்கள். நமக்குத் தெரியும்—'பொறுத்தவர் பூமியாழ்வார்' என்று. இன்று அவர் ஆண்டு கொண்டிருக்கிறார். எகத்தாள

மிட்டவர்கள், ஏளனமாகப் பேசியவர்கள் எல்லாம் உருத் தெரியாமல் போயிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்டு குப்பைக் கூடையில் தூக்கி எறியப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாடறியும், நாமும் அறிவோம்.

1980-ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போது திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி 105 லட்சம் வாக்குகளைப் பெற்றது. ஆனால் இந்தச் சட்டமன்றத்தில் தேர்தலில் அவர்கள் பெற்ற வாக்குகள் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து 83 லட்சந்தான். 22 லட்சம் வாக்குகளை அவர்கள் இழந்திருக்கிறார்கள். அதே நேரத்தில் அ.தி.மு.க. அணி அப்போது 85 லட்சம் வாக்குகளைத்தான் பெற்றது. இப்போது 93 லட்சம் வாக்குகளைப் பெற்றது. நாம் உயர்ந்து இருக்கிறோம். அவர்கள் இருந்ததை இழந்திருக்கிறார்கள். நாம் இல்லாததைப் பெற்றிருக்கிறோம். தமிழ்நாட்டு மக்கள் மிகத் தெளிவாகத் தீர்ப்பளித்திருக்கிறார்கள். அன்று மக்கள் முன் வைக்கப்பட்ட கேள்வி—பிரதமர் இந்திராவா, ஜெகஜீவன்ராமா என்பது. மக்கள் இந்திரா என்று தீர்ப்பளித்தார்கள். இப்போது வைக்கப்பட்ட கேள்வி முதலமைச்சர் எம்.ஜி.ஆரா அல்லது கருணாநிதியா என்பது. மக்கள் மறுபடியும் தெளிவாகச் சொன்னார்கள்—எம்.ஜி.ஆர். தான் தமிழ்நாட்டுக்குத் தேவை என்று. ஆனால் இந்தத் தேர்தல் முடிவை பல பேரால் ஜீரணம் செய்து கொள்ள முடியவில்லை. இந்தத் தேர்தல் முடிவைப் பற்றி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதைப் பின்னால் கூறுகிறேன். பாரதப் பிரதமர் இந்திரா காந்தியைப் பத்திரிகை நிருபர்கள் சந்தித்து இதைப் பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள் என்று கேட்டார்கள். அம்மையார் சொன்னது—

I quote from U.N.I.

" She attributed the reverse of her party in the State to the premature announcement of about who would be the Chief Minister ".

அம்மையார் தெளிவாகச் சொன்னார்கள். நான் தவறுதலாக—நாங்கள் வெற்றி பெற்றால் திரு. கருணாநிதிதான் முதலமைச்சர் என்று சொன்னதுதான் இந்தத் தேர்தல் தோல்விக்குக் காரணமாகப் போய்விட்டது என்று சொல்லிவிட்டார்கள். மக்களின் குரலே மகேசன் குரல் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி சொல்வார்கள். இந்தத் தேர்தல் தீர்ப்பை பெருந்தன்மையோடு எடுத்துக் கொள்கின்ற மனப்பக்குவம் ஏனோ இன்னும் தி.மு.க. தலைமைக்கு வரவில்லை. அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற வெற்றியை, அதனுடைய மாபெரும் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பெற்ற வெற்றியை, பச்சைப் பொய்களைச் சொல்லி கொச்சைப்படுத்தப்





பார்க்கிறார்கள். தங்களுடைய படுதோல்வியை மறைப்பதற்கு, தங்களுடைய தலைமையைக் காப்பாற்றிக் கொள்வதற்கு காரணங்களைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சொல்கிற காரணங்களை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

அவர்கள் சொல்கிற முதல் காரணம் 10 இலட்சம் பேர்களை, 18 வயதிற்கு மேற்பட்டவர்களை எல்லாம் வாக்காளர் பட்டியலிலே சேர்த்து விட்டார்கள், எனவே தி.மு.க. அணி தோற்றுவிட்டது என்று சொல்கிறார்கள். தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய அரசாங்கம் பிப்ரவரி 17 ஆம் தேதி அகற்றப்பட்டது. அப்போது தேர்தல் பற்றிய வார்த்தை கிடையாது, சட்டமன்றத் தேர்தல் தேதியே அப்போது குறிப்பிடப்படவில்லை. குடியரசுத் தலைவர் ஆட்சி தமிழ்நாட்டிற்கு வந்தது. அதாவது மத்திய அரசின் ஆட்சி, அதாவது தி.மு.க. பிளஸ் இந்திரா காங்கிரஸ் ஆட்சி அப்போது தமிழ் நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதற்குப் பிறகு தான் வாக்காளர் பட்டியல் தயாரிப்பு ஆரம்பமாயிற்று. மார்ச் 3 ஆம் தேதி ஆரம்பித்து ஏப்ரல் 23 ஆம் தேதி வரை அது நடந்தது. எந்த அதிகாரிகள் அந்த வாக்காளர் பட்டியல் தயாரிப்பதிலே ஈடுபட்டார்கள் என்பதை இந்த மாமன்றமே அறியும். என்.ஜி.ஓ. கூட்டங்களில் அடுத்த முதல்வராக கருணாநிதி வரவேண்டும் என்று பேசினார்கள். எம்.ஜி.ஆர். வரக்கூடாது என்று பேசினார்கள். அந்த அதிகாரிகள் தான் வாக்காளர் பட்டியல் தயாரிப்பிலே ஈடுபட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம், இந்திரா காங்கிரஸோடு அவர்களும் சேர்ந்து ஒரு வேட்பாளரை நிற்கவைத்தார்களே, அவர்கள் தான் அந்தப் பட்டியல் தயாரிப்பிலே ஈடுபட்டார்கள் என்பதை இந்த மன்றத்து உறுப்பினர்கள் மறந்துவிடக்கூடாது. வெற்றிபெற்றால், ஏது, தி.மு.க. அணி வெற்றிபெற்றால் பழனியிலிருந்து தங்கத் தேரைக் கொண்டு வந்து வள்ளுவர் கோட்டத்திலே பட்டாபிஷேகம் செய்வதற்கான எல்லா ஏற்பாடுகளையும் தயாராகச் செய்துவைத்திருந்தார்களே அதே அதிகாரிகள் தான் அந்த வாக்காளர் பட்டியல் தயாரிப்பிலே ஈடுபட்டிருந்தார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் தயாரித்த வாக்காளர் பட்டியலே தப்பு என்று சொன்னால் யாரைப் போய் குற்றம்சொல்வது என்று தெரியவில்லை. எலி—தவளை கூட்டணிகாரர்கள் ஒருவர் காதை ஒருவர் பிடித்துக்கொண்டு உன்னாலே நான் கெட்டேன், என்னாலே நீ கெட்டாய் என்று தோப்புக்கரணம் போடுவதைத் தவிர வேறு வழியில்லை.

அவர்கள் சொல்கிற இரண்டாவது காரணம், நிறைவேற்றமுடியாத வாக்குறுதிகளை அள்ளிவீசி எம்.ஜி.ஆர். வெற்றிபெற்றுவிட்டார் என்று சொல்கிறார்கள். நாங்கள் ஒரு தேர்தல் அறிக்கையைத்தான் வெளியிட்டோம்

அவர்கள் தனித்தனியாக இரண்டு தேர்தல் அறிக்கைகளை வெளியிட்டார்கள். அதற்குப் பிறகு இரண்டு பேர்களும் சேர்ந்து 3-வது தேர்தல் அறிக்கையையும் வெளியிட்டார்கள். அதன்மூலமாக முரண்பட்ட வாக்குறுதிகளை அளித்தார்கள். ஆனால் தமிழ்நாட்டு மக்கள் அறிவாளிகளாக இருக்கிறார்கள். 'எவர் விஜிலன்ட் பப்ளிக்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப்போல மக்கள் விழிப்புணர்ச்சியோடு அவர்களை நம்பவில்லை, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைத்தான் நம்பினார்கள். அதனுடைய விளைவுதான் தமிழ்நாட்டிலே எம். ஜி. ஆர். அவர்களுடைய ஆட்சி மலர்ந்திருக்கிறது. மக்களுடைய வாக்குறுதிகளை நிறைவேற்றுகிறார்களோ இல்லையோ நிச்சயமாக மக்களுடைய வரிப்பணத்தை வாரிச்சுருட்டிக்கொள்ள மாட்டார்கள் என்ற நம்பிக்கை மக்களுக்கு இருக்கிறது.

அவர்கள் சொல்கிற மூன்றாவது காரணத்தையும் தெரிந்துகொண்டாக வேண்டும். அவர்கள் சொல்கிறார்கள், தமிழனுக்கு ஜனவரி மாதத்திலே ஒழுங்காக புத்தி இருந்தது. தமிழன் ஜனவரி மாதத்திலே நல்லவனாக இருந்தான். அவன் மே மாதத்திலே கெட்டுப்போனான். அதற்குக் காரணம் மேல் ஜாதிக்காரர்கள் உயர்ந்த ஜாதிக்காரர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தி. மு. க. அணியைத் தோற்கடித்து விட்டார்கள் என்று 15 நாட்களாக எழுதியும் பேசியும் வருகிறார்கள். நான் முரசொலிப் பத்திரிகையிலிருந்து படிக்க விரும்புகிறேன். அது அவர்களுடைய பைபிளாக இருக்கின்ற காரணத்தால், இந்தத் தோல்வி தமிழர்களிடையே இன உணர்வு பாதிக்கப்பட்ட காரணத்தினால் ஏற்பட்டுவிட்ட விளைவு என்பதை மறந்து விடக்கூடாது. குமுதம், துக்ளக், தினமணி ஆகியவை வெளியிட்ட கருத்துக்களால் தி.மு.க. இந்திரா காங்கிரஸ் அணி தோற்றுவிட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். என்றைக்குமே அவர்கள் நம்மை எதிர்த்து இருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். சொல்வதற்கு தாளம் போடுவதற்கு பெரிய ஜாதிக்காரர்கள் தயாராக இருக்கிறார்கள். அவரைச் சுற்றிக்கொண்டு தனக்குப் பெரிய பெருமைகளைத் தேடிக் கொள்வதற்கு பெரிய பத்திரிகை ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆகவே நாம் வெற்றிபெற்றதற்கு என்ன காரணம் என்று தி.மு.க. சொல்கிறது என்றால் பெரிய ஜாதிக்காரர்கள், மேல் ஜாதிக்காரர்கள் ஆதரவால் வெற்றி பெற்றதாகச் சொல்கிறார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், தமிழ்நாடு வகுப்பு ஒற்றுமைக்கும், மத ஒற்றுமைக்கும் பெயர் பெற்ற மாநிலம் ஆகும்.



(முற்பகல் 10-30)

இந்த இடத்திலே இந்த விஷயத்தைக் கக்குவது தேவைதானா என்று கேட்க விரும்புகிறேன். இன்னும் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன், யாருக்கு பெரிய ஜாதியின் ஆதரவு இருந்தது? கொஞ்சம் பச்சையாகவே கேட்க விரும்புகிறேன். யாரை ஆதரித்து இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் சூறாவளி சுற்றுப்பயணம் செய்தார்கள்? எந்தக் கூட்டணியை ஆதரித்து மத்திய அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் செய்தார்கள்? எந்தக் கூட்டணியை ஆதரித்து திரு. பி. சி. சேத்தி அவர்கள் சுற்றுப் பயணம் செய்தார்கள்? இவர்களெல்லாம் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்கள்? நீங்கள் சொல்வதுமாதிரி பார்த்தால் இவர்கள் மேல் ஜாதிக்காரர்கள், உயர்ந்த ஜாதிக்காரர்கள். உங்களுடைய குற்றச்சாட்டுப்படி பார்த்தால் நாங்கள் பார்ப்பனர்களின் ஆதரவைப் பெற்றவர்கள் இல்லை. நீங்கள்தான் சஞ்சய் காந்தியின் காலிலே விழுந்து அந்த ஆதரவைப் பெற்றீர்கள். அப்படியும் வெற்றி பெற முடியவில்லை.

நான் மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன், ஜாதி வெறியைத் தூண்டி தேசிய ஒருமைப்பாட்டிற்கு, வகுப்பு ஒற்றுமைக்குத் தீங்கு விளைவிக்கும் செயல் இது என்பதை இந்த மாமன்றம் மறந்து விடக்கூடாது. இன்னொன்றையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். தன்னுடைய சுயநலத்திற்காக இந்த ஜாதி வெறியைப் பயன்படுத்துபவர்கள், அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர்கள் இதிலே சிறந்தவர்கள் என்பதை மறந்து விடக் கூடாது. 1969 ஆம் ஆண்டு அண்ணாவிற்குப் பின்னால் யார் முதல்வர் என்ற பேச்சு எழுந்தபொழுது நாவலருக்கு எதிராக அவர் இதே ஆயுதத்தைத்தான் பயன்படுத்தினார். இப்பொழுதும் தன்னுடைய தலைமையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அந்த ஆயுதத்தையே பயன்படுத்துகிறார்கள். ஒரு நாளைக்கு ஏதாவது தகராறு வருமானால் பேராசிரியர் அன்பழகன் அவர்களைக் கவிழ்க்கவும் இதே ஆயுதம் பயன்படும் என்று எச்சரிக்க விரும்புகிறேன். இப்பொழுது என்ன நடைபெறுகிறது? தன்னுடைய பினாமி ஒருவர் பார்ப்பனர் எதிர்ப்பு மாநாட்டைக் கூட்டப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். பாரதத்தின் ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையையும் கருதி நான் சொல்கிறேன், மத்தியிலே ஆட்சியை நடத்தும் இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இங்குள்ள தலைவர்களையும், உறுப்பினர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன், உங்களுடைய நிலை என்ன என்பதைத் தெளிவாக இந்த மாமன்றத்திற்குச் சொல்லுங்கள். அது மட்டுமல்ல மத்திய அரசும், மாநில அரசும், யார்

[திரு. கோ. விஸ்வநாதன்] [1980 ஜூன் 27

வகுப்புக் கலவரத்தைத் தூண்டி விடுகிறார்களோ, தேசிய ஒருமைப்பாட்டிற்கு எதிராக யார் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்களோ அவர்களைக் கண்காணிக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசாங்கத்தின் முதலீடு தமிழ் நாட்டிலே குறைந்துகொண்டே வந்து கொண்டிருக்கிறது. 8 சதவீதத்திலிருந்து இன்றைக்கு 4 சதவீதமாக அது குறைந்திருக்கிறது. இது மிகவும் வருத்தப்படத்தக்கதாகும். இதிலே மத்தியிலே ஆளுங்கட்சியைச் சேர்ந்த இந்திரா காங்கிரஸ் தலைவர்களும், உறுப்பினர்களும் இந்த அரசாங்கத்திற்கு முழு ஒத்துழைப்பு தந்து, நிறைய முதலீட்டைப் பெறுவதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ் நாட்டிலே தொழில் வளர்ச்சி மிகவும் பின் தங்கியிருக்கிறது. விவசாயத் துறையிலேயும் இன்னும் நிறைய முன்னேற்றங்கள் தேவையாக இருக்கிறது. தொழில் வளர்ச்சியில் இன்றைக்கு அரசாங்கத்தின் முதலீடு மட்டுமல்லாமல், வெளியிலே இருக்கின்ற தனியார் முதலீட்டையும் கொண்டு வருவதற்கு அரசாங்கம் பெருமுயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலத்திற்கு வருவாய் எற்கனவே குறைந்து போயிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் மத்திய அரசு ஸ்பெஷல் எக்சைஸ் வரி என்று போட்டிருக்கிறது. தலைவரவர்களே, உங்களுக்குத் தெரியும், எந்த இன்கம் டாக்ஸ்-ஆக இருந்தாலும், எக்சைஸ்-ஆக இருந்தாலும் அதிலே மாநிலத்திற்குப் பங்கு உண்டு. ஆனால் இந்த முறை தந்திரமாக, அரசியல் சட்டத்திற்கு முரணான வகையில், ஸ்பெஷல் எக்சைஸ் என்று 197 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறார்கள். இதிலே மாநிலத்திற்குப் பங்கு வர முடியாத அளவிற்கு மத்திய அரசே ஏமாற்றும் முறையில் ஈடுபடலாமா என்று கேட்க விரும்புகிறேன்.

விலைவாசி ஏற்றம் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. பெட்ரோல் விலை உயர்வின் காரணமாகவும், இரயில்வேக் கட்டணம் அதிகரித்ததன் காரணமாகவும் இவ்வாறு ஏறியிருக்கிறது. ஆனால் அதைத் தடுத்து நிறுத்தும் முறையில் மத்திய அரசாங்கம் எந்தவிதமான முயற்சியையும் எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. ஆகவே, நாட்டிலே இருக்கின்ற பிரச்னைகளும் அதிகமாகிக் கொண்டே போகின்றன.

விவசாயத் துறைக்கு இன்னும் அதிகமாகப் பணத்தை தம்முடைய அரசாங்கம் செலவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பலயிடங்களிலே சிறிய அணைகள் கட்டுவது அப்படியே நின்று போயிருக்கின்றது.



1980 ஜூன் 27] [திரு. கோ. விஸ்வநாதன்]

வடார்க்காடு மாவட்டத்தில் மேலரசம்பட்டு அணை குறித்து நீண்ட நாட்களாகப் பேசப்பட்டு வந்திருக்கிறதே தவிர, அதற்கு எந்தவிதமான ஆயத்தமும் செய்யப்படவில்லை. அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தமிழக அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக ஆளுநர் அவர்கள் தங்களுடைய பேருரையிலே அரசாங்கத்தினுடைய எல்லாவிதமான திட்டங்களையும் கூறியிருக்கிறார்கள். அதிலே குறைபாடு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஏதாவது ஒன்றிரண்டு சேர்க்காமல் விட்டுப் போயிருந்தால் அவைகள் நிச்சயமாக வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்படும் என்பதைத் தெரிவித்து, இங்கே கவர்னர் உரைக்கு மறுபடியும் நன்றியைத் தெரிவித்து நான் அமர்கிறேன். வணக்கம்.

* **திரு. கி. சட்டநாத கரையாளர் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, ஆளுநருடைய உரையின்மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் ஒருசில வார்த்தைகள் சொல்ல அவாவுறுகிறேன். விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கை எந்த அளவு, இன்றைய பொருளாதார நிலையில் பாதிக் திருக்கிறது என்பதை இந்த அரசு உணர்ந்திருக்கிறது. இந்த உரையிலே பல இடங்களிலே குறிப்பாக கூறப்பட்டுள்ளது. விவசாயிகள் இந்த தேசத்தின் முதுகெலும்பு என்று திரும்பத் திரும்பச் சொல்வார்கள். ஆனால், அந்த விவசாயிகளின் வாழ்க்கை நசிந்துபோகக் கூடிய நிலைமைதான் இன்று தேசத்திலிருக்கிறது. இந்த மாநிலத்து மக்களின் மொத்த ஜனத்தொகையிலே 69 சதவிகிதம் வேளாண்மையை நம்பி வாழ்கிறார்கள். நேரடியாக 61.72 சதவிகித மக்கள் வேளாண்மையையே நம்பி தங்களுடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் நமது மாநிலத்தின் பொருளாதாரம் விவசாயிகளுடைய வாழ்க்கையுடன் இணைந்திருக்கிறது என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

இரண்டு ஹெக்டேர்கள் சாகுபடி செய்யக்கூடியவர்களின் எண்ணிக்கை 80 சதவிகிதம். அவர்கள் கையிலே சுமார் 40 சதவிகிதம் நிலங்கள் இருக்கின்றன. அவர்கள்தான் இன்றைய வறுமை எல்லைக் கோட்டுக்குக் கீழே உள்ள விவசாயப் பெருமக்கள். இந்த மக்களுடைய வாழ்க்கை நிரந்தரமான ஒரு ஏழ்மை நிலைமையிலே இருக்கிறது என்பதை சமுதாயமும் நாடும் ஒத்துக் கொண்டிருக்கிறது.

குறிப்பாக, விவசாயிகளின் பிரச்னையை ஆராய்ந்த குழு அதனைப்பற்றி கூறும்பொழுது, இரண்டு ஹெக்டேர் நிலமுள்ள விவசாயி, எந்த அளவு பாதிக்கப்பட்டுள்ளான் என்பதை அவர்களுடைய பரிந்துரையிலே குறிப்பிட்டுள்ளார்கள். 'ஏழ்மையைத் தவிர்க்கும் நிலைக்கு வேண்டிய ஆண்டு வருமானம்

ரூபாய் 3,708'—இது குறைந்தது கிடைக்க வேண்டுமென்று அவர்கள் பரிந்துரை கொடுத்து அந்த முறையிலே நெல் சாகுபடிச் செலவை அனுசரித்து மொத்தமாக நெல்லின் கொள்முதல் விலை ஒரு குவிண்டாலுக்கு ரூபாய் 120 கொடுத்தால் மாத்திரமே அவர்கள் வாழ்க்கை வறுமைநிலை எல்லையிலிருந்து மீண்டு, நிற்க முடியும் என்று பரிந்துரை கொடுத்துள்ளார்கள்.

இந்த விலையைக் கொடுக்கும்போது, அரசு எந்த அளவு பொறுப்பேற்க வேண்டிவரும், மத்திய அரசு எந்த அளவு பொறுப்பேற்க வேண்டிவரும் என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். 'மொத்தமாக நெல்லின் கொள்முதல் விலையை ரூ. 120-க்கு உயர்த்தினால் பொதுமக்களுக்கு விற்கும் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 220 ஆக உயரும். அப்படி உயரும்போது, காணப்படும் வேறுபாடுகளுக்குத் தகுந்த மானியம் மத்திய அரசு அளிக்க வேண்டும். அதை இந்த அரசால் கொடுக்க முடியாது' என்று அந்தப் பரிந்துரையிலே குறிப்பிட்டுள்ளார்கள். இப்படி மத்திய சர்க்காருடைய கணிசமான உதவி இல்லாத நிலைமையிலே, இந்த அரசு விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலையைக் கொடுக்க முடியாது என்று வரையறுத்து குழு பரிந்துரை கொடுத்துள்ளது.

சுமார் 4 இலட்சம் டன் விநியோகத்திற்கு ரூ. 28 கோடி அதிகம். சர்க்காருடைய பணத்தை மானியமாகக் கொடுக்க வேண்டிவரும். அதைக் கொடுக்க மாநில சர்க்காரால் முடியுமா என்கிற ஐயத்தை அவர்கள் கூறி உள்ளார்கள். அதோடு மாத்திரமல்லாமல், மத்திய சர்க்கார்தான் அதனைக் கொடுக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

ஆனால் கோதுமைக்குக் கணிசமான மான்யம் அதாவது சுமார் 300 கோடிக்கும் அதிகமாக கொடுக்கப்படுகிறது, அகில இந்திய ரீதியில், கட்டுப்படியாகக் கூடிய விலையிலே, விற்கவேண்டுமென்பதற்காக, மத்திய சர்க்கார் இதைக் கொடுத்திருக்கிறது. ஆனால், நெல் உற்பத்திக்கு விலை நிர்ணயிக்கும் போது மாத்திரம் விவசாய உற்பத்திச் செலவை, அடிப்படையாகக் கொண்டு Input -ஐக் கணக்கிலே எடுத்துக்கொண்டு அவர்கள் விலையை நிர்ணயிக்கவில்லை என்பதை மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படி மான்யம் கொடுக்கவில்லையென்றால், இன்றிருக்கக்கூடிய விலையிலேயிருந்து கணிசமான அளவு விவசாய விளை பொருள்களின் விலை தானாக உயர்வதை நாம் எந்த விதத்திலும் தடுக்க முடியாது. அதை தடுக்க மத்திய சர்க்காரும், ரிசர்வ் வங்கியும் கணிசமான அளவு உதவிக்கு வந்தாலன்றி நம்மால் அந்த விலையை சமாளிக்க முடியாது. இந்தச் சந்தர்ப்பத்திலே



விலைவாசியை நிர்ணயிக்கும் அதிகாரம் நமக்கு இல்லை என்பதைத்தான் இந்த அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். விலையை நிர்ணயிக்கும் பொறுப்பு அக்ரிகல்சுரல் ப்ரைஸ் கமிஷனுக்குத்தான் இருக்கிறது. விலையை நிர்ணயிக்கும் அந்தக் குழு எந்த அடிப்படையிலே விலையை நிர்ணயிக்கிறது என்பதை அவை முன் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 10-40)

நாம் ஒன்றை சிந்திக்க மிகமிக கடமைப் பட்டிருக்கிறோம். எல்லா பொருள்களுக்கும் விலையை நிர்ணயிக்கின்ற உரிமை உற்பத்தியாளர்களிடம் இருக்கின்றன. பெட்ரோல் விலை ஏறிவிட்டால், டீசல் விலை ஏறிவிட்டால், மறுதினமே ஆட்டோரிக்ஷாக்களும், டாக்சிகளும் கட்டணத்தை உயர்த்தி விடுகிறார்கள். ஆனால் விவசாயிகளுக்கு தாங்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்கின்ற உரிமை இந்த நாட்டிலே இல்லை. இந்த தேசத்தின் தந்தை மகாத்மா காந்தி அவர்களுடைய கனவான கிராம ராஜ்யம், விவசாயிகளின் நலம் இவை எல்லாம் இன்று இல்லை என்பதை மிக மிக வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களின் விலையை நிர்ணயிக்கின்ற பொறுப்பு, இன்றைய அரசியல் அடிப்படையில், டெல்லியிலே இருக்கக்கூடிய "அக்ரிகல்சுரல் பிரைஸ் கமிஷ"னுக்குத்தான் இருக்கிறது. அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற "டேர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ்" என்னவென்று பார்ப்போமானால், இன்று நாட்டிலே இருக்கக்கூடிய மக்களின் வாங்கும் சக்தியை அடிப்படையாகக் கொண்டு "Purchasng power of the people must be taken intt consideration. அதாவது மக்கள் வாங்கும் சக்தியை அடிப்படையாக வைத்து நிர்ணயிக்க வேண்டும். அவர்களுக்கு என்ன அடக்கம் ஆகிறது என்பதற்கெல்லாம் கணக்கே இல்லை. இந்த நாட்டிலே தொழில் அதிபர்கள் தங்களுடைய பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யும்போது, இந்த அடிப்படையில் அல்ல அவர்கள் மெட்டீரியல் விலை என்ன, மேனேஜீரியல் காஸ்ட் என்ன, அவர்களுடைய "Production" காஸ்ட் என்ன ஆகிறது, தொழிலாளர்களுக்கு எவ்வளவு கொடுக்கவேண்டும், பிராபிட்—லாபம்—எவ்வளவு இருக்கவேண்டும் என்பதையெல்லாம் கணக்கிட்டு Tariff Commission சிபாரிசு செய்கிறது. அன்றாடம் மக்களுக்குத் தேவையான மிக அத்தியாவசியப் பொருள்களான மருந்துகள், பார்மசூட்டிக்கல் பொருள்கள் போன்றவைகளுக்கு விலை நிர்ணயம் செய்வதற்கும் இந்த டாரிப் கமிஷன் அடிப்படையிலேதான் இருக்கிறது. ஆனால் விவசாயப் பொருள்களுக்கு மாத்திரம் மக்களுடைய வாங்கும்

சக்தியை அடிப்படையாகக் கொண்டு பரிந்துரை செய்ய வேண்டும் என்று டேர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸ் இருக்கிறது. இது விவசாயிகளுக்குப் பெரும் பாதிப்பை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. இந்த நிலையை மாற்றுவதற்கு நமது அரசு வேண்டிய நடவடிக்கையை எடுத்து பரிந்துரை வழங்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இந்த அடிப்படையான சித்தாந்தத்தில் மாறுதல் ஏற்படவில்லை என்றால் விவசாயிகள் மேலும் மேலும் அழிவிற்குச் செல்லக்கூடிய நிலைக்கு போகின்ற நிலை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

விவசாயக் கொள்கை, நேஷனல் பாலிசி, என்பதை வைத்து இந்த அவையிலே உள்ள எல்லா கட்சிக்காரர்களையும் ஒன்று சேர்த்து, விவசாயிகள் வாழ்க்கை செம்மைப் படுத்தப்படவேண்டும் என்ற அடிப்படையில், மத்திய சர்க்காரை இணங்க வைத்தால் மாத்திரமே, இந்த மாறுதல் காண முடியும் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். விவசாயத்தைப் பொறுத்த வரையில், அக்ரிகல்ச்சர், அக்ரிகல்ச்சர் இன்கம் டாக்ஸ் நம்முடைய கையிலே Trade and Commerce, Production and Distribution of foodstuffs including edible oils and other things . இருந்தபோதிலும் மத்தியிலே கன்கரன்ட் லிஸ்டிலே என்று குறிப்பிட்டுள்ளது. இதனால் நமது அதிகாரம் அவர்களுக்குப் போய்விட்டது. ஆக விலை நிர்ணயம் செய்யக்கூடிய அதிகாரம் முழுக்க முழுக்க அவர்கள் கையிலே இருப்பதால் இதை நாம் மாத்திரம் செயல் படுத்துவது கடினமாக இருக்கும். நல்ல எண்ணத்தோடும், உயர்ந்த லட்சியத்தோடும் மக்கள் நல்ல வாழ்க்கையை சீராக்க வேண்டும் என்ற எண்ணத்தோடும் ஆளுநர் உரையிலே சொல்லப்பட்ட பல திட்டங்கள் அமல் நடத்துவதிலே உள்ள மிகப் பெரும் சிக்கல்களை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விவசாய குழு நியமிப்பது பற்றி அரசு முடிவு செய்து இருப்பதாக அறிக்கையில் வந்திருக்கிறது. இதை நான் மிக மிக வரவேற்கிறேன். ஆனால் அந்த விவசாயக் குழு எந்த அடிப்படையில் அமையப் போகிறது. அட்வைசரி பாடியா. ஸ்டாச்சுடரி பாடியா? அவர்களுடைய நிலை என்ன? ஒவ்வொரு கிராமத்தின் அடிப்படையிலும் கிராமம், மாவட்டம், மாநிலம் என்ற அடிப்படையிலே இந்தக் குழு இருக்குமா? இந்த குழுவினுடைய அதிகார வரம்புகள், எல்லைகள் என்ன என்பதைப்பற்றி எல்லாம் தெரிய அவாவுறுகிறேன்.

நான் விரும்புவது, அது ஸ்டாசுடரி கமிட்டியாக அமைய வேண்டும். அந்தக் குழுவில் நிபுணர்கள் மாத்திரம் இடம் பெற்றால் போதாது. விவசாயிகளும் இடம் பெற வேண்டும். விவசாயிகள் ஓரிருவர் இருந்தால்



மட்டும் போதாது. விவசாயிகள் மெஜாரிட்டியாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் அந்தக் குழுவின் பரிந்துரைகள் நல்ல முறையில் அமையும் என்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

இந்த விவசாயக் குழுவோடு இணைந்த "அக்ரிகல்சுரல் கம்மாடிடீஸ் கார்ப்பரேஷன்" என்ற அமைப்பு வேண்டும். அக்ரிகல்சுரல் கமிஷன் சிபார்சில் இருக்கிறது. அந்த அடிப்படையில் ஒரு அக்ரிகல்சுரல் கம்மாடிடீஸ் கார்ப்பரேஷன் ஒன்றை அமைத்து, அவர்களே, விவசாயிகளிடமிருந்து விளை பொருள்களை வாங்கி, விலை நிர்ணயம் செய்து மார்க்கெட் செய்யும் அதிகாரத்தையும் வைத்துக்கொண்டு பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்த முடியும். அது மாத்திரமல்ல, மகாராஷ்டிரத்தில் செய்தது போல் 'மனாபலி பர்சேசஸ் ஸ்கீம்' மூலம் 'மானபலி பர்சேஸ் ஆக்ட்' ஒன்று கொண்டு வர வேண்டும். அதன் மூலமாக விவசாயப் பொருள்களை எந்த எந்த காலத்தில் எந்தப் பகுதியில் அதிகம் விளையுமோ அவைகளை வாங்கி விற்பனை செய்வதற்கு வழிவகை செய்வதன் மூலம் நல்ல முறையில் விவசாயத்திற்கு பணியாற்ற முடியும். அது விவசாயிகளுக்கு நல்ல முறையில் பயன்படும் என்பதையும் இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக சில விவசாயப் பொருள்கள் நாட்டிலே, நல்ல முறையில் உற்பத்தி ஆகிறது. இயற்கை விவசாயிகளுக்கு உறுதுணையாக இருக்கக் கூடிய காலங்களில் மிக அதிகம் உற்பத்தி ஆகிறது என்பது நமக்குத் தெரியும். அப்படி விவசாய விளைபொருள்கள் உற்பத்தி அதிகமாக இருக்கிற நேரத்தில் விவசாயிகள் பெரும் அளவில் கஷ்டப்படுகிறார்கள். ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன். என்னுடைய தொகுதியில் இன்றைக்கு ஒரு கிலோ கத்திரிக்காய் ஏழு பைசாவில் இருந்து 10 பைசா வரை விற்கிறது. இந்த மன்றத்தில் உள்ளவர்கள் நான் சொல்வதை நம்பிக்கைக் குறைவாகக் கருதக் கூடும். மூன்று நான்கு மாதங்கள் கஷ்டப்பட்டு உற்பத்தி செய்த விவசாயிக்கு உற்பத்திச் செலவுக்குக்கூட கட்டுப்படியாகாத அளவில் ஒரு கிலோவிற்கு 7 பைசா, 10 பைசா விலை கிடைக்கிறது என்று சொன்னால், அவன் நிலை எந்த அளவிற்கு மோசமாக இருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். ஆனால், அதே நேரத்தில் மார்க்கெட்டில் கன்ஸ்யூமர்களுக்கு வருகிறபோது அது ரூபாய் 1½ ஒரு கிலோவிற்கு குறைந்து எங்குமே கிடைப்பது இல்லை. இந்த நிலை இருக்குமானால் விவசாயி விளைவித்த பொருளை மண்ணில் இருந்து எடுக்கக்கூட அஞ்சி பல சமயங்களில் மண்ணோடு மண்ணாக அது மக்கி உரமாக ஆவதற்குக்கூட விட்டு விடுகிறான் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. கி. சட்டநாத கரையாளர்] [1980 ஜூன் 27

இந்த நிலைமை என்னுடைய தொகுதியில் மாத்திரம் இருப்பதாக நான் எண்ணிடவில்லை. சென்னை நகரத்தில் மொத்த விற்பனை பற்றி தமிழ் நாடு புள்ளி விவர இயக்குனர் கொடுத்துள்ள அறிக்கைபடி இதே ஜூன் மாதத்தில் 1976-77-ல், 1977-78-ல் கத்திரிக்காய் குவிண்டால் ஒன்றுக்கு முறையே ரூ. 66, ரூபாய் 70-க்கு விற்று இருக்கிறது. அப்படியானால் சென்னையில் மொத்த வியாபாரம் செய்பவர்களுக்கே கிலோ ஒன்றுக்கு 66 பைசா அல்லது 70 பைசா வருகிறது என்றால், சென்னைக்கு அதைக்கொண்டு வர ஆகும் செலவு மற்றும் தரகர்கள் கமிஷன் என்று இப்படி எல்லாவறையும் சேர்த்த பிறகு இந்த விலை வருகிறது என்றால், உற்பத்தியான இடத்தில் விவசாயிக்கு என்ன விலை கொடுக்கப்பட்டு இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாண்புமிகு சபாநாயகர் மூலமாக நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன், விவசாயிகளுடைய இந்த அவல நிலையை போக்குவதற்கு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். நம்முடைய நாடு விவசாயப் பொருளாதாரத்தை அடிபபடையாகக் கொண்டு இருக்கிறது. 62 சதவிகிதம் விவசாயிகள் நம் நாட்டில் இருக்கிறார்கள். விவசாயிகள் உழைத்தால்தான் நம்முடைய பொருளாதாரம் வளரும். விவசாயி அழிந்தால் நம்முடைய பொருளாதாரம் சிதையும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

அடுத்தபடியாக விவசாயிகள் கடனைப்பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகள் கடன் நிலை பற்றி விவசாயக் குழு பரிந்துரை கொடுத்திருக்கிறது. இதில் ஒன்றிரண்டை மட்டும் சொல்கிறேன். இன்றைக்கு இரண்டு ஹெக்டேருக்கு குறைந்த நிலம் வைத்து சாகுபடி செய்கின்ற விவசாயிகள் 80 சதவீதம் இருக்கிறார்கள். அவர்களுடைய கடன்களை உடனடியாக சர்க்கார் ரத்து செய்ய வேண்டும்.

விவசாய வருமான வரி கட்டக்கூடிய விவசாயிகளுடைய வரியை ரத்து செய்ய வேண்டியதில்லை. அவர்களுக்காக நான் வாதாடவில்லை. ஆனால் 8 ஹெக்டேர் 10 ஹெக்டேர் நிலம் வைத்திருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களுடைய கடன்களை ஓரளவுக்கு குறைத்து, அதாவது பாதிக் கடனைக் குறைந்து, பாதிக் கடனைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். இரண்டு ஹெக்டேருக்கு குறைவாக நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுடைய கடனை முழுக்க முழுக்க வஜா செய்ய வேண்டும். இன்கம்டாக்ஸ் கட்டக்கூடிய விவசாயிகளுக்கு வரி வஜா, கடன் வஜா செய்ய வேண்டியதில்லை என்று பணிவோடு இந்த அவையிலே வேண்டிக்கொள்கிறேன்.



1980 ஜூன் 27] [திரு. கி. சட்டநாத கரையாளர்]

(மாண்புமிகு மாற்றுத்தலைவர் தலைமை)

அடுத்தபடியாக இந்த உரையிலே இரண்டு, மூன்று இடங்களில் மத்திய அரசோடு பேசி, என்று கூறப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் உதவி வேண்டும் என்ற நிலையை திரும்பத் திரும்ப கூறியிருப்பதைக் குறிப்பிடுகிறேன். ஏனென்றால் மத்திய அரசு செய்யுமோ, செய்யாதோ என்ற சந்தேகத்தில் ஆளுநர் இந்த உரையிலே அவ்வாறு குறிப்பிட்டிருப்பாரோ என்று நினைக்கிறேன். மத்திய அரசின் உதவி தேவை என்பதையே அது உணர்த்துகிறது.

வேலைவாய்ப்புகள்பற்றி ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கிராமப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு, கிராமங்களிலே சிறு தொழில்களை ஊக்குவிப்பதன் மூலமாகத்தான், 'லேபர் இன்சென்டிவ்' இருக்கக்கூடிய தொழில்களை கிராமங்களிலே ஆரம்பித்தால்தான் அதிகமான வர்கள் வேலை பெற முடியும். இன்றைக்கு விவசாயத் தொழில்கள் என்ற முறையிலே சில தொழில்கள் தோன்றியிருக்கின்றன. அவை தொழில்களே அல்ல. ஏற்கெனவே குடிசைத் தொழில்களாக நடந்துகொண்டிருந்தவைகளை 'லேபர் டிப்ரைவ்' செய்யக்கூடிய முறையிலே தொழிலாளர்களுக்கு வேலை அளிப்பதற்குப் பதிலாக இயந்திரமயமாக்கி, ஒரு சிலருக்கு அதிக வருமானம் கிடைக்கின்ற வகையிலே செய்திருக்கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் 'காயர் ஃபாக்டரி'. இது ஏற்கெனவே கிராமங்களிலே செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. இப்போது அந்தத் தொழில் மூலம் ஒரு சிலர் பயனடையும் வாய்ப்பை ஏற்படுத்தும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அது கூடாது.

விவசாயப் பொருட்களை பக்குவப்படுத்தி, பயன்படுத்துகின்ற முறையிலே Agro-based விவசாய அடிப்படையில் தொழில்கள் வளர வேண்டுமே அல்லாமல் 'லேபர் டிப்ரைவ்' செய்யும் முறையில் வரக்கூடாது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கல்வித் துறையைப்பற்றி 'ஜாப் ஓரியன்டட்' கல்வியை போதிக்க வேண்டும். இன்னும் பட்டப்படிப்புக்கு நாம் பெருமளவில் பணத்தைச் செலவிடுவதினால் எந்தப் பலனும் இல்லை. ஏற்கனவே படித்துப் பட்டம் பெற்றவர்கள் ஏராளமானவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். மேலும் மேலும் அவர்கள் கூட்டத்தோடு சேரக்கூடிய முறையிலே இருக்கின்ற பட்டப்படிப்பு அவசியமில்லை. இந்த நாட்டிலே தொழில் படிப்பை கற்று, அவர்கள் கல்வியை முடித்து வெளியே வந்தவுடன் ஏதாவது ஒரு வேலைக்குச் செல்லும் முறையிலே நம்முடைய கல்வித் திட்டம் அமைய வேண்டும்.

[திரு. கி. சட்டநாத கரையாளர்] [1980 ஜூன் 27

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கும் முடிவை நான் வரவேற்கிறேன். ஆனால் இந்தத் துறையில் கடைநிலையில் இருக்கிற பியூன், வாச்மேன் போன்றவர்கள் இன்னும் அவர்களுடைய சர்வீஸ் ரெகுலரைஸ் செய்யப்படாமல் இருக்கிறார்கள். குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து 'ஸ்டேட் ரீ ஆர்கனைசேஷனுக்குப் பிறகு வந்திருக்கக் கூடியவர்களுக்கு இன்னும் சர்வீஸ் ரெகுலரைசேஷன் ஆகவில்லை; பென்ஷன் இல்லாமல், கிராஜுட்டி இல்லாமல், பிராவிடன்ட் ஃபண்ட் இல்லாமல் ஓட்டாண்டியாகத் தெருவிலே நின்றுகொண்டிருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக்கி, வேண்டிய சலுகைகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக 'அன் ஆர்கனைஸ்ட் லேபர்' பற்றி மட்டும் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு 'அன் ஆர்கனைஸ்டு செக்டார்' தொழிலாளர்கள் பெருமளவில் இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை நிலையற்றதாக இருக்கிறது. எல்லாத் துறைகளிலும் இன்ஷூரன்ஸ் வசதி இருக்கிறது. கட்டடம் கட்டும்போது தவறி விழுந்துவிடுகிற தொழிலாளிக்கு மட்டும் இல்லை. சென்னை நகரிலே பல நேரங்களில் இப்படிப்பட்ட விபத்து நடக்கும்போது அவசரம் அவசரமாக அந்தத் தொழிலாளியை ஆஸ்பத்திரியிலே கொண்டு சேர்த்துவிட்டு, யார் கொண்டுவந்து சேர்த்தார் என்றுகூட சொல்லாமல் ஓடி விடுகிறார்கள். ஏனென்றால் நஷ்டயீடு கொடுக்க வேண்டிவருமே என்று அஞ்சுகிறார்கள்.

மத்திய வர்க்கத்தைச் சேர்ந்த ஒருவர் வீடு கட்டுகிறார் என்றால் 50,000 ரூபாய்க்குத்தான் வீடு கட்டுவார். அவரால் நஷ்டயீடு கொடுக்க முடியாது, அந்த சக்தி இருக்காது. ஆகவே, சர்க்கார் நஷ்டயீடு கொடுக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. அவர்களுக்கு இ.எஸ.ஐ. போன்ற வசதி வாய்ப்பும் இருக்க வேண்டும். இன்று விவசாயப் பெருங்குடி மக்கள், கிராம மக்கள், 'அன் ஆர்கனைஸ்டாக' இருக்கக்கூடிய தொழிலாளர்கள் போன்றவர்களுடைய நலன்களில் அக்கரை செலுத்தி, தொழில் வளர்ச்சி பெருகுவதற்கு வேண்டிய முயற்சிகளை மேற்கொண்டு இருப்பதையும் பாராட்டி, இந்த உரைக்கு என்னுடைய ஆதரவைத் தெரிவித்து, அமர்கிறேன். வணக்கம்.

* திரு. எம். செல்லமுத்து : மன்றத்தின் மாற்றுத் தலைவர் அவர்களே இந்த அவையிலே முதன்முதலாகப் பேசுவதற்கு வாய்ப்பு நல்கிய திருவாரூர் வாக்காளப் பெருமக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1980 ஜூன் 27] [திரு. எம். செல்லமுத்து]

இந்த ஆளுநர் உரையில் விவசாயிகளுக்காக குழுக்கள் அமைக்கப்பட்டு பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதிக்க இருப்பதாகச் சொல்லப்படுகிறது. விவசாயிகளுக்குப் பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும் குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்திலுள்ள பிரச்சினைகளைப் பற்றி எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இப்போது படித்து பட்டம் பெற்றவர்களுக்கெல்லாம் ஓய்வூதியங்கள் கொடுக்கப்படும் என்று இருக்கின்றது. ஆனால் படித்து பட்டம் பெறாமல் கிராமப்புறத்திலே இருக்கக்கூடியவர்களுக்கும் அளிப்பதாக தேர்தல் நேரத்தில் சொல்லப்பட்டது. கேரளாவிலே அவ்வாறு வழங்கப்பட்டு வருகின்றது. ஆகவே இங்கேயும் இந்த ஓய்வூதியத் திட்டத்தை நிறைவேற்றி அமல் நடத்துவதற்கு அரசு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தஞ்சை மாவட்டத்தில் இப்போது தண்ணீர் திறந்து விடப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலே விவசாயிகள் விலைவாசி உயர்வாலே மிகவும் பாதிப்புக்கு உள்ளாகி கஷ்டநஷ்டங்களுக்கு ஆளாகி இருக்கக்கூடிய சூழ்நிலையில் இன்று தண்ணீர் திறந்து விடப்பட்டாலும் அவர்கள் சாகுபடிச் செலவுக்கு பணம் இல்லாமல் லேவாதேவிக்காரர்களிடம் சென்று கடன் பெற்று சாகுபடி செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையிலே அவர்கள் சாகுபடி செய்வதற்கு அரசாங்கம் கடன் வழங்கவேண்டும். அப்படி கடன் வழங்கி மகசூலை அதிகப்படுத்துவதற்கான முறையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தேர்தல் முடிந்ததும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன் னேற்றக் கழக அரசிடம் மக்கள் ஏராளமாக எதிர்பார்ப்புக்களை எதிர்நோக்கி இருக்கிறார்கள். குறிப்பாக கிராமப்புறங்களிலே, சுதந்திரம் பெற்று 30, 3[illegible] ஆண்டுகள் ஆகியும் இன்றைக்கும் குடிப்பதற்குக்கூட தண்ணீர் வசதி கிடை யாது. அங்கே இருக்கக்கூடிய அடி பம்ப்கள் பூராவும் பழுதுபட்டுக் கிட[illegible] கின்றன. பஞ்சாயத்துக்களும் அவற்றைக் கவனிப்பது இல்லை. ஊராட்[illegible] மன்ற அலுவலகத்திலே அதுபற்றிக் கேட்டாலும் அதற்கான சாமான்களை[illegible] போடுவது கிடையாது. பல் வேறிடங்களிலே குடிப்பதற்குக்கூட தண்ணீ[illegible] இல்லாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல, அரசாங்கத்தா[illegible] உண்டாக்கப்பட்ட மேல்நிலைத் தொட்டிகளிலே செயல்படக் கூடிய இன்ஜி[illegible] கள் பழுதுபட்டுக் கிடக்கின்றன. அவையெல்லாம் சரியான முறையிலே[illegible] ரிப்பேர் செய்யப்படுவதில்லை.

அடுத்து கிராமப்புறங்களிலே போதிய சாலைவசதி இல்லாமல் இருக்கின்றது. இணைப்புச் சாலைகள் இல்லாத நிலை இருக்கின்றது. அவ்வாறு சாலைகள் இல்லாத காரணத்தால் தஞ்சை மாவட்டத்திலே மழை பெய்யக் கூடிய காலங்களிலே மிகுந்த சிரமங்கள் ஏற்படுகின்றன. மக்கள் நடப்பதற்குக்கூட முடியாமல் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே சாலை வசதிகளை உருவாக்கக்கூடிய முறையிலே நல்ல திட்டங்களை உருவாக்கி கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய எல்லா மக்களுக்கும் சாலை வசதிகளை உண்டாக்கிக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சாலை வசதி என்று சொல்கின்றபோது எங்களுடைய மாவட்டத்தில் சுடுகாட்டுக்குச் செல்வதற்குக்கூட சாலை இல்லாமல் மக்கள் மிகப்பெரிய அவதிக்கு உள்ளாகக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே முதலில் இந்த சுடுகாட்டுக்குச் செல்லக்கூடிய பாதையையாவது உடனடியாக அமைத்துத் தருவதற்கு அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மினி பஸ் திட்டம் எங்களுடைய மாவட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் திருத்துறைப்பூண்டியில் மட்டும்தான் மினி பஸ் ஓடிக் கொண்டிருக்கிறது. மற்ற இடங்களுக்கு அந்த பஸ் வசதி செய்து தரப்படவில்லை. ஆகவே உடனடியாக எல்லா இடங்களுக்கும் மினி பஸ் வசதிகளைச் செய்து தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். வேலைக்கு உணவு என்ற திட்டத்தின்படி முதன்முதலாக ரோடுகள் போடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தெருவிளக்குகள் பூராவும் இன்று எரியாமல் இருக்கின்றன. தெருக்களிலே எரியக்கூடிய லைட்டுகள் அணையாமல் இருப்பதற்கும், பழுது படாமல் இருப்பதற்குமான ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

அது மட்டும் அல்ல, அந்த தெருவிளக்குகளை பழுது பார்க்கக்கூடிய அந்த மின் ஊழியர்களுக்கு பழுது பார்ப்பதற்குத் தேவையான போதிய சாமான்கள் கொடுக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். அவைகள் கொடுக்க வேண்டும் என்று கேட்டாலும், அவைகளை வாங்கிக் கொடுப்பதற்கு போதிய வசதி இல்லை என்று கூறுகிறார்கள். அவர்களுக்குத் தேவையான பண வசதியை உருவாக்கி பழுது பார்ப்பதற்கு தேவையான சாமான்களை வாங்கி



அந்தத் தொழிலாளர்களுக்கு கொடுப்பதற்கு தகுந்த உத்தரவாதத்தை ஏற்படுத்தி, தெரு விளக்குகளை எரியச் செய்ய ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குடியிருப்பு மனை சம்பந்தமாக இப்பொழுது பட்டாக்கள் போட்டுக் கொடுக்கப்படுகின்றன என்று சொல்லப்படுகிறது. பட்டாக்களை வாங்கிக் கொண்டு வருகிறார்கள். அப்படி குடியிருப்பு மனைப் பட்டா வழங்கும்போது அந்த மனைகளை ஒட்டி நிலச் சொந்தக்காரர்கள் மனைகள் இருக்கின்றன. சாதாரண மக்கள், தொழிலாள மக்கள், அங்கே வீடு கட்டுவதற்காக வேண்டி அங்கேயிருக்கும் மரங்களை வெட்டி அப்புறப்படுத்த முனைந்தால், நிலச் சொந்தக்காரர்கள் அவர்கள்மீது வழக்குப்போடுகிற ஒரு நெருக்கடி நிலை ஏற்படுகிறது. ஆகையினால் அந்த குடிமனை பூராவையும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு வைத்து பட்டா கொடுங்கள். அதில் இருக்கும் மரங்களையும், மற்றவைகளையும் அவர்களுக்கே சொந்தமாக்குங்கள் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய மாவட்டத்தில் முத்துப்பேட்டை, அறந்தாங்கி போன்ற பகுதிகளிலே எல்லாம் தென்னை மரங்கள் அதிகமாக உள்ளன. அங்கே குடியிருப்பு மனைப் பட்டா வாங்கியவர்கள் கீழே விழுந்த தேங்காயை எடுத்து விட்டாலும்கூட நிலச் சொந்தக்காரர்கள் வழக்கு போடு கிறார்கள். அப்படிப்பட்ட நெருக்கடிகளைப் போக்க அவர்களுக்கு கொடுக்கப் பட்ட மனையில் இருக்கும் மரங்களையும் அவர்களுக்கே சொந்தமாக்கி பட்டா செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வைத்திய வசதியை எடுத்துக்கொண்டால், வைத்திய வசதியைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய ஆஸ்பத்திரிகளில் எல்லாம் கூட போதிய வசதிகள் இல்லாத நிலை இருக்கின்றன. திருவாரூரில் எடுத்துக் கொண்டால் அங்கே மிகப் பெரிய ஆஸ்பத்திரி இருக்கிறது. அங்கே போதிய டாக்டர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். தேவையான மருந்துகள் இல்லை என்று சொல்கிறார்கள். அறுவை சிகிச்சைக்கான போதிய கருவிகள் இல்லை என்று சொல்கிறார்கள். அந்தக் குறைகளை நீக்கி ஆஸ்பத்திரி களுக்கு போதுமான டாக்டர்களை நியமித்து, தேவையான மருந்துகளையும், கருவிகளையும் தருவித்துக் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, கிராமங்களிலே ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. அந்த நிலையங்களுக்கு டாக்டர்களே கிடையாது. அப்படிப் பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு எம்.பி.பி.எஸ். தகுதி பெற்ற டாக்டர்களைப் போட வேண்டும் என்று நான் வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எம். செல்லமுத்து] [1980 ஜூன் 27

அடுத்தபடியாக, கிராமப்புறங்களிலே அமுதம் அங்காடி என்று செயல்படுகிற அரசு அங்காடிகள் இருக்கின்றன. அவைகள் எங்கே அமைந்திருக்கின்றன என்றால் ஊருக்கு ஒதுக்குப்புறங்களிலே அமைந்திருக்கின்றன. அந்த அமுதம் அங்காடிகளிலே தேவையான எல்லாப் பொருள்களும் கிடைப்பதில்லை. குறிப்பிட்ட சில பொருள்கள் மட்டும் கொடுக்கப்படுகின்றன. அந்த கிராம அங்காடிகளில் எல்லாப் பொருள்களையும் கிடைக்கச் செய்து, தனியார் இடத்தில் வாங்கக்கூடிய நேரத்திலே ஏற்படும் விலைவாசி ஏற்ற வித்தியாசத்தைத் தவிர்த்து பொது மக்களுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதுவிலக்கைப் பொறுத்தவரையில் ஒரு சிலருடைய உபயோகத்திற்காகத்தான் அது இருக்கிறதே தவிர, அது நல்ல முறையில், சரியான முறையில் அமுல் நடத்தப்படுவதில்லை. அதனால் மதுவிலக்குக் கொள்கையை முழுமையாக ரத்து செய்து மதுக்கடைகளைத் திறந்து அரசுக்கு வரும் வருமானத்தைக் கொண்டு நல்ல பல திட்டங்களை மக்களுக்கு இந்த அரசு உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பொதுப்பணித் துறையை எடுத்துக்கொண்டால், அங்கே எல்லா வேலைகளும் காண்டிராக்ட் முறையிலேதான் விடப்படுகின்றன. அவ்வேலைகள் சரியான முறையிலே நடைபெறுவதில்லை. காண்டிராக்ட்காரர்களைக் கேட்டால் பணம் சேங்ஷன் ஆகவில்லை என்று சொல்கிறார்கள். பல்வேறு முறைகேடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவைகளில் கட்டக்கூடிய பாலங்கள் கட்டி முடிந்த உடனேயே இடிந்துவிடக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அத்தகைய பணிகளை எல்லாம் அரசாங்கமே நேரிடையாக ஏற்று செய்வதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குத்தகை பாக்கி சம்பந்தமாக அரசு ஒரு சட்டம் கொண்டு வந்திருக்கிறது. அதில் ஜூன் மாதம் 30-ம் தேதிக்குள் ஒரு பகுதியைக் கட்ட வேண்டும் என்று இருக்கிறது. எல்லா விவசாயிகளுக்கும் அப்படி கட்ட முடியாது. நிலச் சொந்தக்காரர்கள் கோர்ட்டுக்கு போவார்கள். மிகப் பெரிய நெருக்கடி ஏற்படக் கூடும். குத்தகை பாக்கியை 1980 அக்டோபருக்குள் கட்ட வேண்டும் என்று நீட்டிக்க வேண்டும். அப்போதுதான் குறுவை கட்டத்திலே அவர்களுக்கு அந்த குத்தகை பாக்கியைக் கட்டுவதற்கு உதவியாக இருக்கும்.



1980 ஜூன் 27] [திரு. எம். செல்லமுத்து]

அடுத்து, நிலச் சீர்திருத்தச் சட்டத்திலே இன்றைக்கு விவசாயிகளுக்கு ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. உச்ச வரம்பு அதிகாரம் பெற்ற அதிகாரி 1½ ஏக்கர் நிலம்தான் தரப்படும் என்று கூறியிருக்கிறார்கள். இதனால் பல்வேறு நெருக்கடி ஏற்படும். பல மோசடிகள் நடைபெறுகின்றன. குத்தகை விவசாயிகளிடமிருந்து நிலத்தை உச்ச வரம்பின்கீழ் கொண்டு வருகிறபோது, நிலச் சாகுபடி செய்கிறவர்களுக்கு அந்த ஐந்து ஏக்கர் நிலத்தை அவர்களுக்கே உரிமைப் பட்டா போட்டுக் கொடுக்கும்படி சட்டங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். அந்த நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் விவசாயிகளுக்கு பாதகமான அம்சங்கள் நிறைய இருக்கின்றன. அந்த நிலச் சீர்திருத்தச் சட்டங்களை சரியான முறையில் சீர்திருத்தம் செய்து மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இன்று குத்தகை விவசாயிகளை எடுத்துக்கொண்டால் ஏராளமான குத்தகை விவசாயிகள் பதிவு செய்யப்படாமல் இருக்கிறார்கள். அப்படி அவர்கள் பதிவு செய்யப்படாமல் இருப்பதால் அரசாங்கம் வழங்கக்கூடிய சலுகைகளை அவர்கள் பெறமுடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே குத்தகைதாரர்களை பதிவு செய்வதற்கு தீவிர நடவடிக்கைகள் எடுத்து ஸ்தல விசாரணை செய்து அவர்களைப் பதிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக இன்றைக்கு எங்கள் தொகுதியில் பல வழக்குகள் கோர்ட்டில் இருக்கின்றன. அப்படி கோர்ட்டில் இருக்கக்கூடிய வழக்குகள் பைசலாகாமல் பல ஈராங்கிகள் போடப்படுகின்றன. அங்குள்ள விவசாயிகள் பல தடவை கோர்ட்டுக்குச் செல்வது என்பதில் பெரிய சிரமங்கள் இருக்கின்றன. ஆகவே இந்த குத்தகை விவசாயிகளை உடனடியாக பதிவு செய்து, ஸ்தல விசாரணை மூலம் பதிவு செய்ய அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, 75 வாரம் என்று இன்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது நம் எல்லோருக்கும் தெரியும். ஒரு சட்டத்தை நாம் கொண்டு வந்தாலும் அதை அமல்படுத்துவதில் எவ்வளவோ சிரமங்கள் இருக்கின்றன. அரசாங்கம் அவற்றை விரைவாக அமல்படுத்த தக்க நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டத்தை உடனடியாக அமல்படுத்த துரித நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்று கிராமங்களில் உள்ள ஏழை மக்களுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு கடன் வாங்க வேண்டுமானால் லேவாதேவிக்காரர்

களிடமோ அல்லது வசதி படைத்தவர்களிடமோதான் கடன் கேட்டு வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு கடன் வழங்கக்கூடிய முறையில் அரசாங்கம் ஒரு நிரந்தர ஏற்பாட்டினைச் செய்து தர வேண்டும். கூட்டுறவு வங்கிகள் மூலமாகவோ அல்லது அரசு வங்கிகள் மூலமாகவோ அம் மக்களுக்கு கடன் கிடைக்க ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும். கறவை மாடு கடன் பொறுத்தவரையில், நகரங்கள், கிராமங்களில் உள்ள சாதாரண மக்களுக்கு கறவை மாடுகள் வாங்குவதற்காக கடன் வழங்கப்படுகிறது. அந்தக் கடனை வாங்குவதில் எவ்வளவோ சிரமங்கள் உள்ளன என்பது அனை வருக்கும் தெரியும். அந்த சிரமங்களையெல்லாம் நிவர்த்தி செய்து அந்தக் கடனைக் கேட்கிற காலத்தில், கறவை மாட்டிற்காகக் கொடுக்கிற தொகைக்கு வட்டி இல்லாமல் அந்தக் கடனைக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயத் தொழிலாளர்களுக்கு இன்று கூலிச் சட்டம் அமலில் இருக்கிறது. தமிழகம் பூராவும் இருக்கக்கூடிய கூலிச் சட்டத்தை அமுல்படுத்துவதில் எவ்வளவோ சிரமங்கள் இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்த்திட வேண்டும். சட்டம் அமலில் இருந்தாலும்கூட குறிப்பாக வேதாரண்யம், சீர்காழி, பாபநாசம், திருநெல்வேலி மாவட்டம் கள்ளைக்குளம் போன்ற இடங்களில் இந்தக் கூலிச் சட்டத்தை அமல் நடத்து வதில் பல நெருக்கடிகள் உள்ளன. இந்தக் கூலிச் சட்டத்தை குறிப்பாக அரசாங்கப் பண்ணை இருக்கக்கூடிய இடத்தில்கூட அமல் செய்ய மறுக் கிறார்கள். கீழத் தஞ்சையில் இந்தக் கூலிச் சட்டம் இருந்தும், வேதா ரண்யம் பகுதியில் தகராறு ஏற்படும்போது அதிகாரிகள் வருகிறார்கள். அதிகாரிகள் வரும்போது மிராசுதார்களும் செல்கிறார்கள். தொழிலாளர்களும் செல்கிறார்கள். ஆனால் மிராசுதார்களுக்கு ஆதரவாகத்தான் எப்படியாவது காம்ப்ரமைஸ் செய்து கொள்ளுங்கள் என்று சொல்கிறார்களே தவிர கூலிச் சட்டத்தை அமல்படுத்த, உத்தரவாதமாக அமல்படுத்த நடவடிக்கைகள் எடுக்க மறுக்கிறார்கள். ஆகவே அதை உத்தரவாதமாக அமல் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்கு, குறிப்பாக நெல்லுக்கு ஒரு நியாயமான விலை தரவேண்டும், அதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இப்போது உர விலை உயர்ந்திருக் கிறது. அதற்கேற்றாற்போல் எதிர்காலத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லுக்கு அதிக விலை, நியாயமான விலை கொடுத்து கொள்முதல் செய்வதற்கு வேண்டிய ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து, என் மாவட்டத்தில் வடபாதிமங்கலம் கரும்பாலைக்கு சில நிலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. அந்த நிலத்தில் அரசாங்க கரும்புப் பண்ணை கார்ப்பரேஷன் இருக்கிறது. அதைக் கலைத்துவிட்டு அந்தக் கரும்புப் பண்ணை கார்ப்பரேஷனுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிற—விவசாயி களால் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய நிலங்களை—நிலங்களை எல்லாம் திருப்பித் தந்து அந்த நிலத்தோடு பாக்கியுள்ள அரசு நிலங்களையும் விவசாயத் தொழிலாளர்களுக்கு, குறிப்பாக தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு வழங்குகிற முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்வதன் மூலம் ஏராள மான விவசாயத் தொழிலாளிகளுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, குறிப்பாக ஏழை எளிய மக்களுக்கு அதிகமான அளவு நிலம் கிடைக்கக்கூடிய முறையில் இந்தக் கரும்புப் பண்ணை கார்ப்பரேஷனைக் கலைத்துவிட வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாணவர்களுக்கு அரசு மானியம் வழங்கப்படுகிறது. குறிப்பாக, பள்ளிகளில் படிக்கிற குழந்தைகளுக்கு பாடப் புத்தகங்கள், நோட் புத்தகங் கள், பணம் இவை அரசாங்கத்திலிருந்து வழங்கப்படுகின்றன. ஆனால் அவை பள்ளி திறக்கக்கூடிய காலத்தில் கிடைப்பதில்லை. ஆறு மாதம் கழித்துத்தான் கிடைக்கிறது. ஆகவே, அரசாங்கம் உடனடியாக பள்ளிக்கூடங்கள் திறக்கக் கூடிய காலத்திலேயே பாடப் புத்தகங்கள், நோட் புத்தகங்கள், மானியத் தொகை இவை கிடைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டு கேட்டுக்கொள்கிறேன்.

திருவாரூர் நகரத்தைப் பொறுத்தவரை அது ஒரு பெரிய நகரம். இப்படிப் பட்ட ஒரு பெரிய நகரத்தில், பல்லாயிரக்கணக்கான மக்கள் வாழக்கூடிய அந்த நகரத்தில் சாக்கடை வசதி இல்லாமல் இருக்கிறது. அதனால், மழை பெய் கின்ற நேரங்களில் உடனே தண்ணீர் தேங்கி, நாற்றம் அடிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை அங்கே இருக்கிறது. எனவே, அரசு இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து, சாக்கடை வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

அடுத்து, சோமசுந்தரம், வடபாதிமங்கலம் மேல்நிலைப் பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளி மேல்நிலைப் பள்ளியாக இருந்தாலும், அங்கே விளையாட்டு மைதானம் இல்லை. அந்தப் பள்ளியின் மாணவர்கள் சென்ற ஆண்டு உண்ணா விரதம் இருந்து, ஆட்சித் தலைவரையும், பின்னர் வருவாய்த் துறை

அமைச்சர் அவர்களையும் சந்தித்து மகஜர் கொடுத்திருக்கிறார்கள். ஆனாலும், அந்த விளையாட்டு மைதான வசதி செய்துத் தரப்படவில்லை. அதை உடனடியாகச் செய்துதர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியிலே கீவளூர், திருவாரூர் ஒன்றியங்கள் இருக்கின்றன. அந்த இரண்டு ஒன்றியங்களையும் பிரிக்கக்கூடிய வெட்டாறு இருக்கிறது. அவற்றை இணைக்கக்கூடிய வகையிலே இரு பாலங்களைக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இங்கே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். வணக்கம்.

* **திரு. மி. வின்சென்ட் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னைத் தேர்ந்தெடுத்த நாகர்கோவில் வாக்காளப் பெருமக்களுக்கு எனது இதயபூர்வமான நன்றியை முதன்முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆளுநர் உரை, தேர்தல் நேர வாக்குறுதிகள் வேகமாக நிறைவேற அரசு கொண்டுள்ள அக்கறையை எடுத்துக்காட்டும் உரையாக அமைந்துள்ளது. நடைபெற்ற தேர்தல் லஞ்ச லாவண்யமற்ற அதிகார துஷ்பிரயோகமில்லாத தேசிய ஒருமைப்பாட்டிற்கு களங்கம் கற்பிக்காத, இந்திய துணைக் கண்டத்தைக் காத்திட்ட, அனைத்து மாநிலங்களின் உறவைப் பேணி வளர்த்திட்ட, உத்தம புரட்சித் தலைவர் அவர்களை ஆட்சிப் பீடத்திலே இருந்து இறக்கியதை ஏற்றுக்கொள்ள மாட்டோம், கண்டிக்கத்தக்கது என்பதைக் காட்டும் வகையில் தமிழ் நாட்டு மக்கள் வெற்றிமேல் வெற்றியாக குவித்து, வீரத் திருமகன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை மீண்டும் முதலமைச்சராக ஆக்க தேர்தல் முடிவைத் தேடித் தந்திருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சட்டமன்றம் கலைப்பதற்கு முன்னால், சட்டமன்றக் கூட்டத்தில் மக்கள் உணர்வுகளை கடுகு அளவுகூட புரிந்துகொள்ளாத முறையில் இந்த அவையிலே விவாதம் ஒன்று நடைபெற்றது. அடுத்த முதல்வர் பதவி எந்தக் கட்சிக்கு என்ற விவாதம்தான் அந்த விவாதம். அன்றைய தினமே நான் குறிப்பிட்டேன். எந்தக் கட்சியோடு, எப்படி கூட்டு சேர்ந்தாலும் சரி, அடுத்த முதல்வர் எங்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் என்று அன்றைய தினமே எங்கள் புரட்சித் தலைவர் எங்களுக்கு ஊட்டி வளர்த்த நெஞ்சழுத்தத்தால் நான் உண்மையை விளக்கிச் சொன்னேன். ஆனால், ஆட்சி கலைக்கப்படும் என்பது எங்களுக்குத் தெரியாது. சில நாட்களில் ஆட்சி கலைக்கப்படுகிறது. கலைக்கப்பட்டவுடன் நாங்கள், இளைஞர்களாகிய நாங்கள் வேதனைப்பட்டோம். காரணம் காட்டப்படாமல், ஜனநாயகத்தில் இத்தகைய படுகொலை நடந்ததுபற்றி நாங்கள் வேகமாக, கோபத்தோடு





இருந்த நேரத்தில், எங்கள் புரட்சித் தலைவர் அவர்களை நிருபர்கள் அணுகி, விளக்கம் கேட்கிறார்கள். ஜனநாயக நாட்டில் ஏற்பட்ட ஒரு படுகொலை கண்டிக்கத்தக்கது என்று தலைவர்கள் எல்லாம் கண்டனக் குரலை வேகமாக வீசிக் கொண்டிருக்கின்ற, சொல்லிக்கொண்டிருக்கின்ற நேரம் அது. அந்த நேரத்தில் அடக்கத்தின் பிறப்பிடமான எங்கள் புரட்சித் தலைவர் ஒரே ஒரு வார்த்தையில் பதில் சொல்கிறார். சட்ட சபை கலைக்கப்படுகிறது. பதில் சொல்கிறார், 'மகிழ்ச்சியாக இருக்கிறேன்' என்று. எந்தத் தலைவருக்கு இந்த அடக்கம் வரும்? எந்தத் தலைவருக்கு இந்த நம்பிக்கை வரும்? எந்தத் தலைவனுக்கு இந்த தைரியம் வரும்? எந்தத் தலைவனுக்கு இந்த வைரம்பாய்ந்த உணர்வு, உறுதி வரும்? எங்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஒருவருக்குத்தான் இந்த தைரியம் வரும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்றே சொல்லுகிறார்—'மகிழ்ச்சியாக இருக்கிறேன்' என்று. காரணம் என்ன தெரியுமா? மீண்டும் அண்ணாவின் அரசு இந்தத் தமிழகத்தில் தமிழக மக்கள் ஏற்றி வைப்பார்கள் என்பதை அன்றைய தினமே, தீர்க்கதரிசியாக உணர்ந்துதான் 'மகிழ்ச்சியாக இருக்கிறேன்' என்று புரட்சித் தலைவர் அவர்கள் அன்றே, அந்த நேரத்திலேயே, ஜனநாயக உணர்வுகள் படுகொலைக்கு ஆளாக்கப்பட்ட அந்த நேரத்திலேயே கூட அமைதியாக குறிப்பிட்டார்கள்.

தேர்தலே நடந்து முடியவில்லை, தொகுதிப் பங்கீடே நடக்கவில்லை, வேட்பாளர் அறிவிப்பே வரவில்லை—அதெல்லாம் வருவதற்கு முன்னாலேயே 'யார் முதலமைச்சர் என்பதை இந்த நாட்டுக்குச் சொல்' என்று இந்தியத் துணைக் கண்டத்தை ஆளுகின்ற பாரதப் பிரதமரை விரட்டுகின்ற பணி நடக்கிறது. அறிவிப்பு வருகிறது—தேர்தலே நடப்பதற்கு முன்னால், ஜனநாயக நெறி முறைக்கு மாறாக ஒரு தலைவர் 'இவர்தான் முதலமைச்சர்' என்று சொல்லுகிற அளவுக்கு இந்த நாட்டில் ஜனநாயகப் போக்குகள் மாறிக் கொண்டிருந்தன என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

தேர்தல் முடிகிறது. முடிந்ததற்குப் பிறகு, பாவம்—"இலவு காத்த கிளி" ஓய்வுக்கு மைசூர் பறந்து செல்லுகிறது. 'மாண்டிடும் புழுவே மகுடம் கழட்டு' என்று செருக்கோடு பேசியவர்கள், செருக்கு மகுடத்தைச் சூட்டிக் கொள்ள முடியாமல் புழுவான விந்தையை என் தாய் தமிழகத்து மக்கள் நன்றியோடு அரங்கேற்றி விட்டார்கள். வணங்குகிறேன் அந்த தமிழர் கூட்டத்தை, அவர்கள் பொற்பாத மலர்களைத் தொட்டு.

(திரு. மி. வின்சென்ட்) [1980 ஜூன் 27

'நீரில் கரைந்து போன உப்புக் கட்டியைக் கண்ணில் காண முடியாது; நாவினால் ருசித்தறியலாம்' என்றார் ஆதிசங்கரர். மக்களோடு மக்களாய் கரைந்தவர் புரட்சித் தலைவர். மக்கள் அடையாளம் காட்டிவிட்டனர் மக்கள் திலகம், புரட்சித் தலைவர் என்று. மக்கள் தலைவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான்—மாற்றானுக்குத் தெரியாது இது.

மாற்றான் மதில் சுவரிலே ரோஸ் கலர் போஸ்டரில் ஆள் உயர மாலையிட்டு, 48 — 38 ஆகி இன்று போல் என்றும் வாழ்க என்று வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவர் அங்கே சுவரிலே 'இன்று போல் என்றும் வாழ்க' என்று வாழ்ந்து கொண்டிருப்பது போல் வாழட்டும் என்று வையகம் புகழ, வானகம் மகிழ வாழ்த்துகிறேன்.

நாஞ்சில் நாட்டு மக்கள் எல்லாம் மனதில் நஞ்சிலார் என்று போற்றிவந்த பெயருக்குப் பங்கம் விளைவித்து விட்டார் நெஞ்சிலார் ஒருவர். 'புரட்சித் தலைவர் என்னை அணைக்கிறார், உச்சிமோந்து முத்தம் தருகிறார்' என்றவர் புரட்சித் தலைவரையே எதிர்க்கட்சி வரிசையில் பார்க்க ஆசைப்பட்டார். பரிதாபத்துக்குரிய அரசியல் வித்தகரை பார்வையாளர் மாடிக்கு அனுப்பி விட்டார்கள் தமிழக மக்கள் என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். Only the younger generation can do the Nation well— என்று சன்யாட்சென் சொன்னார். அந்த முறையில் தான் இன்றையதினம் 18 வயது வந்தவர்கள் அத்தனை பேருக்கும் உள்ளாட்சித் தேர்தலில் வாக்குரிமை அளிக்கும் சட்டம் கொண்டு வரப்படும் என்ற அறிவிப்பு இந்த கவர்னர் உரையில் தெரிவிக்கப்பட்டிருப்பதைப் பாராட்டுகிறேன்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கான உதவித் தொகைத் திட்டம் விரைவில் செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்புக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

அண்டை மாநில உறவு, இந்தியாவின் ஒற்றுமை காத்தல் போன்ற தேசிய ஒருமைப்பாடு எண்ணத்திற்கும் வாழ்த்துச் சொல்லுகிறேன்.

கைத்தறித் துறை மேம்பாட்டிற்காக இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து எடுத்து வருவதைப் பாராட்டுவதோடு கைத்தறித் தொழிலாளர்களுக்கான வேலைப் பாதுகாப்பு சட்டமாக்கப்பட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.



1980 ஜூன் 27] [திரு. மி. வின்சென்ட்]

தமிழ் பல்கலைக் கழகம் ஒன்றை அமைக்க முன்வந்த அரசை உவகையுடன் வரவேற்கிற நேரத்தில் அதனை நாகர்கோவிலில் நிறுவினால் உளமாறவும், உவகையுடனும், நன்றியுடனும் வரவேற்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசின் மேல் என்ன அக்கறையோ எனக்கு முன்னாலே பேசிய ஒரு நண்பருக்கு. மத்திய அரசு நமக்குக் கொடுக்க வேண்டிய பங்குகளை ஒழுங்காகக் கொடுக்கவில்லை என்று சொல்வதும் தவறா? இதைக்கூட அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லையே என்றுதான் வேதனை இளைஞர்களாகிய எங்களுக்கெல்லாம் வருகிறது. மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் கேட்டால் அது மத்திய அரசுக்கு விரோதமான செயல் என்று யாரும் கருதிவிடக் கூடாது என்று எங்கள் புரட்சித் தலைவர் மட்டும் கேட்கவில்லை—காஷ்மீரத்து ஷேக் அப்துல்லாவும் கேட்கிறார், வங்கத்து ஜோதி பாசுவும் கேட்கிறார், கேரளத்து நயினாரும் கேட்கிறார், கன்னடத்து குண்டு ராவும் கேட்கிறார். அவர்களோடு சேர்ந்து இந்த நாட்டு மக்கள் வளமாக வாழ்ந்திட வேண்டுமென்பதற்காகக் கொடுக்கப்பட வேண்டிய உரிமையை நீ தந்துதான் ஆகவேண்டுமென்று உரிமையைக் கேட்பதும்,—எதிர்க் கட்சித் தலைவர்களுக்கு அடிமை சாசனத்தை டில்லியிலே எழுதி வைத்தவர்களுக்கு வேதனையாக வருகிறதே என்று எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில்தான்—அண்ணாவே, எண்ணித் துணிந்து எதையும் உன்னுடைய வாழ்வுக்காக நீ கேள் என்று உரிமைக் குரலை, தீபத்தை எழுப்பி இளைஞர் பட்டாளத்தை தட்டி எழுப்பிய அந்தக் கட்சியில் அமர்ந்திருப்பவர்கள் இப்படியா காவடி தூக்குவது என்பதை நான் எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில் இளைஞர் சமுதாயம் அந்த அண்ணாவின் லட்சிய தீபங்களைக் கட்டிக் காப்பதற்காக புரட்சித் தலைவர் பின்னால் படையெடுத்து நிற்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

இளைஞர் சமுதாயம் அறிஞர் அண்ணாவின் லட்சிய தீபங்களைக் கட்டிக் காப்பதற்காக புரட்சித் தலைவர் அவர்கள் பின்னால் படையெடுத்து நிற்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சேதுசமுத்திரத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்று முன்னேற்றக் கழக அரசு பல ஆண்டுகளாகக் கேட்டார்கள். அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியாது என்று மத்திய அமைச்சர் திரு. பூடா சிங் அவர்கள் நாடாளு

[திரு. மி. வின்செண்ட்] [1980 ஜூன் 27

மன்றத்திலே கூறிவிட்டார்கள். அதைப்போலவே பல ஆயிரம் கோடி
ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ள ரயில்வே பட்ஜெட்டிலே கூட தமிழ்நாடு,
கேரளம், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய நான்கு மாநிலங்களில் புதிய ரயில்
பாதைகள் எதற்குமே நிதி ஒதுக்கப் பெறவில்லை என்றால் அதற்குக் காரணம்
கேட்கக் கூடாதா? காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரி வரை ரயில்
விடுவதற்கு திட்டம் தயாராக இருந்தது. சென்ற ஆண்டு அக்டோபரில்
அதற்கான ஏற்பாடுகளைப்பற்றி ஒப்புதல் வழங்கி அப்போது மத்திய ரயில்வே
அமைச்சராக இருந்த மது தண்டவதே அவர்கள் முக்கடலும் முத்தமிட்டு
மகிழ்கின்ற கன்னியாகுமரியிலே அதைப்பற்றிய ஆசையை அவர்கள் பறை
சாற்றினார்கள். அது அவர்களுடைய ஆசை. ஆனால் இன்றைய தினம்
ஓசையில்லாமல் அந்த ஆசை கிடக்கிறதே என்று நாங்கள் கேட்கக்கூடாதா?
கேட்டால் தி.மு.க.வுக்கு அல்லவா கோபம் வருகிறது. காரணம் புரியவில்லை
ஏன் அவர்கள் அமைதி காக்கிறார்கள். நான் மாநில அரசைக் கேட்டுக்
கொள்கிறேன். வடக்கே காஷ்மீரத்திலிருந்து தெற்கே முக்கடலும் முத்த
மிட்டு மகிழ்கின்ற கன்னியாகுமரிக்கு ரயில் விடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காஷ்மீரத்திலிருந்து கன்னியா
குமரிக்கு நேரடி ரயில் விட்டுத் தருவதற்கு மத்திய அரசு தயங்கினாலும் அந்தத்
தயக்கத்தை மாற்றுகிற முறையிலே எழுச்சிக் குரலை எழுப்ப சட்டமன்றத்
திலே முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரியிலிருந்து டெல்லிக்கு கே. கே. எக்ஸ்பிரஸ் அல்லது ஜே.ஜே.
எக்ஸ்பிரஸ் விடப்போவதாகச் சொன்னார்கள். ஆனால் ஒரு எக்ஸ்பிரஸையும்
காணோம். கன்னியாகுமரி மாவட்டம் புறக்கணிக்கப்படக் கூடாதல்லவா!
குமரி மாவட்ட மக்கள் நன்றியுள்ள மக்கள் அல்லவா? அவர்கள் புரட்சித்
தலைவரின் பக்தர்கள் அல்லவா? அந்த உத்தமரை இதயத்திலே வைத்து
பூஜிக்கின்ற சக்தி அல்லவா? ஆகவே கன்னியாகுமரி முதல் காஷ்மீரம்
வரையிலான அந்த ரயில் விடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டு
மென்று நான் இந்த சட்டமன்றத்திலே தெரிவித்துக்கொண்டு அமைகிறேன்.
நன்றி. வணக்கம்.

* திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
அவர்கள, ஆளுநர் உரையின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக,
அதை வரவேற்று, சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஆளுநர்
உரையில் முதல் பக்கத்திலே "ஜனநாயகப் பரிசோதனையிலே மீண்டும் தமிழக
வாக்காளப் பெருமக்கள், குழப்பம் ஏதுமின்றி அச்சத்திற்கு ஆட்படாமல்,
தைரியத்தோடு இம்மாநிலப் பேரவைக்கு தெளிவான தீர்ப்பை வழங்கியதி



1980 ஜூன் 27] [திரு. பொ. உத்திராபதி]

லிருந்து தங்கள் கடமைகளை எந்த அளவுக்கு உணர்ந்துள்ளார்கள் என்று
எண்ணி வியக்கிறேன்" என்று தமிழக மக்களைப் பாராட்டித் தெரிவித்
திருக்கிற கருத்து அந்த உரையின் முகப்பில் அமைந்திருப்பதை இந்திய
கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன்.

இடைக்காலச் சட்டமன்றத் தேர்தல் என்பது—தமிழகத்தோடு சேர்த்து
9 மாநிலங்களையும் எந்தவிதமான குற்றச்சாட்டும் இல்லாமல் பிப்ரவரி மாதம்
17 ஆம் தேதியன்று நள்ளிரவில் கலைத்தார்கள். அப்படிக் கலைத்தவர்களும்,
கலைப்பதற்கு முயற்சி எடுத்துக்கொண்டவர்களும் நாடாளுமன்றத் தேர்தலிலே
தமிழகத்தில் குறிப்பாக, தி.மு.க.-இந்திரா காங்கிரஸ் அணி ஒரு பக்கமும்
அன்றைய ஆளுங்கட்சி, இன்றைக்கு ஆளுவதற்காக வந்திருக்கிற கட்சி
தோழமைக் கட்சிகளோடு சேர்ந்த ஒரு அணியாகவும் போட்டியிட்டன.
நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் தோல்வியை சந்தித்த அணி எங்கள் அணி.
வெற்றி பெற்றது திராவிட முன்னேற்றக் கழகமும் காங்கிரஸ் அணியும் ஆகும்.
டெல்லியிலே ஒரு நிலையான ஆட்சி, வலுவான ஆட்சியைக் கேட்டு, மக்கள்
வாக்களித்தார்கள். டெல்லியிலே ஆட்சிக்கு வந்தவுடன் இந்த நாட்டில்
பல்லாண்டுக் காலமாக விவசாய உற்பத்தி செய்து வாழக்கூடிய அனைத்துப்
பகுதி மக்களுக்கும், அந்த விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கைத்
தரத்தை உயர்த்துவோம், அவர்கள் கடன்களுக்கு ஒரு தீர்வு காணுவோம்,
வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவோம், விலைவாசிகளைக் கட்டுப்
படுத்துவோம், இந்த நாட்டில் உள்ள 60 கோடி மக்களுடைய உழைப்பைச்
சுரண்டிக் கொழுக்கிறார்களே, 120 குடும்பங்கள், அந்தக் குடும்பங்களின்
சொத்தை இந்த நாட்டு மக்களுக்குச் சொந்தமாக்குவோம் என்று சொல்ல
வில்லை. அதைச் செய்வதற்காகத்தான் இந்த நாட்டு மக்கள் தமிழகத்திலேயும்
இந்தியாவிலேயும் வாக்களித்தார்கள். ஆனால் என்ன சொன்னார்கள் தெரி
யுமா? வெற்றி பெற்றவுடனேயே, தமிழக மக்களால் தூக்கியெறியப்பட்ட தமிழக
அரசு இராஜிநாமா செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் விட்டார்கள்.
நாடாளுமன்றத் தேர்தலில் பொய்யான வாக்குறுதியையெல்லாம் சொல்லி
மக்களிடம் வாக்கு கேட்டார்கள் என்பது நாட்டு மக்களுக்கும் தெரியும், இங்கே
வந்திருக்கக்கூடிய நமக்கும் தெரியும். நண்பர் திரு. ரகுமான்கான் அவர்கள்
பேசும்பொழுது சூடாக ஒன்றைச் சொன்னார்கள். நேற்றையதினம் பேசிய
பேச்சுக்குப் பதில் சொல்வதைப்போல, எங்களுடைய கலைஞர் ஆட்சியைக்
கலைப்பதற்கு சொறிநாய்களா என்று கேட்டார்கள். நான் அதற்குப் பதில்
சொல்ல விரும்பவில்லை. காரணம், அதற்கு சர்க்காரியா கமிஷன் காத்துக்
கொண்டிருக்கிறது. அதன் தீர்ப்பு வந்த பிறகு யார் என்று அப்பொழுது பேசிக்
கொள்ளலாம். ஆனால் இன்றைக்கு சட்டமன்றத்திற்கான தேர்தலில்,

[திரு. பொ. உத்திராபதி] [1980 ஜூன் 27

இடையில் இருந்த 4 மாத காலத்திற்குப் பின்னால், அதே மக்கள்தான், நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களித்த மக்களும், வாக்களிக்காத மக்களும் எங்களுடைய அணிக்கு மகத்தான வெற்றியைத் தேடிக் கொடுத்திருக்கிறார்கள். நெல்லிக்குப்பம் சட்டமன்ற உறுப்பினர் நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நேற்று பேசுகின்றபொழுது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். மக்கள் எதிர்பார்த்து வாக்களித்திருக்கிறார்கள் என்று. உண்மைதான். ஆனால் விவசாய சங்கத்தினுடைய தலைவர் நாராயணசாமி நாயுடு அவர்களிடத்தில் முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்களே எங்களுக்கு வாக்களியுங்கள், நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் கடன்கள் அத்தனையையும் ரத்து செய்கிறோம் என்று முதலமைச்சரவர்கள் வாக்குறுதி கொடுத்ததாகவும், அந்த வாக்குறுதியை நிறைவேற்றக் கோரி வருகின்ற 5 ஆம் தேதி, 10 இலட்சம் மக்கள் இந்தக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென் பதற்காக இங்கே ஒரு பேரணியை நடத்தப் போவதாகவும் நேற்றைய தினம் சொன்னார்கள். முதலமைச்சரவர்கள் சந்தித்தார்கள், ஆனால் மற்றவர்கள் சந்தித்ததையும் சொல்லியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

(முற்பகல் 11-30)

எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் ஓடோடிப் பார்த்தார்கள். இன்றைக்கு அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளராக வந் திருக்கக்கூடிய திரு. கருப்பையா மூப்பனாரும் சந்தித்தார். மத்திய துணை அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்களும் ஓடோடிச் சென்றார். கர்நாடக முதலமைச்சர் திரு. குண்டுராவும் சந்தித்தார். எல்லோரும் சந்தித்ததெல்லாம், நாடாளுமன்றத் தேர்தலில் நாராயணசாமி நாயுடு ஆதரித்த அணி வெற்றி பெற்றது அல்லவா, எனவே மீண்டும் நாராயணசாமி நாயுடுவின் ஆதரவு இருந்தால்தான் தமிழ்நாட்டில் வெற்றிபெற முடியுமென்ற அந்தக் கண்ணோட்டத்தோடு எல்லோரும் ஓடோடிச் சென்று பார்த்தார்கள். ஆனால் அவர் என்ன பதில் சொன்னார், இவர்கள் என்ன கேட்டார்கள் என்று எங்களுக்குத் தெரியாது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், இந்தியக் கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியும் ஒரு தனி நபரை நம்பியது இல்லை யாது, மக்களை நம்பியதால்தான் எங்கள் அணி வெற்றி பெற்றது. ஆனால், பார்த்த தற்கும் பிறகு, திரு நாராயணசாமி நாயுடு என்ன சொன்னார் தெரியுமா? தமிழக பச்சைத் துண்டு விவசாயிகளே, நடுநிலைமையாக இருந்து கொள்ளுங்கள் என்று அறிவித்து விட்டார். ஆனால், அறிவித்தாரே தவிர, பச்சைத் துண்டு விவசாயிகள், எனக்கு தெரிந்தமட்டில் எங்கள் அணியைத் தோற்கடிப்பதற்கும், இந்திரா காங்கிரஸ் அணியை வெற்றி பெறச் செய்வ தற்கும் பச்சையாக பச்சைத் துண்டை அணிந்து பணியாற்றினார்கள்.



[திரு. பொ. உத்திராபதி]

1980 ஜூன் 27]

குறிப்பாக, என்னுடைய தொகுதியிலே பச்சைத் துண்டை அணிந்துகொண்டு, அண்ணா தி.மு.க. அணியைத் தோற்கடிப்பதற்கும், காங்கிரஸ்-தி.மு.க. அணியை வெற்றி பெறச் செய்யவும் பணி புரிந்தார்கள். நான், எனது தொகுதியில் மட்டும்தான் அந்த நிலையா என்று கேட்டேன். எங்கள் தலைவர் திரு. சோ. அழகர்சாமி அவருடைய தொகுதியிலும் அதே நிலை என்று சொல்கிறார்கள். இன்னும் பல சட்டமன்ற உறுப்பினர்களைக் கேட்கும்போது எல்லோரும் அதையே சொல்கிறார்கள். ஏன், நாராயணசாமி நாயுடு அவர்கள் நடுநிலைமை வகித்தார்கள், நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காங்கிரசும் தி.மு.க.வும், விவசாயிகளுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை. டெல்லியிலே இந்திரா காந்தி ஆட்சிக்கு வந்தும் அவர்களது பிரச்சினையைத் தீர்க்கவில்லை. மத்திய துணை அமைச்சர் திரு. ஆர். வி. சுவாமிநாதன் தமிழகம் பூராவும் சுற்றுப்பயணம் செய்து ஒவ்வொரு மாவட்டத்திலும் விவசாயிகளை அழைத்து, இலட்சக்கணக்கில் கடன் பெற்றுள்ள நீங்கள் பணம் கட்ட வேண்டாம்; அன்னை இந்திரா காந்தி அவர்கள் ரூ. 5 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள் என்று கூறிக்கொண்டு பவனி வந்தார்கள். இல்லையென்று காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் சொல்ல முடியுமா? அல்லது முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சொல்ல முடியுமா? ஆனால், இடையிலே 5 மாத காலம் தமிழ்நாட்டை ஆண்ட டெல்லி சர்க்கார் ஏன் தமிழக விவசாயிகள் கடனை தள்ளுபடி செய்திருக்கக்கூடாது? அன்றைக்கு மத்திய அமைச்சர் வாக்குறுதி கொடுத்தாரே, என்னவாயிற்று? இதையெல்லாம் பார்த்த திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள், இந்திரா அம்மையாரால் அதையெல்லாம் செய்ய முடியாது, தமிழகத்திலே தி.மு.க.— காங்கிரஸ் கட்சிகள் கொடுத்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்ப தைத் தெரிந்துகொண்டார். ஆகவே, நடுநிலைமை வகித்தார், யார் ஆட்சிக்கு வந்தாலும் போராட்டம் நடத்தலாம் என்றுதான். இப்படி சந்தேகப்படக்கூடிய அளவுக்கு அவர் நடுநிலைமை வகித்தார் என்று சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, 1972 ஆம் ஆண்டு முதல் விவசாயிகளது பிரச்னைகள் இருந்து கொண்டிருக்கின்றன. ஏதோ, இந்த அரசு பொறுப்பேற்ற 2½ ஆண்டுக் காலத்திலே வந்த பிரச்னை அல்ல அது. வரக்கூடிய 5 ஆம் தேதி "தியாகிகள் தினம்" கொண்டாட இருக்கிறோம். நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இங்கிருந்தால், அவருக்கு ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 1972 ஆம் ஆண்டு ஜூலை 5 ஆம் தேதிதான் தமிழக விவசாயிகள், 2 பைசாவுக்காக நடத்திய போராட்டத்தில், 17 பேர்கள் துப்பாக்கிச்சூட்டிற்கு ஆளாக்கப் பட்டார்கள். அது யாருடைய ஆட்சியில் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அந்த 17 பேர்களுக்காகத்தான் ஜூலை 5 ஆம் தேதி, தியாகிகள்

தினம், விவசாயிகள் தினம், கொண்டாட இருக்கிறோம். ஆக, 1972 ஆம்
ஆண்டு விவசாயிகள் கடன் வாங்கியது, இன்றுவரையிலும் வெகு வேகமாக
வளர்ந்துகொண்டே வருகிறது. அதில், மாநில சர்க்கார், மத்திய சர்க்காரைக்
காண்பித்து விட முடியாது. மத்திய சர்க்கார், எங்களுக்கு ஒன்றும்
பொறுப்பு கிடையாது, அவர்களைக் கேளுங்கள் என்று சொல்ல முடியாது.
ஆகவே, மத்திய அரசு, விவசாயிகள் கடனைத் தள்ளுபடி செய்ய, தமிழக
அரசுக்கு அதிகமான மானியம் கொடுக்க வேண்டும். விவசாயிகள் கடனைத்
தீர்க்க மத்திய சர்க்காரில் வீற்றிருக்கக்கூடிய காங்கிரஸ்-தி.மு.க. பாராளு
மன்ற உறுப்பினர்கள் குரல் கொடுக்க வேண்டும். தமிழகத்து விவசாயிகள்
கடனைத் தீர்க்க நாங்களும் ஆதரவு அளிப்போம் என்று சொல்லி, உடனடி
யாக விவசாயிகள் உண்மையிலேயே கட்ட முடியாத கடன் அத்தனையையும்
ரத்து செய்ய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்ல
விரும்புகிறேன்.

அடுத்து, மதுவிலக்கு பிரச்சனையில் அரசு உறுதியாக நிற்கிறார்களா?
உண்மையிலே இன்றைக்கு மதுவிலக்கு கொள்கை தோற்றுவிட்டது. இந்தியா
பூராவிலும் கள்ளச் சாராயம், எரி சாராயம், எங்கு பார்த்தாலும் தென்னை
மரங்களிலே கள் இறக்கப்படுகிறது. எனவே, ரூ. 200 கோடியை மாமூலாக
மற்றவர்கள் வாங்குகிறார்கள். அது அரசாங்கத்திற்கு நஷ்டம். உடனடியாக
மதுவிலக்கை ரத்து செய்து, தென்னங்கள்ளுக் கடைகளைத் திறக்கவிட்டால்,
200 கோடிக்கு மேல் வருமானம் கிடைக்கும். அதன் மூலம் சில திட்டங்களை
நிறைவேற்ற முடியும். (மணி அடிக்கப்பட்டது)

அடுத்து இன்றைக்குப் பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.
இந்தத் திட்டங்களையெல்லாம் அமுல்படுத்த வேண்டும் என்று சொன்னால்
அதிகாரிகளை நம்பினால் போதாது. ஆங்காங்கே "மக்கள் குழுக்களை"
அமைத்து அதன் மூலம் திட்டங்களை நிறைவேற்றினால் மக்களுக்குக்
கிடைக்கக்கூடிய சலுகைகள் கிடைக்கும்.

அடுத்து, 18 வயதானவர்களுக்கு வாக்குரிமை என்பதை எங்கள் கட்சி
வரவேற்கிறது. 1978 ஆம் ஆண்டு எங்கள் கட்சியைச் சேர்ந்த மாணவ
இளைஞர்கள் கன்னியாகுமரியில் இருந்தும், கோவையில் இருந்தும் பாத
யாத்திரை வந்து, இதைப்பற்றி இந்த அவையிலே மகஜரும் கொடுத்து இருக்
கிறார்கள். மேலும் நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இந்த அவை
யிலே சொல்லி இருக்கிறார்கள். ஊராட்சி, நகராட்சி தேர்தல்கள் வருகிற
போது, சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில் உள்ளதுபோல, அரிசனங்
களுக்கு, ஊராட்சிமன்றத் தேர்தல்களிலும், நகராட்சி தேர்தல்களிலும் விகிதா



சாரத்தின்படி இடம் ஒதுக்கப்படும் என்று சொன்னார்கள். அதன்படி
நடைபெறவிருக்கும் ஊராட்சி, நகராட்சித் தேர்தல்களில் அரிசனங்களுக்கு
இடம் ஒதுக்கீடு செய்து அவர்களுக்கும் பிரதிநிதித்துவம் செய்து கொடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் நாம் சட்டமன்ற, நாடாளு
மன்றத் தேர்தல்களின்போது அதிகமாக தாய்மார்களைத்தான் சந்திக்கிறோம்.
எனவே அவர்களுக்கும் ஊராட்சி ஒன்றிய, நகராட்சித் தேர்தல்களில் ஒரு
குறிப்பிட்ட விகிதாசாரம் கிடைக்கும்படி செய்தால், அவர்களுக்கும் பிரதி
நிதித்துவம் கிடைக்கும் என்று சொல்ல விரும்புகிறேன் (மணி அடிக்கப்
பட்டது).

என் தொகுதியான திருத்துறைப்பூண்டியில் பேரூராட்சி, சென்றமுறை
உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தவர் நகராட்சியாக மாற்றப்படும்
என்று சொன்னார். தற்போது உள்ள அமைச்சர் அவர்கள் இதை நிறை
வேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால்
கிட்டத்தட்ட 30,000 மக்கள் பயனடைவார்கள்; திருத்துறைப்பூண்டியில்
இருந்து 3 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள மேட்டுப்பாளையத்தில் இருந்து
தண்ணீர் வரவேண்டும். இதற்கு 24 லட்சம் செலவாகும் என்று சொல்கி
றார்கள். இதை உடனடியாக செய்யவேண்டும். முத்துப்பேட்டையில்
பேருந்து நிலையம் கட்ட வேண்டும்.

கோட்டூரில் உள்ள ஹைஸ்கூல் மாணவர்களுக்கு ஹாஸ்டல் வசதி
கிடையாது. மூன்று மைல் தூரத்தில் இருந்து அவர்கள் வந்து போய்க்கொண்
டிருக்கிறார்கள். எனவே உடனடியாக அங்கே ஒரு ஆஸ்டல் கட்டித் தர
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, இந்த அவையில் டாக்டர் அம்பேத்கார் படத்தை வைப்பதாக
முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். டாக்டர்
அம்பேத்கார் அவர்கள் இந்த நாட்டின் அரசியல் சட்டத்தை வகுப்பதில்
முக்கியப் பங்கு பெற்றவர். அவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச்
சேர்ந்தவர் என்பதாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வருகின்ற
பட்ஜெட் கூட்டத் தொடரில் டாக்டர் அம்பேத்கார் அவர்கள் படத்தைத்
திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி
தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி
தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது திருத்தங்கள் மொழியப்பெற்று, வழி
மொழியப் பெற வேண்டும். முதலில் திரு. செ. சிவசாமி அவர்கள் தம்
திருத்தங்களை மொழிவார்கள்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை மொழிகிறேன் :

" இறுதியில் கீழ்க்கண்டதைச் சேர்த்துக் கொள்ளவும் :—

1. கிழக்குக் கடற்கரைச் சாலையான சேது ரஸ்தாவை முகவை மாவட்ட பகுதியில் மட்டும் சரியானபடி அபிவிருத்தி செய்வது பற்றியும்.

2. பின்தங்கிய முகவை மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கண்மாய்கள், கால்வாய்கள் மராமத்து செய்யாமல் தாமதமாக விடப்பட்டுள்ளது பற்றியும் ;

3. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வைகை நதியின் கரையில் அதன் தொடர்பாக உள்ள கால்வாய்கள், சீராக்கப்படாமல் இருப்பதைப் பற்றியும் ;

4. முன் இரண்டு பட்ஜெட்டுகளில் குறிப்பிட்டு தற்போது விடப்பட்டுள்ள "சேது சமுத்திரம் திட்டம்" பற்றியும் ;

5. பல கோடி ரூபாய் செலவு செய்து அரைகுறையாக நிற்கும் பாம்பன் ரோடு பாலம் பற்றியும் ;

6. நிலத்தடி நீரை அபிவிருத்தி செய்ய தண்ணீர் கிடைக்கும் காலத்தில் நீர் நிலைகளிலும் கண்மாய்களிலும் தேக்கி வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பது பற்றியும் ;

7. கிராமப் பகுதிகளை இணைக்கும் இணைப்பு ரோடுகள் இல்லாத நிலைமை பற்றியும் ;

8. கிராமாந்திரப் பகுதிகளுக்கு இன்னும் சரியான பஸ் போக்குவரத்து செய்து கொடுக்காதது பற்றியும் ;

9. தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணியை உடனே கொள்முதல் செய்வதற்கும், கொள்முதல் செய்தவைகளுக்கு உடனே பணம் பட்டுவாடா செய்யாமல் தாமதிப்பதனால் நெசவாளர்கள் படும் கஷ்டங்களுக்கு நிவாரணம் பற்றியும் ;

10. 600 மைல் நீளம் உள்ள நீண்ட கடற்கரை உள்ள தமிழ் நாட்டில் கடல் செல்வங்களை அடைவதற்கும் அனுபவிப்பதற்கும் திட்டங்கள் பற்றியும் ;

11. கிராமப் பகுதிகளில் குடிதண்ணீர் வசதியை பெருக்குவதற்கு ஏற்பாடு செய்வது பற்றியும் ;



13. கூட்டுறவு கடன்களை பொறுத்தமட்டில் இயற்கையின் சீற்றங்களால் ஏற்படும் காலங்களில் கூட தள்ளுபடி செய்து உதவி செய்யாதது பற்றியும் ;

13. ஏழை நடுத்தர மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அதிக அளவில் உபயோகம் இல்லாதது பற்றியும் ;

14. மேற்கு நோக்கி பாய்ந்தோடும் நதிகளை கிழக்கு முகமாக திருப்பி முகவை மாவட்டத்திற்கு தண்ணீர் வசதியை அதிகரிப்பது பற்றியும் ;

15. கல்பாக்கம், நெய்வேலி முதலிய மின்சார உற்பத்தி நிலையங்களை மத்திய அரசு அபிவிருத்தி செய்யாததைப் பற்றியும் ;

16. கடந்த 50 வருடங்களாக முகவை மாவட்டத்தையும் சென்னையையும் இணைக்கும் ரயில் ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் ஒன்று தான் ; மேலும் ஒரு எக்ஸ்பிரஸ் ரயில் குறுக்குப் பாதையில் விடவேண்டும் என்று மத்திய அரசுக்கு பரிந்துரை செய்வது பற்றியும் ;

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது ".

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

(முற்பகல் 11-40)

DR. K. SOURIRAJAN : Sir, I move the following amendment :

" Add at the end the following :

' but regret to note that no mention is made about :— '

(1) the steps taken for the withdrawal of all criminal cases filed against public men, politicians, etc., now pending at various criminal courts in this State ;

(2) the steps taken against the officials found guilty by the Justice Ismail Commission of Inquiry on Central Jail atrocities in Madras ;

(3) the two language policy enunciated by Anna adopted by this House which is only in paper but not in action since the knowledge of English even among graduates of Universities in Tamil Nadu is far below the standard because of the Government's policy of discouraging English medium in schools ;

(4) any measures to assure adequate protected water supply and drainage facilities to the eptended areas of Madras City notwithstanding that the Government is aware that Madras Water Supply and Drainage Board formed recently is not able to cope up with the increasing demand from these areas for want of funds ;

(5) the participation of workers in the management of State Government undertakings, establishments or other organisations such as various transport Corporations. Tamil Nadu Chemical Products, Tamil Nadu Dairy Development Corporation, etc. "

The amendment was duly seconded.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சோாணம் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை மொழிகிறேன் :

"இறுதியில் கீழ்க்கண்டதைச் சேர்த்துக் கொள்ளவும்—

1. விவசாயத்திற்கான இடுபொருளான யூரியா போன்ற உரவிலை உயர்வை சரிகட்ட சிறு விவசாயிகளுக்கு உர மானியம் அளிக்கப்பட வேண்டிய அவசியம் பற்றியும் ;

2. விவசாய வேலைகளுக்கு உபயோகிக்கும் டீசல், பெட்ரோல் ஆகியவற்றின் விலை உயர்வை சரிகட்ட சிறு விவசாயிகளுக்கு மானியம் அளிக்கப்பட வேண்டிய அவசியம் பற்றியும் ;

3. சிறிய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுக்கு பென்ஷன் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய அவசியம் பற்றியும் ;

4. வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தில் பதிவு செய்யப்பட்ட வேலை கிடைக்காத அனைவருக்கும் உதவித் தொகை வழங்கப்பட வேண்டிய அவசியம் பற்றியும் ;

5. அரசிடம் சம்பளம் பெறும் அனைத்து ஆசிரியர்களையும், ஆசிரியைகளையும் அரசு ஊழியர்களாக்குவதைப் பற்றியும் ;

6. திருநெல்வேலி வட்டாரத்திலுள்ள கல்விக் கூடங்களை இணைத்து நெல்லை பல்கலைக் கழகம் ஒன்று நிறுவப்பெறும் என்பதைப் பற்றியும் ;

7. கைத்தறியில் உற்பத்தியாகும் பாலிஸ்டர் துணிக்கு மத்திய அரசு விதித்துள்ள வரியை ரத்து செய்ய மத்திய அரசிடம் மாநில அரசு போராடும் என்பதைப் பற்றியும் ;



8. கைத்தறித் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்க ராஜா சுப்பிரமணியம் கமிட்டி சிபாரிசு அடிப்படையில் சட்டமியற்றப்படும் என்பதைப் பற்றியும் ;

9. ஊராட்சிகளிலும், நகராட்சிகளிலும் பெண்களுக்கும் தாழ்த்தப் பட்டோர்களுக்கும் தனித் தொகுதிகள் ஏற்படுத்தப்படும் என்பதைப் பற்றியும் குறிப்பிடாதது வருந்தத்தக்கது ".

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

**திரு. ரா. கிருஷ்ணன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை மொழிகிறேன் :

" இறுதியில் கீழ்க்கண்டதைச் சேர்த்துக் கொள்ளவும்—

1. தமிழ்நாட்டில் மதுவிலக்கு ரத்து செய்யப்பட வேண்டும் என்பதைப் பற்றியும் ;

2. வேலையில்லாமல் பதிவு செய்துள்ள அனைவருக்கும் அரசு உதவி கிடைக்க வழிவகை செய்யப்படும் என்பது பற்றியும் ;

3. விவசாய தொழிலாளர்களில் 60 வயதடைந்தவர்களுக்கு ஓய்வு ஊதியம் வழங்கப்படும் என்பது பற்றியும் ;

4. உள்ளாட்சி தேர்தல்களில் பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட பழங்குடியினருக்கும் தனி இடங்கள் ஒதுக்கப்படும் என்பது பற்றியும் ;

5. திருநெல்வேலியில் பல்கலைக் கழகம் அமைக்கப்படும் என்பது பற்றியும் ;

6. பயிர் இன்சூரன்ஸ் திட்டம் அமுல்படுத்தப்படும் என்பது பற்றியும் ;

7. சர்க்கரை ஆலைகளின் உரிமங்கள் குறிப்பாக சங்கரன்கோவில் சர்க்கரை ஆலை ரத்து செய்யப்பட்டதை மீண்டும் பெற்று சர்க்கரை ஆலைகள் நிறுவப்படும் என்பது பற்றியும் ;
குறிப்பிடாதது வருந்தத்தக்கது ".

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

[1980 ஜூன் 27

திரு. சு. பாலன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை மொழிகிறேன் :

" இறுதியில் கீழ்க்கண்டதைச் சேர்த்துக் கொள்ளவும்—

1. சென்னை போன்ற பெரு நகரங்களில் வசிக்கும் ஏழை குடிசை வாழ் மக்களின் மேம்பாட்டிற்கு வழிவகை செய்ய வேண்டிய அவசியம் பற்றியும் ;

2. சென்னை மாநகராட்சி மூலம் மேலும் பல உயர்நிலைப் பள்ளிகள் துவக்கப்படும் என்பதைப் பற்றியும் ;

3. பக்கிங்காம் கால்வாய் அபிவிருத்தி செய்யப்படும் என்பதைப் பற்றியும் ;

குறிப்பிடாதது வருந்தத்தக்கது ".

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

திரு. ஏ. டி. குலசேகர் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை மொழிகிறேன் :

" இறுதியில் கீழ்க்கண்டதைச் சேர்த்துக் கொள்ளவும்—

1. கிராமப்புறத்தில் வேலையில்லாத மக்களுக்கு தினம் நபர் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று தருவது பற்றியும் ;

2. வசதி வாய்ப்பற்ற ஏழை கர்ப்பிணி பெண்களுக்கு இறுதி மூன்று மாதங்களுக்கு ரூ. 150 உதவிப்பணம் தருவது பற்றியும் ;

3. வயதான ஏழை விவசாயிகளுக்கு ஓய்வூதியம் தருவது பற்றியும் ;

குறிப்பிடாதது வருந்தத்தக்கது ".

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை மொழிகிறேன் :

" இறுதியில் கீழ்க்கண்டதைச் சேர்த்துக் கொள்ளவும்—

1. 1977, 1978 ஆண்டுகளில் நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு எந்தத் திட்டம் பற்றியும் ;



2. எல்லா விவசாயிகளின் விவசாயக் கடன்களை ரத்து செய்வது குறித்தும் ;

குறிப்பிடாதது வருந்தத்தக்கது ".

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

திரு. நா. சுந்தரராஜ் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை மொழிகிறேன் :

" இறுதியில் கீழ்க்கண்டதைச் சேர்த்துக் கொள்ளவும்—

விவசாயிகளின் கடன்களை உடனடியாக ரத்து செய்வதைப்பற்றி குறிப்பிடாதது வருந்தத்தக்கது ".

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

திரு. ப. தனபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்திலே மீண்டும் பேசுகின்ற ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்த இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், சங்கரி தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசானது கடந்த 6 ஆவது சட்டமன்றத்தை நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் அடிப்படையில், தேர்தல் முடிவை ஒட்டி, அதைக் காரணம் காட்டி, சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தலை நடத்தியது. இருந்தபோதிலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கைகளையும், பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த கொள்கைகளையும், திராவிடர் இயக்கத்தையும் யார் கட்டிக் காப்பாற்றுவார் என்பதற்காக நடைபெற்ற மிகப்பெரிய ஜீவ மரணப் போராட்டமாக இந்தத் தேர்தல் இருந்தது. இதிலே தமிழ்நாட்டு மக்கள் தெளிவான ஒரு நல்ல தீர்ப்பைத் தந்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிலே அண்ணாவின் கொள்கைகளில் தளராது செல்வதற்கும், தந்தை பெரியாரின் பாரம்பரியத்தைக் காப்பதற்கும் புரட்சித் தலைவர் ஒருவரால்தான் முடியும் என்று தமிழ் நாட்டு மக்கள் தெளிவான தீர்ப்பை இந்தத் தேர்தலிலே தந்திருக்கிறார்கள். இதன் மூலம் தமிழ் நாட்டில் ஒரே தலைவர் புரட்சித் தலைவர்தான் என்பதை மக்கள் இந்த நாட்டுக்கு அறிவித்திருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. சு. பாலன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை மொழிகிறேன் :

" இறுதியில் கீழ்க்கண்டதைச் சேர்த்துக் கொள்ளவும்—

1. சென்னை போன்ற பெரு நகரங்களில் வசிக்கும் ஏழை குடிசை வாழ் மக்களின் மேம்பாட்டிற்கு வழிவகை செய்ய வேண்டிய அவசியம் பற்றியும் ;

2. சென்னை மாநகராட்சி மூலம் மேலும் பல உயர்நிலைப் பள்ளிகள் துவக்கப்படும் என்பதைப் பற்றியும் ;

3. பக்கிங்காம் கால்வாய் அபிவிருத்தி செய்யப்படும் என்பதைப் பற்றியும் ;

குறிப்பிடாதது வருந்தத்தக்கது ".

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

**திரு. ஏ. டி. குலசேகர் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை மொழிகிறேன் :

" இறுதியில் கீழ்க்கண்டதைச் சேர்த்துக் கொள்ளவும்—

1. கிராமப்புறத்தில் வேலையில்லாத மக்களுக்கு தினம் நபர் ஒன்றுக்கு ரூபாய் ஒன்று தருவது பற்றியும் ;

2. வசதி வாய்ப்பற்ற ஏழை கர்ப்பிணி பெண்களுக்கு இறுதி மூன்று மாதங்களுக்கு ரூ. 150 உதவிப்பணம் தருவது பற்றியும் ;

3. வயதான ஏழை விவசாயிகளுக்கு ஓய்வூதியம் தருவது பற்றியும் ;

குறிப்பிடாதது வருந்தத்தக்கது ".

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

**திரு. மு. அரங்கநாதன் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை மொழிகிறேன் :

" இறுதியில் கீழ்க்கண்டதைச் சேர்த்துக் கொள்ளவும்—

1. 1977, 1978 ஆண்டுகளில் நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளச் சேதத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் முன்னேற்றத்திற்கு எந்தத் திட்டம் பற்றியும் ;



2. எல்லா விவசாயிகளின் விவசாயக் கடன்களை ரத்து செய்வது குறித்தும் ;

குறிப்பிடாதது வருந்தத்தக்கது ".

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

**திரு. நா. சுந்தரராஜ் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்காணும் திருத்தத்தை மொழிகிறேன் :

" இறுதியில் கீழ்க்கண்டதைச் சேர்த்துக் கொள்ளவும்—

விவசாயிகளின் கடன்களை உடனடியாக ரத்து செய்வதைப்பற்றி குறிப்பிடாதது வருந்தத்தக்கது ".

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

**திரு. ப. தனபால் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்திலே மீண்டும் பேசுகின்ற ஒரு வாய்ப்பை உருவாக்கித் தந்த இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், சங்கரி தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசானது கடந்த 6 ஆவது சட்டமன்றத்தை நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் அடிப்படையில், தேர்தல் முடிவை ஒட்டி, அதைக் காரணம் காட்டி, சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தலை நடத்தியது. இருந்தபோதிலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கைகளையும், பேரறிஞர் அண்ணா அவர்கள் வகுத்துத் தந்த கொள்கைகளையும், திராவிடர் இயக்கத்தையும் யார் கட்டிக் காப்பாற்றுவார் என்பதற்காக நடைபெற்ற மிகப்பெரிய ஜீவ மரணப் போராட்டமாக இந்தத் தேர்தல் இருந்தது. இதிலே தமிழ்நாட்டு மக்கள் தெளிவான ஒரு நல்ல தீர்ப்பைத் தந்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டிலே அண்ணாவின் கொள்கைகளில் தளராது செல்வதற்கும், தந்தை பெரியாரின் பாரம்பரியத்தைக் காப்பதற்கும் புரட்சித் தலைவர் ஒருவரால்தான் முடியும் என்று தமிழ் நாட்டு மக்கள் தெளிவான தீர்ப்பை இந்தத் தேர்தலிலே தந்திருக்கிறார்கள். இதன் மூலம் தமிழ் நாட்டில் ஒரே தலைவர் புரட்சித் தலைவர்தான் என்பதை மக்கள் இந்த நாட்டுக்கு அறிவித்திருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ப. தனபால்] [1980 ஜூன் 27

(முற்பகல் 11-50)

தேர்தலிலே கொடுத்த வாக்குறுதிகளை இந்த அரசாங்கம் காப்பாற்றும் என்று சொன்னதற்குப் பின்னாலே இன்றைக்கு ஆளுநர் உரையிலே நல்லபல திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றும் என்று சொல்லி அண்ணா அவர்களுடைய இலட்சியங்களை இந்த ஆளுநர் உரையிலே கோடிட்டுக் காட்டி இருப்பது அண்ணாவினுடைய உண்மையான தம்பி புரட்சித்தலைவர் அவர்கள்தான் என்பதை எடுத்துக்காட்டுகின்ற வகையிலே அமைந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே அண்ணாவினுடைய கொள்கைகளை நிறைவேற்றுகிற இந்த அரசு பல்வேறு புதிய திட்டங்களை இந்த ஆளுநர் உரையிலே தெரிவித்திருக்கின்றது. அதிலே ஒன்றாகத்தான் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழ்கின்ற மக்களுக்கு நல்வாழ்வளிக்கின்ற திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தும் இந்த அரசு என்று சொல்லப்பட்டிருக்கின்றது. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக வேலைக்கு உணவுத் திட்டம் என்கிற திட்டம் முன்பு கழக ஆட்சிக் காலத்தில் வந்தது. ஆனால் குடியரசுத் தலைவர் ஆட்சியிலே அந்தத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டுவிட்டது. ஆனால் மீண்டும் அந்த வேலைக்கு உணவுத்திட்டத்தை இந்த அரசு நிறைவேற்றுவோம் என்று சொல்லி இருப்பது வறுமையிலே வாடுகின்றவர்களுக்கு மிக்க நன்மை தருவதாக அமைந்திருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, வேலையற்ற பட்டதாரிகளுக்கு, உதவித்தொகை வழங்கப்படும் என்ற திட்டத்தை புரட்சித்தலைவர் அரசாங்கம் முன்பு அறிவித்திருந்தது. அந்தத் திட்டத்தை மீண்டும் நிறைவேற்றுவோம் என்று சொல்லி இருப்பது வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு நல்வாழ்வளிக்கக்கூடிய நல்ல திட்டமாக அமைந்திருக்கிறது என்பதைக் கோடிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி ஏழைகளுக்கும், வறியவர்களுக்கும் புரட்சித்தலைவர் அவர்கள் அறிவித்திருக்கின்ற இந்தத் திட்டம் ஏழைகளுக்கு ஒரு கலங்கரை விளக்கமாக அமைந்திருக்கிறது என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். உழைக்கின்ற மக்களுக்கு உற்சாகம் தரும் திட்டங்களாக இந்தத் திட்டங்கள் அமைந்திருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெளிவாகச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மாமன்றத்திலே எனக்கு முன்னாலே பல்வேறு உறுப்பினர்கள் விவசாயிகளுடைய பல்வேறு பிரச்சினைகளைப் பற்றியெல்லாம் பேசி இருக்கிறார்கள். அவற்றை இந்த நேரத்திலே குறிப்பிடுவது என்னுடைய



1980 ஜூன் 27] [திரு. ப. தனபால்]

நீங்காத கடமை என்று கருதுகிறேன். இதற்கு முன்னாலே இருந்த
அரசாங்கங்கள் செய்யாத சலுகைகளை எல்லாம் புரட்சித்தலைவர் அரசாங்கம்
அறிவித்தது. நாற்பது கோடி ரூபாய்க்கு வரிச் சலுகைகளைச் செய்து
விவசாய மக்களுக்கு வாழ்விலே ஒரு புத்துணர்ச்சியை ஏற்படுத்தித் தந்தது
என்பதை சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றையதினம் அந்த
விவசாயிகளை மறவாமல் மீண்டும் அவர்களுடைய பிரச்சினைகளைத்
தீர்ப்பதற்கு புதிய திட்டங்களை உருவாக்கித் தந்திருக்கின்றது. அதன்
அடிப்படையிலேதான் விவசாயப் பிரதிநிதிகள் அடங்கிய குழுக்களை மாநில
அளவிலும் மாவட்ட அளவிலேயும் அமைத்து அந்த விவசாயிகளின் அன்றாடப்
பிரச்சினைகளை தீர்த்துக்கொள்வதற்கு வசதியான அளவிலே அவ்வாறு
குழுக்கள் அமைக்கப்படும் என்று அறிவித்திருப்பது விவசாயிகளுக்கு மிகப்
பெரிய மகிழ்ச்சி தரும் திட்டமாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. விவசாயிகளுடைய கடன் சுமைகளைக் குறைக்கவேண்டும்
என்பதற்காக புரட்சித்தலைவர் அவர்கள் வற்புறுத்தி இருக்கிறார்கள்
அதற்காக மத்திய அரசிடம் புரட்சித்தலைவர் அவர்கள் கோரிக்கை
விட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்கு மத்தியிலே இருந்து என்ன பதில்
கிடைத்திருக்கின்றது என்று சொன்னால், தமிழ்நாடு முதலமைச்சரின்
கோரிக்கைக்கு டெல்லி மைவிரிப்பு என்ற நிலையிலே ஒரு கேள்விக்கு
பதிலளிக்கின்ற நேரத்தில் மத்திய மின்துறை துணை அமைச்சர்
திரு. பாரத் ரெட்டி அவர்கள் விவசாயிகளினுடைய கடன்களை ரத்து செய்ய
முடியாது என்று சொல்லி இருக்கிறார்கள். ஒரு பக்கத்திலே, விவசாயத்
துறையிலே அமைச்சராக இருக்கின்ற திரு. ஆர்.வி.எஸ். அவர்கள் விவசாயி
களின் கடன்களை ஒரேகாலத்திலே ரத்து செய்யவேண்டும் என்று
சொல்கிறார்கள். அதே மத்திய அரசில் நிதியமைச்சராக இருக்கின்ற
திரு. ஆர்.வி. அவர்கள் கடன்களை ரத்து செய்ய முடியாது என்று
சொல்கிறார்கள். திரு. ஆர். வி. எஸ். அவர்கள் சொல்வதை திரு. ஆர். வியாலே
நிறைவேற்ற முடியவில்லை. இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கு நான்
பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன், விவசாயிகளினுடைய கடன்களை
ரத்து செய்யவேண்டும் என்பது மிகப்பெரிய கோரிக்கை, இது விவசாயிகளின்
அடிமட்ட கோரிக்கை. ஆகவே இதிலே கட்சி மாச்சரியங்களை மறந்து விட்டு
அவர்களுக்காக அனைவரும் பணியாற்ற வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த நண்பர்களை குறிப்பாக காங்கிரஸ் கட்சியைச்
சேர்ந்த நண்பர்களை பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன். நீங்கள் விவசாயிகளின்மீது உண்மையான பற்றும் பாசமும்

[திரு. ப. தனபால்] [1980 ஜூன் 27

வைத்திருப்பவர்கள் என்று சொன்னால், மத்திய அரசாங்கத்திடம் வாதாடி இதற்கு ஒரு வழி செய்ய வேண்டும். புரட்சித் தலைவர் அவர்கள் போட்டிருக்கிற விவசாய கடன்களை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை, கொள்கையை நிறைவேற்ற, மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தி நிதி உதவி பெற உதவ வேண்டும் என்று, இங்கே இருக்கிற காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களை, நண்பர்களை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளின் பிரச்னையை அரசுகளின் பிரச்னையாக ஆக்காமல், இந்த மன்றத்திலே புரட்சித் தலைவர் அவர்கள் எடுக்கும் நல்ல பல காரியங்களுக்கும் நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மின்சார கட்டணங்களை விவசாயிகள் கட்டும்படி செய்வதற்கும் நீங்கள் இந்த அரசுக்கு உதவி செய்ய வேண்டும். அவர்களிடம் தங்கள் தொகுதிகளில் எடுத்துரைத்து மின்சார கட்டணங்களை கட்டுவதற்கு உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உரிமைக்கு குரல் கொடுப்போம் உறவுக்கு கை கொடுப்போம் என்றபடி தமிழகத்தில் தொழில் வளர்ச்சி அடைய, எதிர்க்கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் இந்த அரசாங்கத்திற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோவை, திருச்சி போன்ற இடங்களில் புதிய பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்துவதும், மதுரை, சென்னை பல்கலைக் கழகங்களில் நிர்வாக சீரமைப்பு ஏற்படுத்துவதும், காரைக்குடியில் உள்ள கல்விக் கூடங்களை இணைத்து பல்கலைக் கழகம் ஒன்றை உருவாக்கும் முயற்சிகளையும், 18 வயது அடைந்துள்ள அனைவருக்கும் வாக்களிக்கும் உரிமை தரப்படுவதும், தாழ்த்தப்பட்ட மக்களின் மேம்பாட்டுக்கு 5 ஆண்டு திட்டங்கள் அமைக்க விருப்பதும், இவைகள் எல்லாம் அண்ணாவின் லட்சியத்தை நிறைவேற்று வதற்கான புரட்சித் தலைவர் அவர்களின் திட்டங்களுக்கு எடுத்துக்காட்டான முயற்சிகள் என்பதனை சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியிலே சில பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி, தீர்வு காண்பதுதான் என்னுடைய தொகுதி மக்களுக்கு நான் செய்யும் தலையாய கடமை என்ற முறையில் சில பிரச்னைகளை எடுத்து வைக்கிறேன்.

மல்லசமுத்திரம் என்ற இடத்திலே திருமணி முத்தாறு மீது ஒரு வாய்க்கால் கட்டும் பணி 10 ஆண்டுகாலத்திற்கு முன்னால் தொடங்கப்பட்டு, அந்தப் பணி பாதியிலேயே நிறுத்தப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 15,000 விவசாயப் பெருங்குடி மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். எஸ்டிமேட் போட்டு ஏற்கெனவே வாங்கியிருக்கிறார்கள். ஆகவே உடனடியாக அதை கட்டி முடித்து விவசாயிகளின் பிரச்னைக்கு வழி காண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1980 ஜூன் 27] [திரு. ப. தனபால்]

வையப்பு மனையிலே ஒரு அரசு மருத்துவ மனையை உருவாக்குவதற்கும் முயற்சி செய்து உதவி செய்ய வேண்டும் என்று கேட்டு, நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*** திரு. ஏ. சாகுல் ஹமீது :** மாண்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேன் மொழி மிழற்றி கன்னிப் பேச்சதனை துவக்குகிறேன். மேதகு ஆளுநர் உரையின் மீதெழும் கருத்தினை உரைப்பேன்.

கடைத்தேற்றும் கருணை உள்ளம் பெற்ற மக்கள், கடையநல்லூர் தொகுதி மக்கள், எடை நாக்கி (தராசில்) பார்த்தென்னை தேர்ந்தெடுத்து தொகுதிக்கு நற்பணிகள் ஆற்றும் வகைக்காய் பேரவையில் எடுத்துரைக்க அனுப்பி வைத்தார் ; ஆதலினால், ஆளுநர் பேருரையில் கைத்தறி நெசவாளர், பீடித் தொழிலாளர், முக்தி பெறும் வழிகூறும் வாய்ப்பு கூறவில்லை, சுந்தியல் சம்மட்டி, சுடுநெருப்பு மத்தியிலே உழைப்பாரை மறந்து விட்டார். தாழ்த்தப் பட்டோர் தம் வாழ்வுயர தரப்படுமாம் ஐந்தாண்டு நலத்திட்டம் என்றே எடுத்துரைத்தார். வாழ்த்துக்கள் அன்னவர்க்கு விரைவாக நலன் செய்க. அத்தோடு விடப்பட்டு உள்ளனராம் பிற்பட்டோர். அவர்கள் வாழ்வுயர்த்தும் நலத் திட்டங்கள் ஏதுமில்லை இவ்வுரையில். வளமற்ற சிறுபான்மை நலன் காக்கும் வாழ்வுயர்த்தும் வழி கூறப்படவில்லை. அத்தோடு பாதுகாப்பு பற்றியெல்லாம் விண்டுரைக்கப்படவில்லை இவ்வவையில்.

சான்றாக இராமநாதபுரம் பகுதிகளாம் அழகன்குளம், முதுகுளத்தூர் பகுதிகளில் அன்றாட வாழ்க்கையிலே பாதிப்பு. பொய் வழக்குப் போடுவதால் சிறுசமூகத்தினர் படும் துயரை எடுத்துரைத்தேன் இம்மன்றில்.

என்னுடைய தொகுதிதனில் தேர்தல்கால வன்முறைகள் ஆங்காங்கே நிகழ்ந்தபோது, அச்சன்புதூர், கடையநல்லூர்பேட்டை பகுதிகளில் பண்பற்றோர் பொய் வழக்கு போட்டங்கே பாரபட்சம், ஒரு சார்பாய் நடக்கின்றார்.

அரிசி ஐந்து கிலோ வாங்குவோருக்கு பரிசாக ஒரு கிலோ கிடைக்கு மென்றும், பட்டம் பெற்றும் வேலையற்றோர்க்கு திட்டம் உள, ஐம்பது ரூபாயென்றும், வீட்டுக்கு ஒருவரை தேடிச்சென்று நீட்டுவோம் பிடியிந்தா வேலையென்றே, நாட்டு மக்கள் உள்ளத்தில் ஆசையூட்டி, நம்பிக்கை பெற்றோரே நிறைவு செய்க, வாக்கதனை காத்திடுக.

[திரு. ஏ. சாகுல் ஹமீது] [1980 ஜூன் 27

கடன் ரத்து வருமென்று விழிபிதுக்கி காத்திருக்கும் மக்களுக்கு வழியென்ன? கடன்கார விவசாயி நாளெல்லாம் கோட்டை மீது தன் பார்வை பதிய வைத்து, இடப்படும் உத்தரவை எதிர்பார்த்து இடர்ப்பாடு நீங்குமென நம்பியுள்ளார். விடப்படும் அரசாணை ஏதாகும் என்றே விசாரம் இப்பொழுதே எழலாமோ?

வாக்களித்த நல்வாக்கை நம்பியன்றோ வாக்களித்தார். நாடாள அனுப்பி வைத்தார். வாக்களித்த வாக்கதனை காப்பதற்கு வாக்கில் நாதமெழ இசைத்திடுவீர். சோக இசை நிறுத்திடுவீர்.

ஏக்கமுடன் தூக்கி முகம் பார்க்கின்ற எண்ணற்ற விவசாயி நம்பிக்கை முகம் மலர தாக்கீது தாரீரோ! தந்த வாக்கதனை காப்பாற்ற வழி தான் காணீரோ!

(நண்பகல் 12-00)

என்னுடைய தொகுதிதனில் கிராமப்புற பகுதிகளில் குடிநீர், மருத்துவம், பஸ் வசதி, சாலைகள், பாலங்கள் சீர்படுத்தி குளங்கள் தூர் எடுத்தல், மராமத்து பார்த்தல் போன்ற பணிகள் செவ்வனே நடைபெற ஆவன செய்தே நலன்காப்பீர், புகழ் சேர்ப்பீர்.

அத்துடனே, சட்டமன்ற உறுப்பினர் தங்கும் விடுதியிலே தொலைபேசி இயக்குமுறை சீரில்லை, காதருகே கொண்டு சென்றால் பல்லோசை அபஸ்வரங்கள் ஒலிப்பதுடன் தொடர்பைப் பெறுவதென்றால் சாதுகூட பொறுமை இல்லாதாவான். தொலைபேசி தொடர்பு பெறுவதற்கு நாங்கள் படும்பாடோ கொஞ்சமன்று. மேலும் விடுதியிலே ஏவலர்கள் உதவிக்கு வருவதில்லை. அவர்களைத்தேடி மாடி விட்டு கீழிறங்கி தேடிப்பிடித்து அவர்களின் உதவியைப் பெறுவது எத்துணை அல்லல்தரும் நிலை என்பதை எண்ணிப் பார்த்து சரி செய்வீர், சீர் செய்வீர், பரிவோடு வழி செய்வீர், உறுப்பினர்கள் உவகையோடு வாழ்த்துவார்கள்.

சிறு சமூகப் பிரதிநிதி கடமையாற்ற குழுக்கள், அமைப்புகளில் தருக வாய்ப்பு, பேரவையில் ஒருவன் நான் என்றென்னை ஒதுக்காதீர். இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கினைச் சார்ந்த எனக்கு கட்சி ரீதியில் இடம் தருவார். அதனால் பேரவைக்கு பெருமை சேர்ப்பார்.



1[illegible] ஜூன் 27] [திரு. ஏ. சாகுல் ஹமீது]

[illegible]ணியம் நிறைந்த காயிதெ மில்லத் நல்வழிசெல்லும் இயக்கம் சா[illegible] தான் நடுநிலை நின்று, நடப்பவை கண்டு ஜனநாயக மரபு காத்திட ஒத்[illegible]ழைப்பேன் என்று கூறி அமர்கிறேன். நன்றி.

[illegible]ரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,
மீண்டும் இந்தப் பேரவையில் பேசுகிற சந்தர்ப்பத்தைக் கொடுத்துள்ள
கலசபாக்கம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு தங்கள் மூலம் நன்றி
தெரிவித்து எனது பேச்சைத் துவக்குகிறேன். எனக்கு முன் பேசிய பல்வேறு
ஆளும்கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் மிக வேகமாகப்
பேசினார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் மக்கள் குரலே மகேசன் குரல்
என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நான் கேட்டும் இருக்கிறேன், படித்தும்
இருக்கிறேன். அதனால் தான் எங்கள் தலைவர் அவர்கள் கூட முதல்
அமைச்சர் அவர்களுக்கு பெருந்தன்மையாக வாழ்த்து அனுப்பிவிட்டு இந்த
ஆட்சி நல்லமுறையில் நடைபெறவேண்டும் என்று வாழ்த்து அனுப்பி
வைத்தார்கள். அதில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஜனநாயகத்தில்
ஒரு கட்சி ஆட்சிக்கு வந்தால் அந்தக் கட்சியில் இருக்கிற உறுப்பினர்கள் கூட
கொஞ்சம் அடக்கமாக இருக்கவேண்டும். காரணம், நாட்டில் பிரச்னைகள்
மலைபோல் குவிந்து கிடக்கின்றன. அவைகளையெல்லாம் தீர்க்கிற பிரச்னை
ஆளும் கட்சியினருக்கு இருக்கிறது என்பதை நினைவூட்ட நான் விரும்பு
கிறேன். எனக்கு முன் என் மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் நாடாளுமன்ற
உறுப்பினர், என் தொகுதியைச் சேர்ந்தவர் பேசினார். அவர் எப்போதும்
இப்படித்தான் பேசுவார். எந்தத் தலைவரைப் பற்றி வேண்டுமானாலும்
பேசுகிறபோது பேசி விடுவார், பின்னர் வருத்தம் தெரிவிப்பார். ஏற்கனவே
முதல் அமைச்சர் அவர்களைப் பற்றி அவர்கள் பேசிய பேச்சை நாடு மறந்து
விடவில்லை. இன்றையதினம் எங்களைப்பற்றியும் பேசினார்கள். அவர்களுக்கு
அப்படி ஒரு பிரச்சினை இங்கே வந்திருக்கிறது. காரணம், திராவிட
முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறபோது அ.தி.மு.க.-வைப்பற்றி பேசினார்கள்,

திரு. கோ. விஸ்வநாதன்: பாயின்ட் ஆப் ஆர்டர். தலைவர் அவர்களே,
நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் பேசும்
போது யாரைப்பற்றியும் நான் இப்படித்தான் பேசுவே[illegible] என்[illegible] பின்
வருத்தம் தெரிவிப்பேன் என்றும் சொல்வது அபத்[illegible]
முதலாக வைத்து அரசியல் வியாபாரம் செய்[illegible] என்று நா[illegible]
அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



1230

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** நான் பொய் சொல்லவேண்டிய அவசிய மில்லை. நான் என் தொகுதியைப் பற்றித்தான் பேசுவது வழக்கம். ஆனால் உறுப்பினர் அவர்களைப்பற்றிச் சொல்ல வேண்டியதொரு கட்டாயம் ஏற்பட்டதால் சொன்னேன்.

**திரு. நா. சுந்தரராஜ் :** பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த அவையில் ‘பொய்’ என்று சொல்வது மரபுக்கேற்றதல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** நான் பொய் சொன்னதாகச் சொன்னார்கள். ஒன்றை மட்டும் நான் அவர்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன். அமைச்சர் ப.உ.ச. அவர்கள் இங்கே இல்லை. நான் ஒரு தலைவராக மதிக்கக் கூடியவர் அவர். அவர்களைப்பற்றி என்ன பேசினார்கள், எழுதினார்கள் ? இன்றையதினம் அ.தி.மு.க.-வில் சேரும்போது அவர்களுக்கு ஆள் உயர ரோஜாப்பூ மாலையை வீட்டில் கொண்டு போய் போட்டார்கள். அதை மறந்து விடுங்கள் என்று சொன்னார்கள். அது வருத்தம் தெரிவித்ததாக ஆகாதா ? என்று கேட்கிறேன். இப்படித்தான் அவர் எதை வேண்டுமானாலும் பேசுவார். அதைத்தான் நான் சொன்னேனே தவிர வேறு ஒன்றுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள பொருள்பற்றிப் பேசுங்கள். விவாதம் சபையில் இல்லாதவர்களைப்பற்றி ஒன்றும் குறிப்பிட வேண்டாம்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** இன்றையதினம் முதல் அமைச்சர் அவர்கள், இளைஞர்களுக்கெல்லாம் அமைச்சரவையில் இடம் உண்டு என்று சொல்லி யிருக்கிறார்கள். பல இளைஞர்கள் துடிப்பாக எங்களைத் திட்டி இடம் பெறுவார்களேயானால் நாங்கள் அவர்களை வாழ்த்தக் கடமைப்பட்டிருக் கிறோம். அதே நேரத்தில் தேர்தல் காலத்திலே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளைச் சொன்னார்கள். நாராயணசாமி நாயுடு அவர்களை அவர்களும் பார்த்தார்கள் ; எங்கள் தலைவர் அவர்களும் பார்த்தார்கள் ; காங்கிரஸ் கட்சியிலே உள்ளவர்களும் பார்த்தார்கள் ; எல்லோருமே போய்ப் பார்த்தார்கள் ; பார்க்கவில்லை என்று சொல்லவில்லை. நாட்டு மக்களுடைய வாக்குகளைப் பெற்று, பொறுப்புக்கு வந்து விட்டீர்கள். இன்றையதினம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தபிறகு, ஆளுநர் உரையிலே என்ன சொல்லி இருக்கிறீர்கள் ? இன்றையதினம் நாட்டிலே விவசாயிகள் பிரச்னை என் இருக்கிறது ? மின் பில்லைக் கட்டவில்லை என்பது ஒரு பக்கத்திலே, ஒரு பக்கத்திலே கட்டவேண்டும் என்று கேட்கிறார்கள். கிராமத்திலே மின் இணைப்பிற்கான வரி வசூல் செய்ய முடியவில்லை ; வரி கொடா இயக்கம் நடைபெறுகிறது.



அன்றையதினம் 9 அம்ச திட்டத்தைப்பற்றிச் சொன்னார்கள். இன்றைய தினம் ஆளுநர் உரையிலே, இந்த 9 அம்ச திட்டத்திலே இந்த ஆண்டு நான்கு அம்சங்களை எடுத்துக் கொள்கிறோம், மற்றவைகளை அடுத்த ஆண்டு எடுத்துக் கொள்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கின்றதா என்றால், அப்படி எதுவும் குறிப்பிடப்படவில்லை. இன்றைய தினம் கிராமங்களில் பிரச்சினைகள் வளர்ந்துவிட்ட காரணத்தினால், அவைகளைப்பற்றி, அந்தப் பிரச்னைகளைப்பற்றியெல்லாம் ஆளுநர் உரையிலே குறிப்பிடப்படவில்லை. நீங்கள் மக்கள் வாக்குகளைப் பெற்று ஆட்சிப் பொறுப்புக்கு வந்திருக் கிறீர்கள். ஆனால், தேர்தல் காலத்திலே சொன்னவைகளை நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறீர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று மின்சாரத்தைப்பற்றி சொல்ல வேண்டுமென்று சொன்னால், இங்கே நம்முடைய மின்சார அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இந்தத் துறையிலே பட்டதாரி ; படித்து பட்டம் பெற்றவர்கள் ; திறமை யானவர்கள் ; ஏற்கெனவே அமைச்சராக இருந்திருக்கிறார்கள். அதை நான் மறுக்கவில்லை. ஆனால், என்ன நிலைமை ? காங்கிரஸ் கட்சி ஆண்ட காலத்திலும், திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்ட காலத்தில் மின்சார தட்டுப்பாடு வந்ததுண்டு. ஆனால், இந்த $2\frac{1}{2}$ ஆண்டுகால ஆட்சியிலே இருந்தவர்கள் விவசாயத்திற்கு மின்சாரம் வரும் வரும் என்று சொல்லி, விவசாயிகள் பயிரிட்டு, இடையிலே மின்சாரம் வராமல், விவசாயப் பயிர்கள் எல்லாம் சாவியாகி, ஏராளமான நஷ்டம் அடைந்த வரலாறு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு உண்டு என்று சொன்னால் யாரும் மறுக்க மாட்டார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் மிக்க பணிவன்போடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்றுதான் வல்லுநர் குழு அமைக்கப்படும் என்று சொல்லியிருக் கிறீர்கள். அதைப்பற்றி விரிவாகச் சொல்லவில்லை. ஆனால், இப்போதுகூட ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னார்கள். எதிர்க் கட்சியிலே இருக்கின்றவர்கள், ஆளும் கட்சிக்கு அனுசரணையாக இருங்கள், மின் பில்லைக் கட்டுங்கள் என்று சொன்னார்கள். நானும் அதற்காக நீங்கள் ஆட்சியிலே இருக்கிறவரையில் பில்லைக் கட்டினேன். ஆனால், எங்கள் கிராமத்திலே பம்பு செட்டு வைத்திருக்கும் விவசாயிகள் மின்சார பில்லைக் கட்டக்கூடாது என்று சொல்கிறார்கள். அப்படிக் கட்டினால், எங்களுக்கும் சேர்த்து நீங்கள் கட்டுங்கள் என்று சொல்லுகின்ற நிலைமை வளர்ந்து

கொண்டிருக்கிறது. அதற்கு என்ன பிராயசித்தம், நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள்? என்பதைத் தான் நான் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன்.

அதேபோன்று, விவசாயிகள் கடனைத் தள்ளுபடி செய்வதாக முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பத்திரிகையிலே படித்தேன். கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத அத்தனை பேருக்கும் தள்ளுபடி செய்யப்படும் என்று சொல்லப்பட்டது. அதை யோசித்து நல்லபடி செய்யவேண்டும். ஒருமுறை நம்முடைய அன்றையதினம் கூட்டுறவுத் துறை அமைச்சராக இருந்தவர், இன்றையதினம் அமைச்சராக உள்ளவருடன் நான் ஒரு கமிட்டியிலே கிராமத்திற்கு சென்றிருந்தபோது, அங்குள்ள ஒரு பெரியவர் அரசாங்கம் போட்ட தவறான சட்டத்தினால் நான் கடன் வசூலிக்கப்படவில்லை என்று அமைச்சரிடம் சொன்னார். உடனே அமைச்சர் அவர்கள் பதிவாளரையும், செயலாளரையும் பார்த்தார்கள். இதை உணருகின்ற ஒரு சூழ்நிலை அன்றையதினம் அமைச்சர் அவர்களுக்கு ஏற்பட்டது. ஆகையால் சொல்வதைச் செய்யுங்கள், உங்களால் முடிந்ததைச் சொல்லுங்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் இன்னொன்றையும் சொல்லியாக வேண்டும். கிராமங்களிலே கூட்டுறவுத் துறையினர் கடன் வசூலிக்க வருகிறார்கள். ஆனால், நிச்சயமாக உங்கள் தலைவர் போய் கேட்டாலும் சரி, எங்கள் தலைவர் போய் கேட்டாலும் சரி, நாராயணசாமி நாயுடுவே போய் கொடுங்கள் என்று சொன்னாலும்கூட, அங்குள்ள விவசாயிகள் அந்த விவசாயக் கடனைக் கட்டத் தயாராக இல்லை. புரட்சித் தலைவர் அவர்களே போய்ச் சொன்னாலும், கலைஞர் அவர்களே போய்ச் சொன்னாலும் அவர்கள் கடனைத் திருப்பிக் கொடுப்பதாக இல்லை. காரணம் அவர்களால் கொடுக்க முடியவில்லை. ஆனால், கூட்டுறவுத் துறை அதிகாரிகள் என்ன செய்கிறார்கள்? கிராமங்களுக்கு வருகிறார்கள். வசூலிக்க வருகிறார்கள். இல்லாவிட்டால் ஜப்தி நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைதான் அங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. உடனே அங்குள்ளவர்கள் எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்து, அமைச்சரிடத்திலே இதைப் பற்றிச் சொல்லுங்கள் முதலமைச்சர் அவர்கள் இதைப்பற்றி உத்தரவு போட வேண்டாமா என்று சொல்லுகின்ற ஒரு சூழ்நிலைதான் இன்றைக்கு அங்கே இருந்து வருகிறது. அது மட்டுமல்ல, மின் பில்லைக் கட்டுவதற்கும் இன்றைக்கு விவசாயிகள் தயாராக இல்லை. எனவே, இன்றையதினம் இவைகளின்மேல் அக்கறை எடுத்துக்கொண்டு, இவைகளிலே கவனம் செலுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



(பிற்பகல் 12-10)

அதே போன்றுதான், 1978 ஆம் ஆண்டு இந்த மாமன்றத்தில் பேசினேன். அப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்—‘மின் இணைப்புத் தரவில்லை என்று உறுப்பினர்கள் பேசினார்கள். புரட்சிகரமான மின் இணைப்பைத் தருகிற திட்டத்தை இந்த அரசாங்கம் செயல்படுத்தப் போகிறது’ என்று சொன்னார்கள். நான் சந்தோஷப்பட்டேன். யார் ஆட்சியிலிருந்தாலும் அந்தக் காரியத்தைச் செய்தால் வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திருவண்ணாமலை மின் திட்டத்தில் மட்டும் அதிகாரிகள் சொல்லிய கணக்குப்படி 90 நாட்களில் மின் இணைப்புத் தருவோம் என்று சொல்லி 30,000 விவசாயிகளுக்கு பே நோட்டீஸ் கொடுக்கப்பட்டு, அதை நம்பி பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் கடனை வாங்கி மோட்டார் வாங்கி வைத்தார்கள். ஆயில் எஞ்சின் வைத்து பயிரிட்டவர்கள் கூட அதை விற்று மோட்டார் வாங்கி வைத்து விட்டார்கள். ஆனால் கடந்த இரண்டரை ஆண்டு காலமாக மின் இணைப்பு கிடைக்க முடியாத பயங்கரமான சூழ்நிலை என் பகுதியில் இருக்கிறது என்பதை அரசாங்கத்திற்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அவர்களுக்கு எப்பொழுது இணைப்புத் தரப் போகிறார்கள்?

நான் நம்முடைய மின்துறை அமைச்சருக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் ஒவ்வொரு ஆண்டும் கடுமையான மின் பஞ்சம் ஏற்படுகிறது. ஏராளமான ஏக்கர் பயிர் காய்ந்து விடுகிறது. அங்கு ஒரு நாயுடுமங்கலம் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்கும் பணி காலதாமதமாகிக் கொண்டே வருகிறது. விவசாயிகளுடைய பயிர் காய்ந்து விடாமல் பாதுகாக்க வேண்டிய பெரும் பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது.

இன்றையதினம் நீங்கள் பெருமையாகச் சொல்லிக் கொள்கிறீர்கள்—இந்த ஆட்சிக் காலத்தில் உணவுத் தட்டுப்பாடே இல்லையென்று சொல்லிக் கொள்கிறீர்கள். ஆனால் எதிர்காலத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படுகிற நிலைமையை நீங்கள் சமாளித்தாக வேண்டும். காரணம், மின்சாரத் தட்டுப்பாடு காரணமாக வெல்லத்தின் விலை உயர்ந்திருக்கிறது. ஏராளமான விவசாயிகள் கரும்பு பயிரிட ஆரம்பித்திருக்கிறார்கள். நெல்லுக்கு அதிகமான மின்சாரம் தேவைப்படுகிறது. மணிலா போன்ற புஞ்சை தானியங்களுக்கு இந்த நிலை இல்லை. ஆகவே, மின் பற்றாக்குறை காரணமாக எதிர்காலத்தில்

உணவு உற்பத்தி பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்றையதினம் அந்த நிலையை உதாசீனப்படுத்தி விட்டால் அப்படிப்பட்ட பயங்கரமான சூழ்நிலை ஏற்படும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பல்வேறு உறுப்பினர்கள் சொன்னார்கள். டீசல் விலை உயர்ந்துவிட்டது. கலப்பு உரம், யூரியா போன்றவற்றின் விலை உயர்ந்துவிட்டது. நெல் பயிரிட்டால் கட்டுப்படியாகவில்லை. என்ன செய்யப் போகிறார்கள் ? மாற்று நடவடிக்கை என்ன என்று இப்போது சொல்லவில்லை என்று சொன்னாலும் கூட, வருகிற பட்ஜெட் உரையில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்களை அரசாங்க ஊழியர்களாக ஏற்றுக் கொண்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இது உண்மையிலேயே ஒரு கண்துடைப்பு. தனிப்பட்ட ஆசிரியர்களை அரசாங்க ஊழியர்களாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலிருந்து கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் அரசாங்கத்தில் பணியாற்றுவதுபோல்தான் கருதப்படுகிறார்கள். அவர்களை அரசாங்க ஊழியர்களாக ஆக்கியது வெறும் கண்துடைப்பே தவிர ஆசிரியர்களுக்குச் செய்த பெரிய நன்மையாகக் கருத முடியாது.

வனத் துறை அமைச்சர் இங்கே இல்லை. அவர்கள் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன். என்னுடைய பகுதியில் சந்தனக் கட்டை கடத்தப்படுவது நாட்டிலே சாராயம் காய்ச்சப்படுவது மாதிரி கடத்தல் சாதாரணமாக நடந்து கொண்டிருக்கிறது. யார் அவ்வாறு கடத்து கிறார்கள் என்று அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்படியே சென்றால் பத்தாண்டு காலத்தில் சந்தன மரம் என்பதே மறந்துபோய் எக்சிபிஷனில் போய்ப் பார்க்கவேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும்.

ஊராட்சி ஒன்றிய தேர்தல் வர இருக்கிறது என்று கடந்த இரண்டரை ஆண்டு காலமாகச் சொல்லி வருகிறார்கள். 18 வயது வந்தவர்களுக்கு ஓட்டுரிமை வழங்கப் போவதாகக் கூறியிருக்கிறார்கள். தாராளமாகத் தாருங்கள். விரைவாகச் செய்யுங்கள். இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங் களுடைய, நகராட்சி மன்றங்களுடைய நிர்வாகம் அப்படியே ஸ்தம்பித்து இருக்கின்றது. கிராமங்களிலே விளக்குகள் எரிவது இல்லை, கிராமங்கள்



இருண்டு கிடக்கின்றன. மேல்நீர் தேக்க தொட்டி, தரை நீர் தேக்கத் தொட்டி யாவும் சரியாக பராமரிக்கப்படுவது இல்லை. ஆகவே அவைகளை கவனிப்பதற்காக, விரைவிலே ஊராட்சித் தேர்தல்களையும் நகராட்சி மன்றங்களின் தேர்தல்களையும் நடத்துங்கள், விவசாயிகளுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள் என்று சொல்லி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.

*** திரு. மு. ஜான் வின்சென்ட் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற வாய்ப்பை எனக்குக் கொடுத்த நாங்குநேரித் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், இந்த வாய்ப்பை எனக்கு நல்கிய புரட்சித் தலைவர் அவர்களுக்கும் நான் முதற்கண் இதயப் பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த சட்டமன்றக் கூட்டம் நடந்த நேரத்திலே திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும் காங்கிரஸ் கட்சித் தலைவர்களும், அப்போது நடை பெற்ற பாராளுமன்றத் தேர்தலிலே அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் மக்களால் வீழ்த்தப்பட்ட காரணத்தால் உடனே ராஜிநாமா செய்யவேண்டுமென்று வலியுறுத்தினார்கள். அதன் பின்னாலே அவர்களே டெல்லிக்குச் சென்ற பின்னர் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே அவர்கள் பேசுகின்ற நேரத்திலே எம்.ஜி.ஆர். அடிக்கடி டெல்லிக்கு காவடி எடுக்கிறார் என்று கூறினார்கள். ஆனால் மதிப்பிற்குரிய புரட்சித் தலைவர் அவர்கள், மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று காவடி எடுத்தார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தினரும், காங்கிரஸ் கட்சிக்காரர்களும் டெல்லிக்குச் சென்று, அம்மையாரின் காலடியிலே விழுந்து சட்டமன்றத்தைக் கலைக்கச் செய்தார்கள். புரட்சித் தலைவர் யார் காலடியிலும் விழவில்லை. அதற்குப் பின்னாலே நடந்த சட்டமன்றத் தேர்தலிலே மக்கள் ஒட்டுமொத்தமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் அமைய வேண்டுமென்று முடிவெடுத்து, 1977 ஆம் ஆண்டிலே நடைபெற்ற தேர்தலின்போது கிடைத்த இடங்களைவிட கூடுதலாக இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுத்து அனுப்பி யிருக்கிறார்கள். நான் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், தமிழகத்திலே உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் ராஜிநாமா செய்துவிட்டு மீண்டும் தேர்தலைச் சந்திக்கத் தயாரா என்று கேட்க விரும்புகிறேன். நான் இதை ஏன் கூறுகிறேன் என்றால் பாராளுமன்றத் தேர்தலிலே வாக்குகளைச் சேகரிக்க திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மரியாதைக்குரிய கலைஞர் அவர்களும் இந்திரா காந்தி அவர்களும் கூட்டத்தில் பேசுகின்ற நேரத்திலே

மீண்டும் எங்கள் கூட்டணி பதவிக்கு வந்தால் திருச்செந்தூர் பாராளுமன்றத் தொகுதியைச் சேர்ந்த நாங்குநேரி தொகுதியில் வள்ளியூரில் பேசுகின்றபோது நாங்குநேரி சட்டமன்றத் தொகுதியினுடைய கோரிக்கைகளை, அந்த மக்கள் கேட்கின்ற அணைக்கட்டுத் திட்டங்களை நிறைவேற்றுவோம் என்று சொன்னார்கள். மக்கள் சில கோரிக்கைகளை அப்போது வைத்தார்கள், கொடுமுடியாறு, பச்சைமலையாறு, வடமலையான்கால் பாசனம் ஆகிய திட்டங்களையெல்லாம் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டார்கள். அப்போது அம்மையார் பேசுகின்ற நேரத்திலே கூறினார்கள், நீங்கள் எங்கள் கூட்டணிக்கு வாக்களித்தால் நிச்சயமாக அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவோம் என்று சொன்னார்கள். அதன் பின்னால் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் அந்த அம்மையாருக்கு அந்தத் திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்று கடிதம் எழுதினார்கள். அதற்கு அந்த அம்மையார் பதில் எழுதியிருக்கிறார்கள், நீங்கள் சொல்லியுள்ள கோரிக்கைகள் எல்லாம் மத்திய அரசு செய்கின்றவை அல்ல, வரக்கூடிய மாநில அரசாங்கம்தான் செய்ய வேண்டும் என்று எழுதியிருக்கிறார்கள். இப்படி வாக்குறுதிகளைக் கூறிவிட்டு வெற்றி பெற்ற பிறகு அதனை தமிழக அரசுதான் செய்யவேண்டுமென்று இப்போது கூறியிருக்கிறார்கள். எனக்கு முன்னாலே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்து நண்பர்கள் சொன்னார்கள், எதையெடுத்தாலும் வாக்குறுதியை காப்பாற்றவில்லை என்று சொன்னார்கள். நான் தெரிவித்துக் கொள்கிறேன். மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் 1979 ஆம் ஆண்டிலே கவர்னர் உரையிலே குறிப்பிட்டதைப்போல், அனைத்து கிராமங்களுக்கும் டவுன் பஸ் வசதி செய்து கொடுப்போம் என்று சொன்னார்கள்—செய்வார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் காலத்திலே கன்னியாகுமரி மாவட்டத்திலே நாகர்கோவிலிலே உள்ள ராணித் தோட்டத்திலே டயர்கள் எரிக்கப்பட்ட சம்பவம்பற்றி பத்திரிகையிலே எல்லாம் வந்ததைப் பார்த்தோம். பல கோடிக் கணக்கான ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்ட நிலைமை மாறி இன்றைக்கு அந்தக் கார்ப்பொரேஷன்கள் எல்லாம் 1979-80 ஆம் ஆண்டிலே போக்குவரத்துத்துறை அமைச்சராக இருந்தவருடைய நிர்வாகத்திலே 7½ கோடி ரூபாய் லாபம் பெறக்கூடிய நிலைமைக்கு வந்திருப்பது மரியாதைக்குரிய புரட்சித் தலைவரின் நல்ஆட்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

அதுபோல விவசாயத் துறையை எடுத்துக் கொள்வோமேயானால், பல பெரிய அணைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு, சிறிய சிறிய அணைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டுமென்கின்ற நேரத்தில், அந்தத்



திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு விடுமோ என்ற எண்ணத்தில் சட்டமன்றம் கலைக்கப்பட்டு விட்டது. என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் மக்களால் பல ஆண்டுக்காலமாகக் கோரிக்கை விடப்பட்டு, 1974 ஆம் ஆண்டு முதல் திராவிட முன்னேற்றக் கழக அரசினிடத்திலேயும், 1975-76 ஆம் ஆண்டிலே அன்றையதினம் ஜனாதிபதி ஆட்சி இருந்த நேரத்திலேயும் மக்களால் விடுக்கப்பட்ட அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றாத அளவிலே, இன்றையதினம் அங்குள்ள மக்கள் அம்மையாரால் நிறைவேற்றப்பட முடியா விட்டாலும், டாக்டர் கலைஞர் அவர்களால் நிறைவேற்றப்பட முடியா விட்டாலும், நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையிலே அமைந்திருக்கின்ற அரசு நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கிறார்கள். கொடுமுடியாறு அணைத் திட்டம், பச்சையாறு அணைத் திட்டம், மற்றும் ஒவ்வொரு கால்வாய்க்கும் நீர் வழங்கக்கூடிய அளவில் இருக்கின்ற மணிமுத்தாறு பாசனக் கால்வாய்த் திட்டம் ஆகியவற்றை நிறைவேற்றுவார்கள் என்று நம்பி மக்கள் எனக்கு வாக்களித்திருக்கிறார்கள்.

1980 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20 ஆம் தேதி ஒவ்வொரு கிராமத்திற்கும் டவுன் பஸ் விட வேண்டுமென்று மக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க மரியாதைக்குரிய புரட்சித் தலைவரவர்கள் அனைத்துக் கிராமங்களுக்கும் டவுன் பஸ் விட வேண்டுமென்ற நல்லெண்ணங்கொண்டு இருந்த நேரத்தில், 17 ஆம் தேதி சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டார்கள். இடைப்பட்ட மூன்றரை மாத கால ஜனாதிபதி ஆட்சியின்பொழுது எங்களது பாராளுமன்றத் தொகுதியைச் சேர்ந்த உறுப்பினர் கே. டி. கோசல்ராம் பலவழிகளிலேயும் அரசு அதிகாரிகளை மிரட்டி, அங்கு திட்டமிட்டிருந்த ரூட்டுகளிலே பஸ்களை விடாத அளவிற்குப் பல இடையூறுகளைச் செய்திருக்கிறார்கள். அதிகாரிகளை மிரட்டியதன் காரணமாக அங்கே பஸ்கள் ஓடவில்லை. ஆகவே, மரியாதைக்குரிய தமிழக அரசை நான் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன், இந்த இடைப்பட்ட மூன்றரை மாத ஜனாதிபதி ஆட்சிக்காலத்தில் அரசு அதிகாரிகளை மிரட்டி, பயமுறுத்தி, மீண்டும் நாங்கள்தான் ஆட்சிக்கு வருவோம் என்று கூறி அதன்மூலம் அரசு அதிகாரிகள் செயல்படாத நிலையில் வைத்திருந்தார்கள். அந்தப் பகுதி மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த அனைத்துக் கிராமங்களுக்கும் மீண்டும் டவுன் பஸ்களை விடுவதற்கு உடனடியாக உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல, மின்சாரத்தைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, 1979 ஆம் ஆண்டு—பத்திரிகையிலே பார்த்திருப்போம், கேரள அரசிடமிருந்து 35 இலட்சம்

[திரு. மு. ஜான் வின்சென்ட்] [1980 ஜூன் 27

மெகாவாட் யூனிட் மின்சாரம் பெற்றிருந்தது, ஆனால் ஜனாதிபதி ஆட்சி நடைபெற்ற மூன்றரை மாத காலத்தில், அது 18 இலட்சம் மெகாவாட்டாகக் குறைக்கப்பட்டது. அன்று, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் விவசாயப் பெருங்குடி மக்கள்மீது நல்லெண்ணம் கொண்டு மின்சாரத்தை அதிகமாக வாங்கியது. ஆனால் இன்று நாம் பார்த்தால், இடைப்பட்ட மூன்றரை மாத ஜனாதிபதி ஆட்சி காலத்தில், அது குறைக்கப்பட்டிருக்கிறதேயொழிய அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் குறைக்கப்படவில்லை.

அடுத்து, இப்பொழுது நடைபெற்ற தேர்தலைப் பொறுத்தவரையில், எங்கள் தொகுதியைப் பொறுத்தவரையில், நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திரா காங்கிரஸும்தான் பதவிக்கு வருவோம் என்று கருதி, கிட்டத்தட்ட 2,800 அரிசனப் பெருமக்களை—வாக்காளப் பெருமக்களை வாக்களிக்க முடியாத அளவிற்கு இ. காங்கிரஸார் தடை செய்து, ஆயுதங்களால் தாக்கி நிறுத்தி விட்டார்கள். ஆகையால் இப்படிப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கும் அளவிற்கு வருகின்ற எந்தத் தேர்தலாக இருந்தாலும் சரி, அந்தத் தேர்தல்களில் அந்தந்தப் பகுதிகளிலேயே வாக்குச் சாவடிகள் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் நாங்குநேரி தொகுதியில் ஐயந்தாங்கல் சேரி, எழாங்கால் சேரி, பட்டரெட்டிவிளை, மலையன்குடி ஆகிய இடங்களில் ஏழைமக்கள் வாக்குச் சாவடிகளுக்குச் சென்று வாக்குப் போட முடியாத நிலை ஏற்பட்டது. இதற்கு இ. காங்கிரஸ்காரர் காரணம். எனவே, பட்டரெட்டிவிளையில் வாக்குச்சாவடி அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குடிநீர்ப் பிரச்னையைப பொறுத்தவரையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு 5,000 கிராமங்களுக்கு மேலாகக் குடிநீர் கொடுக்க வேண்டுமென்று திட்டம் தீட்டியிருந்தது. ஆனால் இடைப்பட்ட மூன்றரை மாத ஜனாதிபதி அரசில் அதிகாரிகள் சரியாகச் செயல்படவில்லை. எடுத்த திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை. இன்று எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு இடத்திலும் அடிப் பம்புகள் சரியாக இயங்கவில்லை. அப்படிப்பட்ட இடங்களில் அரசு அதிகாரிகள் உடனடியாகச் செயல்பட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1980 ஜூன் 27] [திரு. மு. ஜான் வின்சென்ட்]

தாலிக்குத் தங்கம் எங்கே என்று இங்கே மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் கேட்டார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலும், நெல்லை மாவட்டத்திலும் மரியாதைக்குரிய கலைஞர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில், தாலிக்குத் தங்கம் எங்கே, ராமாயி வயதுக்கு வந்து விட்டாள் என்று சுவரிலே எழுதியிருந்த வாக்கியங்களைப் பார்த்துவிட்டு, ராமாயி வயதுக்கு வந்துவிட்டாள், நான் வயதுக்கு வரவில்லை நான் வயோதிகனாகிவிட்டேன் என்று கூறினார். ராமாயிக்கு மாப்பிள்ளை தேடவில்லை, தாலிக்கு தங்கம் தான் எங்கே என்று கேட்டோம். ஆனால், 1979 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திலே திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் கட்சியும் என்ன பறைசாற்றினார்கள்? நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ரூ. 500-க்கு தங்கத்தைக் கொடுப்போம், தாலி கொடுப்போம் என்று அவர்கள் கூறிய அதே தங்கத்தைப்பற்றி நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலே நாங்கள் கேட்டோம், தாலிக்குத் தங்கம் கொடுப்பதாகக் கூறினீர்களே, இன்று நிலைமைகள் என்ன என்று நாங்கள் மட்டும் கேட்கவில்லை, மக்கள் அதை விரிவாக, தெளிவாக உங்கள் மத்தியில் கேட்டார்கள் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மக்களுக்கு வாக்குறுதி கொடுத்தீர்களானாலும், உங்களாலே அதைச் செய்ய முடியவில்லை. நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின் போது . . .

**திரு. அ. ரகுமான்கான் :** பாய்ண்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சி உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற பொழுது, ராமாயி வயதிற்கு வந்துவிட்டாள் சம்பந்தமாக, தாலிக்குத் தங்கம் சம்பந்தமாக, கலைஞர் பேசிய பேச்சை விமர்சித்தார். அவைகளெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம், என்னுடைய பேச்சின்பொழுது கூடச் சொன்னேன், அகில இந்திய அண்ணா தி.மு.க. ஆட்சிக்கு வந்தால்—தேர்தல் அறிக்கையிலே தெளிவாகச் சொல்லியிருக்கிறீர்கள், சர்க்காரே தாலிக்குத் தங்கம் தரும், அதுவும் 22 காரட் தங்கம் தரும் என்று சொன்னீர்கள். அதற்கு என்ன பதில் என்று தான் நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதிலே தெளிவு இல்லாமல் பேசக்கூடாது. அதற்கு என்ன பதில் என்று தான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. மு. ஜான் வின்சென்ட் :** பாராளுமன்றத் தேர்தலிலே அவர்கள் கொடுத்த வாக்குறுதியைத்தான் நான் கூறினேனே தவிர, வேறொன்றும் அல்ல. துணைத் தலைவரவர்களே, இங்கே பலபேர் பலவிதமாக பேசுகிற நேரத்தில், மரியாதைக்குரிய புரட்சித் தலைவருடைய ஆட்சிக்கு படியாதவர்கள் வாக்குகள்தான் உள்ளனவே தவிர, படித்தவர்கள் வாக்குகள் அவருக்கு இல்லையென்று பறைசாற்றினார்கள். ஆனால், பட்டதாரி தொகுதி தேர்த

[திரு. மு. ஜான் வின்செண்ட்] [1980 ஜூன் 27

-வின் முடிவை நாம் பார்த்தோமானால், 4 எம்.எல்.சிக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். படியாதவர்கள் மட்டுமல்ல, படித்தவர்கள் அனைவருடைய வாக்குகளும் புரட்சித் தலைவர் ஆட்சிக்குத்தான் உண்டு என்பதைத் தெள்ளத் தெளிவாகக் காண முடிகிறது. 2½ ஆண்டுகாலமாக ஒழுங்காக நடைபெற்ற ஒரு அரசு கலைக்கப்பட்ட காரணத்தினால் பல திட்டங்கள் நிறுத்தப்பட்டன. ஆகவே, அப்படிப்பட்ட திட்டங்களை மிக விரைவில், மதிப்பிற்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் நிச்சயமாக செய்து முடிப்பார்கள் என்று மக்கள் நம்புகிறார்கள். மக்கள் நம்பிய காரணத்தினாலே தான் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலே மீண்டும் புரட்சித் தலைவர் அரசையே தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள்.

மத்தியிலே சில சம்பவங்கள் நடந்தன. இடைப்பட்ட 3 மாத காலத்திலே, தி.மு.க. பெரியவர்களும், இந்திரா காங்கிரசைச் சேர்ந்த பெரியவர்களும், அதிகாரிகளை, குறிப்பாக, போலிஸ் அதிகாரிகளை மிரட்டிய காரணத்தினாலே, இன்று வரை எனது தொகுதியைப் பொறுத்தமட்டில், அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தொண்டர்கள் தி.மு.க. தொண்டாகளாலும் இந்திரா காங்கிரஸ் தொண்டர்களாலும் அடிக்கப்படுகிறார்கள். என் தொகுதியில் இருக்கிற போலீஸ் அதிகாரிகளும் மீண்டும் அனைத்திந்திய அண்ணா திமு.க தொண்டர்களை அடிப்பது மட்டுமல்ல, பொய்யான கேஸ்களைப் போடுகின்ற காரணத்தாலே, இதுகுறித்து அரசு உடனடியாக நிர்வாக நடவடிக்கை எடுப்பதோடு மாத்திரமல்லாமல், அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தொண்டர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்றும் மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி மக்கள் மத்தியில் எதிர் அணியினர் பல தொல்லைகளை அளித்தாலும் கூட, மீண்டும் புரட்சித் தலைவர் ஆட்சி வரவேண்டும், அந்த ஆட்சியின் மூலமாக மக்கள் மறுமலர்ச்சி அடையவேண்டும் என்று மக்கள் விரும்பிய காரணத்தினால், 2½ ஆண்டு காலத்திலே விடப்பட்ட திட்டங்களை, புரட்சித் தலைவர் அவர்கள் செய்து கொடுப்பார்கள், செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, கிடைத்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவித்து, விடை பெறுகிறேன், வணக்கம், நன்றி.

(பிற்பகல் 12-30)

**திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் :** மிஸ்டர் டிப்டி ஸ்பீக்கர் சார், கனம் ஆளுநர் அவர்கள் இந்த சபையின் முன் ஆற்றிய உரையின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற நான் ஆசைப்படுகிறேன். அவர்கள் பொதுவாக மாநிலத்தின் பிரச்சினைப் பற்றி பேசினாரே ஒழிய, முக்கியமான பல பிரச்



1980 ஜூன் 27] [திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்]

சினைகளில் அவர் கருத்துத் தெரிவிக்கவில்லை என்று என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் முதலிலே சொல்லிக் கொள்ள விரும்புவது, ஆட்சியாளர்கள் கொண்டு வந்திருக்கிற எல்லா நன்மை தருகின்ற திட்டங்களுக்கு நானும் எனது கட்சியினரும் முழு ஒத்துழைப்பைக் கொடுப்போம் என்ற உறுதியினைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதுமட்டும் அல்ல, எங்களுடைய சிறந்த யோசனைகளையும், அதற்கு மாற்றுத் திட்டங்கள் இருந்தாலும் அவைகளையும் கொடுத்து, எப்படி எப்படி உதவி புரியவேண்டுமோ அப்படி உதவி புரிவோம். ஒரு ஆளும் கட்சி அங்கத்தினர் சொன்னார், தாங்கள் சென்ட்ரல் கவர்ன்மென்டுக்குச் செல்லும்போது, அதற்கு ஒத்துழைக்கவேண்டும் என்று சொன்னார். அது சென்ட்ரல் கவர்ன்மென்டு பாலிசியைப் பொறுத்திருக்கிறது. அகில இந்திய பாலிசியைப் பொருத்திருக்கிறது. அதற்காக, அவர்கள் அந்தப் பாலிசியில் எல்லா மாகாணங்களுக்கும் ஒன்றாகத்தான் செய்வார்களே தவிர, ஒரு மாநிலத்திற்கு மட்டும் சலுகை காட்ட மாட்டார்கள் என்பது என்னுடைய தாழ்ந்த அபிப்பிராயம். நீங்கள் போட்டிருக்கிற எல்லா திட்டங்களையும், எது சாத்தியமோ, எது முடியுமோ அதைத் தீவிரமாக செய்யவேண்டும். அதற்கு பூரா ஒத்துழைப்பையும் கொடுப்போம். பாரா 17-ல் சொல்லியிருக்கிறீர்கள். "தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளைப் பற்றி மன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவர். தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக சிறப்பு ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து அரசு விரைவில் செயல்படுத்தும்" என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் அதை முற்றிலும் வரவேற்கிறேன். நாங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறோம். அதேகாலத்தில் அவர்கள்கூட இருக்கின்றவர்கள்—மைனாரிட்டி கம்யூனிட்டிகள்—முஸ்லீம்கள், கிருத்துவர்கள் அவர்களுக்கும் இந்தச் சலுகையைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். அவர்கள் வாழ்க்கையில் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு எந்தவிதமான முன்னேற்றத்திற்கும் வழியில்லை. அந்தச் சலுகையை அவர்களுக்கும் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சார், கவர்னர் அவர்கள் உரையில் விலைவாசி ஏற்றம் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. விலைவாசி ஏறிக்கொண்டே போய்க்கொண்டிருக்கிறது. உணவுப் பொருள்கள் மட்டுமல்ல, மற்ற எல்லாப் பொருள்களுடைய விலைகளும் ஏறிப் போய்க் கொண்டே இருக்கிறது. அதை எவ்வளவு சீக்கிரத்தில் கட்டுப்படுத்தவேண்டுமோ அவ்வளவு சீக்கிரத்தில் கட்டுப்படுத்தவேண்டும். கனம் முதல் அமைச்சர் அவர்கள் பிரஸ் கான்பரன்சிலே சொன்னார் என்று நினைக்கிறேன். விலைவாசியைக் கட்டுப்படுத்த முழுமூச்சுடன் பாடுபடுவேன்

என்று சொன்னார். இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை, என்று தெரிகிறது. உடனடியாக நடவடிக்கைகளை எடுத்து, கட்டுப் படுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே சமயத்தில் விலைவாசியை எப்படிக் கட்டுப்படுத்தவேண்டும் என்று சொன்னால், உற்பத்திப் பொருள்களை மிகவும் அதிக அளவில் உற்பத்தி செய்யவேண்டும். அந்த உற்பத்தி செய்கின்றவர்களுக்கு எந்தவிதமான தடங்கள்கள் இருந்தாலும், அதை அகற்றுவதிலே அரசாங்கம் மிகவும் அக்கறை கொள்ளவேண்டும். அவர்களுக்கு ஏற்படுகிற முக்கியமான தடங்கல் பவர் ஷார்ட்டேஜ், மின்சார ஷார்ட்டேஜ். அதை நீங்கள் மிகவும் அவசியமாக நீக்க வேண்டும். நம் மாநிலத்தில் பெரிய தெர்மல் ஸ்டேஷன், ஹைடல் ஸ்டேஷன் இருக்கின்றன. தெர்மல் ஸ்டேஷன் சரிவர வேலை செய்யவில்லை என்பது தெரிந்து கொண்ட உண்மை. என் சரிவர வேலை செய்யவில்லை என்று கேட்டால் சரியான விடையும் இல்லை. நான் மின்சார அமைச்சர் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இதைப்பற்றி பரிசோதிக்க ஒரு சிறந்த "நிபுணர் குழு" ஏற்படுத்துங்கள். அவர்கள் நிபுணர்களாக இருக்க வேண்டும். நம் மாநிலத்தில் மட்டுமல்லாமல், பிற மாநிலங்களில் இருந்தும் சிறந்த நிபுணர்களைக் கொண்டு ஆராய்ச்சிக் குழு ஒன்றைப் போடுங்கள் அவர்கள் 3, 4 மாதங்களுக்குள் ஒவ்வொரு தெர்மல் ஸ்டேஷனாகப் போய்ப் பார்த்து, என்னென்ன கோளாறுகள் இருக்கின்றன ஏன் மேக்சிமம் புரொடக்ஷன் கொடுக்கிறதில்லை என்று ஆராய்ந்து அதற்கு என்னென்ன பரிகாரங்கள் செய்ய வேண்டுமோ அத்தனையும் உடனே செய்ய வேண்டும் அதன் அடிப்படையில் மின்சாரத்தை மேக்சிமம் புரொடக்ஷன் பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் குழுவின் ரெகமன்டேஷன் அடிப்படையில் அரசாங்கம் காரியங்களைச் செய்ய வேண்டும்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். எண்ணூர் பக்கத்தில் பெரிய மின்சார உற்பத்திச்சாலையும் இதர தொழிற்சாலைகள் இருக்கின்றன. இவைகளுக்குத் தேவையான கோல் (நிலக்கரி) கொண்டு வருவதில் மிகுந்த கஷ்டங்கள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. ஆகவே, எண்ணூர் பகுதியில் ஒரு சிறிய துறைமுகம் ஏற்படுத்தலாம் என்கிற ஒரு ஆலோசனையை நான் இந்த அவை முன் வைக்க விரும்புகிறேன். சென்னைத் துறைமுகத்திற்கு வந்து இறங்கக்கூடிய நிலக்கரியை எண்ணூர் பகுதிக்கு எடுத்துச் செல்வதில் உள்ள போக்குவரத்துச் சிரமங்கள் மற்ற செலவுகள் இதனால் குறையும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். 10 ஆண்டுகளுக்கு முன்பாகவே எண்ணூர் பகுதியில் ஒரு சிறிய துறைமுகம்





கட்டுவது குறித்து ஆலோசிக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கிறது என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே, அத்தகைய ஒரு முயற்சியில் ஆட்சியாளர்கள் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மின்சாரப் பற்றாக்குறை அதிகம் இருக்கிறது. பற்றாக்குறை இருப்பதால் பல்வேறு தொழில் அதிபர்கள் ஜெனரேட்டிங் செட் வைத்துக்கொண்டு மின் உற்பத்தி செய்கிறார்கள். அதன் காரணமாக அவர்கள் மின் உற்பத்தி செய்வதற்கு கிட்டத்தட்ட 1.33 பைசா ஒரு யூனிட் செலவாகிறது. அதாவது, மின்சார போர்ட் சப்ளை செய்யும் மின்சாரத்திற்கு ஆகும் செலவை விட மூன்று மடங்கு அதிகம் செலவாகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அந்த ஜெனரேட்டிங் செட்டிற்குத் ஆயில் தேவைப்படுகிறது. அது கிடைப்பதில் சிரமம் இருக்கிறது. இந்த மாதிரி பல சிக்கல்கள் அவர்களுக்கு இருக்கின்றன. மின்சாரம் இல்லை என்று சொன்னால் எந்தப் பொருள்களையும் உற்பத்தி செய்ய முடியாது. அதனால் உற்பத்தி பாதிக்கப்படும். விவசாயிகளும் கஷ்டத்திற்கு உள்ளாக்கப்படுவார்கள். அது மட்டுமல்ல, சிறு தொழிலும் பாதிக்கப்படும். ஆகவே, இந்த மின் உற்பத்தியை அதிகரிக்க அரசாங்கம் அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடலூர், நாகப்பட்டினம் போன்ற துறைமுகம் உள்ள பகுதியில் பவர் ஸ்டேஷன் ஆரம்பிப்பதன் மூலம் 50 மெகாவாட், 100 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் மின் நிலையங்கள் அமைக்கலாம்— அந்தந்த பக்கங்களுக்குத் தேவையான மின்சாரத்தையும் எடுத்துக்கொள்ள முடியும், அந்தந்த மாவட்டத்திற்குத் தேவையான மின்சாரத்தையும் எடுத்துக் கொள்ள முடியும். மீதி இருக்குமானால் பொது கிரிட்டில் சேர்த்து பல்வேறு பகுதியில் உபயோகித்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிச் செய்தால் அந்தந்த மாவட்டத்திற்குத் தேவையான மின்சாரத்தை அந்த மாவட்டத்திலேயே கூட உற்பத்தி செய்து கொள்கிற வாய்ப்பு ஏற்படும் என்பதையும் கூறிக்கொள்கிறேன். ஆகவே, அரசாங்கம் இந்த யோசனையை ஆழ்ந்த கவனத்தில் எடுத்துக்கொண்டு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்டஸ்டிரியல் டெவலப்மென்ட் பற்றி கவர்னர் உரையில் விவரமாகப் பேசவில்லை என்றாலும்கூட அதை அவர்கள் டச் செய்து பேசியிருக்கிறார்கள். எப்படி இன்டஸ்டரீஸ் வளரவேண்டும் என்று சொன்னால், பெரிய தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்கு வேண்டிய சூழ்நிலையை ஆட்சியாளர்கள் உருவாக்கிக் கொடுக்கவேண்டும். இந்த அறிக்கையில் கூறியிருக்கிறார்கள், 1969 ஆம் ஆண்டு இறுதியில் மத்திய அரசு பல்வேறு மாநிலங்களில் செய்த மொத்த

[திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப்] [1980 ஜூன் 27

முதலீடான 3,463 கோடி ரூபாயில், தமிழ் நாட்டில் செய்யப்பட்ட முதலீடு 262 கோடி ரூபாயாக அதாவது சுமார் 8 சதவீதமாக இருந்தது. 1979 ஆம் நிதி ஆண்டு முடிவு வரையிலான மொத்த முதலீடான 15,668 கோடி ரூபாயில், தமிழ் நாட்டில் செய்யப்பட்ட முதலீடு 616 கோடி ரூபாயாக அதாவது 4 சதவீதமாகக் குறைந்து விட்டது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இது ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம் தான். ஆனால் எந்த ஆட்சி காலத்தில் சென்டிரல் கவர்மென்டில் இது நடந்தது, காங்கிரஸ் ஆட்சி காலத்திலா, அல்லது ஜனதா ஆட்சி காலத்திலா என்பதை நீங்கள் எனக்குத் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, இந்த அரசாங்கம் சென்டிரல் கவர்ன்மென்டிற்கு எத்தனை ஸ்கீம்களுக்கு பிளான் போட்டு அனுப்பினார்கள், அதற்கு விவரம் என்ன என்பதை அறிய நான் விரும்புகிறேன். அப்படி (project report) கொடுத்து இருந்தது அதை மத்திய சர்க்கார் அங்கீகரிக்க வில்லையா ?இது குறித்த கருத்துக்களை இந்த சபை முன் வைக்கவேண்டும் என்று நான்கேட்டுக்கொள்கிறேன்.

பெரிய தொழில்கள் வந்தால் தான் நம்முடைய நாட்டில் வேலை வாய்ப்பு அதிகரிக்க முடியும். உற்பத்தி பெருக முடியும் என்பது உண்மை. ஆனால் இங்கே உள்ள அரசு ஸ்கீம் கொடுக்கமல், மத்திய அரசாங்கம் இங்கே பெரிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று சொன்னால் அது எந்த வகையில் முடியும் என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன். நாம்

(பிற்பகல் 12-40)

இங்கிருந்து ஸ்கீம்களை கொடுத்து, அதைத் தொடர்ந்து ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பதற்கு வற்புறுத்தி வரவேண்டும். அப்படி இருந்தும்கூட இந்திய அரசு கொண்டுவரவில்லை என்றால் அவசியம் அதை ஆழ்ந்து கவனிக்க வேண்டும். அதைப்பற்றி இன்டஸ்டிரீஸ் மினிஸ்டர் ஒரு குறிப்பைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். If the Government have not taken steps, I can assure the House, we, as Congress (I) party, will certainly take steps to see that these measures are carried out. என்னுடைய அபிப்பிராயம் பெரிய, பெரிய இன்டஸ்டிரீஸ் சரிவர நடக்க வில்லை. காரணம் இன்டஸ்டிரியல் அன்ரெஸ்ட் இருக்கிறது. தொழிலாளர் களுக்கும் தொழில் அதிபர்களுக்கும் அன்ரெஸ்ட் இருக்கிறது. அதை உடனடி



1980 ஜூன் 27] [திரு. கே. எஸ். ஜி. ஹாஜாஷெரீப்]

யாகத் தீர்க்கவேண்டும். தாமதம் ஏற்பட்டால் அவசியம் கஷ்டப்படுகிறவர்கள் தொழிலாளர்கள்தான். இன்னும் அதைச் சார்ந்த புரடக்ஷனும் பாதிக்கும். இரண்டு, மூன்று தொழிற்சாலைகள், 8, 9 மாதங்களாக மூடிக்கிடந்தன. அவை மூடி இருந்தபோது தொழிலதிபர்கள் இவைகளைத் திறக்க வேண்டும் ; போலீஸ் பாதுகாப்பு கொடுங்கள் ; எல்லாவித வசதிகளும் செய்து கொடுங்கள் என்று கேட்டும் அரசாங்கம் கொடுக்கவில்லை என்றும், ஆனால் ' அட்வைசர்ஸ் ரீஜிம் ' வந்தவுடன் இன்டஸ்டிரீஸ் திறக்கப்பட்டு ப்ரொடக்ஷன் சரியாக வந்து கொண்டிருப்பதாகவும் நான் கேள்விப்படுகிறேன். இது மிகவும் கவலைப்பட வேண்டிய விஷயம். இந்தவகையிலே நாம் இடம்கொடுத்து, தாமதம் செய் வோம் ஆனால் அவசியம் பாதிக்கப்படுகிறவர்கள் மக்களும் தொழிலாளர்களும் தான். ப்ரொடக்ஷன் குறைந்தால் அது இந்த தேசத்திற்கு நஷ்டம் ; குறிப் பாக நம்முடைய மாகாணத்திற்கு நஷ்டம். ஆகவே, இந்தமாதிரியான விஷயங் களில் நீங்கள் தாமதப்படுத்தக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். எந்த எந்த விஷயத்தில் எவ்வளவு சீக்கிரத்தில் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவைகளில் தாமதம் காட்டாமல் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் வற்புறுத்துகிறேன். அதனால் நமக்கு பெரிதும் நன்மை இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இப்போது நம்முடைய மாநிலத்தில் சிறு தொழில்களை உருவாக்க நல்ல சந்தர்ப்பம் இருக்கிறது. ஹொசூரை எடுத்துக்கொண்டால் அங்கே பெரிய தொழிற்பேட்டை வைத்திருக்கிறோம். ஆனால் எதிர்பார்த்தமாதிரி அது உருவாகவில்லை. காரணம் தகுந்த சூழ்நிலை இல்லை.

There should be an industrial climate created. Not only our own industrialists but we should invite the industrialists all over India to come and establish industries here.

அதனால் நமக்குத்தான் பெரிய லாபமே ஒழிய தொழில் அதிபர்களுக்கு இல்லை. ஒரு தொழிற்சாலை நிறுவப்பட வேண்டுமென்றால் கோடிக்கணக்கான ரூபாய் முதலீடு வேண்டும். ஆரம்பிக்கிறவர்கள் 20 சதவீதம் அல்லது 25 சத வீதம் முதலீடு போடுகிறார்கள். ஆனால் உற்பத்தி வர, பவர் வர, வாட்டர் வர தாமதம் ஏற்படுகிறது. அதனால் ஏற்படும் நஷ்டம் மிகவும் அதிகம். அவர்கள் கேட்கின்ற வசதிகளை செய்து கொடுக்க அரசாங்கம் செவிசாய்க்க வில்லை என்றால் பக்கத்து மாநிலங்களுக்கு போய்விடுகிறார்கள். கேரளாவை எடுத்துக் கொண்டாலும் சரி, கர்நாடகத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, அல்லது ஆந்திராவை எடுத்துக்கொண்டாலும் சரி—அவர்கள் மிகவும் உற்சாக மாக தொழில் அதிபர்களை வரவேற்று வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்க, என்னென்ன வசதிகள் வேண்டுமோ அத்தனையையும் செய்து

கொடுக்க தயாராக இருக்கிறார்கள். அதேமாதிரி நாமும் செய்து கொடுக்க வேண்டும். எதிலும் டிலேயாக இருக்கக்கூடாது. 'டிலே இஸ் டேஞ்சரஸ்' என்று சொல்வார்கள். தொழில் அதிபர்களை அழைத்து, உங்களுக்கு என்ன கஷ்டம் இருக்கிறது என்று கேட்டு, அதை நிவர்த்தி செய்து கொடுத்தால் அவசியம் ஆயிரக்கணக்கான பெரிய, நடுத்தர சிறிய இண்டஸ்டிரிஸ் வரும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதன்மூலம் இலட்சக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படும்; வேலையில்லாத் திண்டாட்டம் குறையும். நான் ஒரு யோசனை சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஒரே கட்டிடத்தில் எல்லாவிதமான காரியங்களையும் ஆற்றுகின்ற ஒரு ஸ்தாபனம் இருக்கவேண்டும். ஒரு இண்டஸ்ட்ரீஸ் ஆரம்பிக்கவேண்டும் என்றால் அவர்கள் போடுகின்ற முதலீட்டுக்கு மேலாக ஃபைனான்சியல் இன்ஸ்டிட்யூஷன்கள் பணம் கொடுக்கவேண்டும். பாங்க்ஸ் பணம் கொடுக்க வேண்டும். பவர் கொடுக்கவேண்டும், வாட்டர் கொடுக்கவேண்டும், இப்படி பல வசதிகள் வேண்டும். ஆனால் இவை அனைத்தும் ஒரே இடத்தில் இருந்தால் நல்லது. அவ்வாறு எல்லாவற்றையும் ஒரே இடத்தில் அமைத்தால் அன்றி தாமதத்தைக் குறைக்க முடியாது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மிக உற்சாகமாக இண்டஸ்ட்ரீஸ் நிறுவுபவர்கள் கூட, தாமதம் ஏற்படுகின்றது என்று தெரிந்தால் லட்சக்கணக்கான பொருள் நஷ்டமாகும் என்று கருதி அப்படியே விட்டுவிட்டு பக்கத்து மாநிலங்களுக்குப் போய்விடுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. இதற்கு உதாரணமாக இரண்டு மூன்று திட்டங்களைச் சொல்ல முடியும். அந்தமாதிரி நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. ஆகவே அது குறித்து அவசியம் இண்டஸ்ட்ரீஸ் மினிஸ்டரிடம் பேசுவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். அகில இந்திய அளவிலே எல்லா இண்டஸ்ட்ரியலிஸ்ட்களையும் வரவழையுங்கள். அவர்களிடம் அவர்களுக்கு என்னென்ன சௌகரியங்கள் வேண்டுமோ அவற்றைச் செய்து தருகிறோம் என்று சொல்லுங்கள். இந்த மாதிரிதான் காங்கிரஸ் கட்சி ஆட்சிக்காலத்திலே செய்தோம். ஒவ்வொரு ஸ்டேட் கேப்பிட்டலுக்கும் சென்று அங்கே இருக்கக்கூடிய இண்டஸ்ட்ரியலிஸ்ட்களை எல்லாம் கூப்பிட்டு ஒரு கான்ஃபிரன்ஸ் போட்டு நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற வசதிகளை அவர்களுக்கு விளக்கி இங்கே நிறைய இண்டஸ்ட்ரீஸ் கொண்டுவரப்பட்டது காங்கிரஸ் ஆட்சி காலத்தில். ஆகவே அந்த மாதிரி நீங்களும் செய்வதற்கு முயற்சி செய்யவேண்டும். இண்டஸ்ட்ரீஸ் டெவலப்மெண்ட் போர்ட் என்று ஒன்று ஏற்படுத்த வேண்டும். முக்கியமான பெரிய பெரிய இண்டஸ்ட்ரியலிஸ்ட்



களை எல்லாம் அதிலே மெம்பராகச் சேர்க்கவேண்டும். அவ்வாறு செய்தால் இண்டஸ்ட்ரிஸ் வளர்வதற்கு பெரிதும் நன்மையாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து லா அண்ட் ஆர்டர் சிட்டுவேஷன் நன்றாக இல்லை. மெட்ராஸிலே மட்டும் எடுத்துக்கொண்டால் நிறைய பிக் பாக்கெட்ஸ் இருக்கின்றன. நேற்றுகூட நாம் ஒரு பயங்கரமான செய்தியை பேப்பரிலே பார்த்தோம். ஒரு பெண்ணைக் கடத்திக்கொண்டு போய் பல தொல்லைகளுக்கும் ஆளாக்கி இருக்கிறார்கள். இதை அவசியம் ஆட்சியாளர் கவனிக்கவேண்டும்.

அடுத்து கடல் நீரிலிருந்து பவர் உண்டாக்கலாம் என்று ஒரு ஆராய்ச்சி நடந்துகொண்டு வருகிறது. இதற்கு வேண்டிய (Scheme) இந்த அரசாங்கம் இப்போதே துவக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். கல்பாக்கம் நிலையத்திலிருந்து பவர் வருவது என்ன ஆனது என்பது எனக்குப் புரியவில்லை, வருகிறது வருகிறது என்று சொல்கிறார்கள். ஆனால் வரவில்லை, எப்போது வரப்போகிறது என்பதும் தெரியவில்லை. ஆகவே இதுபற்றி அரசாங்கம் அவசியம் கவனிக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய பேருரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தில் பேசுவதற்கு முன்பாக "தமிழ் சந்ததி வாழ்வதற்கு தன்னைத் தந்து சரித்திர நாயகனாகி வங்கக் கடலோரம் நீங்கா துயில் கொள்கின்ற பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு எனது அஞ்சலியைச் செலுத்திவிட்டு, தமிழ் சமுதாயத்தின் தனி நாயகனாக ஏழை எளியவர்களின் இதய சிம்மாசனத்தில் இடம் பெற்று தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்று எங்களுக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்கின்ற புரட்சித்தலைவர் அவர்களுக்கும், என்னை வெற்றி பெறச் செய்த நாட்டாம்பள்ளித் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து என்னுடைய உரையைத் துவக்குகின்றேன்.

நடந்து முடிந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தெளிவான திட்டவட்டமான முறையில் நல்ல தீர்ப்பை மக்கள் அளித்துள்ளனர். சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் பெருவாரியான மக்கள் இடைப்பட்ட சில மாதங்களில் ஏற்பட்ட இடைவிடாத துயரங்களுக்கு விடிவு காண்பதற்கும், நிலையான ஆட்சி

வேண்டுமெனக் கூறி பாராளுமன்றத் தேர்தலில் வாக்கினைப் பெற்றவர்கள்,
தமிழகத்தில் இருந்த நிலையான ஆட்சியைக் கலைத்த சர்வாதிகாரத்திற்கு
சாவுமணி அடித்து மீண்டும் தமிழகத்தில் நிலையான, நேர்மையான, தூய்மை
யான ஆட்சி அமைய துணை நின்றனர்.

நீதியின் வாழ்வுதன்னை சூது கவ்வும், ஆனாலும் நீதியே வெல்லும் என்ற
பழமொழிக்கொப்ப தமிழகத்து மக்கள் நீதியை வெல்ல வைத்திருக்கிறார்கள்.
மீண்டும் சத்தியத்தை வெற்றிபெறச் செய்தார்கள். மக்கள் குரலே மகேசன்
குரல் என்ற பேரறிஞர் அண்ணாவின் கருத்திற்கொப்ப மக்கள் குரலை பிரதி
பலிக்கின்ற அளவில் மேதகு ஆளுநர் அவர்களுடைய உரை அமைந்திருக்
கின்றது.

சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கின்ற ஏழை எளிய மக்களின் வாழ்
வினை உயர்த்துகின்ற முறையில் ஆளுநருடைய உரையிலே இந்த அரசு அரிய
பல திட்டங்களை எல்லாம் கோடிட்டுக் காட்டி இருக்கின்றது. இங்கே
எனக்கு முன்பு பேசிய எதிர்க்கட்சி நண்பர்கள் ஒருசில கருத்துக்களை
எடுத்துச் சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகம் வெற்றி பெற்றதை ஜீரணிக்க முடியாமல் அந்த வெற்றிக்கு எல்லாம்
இங்கே காரணம் காட்டிக்கொண்டிருப்பதை இந்த மன்றம் தெரிந்துகொண்டு
தான் இருக்கின்றது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகம் மாபெரும் வெற்றி பெற்றிருக்கின்றது என்றால் அது பல தியாகங்
களைப் புரிந்த பிறகே, பல கழக தொண்டர்களுடைய ரத்தத்தைச் சிந்திய
பிறகே பல தொண்டர்கள் உயிர்த்தியாகம் செய்த பிறகே இந்த வெற்றியைப்
பெற்றிருக்கின்றது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள்
சொன்னார்கள். தர்மபுரி இடைத் தேர்தலை உதாரணம் காட்டிச் சொன்
னார்கள். நான் பணிவோடு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்,
தர்மபுரி இடைத் தேர்தலை உதாரணம் காட்டவேண்டும் என்று நீங்கள் கருதி
னால் உங்களுடைய கட்சித் தொண்டர்களுக்குக் காட்டுங்கள்.
உங்களுடைய கட்சியிலே இருந்து மற்ற அரசியல் கட்சிகளுக்குச் சென்று
விடாத அளவுக்கு அவர்களுக்கு ஆறுதல் சொல்லுங்கள். அவர்கள்
அறிவுரை கூறாதீர்கள். இந்த நாட்டு மக்கள் தெளிவாகப் புரிந்துகொண்டு
தான் எங்களை ஆட்சிப் பீடத்தில் அமரச்செய்திருக்கிறார்கள். நாட்டு மக்களுக்கு
இந்தமாதிரி நீங்கள் நடந்துகொண்டால் இந்த நாட்டு மக்களின் உணர்ச்சியை
நீங்கள் மதிக்கவில்லை என்பதை மேலும் இந்த நாட்டு மக்கள் புரிந்துகொள்
வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக மக்கள் அனைத்
திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தையும், புரட்சித் தலைவரை



யும் ஆட்சிப் பீடத்தில் அமர வைத்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்
கின்ற நோக்கில், கழக அரசு இந்த நாட்டு மக்களுக்கு எந்தவகையிலே பணி
புரிந்திருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகின்றது. விட்ட பணியை மீண்
டும் தொடரவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் எங்களை மீண்டும் ஆட்சி
யிலே அமர்த்தியிருக்கிறார்கள். தமிழக அரசு பல அரிய திட்டங்களை
இந்த ஆளுநருடைய உரையின் மூலமாக இங்கே அளித்திருக்கின்றது.
உதாரணமாகச் சொல்லவேண்டுமென்றால் மத்திய அரசு மாநிலங்களுக்கு
அளிக்கின்ற மொத்த முதலீட்டில் தமிழ்நாட்டில் செய்யப்பட்ட முதலீடு 4
சதவீதமாகக் குறைக்கப்பட்டிருப்பதை இங்கே சுட்டிக்காட்டுகின்ற நோக்கில்
எனக்கு முன்பு பேசிய இந்திரா காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அவர்கள்
கூடக் கேட்டார்கள். இந்த அரசு பெரிய தொழில்களை ஆரம்பிப்பதில பின்
தங்கி இருக்கிறது என்று சொன்னார்கள். தமிழகத்திலே பெருந்தொழில்
மூலமாக சந்தன தொழிற்சாலையை அமைக்க வேண்டும் என்று மத்திய
அரசாங்கத்தினுடைய அனுமதியை மாநில அரசு எதிர்பார்த்துக் கொண்டு
இருந்தது. ஆனால், மத்திய அரசு எதிர்பார்த்தபடி சந்தன தொழிற்சாலையை
அமைக்க அனுமதி அளிப்பதில் தாமதம் காட்டியது. அதன் காரணமாக
தமிழக அரசு சிறு தொழிற்சாலைகள் வளர்ச்சியின் கீழ், அதன் மூலமாக இந்த
சந்தன தொழிற்சாலையை வடஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் துவங்க
முன்வந்தது. ஆகவே, சிறு தொழில் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்
வகையில், பெரிய தொழில்களை நிறுவுவதன் மூலம் தமிழ்நாட்டில் முதலீடு
களை அதிகப்படுத்தி தொழில்வளம் பெருகவும், வேலைவாய்ப்பினை
அதிகரிக்கவும் வசதி ஏற்படுத்த முடியும். அதற்கு மத்திய அரசு உதவ முன்
வரவேண்டும் என்று எடுத்துச் சொல்வது எனது கடமை என்று நினைக்
கிறேன்.

(பிற்பகல் 12-50)

தமிழுக்கும் தமிழ் சமுதாயத்தினருக்கும் மறுமலர்ச்சி ஏற்படுத்திய பேரறிஞர் அண்ணாவின் கொள்கைகளை நேர்மையோடு, நாணயத்தோடு, பொதுவாழ்விலும், நிர்வாகத்திலும் நிலை நாட்ட முன்வரும் இந்த அரசு என்பது பாராட்டத்தக்கது. 'உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு' என தாய் தமிழுக்காக இன்னுயிரை ஈந்த தியாகச் செம்மல்களின் கனவு நனவாகின்ற வகையில் மொழிக் கொள்கையில், அண்ணாவின் இரு மொழிக் கொள்கையை உறுதிப்படுத்தியிருப்பது பாராட்டத் தக்கதாகும் என்று எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

(திரு. இ. அன்பழகன்) [1980 ஜூன் 27

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் அனைத்து மக்களுக்கும் வேலை வாய்ப்பு தருகின்ற வகையில் 'வேலைக்கு உணவுத் திட்டம்' தொடர்ந்து செயல்படுத்தப்படுவதும், வேலையற்ற பட்டதாரிகளுக்கு உதவித் தொகைத் திட்டம் செயல்படுத்த இருப்பதும், அவர்களுக்கு உதவித் தொகையாக ரூபாய் 50 வழங்குவது என்று திட்டமிடப்பட்டிருப்பதையும் பாராட்டி வரவேற்கிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வகை செய்யும் முறையில் விவசாய அமைச்சர் தலைமையில் விவசாயிகளது பிரதிநிதிகள், வல்லுநர்கள் கொண்ட விவசாய நலக்குழு என்ற ஒரு குழுவை அமைத்து, விவசாயப் பெருங்குடி மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண புரட்சித் தலைவர் அவர்களின் அரசு முடிவு செய்துள்ளது வரவேற்கத் தக்க, பாராட்டத்தக்க ஒன்றாகும்.

இதன் வாயிலாக விவசாயிகள் குறைகள் தீர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே நேரத்தில் விவசாயிகளின் கடன்களைக் குறைப்பதற்காக, அந்தக் கடன்களுக்கு தீர்வு காண அரசு நடவடிக்கைகள் எடுத்து வருவதைச் சொல்லியாக வேண்டும். தமிழ்நாடு அரசுக்கு என் வேண்டுகோளாகச் சொல்லிக்கொள்வது, விவசாயிகளைப் பொறுத்தவரையில் இன்று பெரிய விவசாயிகள் ஒருசிலர் ஒவ்வொருவரும் ரூ. 50,000, ரூ. 60,000 என்று கடன் பெற்று இன்று அந்தக் கடனை அரசு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு கடனை தள்ளுபடி செய்யாமல் சிறு விவசாயிகளுக்கு மட்டும் அரசு கடனை தள்ளுபடி செய்ய உத்தரவிட வேண்டும். நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கோவையிலும், திருச்சியிலும் பல்கலைக் கழகங்கள் நிறுவ முயற்சி எடுத்துவருவதையும், தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைய ஆவன செய்ய இருப்பதையும் வரவேற்று பாராட்டி நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசாங்க ஊழியர்களாக மாற்ற இருப்பதை ஆசிரியர் சமுதாயம் நன்றி உணர்வோடு ஏற்றுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறது. தாழ்த்தப்பட்டோருக்காக சிறப்பு ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த இருப்பதற்காகவும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங்கடம் மின்சாரத் துறை பற்றிச் சொன்னார்கள். இந்த அரசு மின்சாரத் துறையில் சரிவரக் கவனம் செலுத்தவில்லை என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு எடுத்துச் சொல்வது இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான், புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான், மின்சாரத் துறை அமைச்சர்



1980 ஜூன் 27] (திரு. இ. அன்பழகன்)

அவர்கள் பொறுப்பேற்ற பிறகுதான் மின் உற்பத்தி 17 சதவிகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அரசு ஈடுபட்ட பணிகள் மீண்டும் தொடர, இந்த நாட்டு மக்களுக்கு நல்ல வாழ்க்கை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு பல அரிய திட்டங்கள் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. எனக்கு முன் பேசியவர்களில் ஒருசிலர் தீவிரத் திட்டங்களை, தேர்தல் அறிக்கையில் சொன்னவற்றை நிறைவேற்றவில்லை என்று சொன்னார்கள். இந்த ஆளுநர் உரை ஐந்தாண்டுகளுக்கும் தேவையான ஒரு உரையல்ல. அடுத்தாண்டு இதைவிட தீவிரமாக உரை வரலாம். அதற்கு அடுத்த ஆண்டு அதைவிட தீவிரமாக வரலாம். ஆகவே, இங்கே இன்று அளிக்கப்பட்டிருக்கிற உரை ஐந்தாண்டுகளுக்கு சேர்ந்த உரை அல்ல. இந்த அரசு சொல்லியுள்ள அனைத்து வாக்குறுதிகளையும் ஒவ்வொன்றாக நிச்சயமாக நிறைவேற்றும். மக்களுக்கு நன்மை செய்ய முனைந்திருக்கும் இந்த அரசு நிச்சயமாக அவ்விதம் செயல்படும் என்று கூறி, மக்களின் தேவைகளை, மக்களின் விருப்பங்களை ஆளுநர் அவர்கள் உரையில் எடுத்துச் சொல்லியிருப்பதைப் பாராட்டி வரவேற்று விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்களது உரையில் இந்த அரசு வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு உதவித் தொகை திட்டம் விரைவில் செயல்படும் என்றும், பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கும் நோக்கத்தோடு மேற்கொள்ளப்பட்டுள்ள வேலைக்கு உணவுத் திட்டம் தொடர்ந்து செயல்படும் என்றும், தமிழ் பல்கலைக் கழகம் அமைக்க இருப்பதைப்பற்றியும், ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசாங்க ஊழியர்களாக ஆக்க முடிவு எடுக்கப்பட்டிருப்பதையும், 18 வயது வந்தோர் அனைவருக்கும் ஆறு மாதத்தில் நடைபெற இருக்கும் ஊராட்சித் தேர்தலில் வாக்களிக்கும் விதத்தில் சட்டம் கொண்டுவர இருப்பதையும் கண்டு நான் இந்த அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். அதோடு ஆளுநர் அவர்கள் உரையில் சொல்லப்படாத சிற்சிலவற்றையும் அரசாங்கம் நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சாத்தான்குளம் தொகுதி மக்கள் குடிநீர் வசதி இல்லாது மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதை நிவர்த்திக்க வேண்டும். கிராமங்களில் சரியான இணைப்பு ரோடுகள் போடப்பட வேண்டும். இதுவரை போடப்பட்டுள்ள ரோடுகளை தார் ரோடுகளாக மாற்ற வேண்டும். மேலும் கிராம மக்களுக்கு வசதியாக டவுன் பஸ்கள், மினி பஸ்கள் விடவேண்டும். கடலோரப் பகுதி மக்களிடையே, விசைப் படகுக்காரர்களுக்கும், கட்டுமரப் படகுக்காரர்களுக்கும் இடையே நடக்கும் தகராறுகளில் இந்த அரசு தலையிட்டு சமரசம் செய்து வைக்கவேண்டும். மேலும் சாத்தான்குளம் பகுதியில்

[திரு. எஸ். என். இராமசாமி] [1980 ஜூன் 27

நிலத்தடி நீரை நம்பி விவசாயம் செய்யும் கிராம மக்களுக்கு சரியானபடி மோட்டார்கள் இயங்கக் கூடிய வகையில் மின்சார சப்ளை கொடுத்து விவசாயி களைக் காப்பாற்ற வேண்டும். நெல்லை ஜில்லாவில் இருக்கும் அனைத்துக் குளங்களும் மராமத்து இல்லாமல் மேடாகி விட்டது. அதன்படியாக, தண்ணீர் அதிகம் தேக்க முடியவில்லை. எனவே, உடனடியாக குளங்களை மராமத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

திருச்செந்தூர் சாத்தான்குளம் தொகுதியில் உள்ள மக்களுக்கு மருத்துவ மனைகள் குறைவாக இருக்கின்றது. அதை நிவர்த்திக்கின்ற முறையிலே, அரசு புதிய மருத்துவ மனைகள் ஏற்படுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். துவக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசின் புதிய வரி விதிப்பால், விவசாயிகளுக்குத் தேவையான யூரியா போன்ற உரங்களின் விலை ஏறிவிட்டது. நமது தமிழக அரசு அதை நிவர்த்திக்கின்ற வகையில் தகுந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். கிறித்துவர்கள் என்பதால் அரசு சலுகைகள் மறுக்கப்படாமல் இருக்க இந்த அரசு ஆவன செய்வதோடு, அரசியல் அமைப்புச் சட்டத்தை திருத்தவும், உரிய ஆலோசனைகளுக்கு ஊக்கம் அளிக்கவும் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அவையில் உரையாற்றுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, விடை பெறுகிறேன். வணக்கம்.

* **திரு. ஜே. சி. டி. பிரபாகரன் :**

‘ எங்கள் வாழ்வும், எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு ’

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகின்ற நல்லதொரு வாய்ப்பினைத் தந்த வில்லிவாக்கம் வாக்காளப் பெருமக்களுக்கும், நல்லதொரு வாய்ப்பினை ஏற்படுத்தித் தந்த எங்கள் இதய தெய்வம், புரட்சித் தலைவர் அவர்கள் திருப்பாதங்களில் என் நன்றி மலர்களை காணிக்கையாக்கி என் உரையைத் தொடங்குகிறேன்.

நொண்டி சட்டமன்றம் வர முடியுமா? என்று கேட்டார்கள். ஓட்டை ஏற தெம்பிருக்கிறதா? திராணி இருக்கிறதா? என்று கேட்டார்கள். இந்த நேரத்திலே எனக்கு ஒரு காலிலே ஊனம் ஏற்பட்டிருந்தாலும்கூட, மனு காலாக நின்று எனக்கு வாக்களித்த வாக்காளப் பெருமக்களை நன்றிப் பெருக்கோடு நினைக்கிறேன்.



1980 ஜூன் 27] (திரு. ஜே. சி. டி. பிரபாகரன்)

ஆளுநர் உரையைத் துவக்குகின்றபோது, ‘ வரலாற்று சிறப்பு மிக்க இடைப் பொதுத் தேர்தலில் ’ என்று துவங்கியதிலிருந்து இந்தப் பேருரை வரிக்கு வரி வரலாறு படைக்கின்ற அளவிற்கு நல்ல பல திட்டங்களை அறிவித்திருக் கிறார்கள். வரிக்கு வரி வரலாறு படைக்கின்றது என்று சொல்வதிலும் அர்த்தம் இருக்கிறது. அதிலே நியாயம் இருப்பதாக இந்த மாமன்றத்திலே இருக்கின்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. வரலாறு படைக்கின்ற இடைத் தேர்தல்தான் இது. ஐந்தாண்டு களுக்கு ஆட்சி செய்ய வேண்டிய ஒரு ஆட்சியை அநியாயமாக கலைத்தார்கள். காரணம் சொல்லாமல் கலைத்தார்கள். ஆனால், சிலர் மக்கள் முன்பு நின்று, ‘ ஏன்? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைத்தபோது, இந்த உணர்வு இல்லையே ’ என்று கேட்டார்கள். நான் மெத்தப் பணிவோடு உங்கள் ஞாபக சக்தியை திருப்பிட வேண்டுகிறேன். கடற்கரைக் கூட்டத் திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைத்தபோது, you have institutionalised corruption என்று சொல்லிக் கலைத்தார்கள். இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைத்த போது காரணம் சொல்லாமல், லஞ்சமற்ற, லாவண்யமற்ற, ஊழலற்ற ஆட்சி யைக் கலைத்திருக்கிறார்கள் என்று சொல்லி, நாங்கள் மக்கள் மத்தியிலே நின்று நியாயம் கேட்டோம். எங்கள் தானைத் தலைவர், புரட்சித் தலைவர், இந்தியத் துணைக் கண்டத்தில் இல்லாத ஒரு மாபெரும் சக்தியா, ஏன் உலக வரலாற்றிலே எந்தத் தலைவனுக்கும் இல்லாத ஒரு தனித் தன்மையோடு, மக்கள் முன்பு வாக்குகளைக் கேட்பதற்குப் பதிலாக, நியாயம் கேட்கிறேன் என்று சொன்னார். மக்கள் முன்பு நின்று, ‘நியாயம் கேட்க வந்திருக் கிறேன், என்ன தவறு செய்தேன் ’ என்று சொல்லுங்கள் என்று வாக்காளர் களைப் பார்த்துக் கேட்டார்கள். இன்னும் குறிப்பாக சொல்ல வேண்டு மானால், ஜனநாயக பரிசோதனையில் வாக்காளப் பெருமக்கள் குழப்பம் இல்லாது, அச்சத்திற்கு ஆட்படாமல் தைரியமாக வாக்களித்திருக்கிறார்கள் என்று ஆளுநர் அவர்கள் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் அச்சத்தை நீக்கி, தைரியத்தைத் தந்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணி எந்த அளவிற்கு கொள்கைகளையும், கோட்பாடுகளையும் மக்கள் மத்தியிலே எடுத்து வைத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். ‘சொன்ன தைச் செய்யவேண்டும், செய்வதைச் சொல்ல வேண்டும் ’ என்று சொன் னார்கள். சொன்னதைச் செய்வதற்கு இங்கே அமர்ந்திருக்கும் ஆட்சியா ளர்கள் இன்றைக்கு நல்ல பல திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இளைஞர்கள் பிரதிநிதி என்ற முறை யிலே இங்கே நல்ல பல திட்டங்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே நின்று நினைக்கிறேன்.

(திரு. ஜே. சி. டி. பிரபாகரன்) [1980 ஜூன் 27

'நேர்மைக்கும், நாணயத்திற்கும் சிறப்பு தருகின்ற முறையிலே' என்று ஆளுநர் உரையைத் துவக்கியிருக்கிறார்கள். உண்மையிலேயே நேர்மைக்கும் நாணயத்திற்கும் பேர்போன அரசு என்று மக்கள் கருதிய காரணத்தினாலே தான், நிலையான ஆட்சியை அமைக்க ஒரு வாய்ப்புத் தாருங்கள் என்று எதிர்க் கட்சியிலே இருக்கின்றவர்கள் கேட்டபோது, நிலையான ஆட்சியை யார் அமைக்க முடியும் என்பது முக்கியமல்ல.

நிலையான ஆட்சியை நல்லவர்களிடம் தரவேண்டுமென்று நம்பித்தான் இந்த ஆட்சிப் பொறுப்பை மக்கள் ஒப்படைத்திருக்கிறார்கள். அந்த எண்ண உணர்வைப் பிரதிபலிக்கும் வகையில் ஆளுநர் அவர்கள் நேர்மைக்கும் நாண யத்திற்கும் அளித்த பரிசு என்று அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

இளைஞர்களுக்குப் பெரு மகிழ்ச்சி தரத்தக்க திட்டம் வைக்கப்பட்டிருக் கிறது. படித்து முடித்த பின்னால் எங்களுக்கு வேலை இல்லையே, கவனிப் பதற்கு ஆட்சியாளர்கள் இல்லையே என்ற ஏக்கப் பெருமூச்சு இளைய சமுதாயத்தில், படித்த பட்டதாரிகளிடையில் இருந்து வந்ததை மாற்றுவதற்கு புரட்சித் தலைவர் அவர்கள் சென்ற ஆண்டுதான் படித்த பட்டதாரிகளுக்கு உதவித் தொகை வழங்கப்படும் என்று சொன்னார்கள். அதைச் சொன்ன வுடனே எத்தனை ஏளனப் பேச்சுகள், கண்டனக் குரல்கள்? செய்திட முடியுமா என்றார்கள். செய்திட முடியும் என்பதை ஆளுநர் உரையில் சிறப்பாகச் சொல்லியிருக்கிறார்கள். இடைக் காலத்தில் அமலாக்கப்படாமல் தடுத்து நிறுத்தப்பட்ட அந்த உதவித் தொகை நிச்சயமாக வழங்கப்படும். அது என்னைப்போன்ற இளைஞர்களுக்கு பட்டதாரி இளைஞர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள் கிறேன்.

உள்ளாட்சித் துறையிலே ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழி யர்களாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை தேர்தல் காலத்திலே வள்ளுவர் கோட்டத்திலே நடந்த ஆசிரியப் பெருமக்கள் கூட்டத்திலே கோரிக்கையாக வைக்கப்பட்டது. ஆட்சிப் பொறுப்புக்கு வந்தால் அதனைச் செய்கிறேன் என்று புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். புரட்சித் தலைவர் அரசு பெறுப்பேற்ற பிறகு சொன்னதைச் செய்திருக்கிறார். பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் சொன்னதைச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்திச் சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர் இராசு அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகச் செய்யக்கூடிய திட்டங்களை வரவேற்றுவிட்டு, எங்கள் காலத்தில் செய்யத் தவறிய திட்டத்தை நீங்கள்



1980 ஜூன் 27] [திரு. ஜே. சி. டி. பிரபாகரன்]

மறுபடியும் செயல்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். உங்கள் காலத்தில் எத்தனை திட்டங்களைப் போட்டீர்கள், எப்படியெல்லாம் செயல் பட்டீர்கள் என்பது தெரியும். எங்கள் ஆட்சி கலைக்கப்பட்ட பின்னாலும் நாங்கள் மக்களை நேரடியாகச் சந்தித்தோம். உங்கள் ஆட்சி கலைக்கப் பட்ட நேரத்தில் துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்ற நிலைமை அண்ணா திமுக வுக்கு ஏற்படவில்லை. தாழ்த்தப்பட்டோர் நலனுக்கு அண்ணா திமுக என்ன செய்யவில்லை? எல்லாவற்றுக்கும் மேலாக 1957 ஆம் ஆண்டில் பேறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் இந்த மாமன்றத்தில் சுட்டிக்காட்டிய வரிகளை நினைவுபடுத்திப் பார்க்கிறேன். விரும்பி ஆதரித்தாலும் சரி, ஆதரிக்காவிட்டாலும் சரி, ஏற்றுக்கொண்டாலும் சரி, ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் சரி, மதிப்பளித்தாலும் சரி, மதிப்பளிக்கா விட்டாலும் சரி, அரிசன மக்களின் நிழலைப்போல் அரிசன முன்னேற்றத் திற்குப் பாடுபடுவோம் என்று சொன்னார்கள். அந்த வரிகளுக்கு இலக்கண மாக தாழ்த்தப்பட்ட மக்களுக்காக ஐந்தாண்டுத் திட்டங்களை ஆளுநர் உரையில் தந்திருக்கிறார்கள். அதைப் போற்றி வரவேற்கிறேன்.

வேலை வாய்ப்புகளைத் தருவதில் வேளாண்மைக்கு அடுத்தபடியாக இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து கைத்தறித் துறை மேம்பாட்டுக்கு நல்ல பல திட்டங்களை அறிவித்திருக்கிறது. 'எங்கள் ஏர் ஓட்டம் நின்று போனால் உங்கள் கார் ஓட்டம் என்னவாகும்' என்று கேட்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு பல நல்ல திட்டங்களை அரசு அறிவித் திருப்பது ஆளுநர் உரையை முறையாக அணுகிப் பார்த்தால் தெரியும்.

ஆர்கனைஸ்டு செக்டார், அன்-ஆர்கனைஸ்டு செக்டார்—முறைப்படுத்தப் பட்ட தொழில்கள், முறைப்படுத்தப்படாத தொழில்கள் இரண்டிலும் அக்கறை கொண்டு ஆளுநர் உரையில் அதற்கான திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக் கின்றன.

எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும் எல்லாத் தரப்பு மக்களும் பயன் அடைய வேண்டும் என்ற வகையில் பயனுள்ள திட்டங்களைக் கொண்ட தாக ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. இரு மொழிக் கொள்கை தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று குறிப்பிடப்பட்டிருப்பது உண்மை யிலேயே மகிழ்ச்சி அளிக்கத் தக்கதாய் இருக்கிறது. இவற்றையெல்லாம் போற்றி, வரவேற்று ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்..

[1980 ஜூன் 27

(பிற்பகல் 1-10)

**திரு. ஏ. டி. குலசேகர் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது முதன்முறையாகப் பேசுகின்ற வாய்ப்பைத் தந்த சிங்காநல்லூர் வாக்காளப் பெருமக்களுக்கும், இங்கே வருவதற்கு வழியமைத்த எங்களுடைய தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் முதற்கண் நான் நன்றியைத் தெரிவித்து என்னுடைய பேச்சைத் தொடங்குகிறேன். இங்கே விவாதத்தைத் தொடங்கி வைத்த திரு. ஆர். சௌந்திரராஜன் அவர்கள் அதைப் பாராட்டிப் பேசினார்கள். தேர்தல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என்ற உறுதி மொழி இந்த உரையிலே அழுத்தமாகக் குறிப்பிடப்படவில்லை. அதற்கு மாறாக கொடுத்த வாக்குறுதிகளிலிருந்து நழுவிச் செல்லும் முறையிலேதான் இது தயார் செய்யப்பட்டிருக்கிறது.

"விவசாயிகளின் பிரச்சினைகளைப்பற்றி அரசு நன்கு அறிந்துள்ளது; மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அவர்களது பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணுவதில் எனது அரசு முழு முயற்சியுடன் ஈடுபடும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சுருங்கச் சொன்னால் பழியை மத்திய அரசின் மேலே போட்டுத் தப்பித்துக்கொள்ளும் போக்குத்தான் காணப்படு கிறது. ஆனால் மத்திய அரசு ஒப்புக்கொள்ளாவிட்டால் மாநில அரசு நிதியி லிருந்தே அவர்களுடைய கடன்களை ரத்து செய்வோம் என்று வாக்குறுதி அளிக்கப்பட்டது. இன்றைக்கு மத்திய அரசு என்று காரணம் காட்டுவது வியப்பாக உள்ளது. அப்போது தேர்தலில் வெற்றி பெற வாய்ப்பு இல்லாத காரணத்தால் ஏராளமான வாக்குறுதிகளை அள்ளி வீசி இன்றைக்கு அவை களை நிறைவேற்ற இயலாத நிலையில் ஆளுநருடைய உரையிலே நழுவும் போக்கு தெரிகிறது. விவசாயத் தொழிலாளர்களுக்கு, பட்டதாரிகளுக்கு, அரசு ஊழியர்களுக்கு பரிகாரங்கள் காண முயற்சி எடுக்கப்படவில்லை. மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவது ஒரு அரசாங்கத்தி னுடைய கடமையாகும். இதைப்பற்றியெல்லாம் ஆளுநர் உரையிலே குறிப் பிடாதது வருத்தமாக இருக்கிறது.

உதாரணமாகக் குடிநீர்ப் பிரச்சினை பல கிராமங்களிலே நகரங்களிலே தீர்க்கப்படாமல் இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் குடி நீர்த் திட்டம் நிறைவேற்றப்படாத காரணத்தால் தாய்மார்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். ஒரு குடம் குடிநீர் 50 பைசா என்றும் ஒரு குடம் உப்பு நீர் 10 பைசா என்றும் சிங்காநல்லூர் பகுதியிலே விற்கப்படுகிறது. ஆயிரக் கணக்கான வண்டிகளிலே சுமந்துவந்து விற்றுக்கொண்டிருக்கிறார்கள்.





தொழிலாளர் பஞ்சாலைகளிலே 8 மணி நேரம் வேலை செய்துவிட்டு வந்து சைக்கிளிலே தண்ணீர் சுமந்துகொண்டு வருகிறார்கள். குறிப்பிட்ட வருமான வரம்புக்குக் கீழே உள்ளவர்கள் எல்லாம் குடிநீர்ப் பிரச்சினையாலே மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அடுத்து ஈ.எஸ்.ஐ. மருத்துவ மனை எங்கள் தொகுதியில் நிறுவப்பட்டு உள்ளது. அங்கே அறுவை சிகிச்சைக்குத் தேவையான உபகரணங்கள் இல்லாமல் மருந்துகள் இல்லாமல் தொழிலாளர்களும் தொழிலாளர்களுடைய குடும்பங்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

எங்களுடைய தொகுதியிலே ஒருவிதமான விஷச் செடி வளர்ந்து தொகுதி முழுவதும் பரவி வருகிறது. அதை அழிப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த விஷச் செடி பட்டவுடன் கைகால்கள் தடித்துப் போகின்றன, அது மட்டுமல்ல முகம் வீங்கிப் போய் விடுகிறது, இதனால் அங்கே வசிக்கின்ற மக்களுக்கு கஷ்டமாக இருக்கிறது. அதைப் போக்கவேண்டும்.

அடுத்து எங்களுடைய தொகுதியிலே பொதுக் கழிப்பிடங்கள் இல்லாத காரணத்தால் பொதுச் சுகாதாரம் பாதிக்கப்பட்டு தொழிலாளர்கள் அனைவரும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இணைப்புச் சாலைகள் சரியாக செப்பனிடப்படாத காரணத்தால் போக்கு வரத்து வசதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொன்னால் வெள்ளலூரிலிருந்து சிங்காநல்லூருக்குச் செல்லுகின்ற வழியில் நொய்யாறு இடையிலே வருகிறது. அங்கே சரியான பாதை வசதி இருந்தால் இரண்டு கிலோ மீட்டர் தூரம் கடந்தால் போதும் வெள்ளலூர் சென்று விடலாம், இப்போது 12 கிலோ மீட்டர் செல்லவேண்டிய நிலைமை இருக்கிறது.

என்னுடைய தொகுதியிலே விவசாயக் கூலித் தொழிலாளர்கள் அதிக மாக உள்ளார்கள். விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு வேலையில்லாத காலங்களிலே, இந்த அரசாங்கம் அறிவித்த தினம் ஒரு நபருக்கு ஒரு ரூபாய் என்ற திட்டத்தை அமல் செய்து, என்னுடைய பகுதியிலே உள்ள விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்குத் தர வேண்டுமென்று இந்த அரசினைக் கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஏ. டி. குலசேகர்] [1980 ஜூன் 27

கிராமங்களிலே—ஊராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டுவிட்ட காரணத்தி னால் அங்கேயுள்ள மோட்டார் பம்பு செட்டுகள் பழுதடைகின்ற காலத்திலே அவைகளை எடுத்து அனுப்பும் நோக்கில், கிணற்றிலே கிட்டத்தட்ட 30, 40 நாட்களுக்குத் தண்ணீர் எடுக்க முடியாத நிலையில் எங்கள் பகுதியிலே உள்ள தாய்மார்கள் கஷ்டப்படுகிறார்கள். அக்கம்பக்கத்திலே இருக்கின்ற தோட்டங்களுக்குச் சென்று தண்ணீர் எடுக்கிறார்கள். ஊருக்கு அருகிலே தோட்டங்கள் இல்லாவிட்டால் ஒரு மைல், ஒன்றரை மைல் தூரம் நடந்து சென்று தண்ணீரைக் கொண்டுவர வேண்டியிருக்கிறது. இவ்வாறு ஒரு மாதம், ஒன்றரை மாதக்காலம் அவதிப்படுகிறார்கள். இந்த நிலையைப் போக்க, வட்டார ஆட்சி அலுவலகங்களில் ஸ்பேர் மோட்டார் பம்பு செட்டு களை வைத்துக்கொண்டு, மோட்டார் பம்பு செட்டுகளை மாற்றும்பொழுது அதை வைத்து மாற்ற வேண்டுமென்று கூறி, இதற்கு ஆவன செய்ய வேண்டு மென்று கோருகிறேன்.

வயதான விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் தருகிறோம் என்று இந்த அரசு வாக்குறுதி அளித்திருக்கிறது. அதன்படி எங்கள் பகுதி விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு அளித்திட வேண்டுகிறேன்.

கடந்த ஆண்டு பலத்த மழையின் காரணமாக என்னுடைய பகுதியிலே விவசாயம் பாழடைந்திருப்பதால் என்னுடைய பகுதியை வறட்சிப் பகுதி என்று அறிவித்து, சர்க்கார் சாமக்குளம் பகுதியில் நிலவரியை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே உள்ள ஆகாய விமான நிலையத்தை விரிவு படுத்த மத்திய அரசாங்கத்திற்குத் தமிழக அரசு பரிந்துரை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் புதிய தொழிற்சாலைகளை நிறுவ எந்தெந்த வகைகளிலே இந்த அரசு திட்டங்களைத் தீட்டுகிறது, அந்தத் திட்டங்களை எந்தெந்த வகைகளிலே செயல்படுத்தப் போகிறது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

படித்த பட்டதாரிகளுக்கு அரசாங்க அலுவலகங்களில் மட்டும் வேலை வாய்ப்புகள் தர வேண்டுமென்று இல்லாமல் மற்ற பஞ்சாலைகளிலும், கனரகத் தொழிற்சாலைகளிலும் வேலைவாய்ப்பு அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இருக்கின்ற தொழிற்சாலைகளை விரிவுபடுத்த ஆவன செய்ய வேண்டுமென்



1980 ஜூன் 27] [திரு. ஏ. டி. குலசேகர்]

நாராயணசாமி நாயுடு அவர்களின் ஒன்பது அம்சக் கொள்கைகளை ஏற்று, ரத்து செய்வோம் என்று கூறிய நீங்கள் அனைத்துக் கடன்களையும் ரத்து செய்ய உடனடியாக முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கலைஞர் ஆட்சியிலே துவக்கப்பட்ட அரிசன ஏழை எளியவர்களுக்கு விடுகள் கட்டித் தருகின்ற—கிராமப்புறங்களிலே கட்டித் தருகின்ற திட்டத்தை இந்த அரசு உடனடியாக அமல் நடத்தி, எங்கள் தொகுதியைப் போன்ற வறட்சியான பகுதிகளுக்கு அரிசனங்களுக்கும், ஏழை எளியவர் களுக்கும் பயன் கிடைக்கும் வகையில் இந்தத் திட்டம் அமைய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு மழையின் காரணமாக என்னுடைய தொகுதி முழுவதும் பாலங்கள் மிகவும் இடிந்து விட்டதால் அந்தப் பாலங்களை உடனடியாகச் செப்பனிட இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பேருந்து வசதிகளைப் பொறுத்தவரையில், அவசரத் தேவைகளில்கூட பேருந்து வாகன வசதிகள் எதுவுமே செல்ல முடியாத நிலைமை எங்கள் பகுதியில் இருக்கிறது. ஒரு நோயாளியை அவசரமாக ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரவேண்டுமானால்கூட எந்த வாகனத்திலேயும் கொண்டு வர முடியாது. கட்டை வண்டியிலே வைத்துக்கொண்டு வந்துதான் மெயின் ரோட்டுக்கு வர வேண்டும்.

குறிப்பாக, இந்த அரசு அளித்த தேர்தல் கால வாக்குறுதிகளைக் காற்றிலே பறக்க விட்டு விட்டார்கள். நீங்கள் சொன்ன எதுவும் ஆளுநர் உரையில் இல்லை. எனவே, இந்த ஆளுநர் உரையை ஏற்க முடியாது என்று கூறி, பேச வாய்ப்பளித்தமைக்காக மிகுந்த நன்றியைக் கூறி விடை பெறுகிறேன்.

(பிற்பகல் 1-20)

* **திரு. ந. குலசேகர பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, புரட்சித் தலைவர் அவர்களுடைய நல்லாசியுடன் வாணியம் பாடி சட்டமன்றத் தொகுதியின் பிரதிநிதியாகிய நான் இங்கே உங்கள் முன்னே நிற்கின்றேன். சிறுபான்மை சமுதாயத்தினர், முஸ்லீம் சமுதாயத் தினர் பெரும்பான்மையாக உள்ள பகுதியிலேயிருந்து நான் தேர்ந்தெடுக்கப் பட்டு வந்திருக்கிறேன் என்றால், அந்த வாய்ப்பினை அளித்த, என்னுடைய

[திரு. ந. குலசேகரபாண்டியன்] [1980 ஜூன் 27

சட்டமன்ற தொகுதி மக்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை நான்
தெரிவித்துக்கொண்டு. இந்த ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் நிர்மா
னத்தோடு, என்னுடைய நன்றியையும் பாராட்டுக்களையும் சொல்ல நான்
இங்கே உங்கள் முன்னால் நிற்கிறேன்.

தமிழகம் முழுவதும் நடந்த இந்தச் சட்டமன்றத் தேர்தல் நேர்மை
யாகவும் நீதியாகவும் நடைபெறவில்லை என்றெல்லாம் குற்றச்சாட்டுக்களை
அடுக்கடுக்காகச் சொல்லியிருந்தார்கள். தேர்தல் நடைபெற்றபொழுது
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்
பிலே இல்லையென்பதை அவர்கள் உணர்ந்து அத்தகைய குற்றச்சாட்டு
களைச் சொல்லியிருக்க வேண்டும். அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பு
அளிக்கப்பட்டு வந்தது. தேர்தல் நேரத்திலே தமிழகம் முழுவதும் வன்
முறைச் சம்பவங்களால் ஏறத்தாழ 20-க்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் ஏற்
பட்டிருக்கின்றன. அவர்களில் பாதிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும்
அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்
என்பது மிகவும் தெளிவான ஒன்றாகும். மதுராந்தகத்தைச் சேர்ந்த
அப்துல்லா என்ற வாலிபன் உயிருடன் கொளுத்தப்பட்டிருக்கிறான். அவன்
செய்த குற்றம் என்ன? அனைத்திந்திய அண்ணா தி.மு. கழகத்தைச்
சேர்ந்தவன் என்பதைத் தவிர வேறு ஒன்றும் சொல்ல முடியாது. முஸ்லீம்
மக்கள் பெரும்பான்மையாக வாழும் என்னுடைய தொகுதியில் அவர்கள்
எனக்கு பகிரங்கமாக வேலை செய்து வாக்களித்திருக்கிறார்கள். அது
நிச்சயமாக எனக்கு அளித்த வாக்கு அல்ல. சிறுபான்மை மக்களுக்குப்
பாதுகாப்பு அளிக்க புரட்சித் தலைவரின் அண்ணாவின் அரசால் மட்டுமே
முடியும் என்ற நம்பிக்கையில்தான் எனக்கு வாக்களித்து, என்னை அவர்கள்
வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள், என்று இங்கே நான் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன்.

என்னை எதிர்த்து போட்டியிட்டவர் வாக்கை 30,001-இலிருந்து எண்ண
வேண்டும் என்றும், என்னுடைய வாக்கை 1-இலிருந்து எண்ண வேண்டு
மென்றும் சொன்னார்கள். ஆனால், ஓட்டுச் சீட்டை எண்ணுகின்ற நேரத்
திலே, அவர்கள் 30,000-இலிருந்து 34,000 வரைதான் வாக்குகள் பெற
முடிந்தது. ஆனால், என்னுடைய வாக்குப் பெட்டிகளிலே, 1-இலிருந்து
38,000 வரை அளித்து வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள் என்று சொன்
னால், அதற்காக, அந்தச் சமூகத்தினருக்கு நன்றி சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறேன் என்பதையும், அவர்களுக்காக என்னுடைய நேரம் இந்த



1980 ஜூன் 27] [திரு. ந. குலசேகரபாண்டியன்]

அவையிலே ஒலிக்கும் என்பதையும் எங்கள் அரசு என்றென்றும் அவர்
களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்பதையும் நான் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியிலே, தேர்தல் சமயத்திலே, முஸ்லிம்களிடத்தில்
மத, இன உணர்வுகளை ஏற்படுத்தினார்கள். ஆனால், நிச்சயமாக பலன்
ஏதும் இல்லை. எதிர் அணியிலே இருக்கக்கூடியவர்கள் தமிழனுக்குத்தான்
வாக்களிக்க வேண்டும், தமிழன், தமிழன் என்று எதிர்த்தரப்பிலே இருக்கக்
கூடியவர்கள், என்னுடைய தொகுதியிலே பரவலாகப் பிரச்சாரம் செய்
தார்கள். என்னுடைய தொகுதியிலே தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்த
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் கூட தேர்தல் பிரச்
சாரத்தைத் துவங்குகிற நேரத்திலே, அவர் வழக்கமாக தமிழகம் முழுவதும்
சொல்வதைப்போல, தமிழனுக்கு வாக்களிக்க வேண்டுமென்று சொன்ன
பொழுது, மிகப் பெரிய ஆரவாரம் ஏற்பட்டது. அதற்குக் காரணம்,
மதிப்பிற்குரிய லத்தீப் அவர்களையும், குலசேகரப்பாண்டியனையும்
போட்டியில் நிறுத்திவிட்டு, தமிழனுக்கு வாக்களியுங்கள் என்று சொன்னால்,
எனக்கு ஆதரவாக, தேர்தல் பிரச்சாரத்திற்கு புரட்சித் தலைவர் வரமுடிய
வில்லை, ஆகவே, கலைஞர் ஆதரவாக பிரச்சாரத்திற்கு வந்து விட்டாரா,
என்றுகூட நான் நினைத்து ஆச்சரியப்பட்டேன். அதற்குப் பிறகு அருகிலே
யிருந்த மாண்புமிகு லத்தீப் அவர்கள் நிலைமைகளைச் சொன்ன பிறகு,
சுதாரித்துக்கொண்டு, நான் அந்த விதத்திலே சொல்லவில்லை, லத்தீப்பும்
தமிழர்தான், அவரும் நம்முடைய சமுதாயத்தைச் சேர்ந்தவர்தான்,
திராவிட முன்னேற்றக் கழகக்காரர்கள் அவருக்கே வாக்களிக்க வேண்டும்,
அவர் நம்முடைய அபேட்சகராக நிற்கிறார், அவருக்கு வாக்களிக்க வேண்டு
மென்று சொல்லி, தன்னை நிலைபடுத்திக்கொண்டு யாருக்கு வாக்களிக்க
வேண்டுமென்று தெளிவாக பேச்சைத் துவங்கினார்கள். ஆகவே, அப்படிப்
பட்ட நிலைமைகளையெல்லாம் எதிர்த்து, என்னுடைய தொகுதி மக்கள்,
அதிலும் குறிப்பாக, முஸ்லிம் சமுதாயத்தினர் பெரும்பான்மையினராக
வாழுகின்ற பகுதியிலே உள்ள மக்கள், பெருவாரியாக எனக்கு வாக்களித்
திருக்கிறார்கள் என்பது ஓட்டுப் பெட்டிகளை. பூத் வாரியாக எண்ணியிருப்ப
தால், அந்த எண்ணிக்கையைப் பார்த்தாலே தெரியும். ஆகவே, எதிர்
அணியினர் திட்டமிட்டு செய்யக்கூடிய பிரச்சாரத்தை மக்கள் இன்று ஏற்றுக்
கொள்வதாக இல்லையென்பதைத்தான் இதன்மூலம் நான் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன்.

நாடாளுமன்றத் தேர்தலில் நிலையான ஆட்சி வேண்டுமென்றார்கள்,
மக்கள் வாக்களித்தார்கள். நிலையாக இருந்த ஆட்சியைக் கலைத்தது ஏன்?
தமிழகத்தில் நிலையான ஆட்சியை அளிக்கக்கூடிய ஒரே கட்சி

[திரு. ந. குலசேகரபாண்டியன்] [1980 ஜுன் 27.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று மக்கள் மீண்டும் தீர்ப்பளித்து வாக்களித்திருக்கிறார்கள் என்று நினைக்கும்போது தமிழக மக்களுக்கு நிச்சயமாக நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன். இந்த வெற்றி மகத்தான வெற்றி. இது சத்தியத்திற்குக் கிடைத்த வெற்றி, தர்மத்திற்குக் கிடைத்த வெற்றி, நீதிக்கும், நியாயத்திற்கும் கிடைத்த வெற்றி. வன்முறைக்கும், இன, ஜாதி, சமய உணர்வுக்கும் எதிராகக் கிடைத்த வெற்றி. புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில் சொன்னதைச் செய்வார், செய்வதைச் சொல்வார். உண்மையைச் சொல்வார், உளமார உழைப்பார். அதுவும் இந்தத் தமிழக மக்களுக்காகவே இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் கூட தங்களுடைய பேச்சின் இடையே ஏராளமான வாக்குறுதிகளைப் புரட்சித் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அவைகளை நிறைவேற்றவில்லை என்று சொன்னார்கள். நிச்சயமாக புரட்சித் தலைவர் அவர்களும் எங்களுடைய அரசும் அவைகளைப் படிப்படியாக நிறைவேற்றும். அதற்கான முயற்சிகளிலே ஈடுபடுவோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஒரே நாளில் மாயாபஜார் போல நினைத்ததை முடித்துத்தருவதற்குக் காரியங்கள் சாத்தியப்படாது என்பதைத் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய அரசின் சார்பாக அளிக்கப்பட்ட ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டவைகளை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்ணாவின் கொள்கைகளை நிறைவேற்ற உறுதிபூண்டு உள்ளது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது பாராட்டக்கூடிய ஒன்றாகும். அண்ணாவின் அரசு தொடர்ந்து தமிழகத்திலே நடைபோட்டுக்கொண்டு வருகிறது. திராவிடப் பாரம்பரியம் மிக்க உணர்வுகளைப் பாதுகாப்பதற்காக இந்த அரசு செயல்பட்டு வருகிறது என்பதை நேர்மையான, நாணயமான, தூய்மையான நல்ல ஆட்சியை நிலைநாட்டி தொடர்ந்து பாடுபட்டு வருவது என்ற உறுதி ஆளுநர் உரையில் தரப்பட்டு இருப்பது நிச்சயமாகப் பாராட்டப் படவேண்டிய ஒன்றாகும். அண்ணாவின் இரு மொழிக் கொள்கைகளைத் தொடர்ந்து கடைப்பிடிக்க உறுதி பூண்டு இருப்பதும், விவசாயிகள் நலக் குழு அமைக்க அரசு முடிவு செய்து உள்ளதும் போன்ற திட்டங்கள் நிச்சயமாக அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயி கள் கூட்டமைப்புகள் பற்றி அரசு எடுக்கும் நடவடிக்கைகள் பாராட்டப்பட வேண்டியதாகும்.



1980 ஜுன் 27] [திரு. ந. குலசேகரபாண்டியன்]

கூட்டுறவு நிறுவனங்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்திலே, கூட்டுறவுத் தத்துவங்கள் சீரழிக்கப்பட்டு கூட்டுறவுத் தத்துவம் என்பதற்குப் பொருள் இல்லாமல் சுரண்டக்கூடிய அங்கமாக மாற்றப்பட்டதை இன்றைய தினம் அந்தக் கூட்டுறவு சட்டத்திற்கு சில திருத்தங்களைக் கொண்டுவர விருப்பதும், அந்தக் கூட்டுறவு அமைப்புகளுக்கு தேர்தல்கள் நடத்துவது பற்றியும், ஆளுநர் உரையில் குறிப்பிட்டிருப்பதற்காக நிச்சயமாக நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அது பாராட்டப்படக்கூடிய ஒன்றாகும்.

நதிநீர் பங்கீடு பற்றி தீர்வு காண அரசு அண்டை மாநிலங்களுடன் சுமுகமாகப் பேச்சுவார்த்தை மேற்கொண்டு இருப்பதும் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரிய ஒன்றாகும்.

மத்திய அரசின் முதலீடு தமிழகத்திலே குறிப்பாக குறைந்து வந்திருக் கிறது. இங்கே மத்தியிலே ஒரு ஆட்சியும் மாநிலத்திலே ஒரு ஆட்சியும் இருக்கிறது. அதனால்தான் இப்படி என்ற உணர்வுகள் ஏற்படக்கூடாது என்ற வகையிலே மத்திய அரசு தமிழகத்தில் தன் முதலீட்டை அதிகப்படுத்த வேண்டும்.

கோவையிலே, திருச்சியிலே பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தும் முயற்சி பாராட்டப்படக் கூடிய ஒன்றாகும்.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக மாற்றும் முடிவைப் பற்றி என்னுடைய மாவட்டத்து உறுப்பினர் அவர்கள் இது வெறும் கண்துடைப்பு என்று சொன்னார்கள். என்னைப் பொறுத்தவரையில், கண்துடைப்பு என்று ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. ஊராட்சி ஒன்றியத்தின் ஆசிரியர்கள் என்னிடம் வந்து பெயரளவில் நாங்கள் பி.டி.ஓ. கன்ட்ரோலில் இருந்தாலும் கூட அரசு ஊழியர்களாக அறிவித்ததற்கு மகிழ்ச்சி தெரிவித்தார்கள். இது மிகவும் பாராட்டத்தக்க ஒன்றாகும். அதை ஆளுநர் உரையில் தந்திருப்பது நிச்சயமாக வரவேற்கத் தக்கதாகும். மேலும் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக அறிவித்ததை என் நண்பர் வரவேற்றிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

18 வயது உடையவர்களுக்கு வாக்குரிமை தரப்பட்டிருப்பது தமிழகத்து மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் ஆகும். இது நிச்சயமாகப் பாராட்டக் கூடிய ஒன்றாகும்.

[திரு. ந. குலசேகரபாண்டியன்] [1980 ஜூன் 27

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு எடுத்துவரும் பல்வேறு நடவடிக்கை
களையும், முறைப்படுத்தப்படாத தொழில்களில் வேலை செய்து வரும்
தொழிலாளர்களுக்கு உரிமைகளை கொடுப்பதற்காகச் சட்டம் கொண்டு
வருவதும் மிகவும் பாராட்டக்கூடிய ஒன்றாக இருக்கிறது.

(பிற்பகல் 1-30)

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், மிகவும் சிறப்பாகக் கூறக்
கூடிய ஒன்று என்னவென்று சொன்னால், அகில இந்தியாவிலும் தோல்
பதனிடும் தொழில் துறையில் 400 கோடி ரூபாய் அந்நியச் செலாவணி கிடைக்
கிறது என்று சொன்னால், தமிழகத்தில் மட்டும் ஏறத்தாழ 70 சதவிகிதம்
அதாவது கிட்டத்தட்ட 300 கோடி ரூபாய் அளவிற்கு அது வருகிறது என்று
சொன்னால், அதில் குறிப்பாக ஆம்பூர், வாணியம்பாடி பகுதியில் மட்டும் 200
கோடி ரூபாய் அளவிற்கு அந்நியச் செலாவணி கிடைக்கிற நிலைமை இருக்
கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, அதை ஊக்குவிக்க
அரசாங்கம் அந்தத் தொழில் துறையில் ஊக்கம் காட்ட வேண்டும் என்று
கேட்டுக்கொண்டு. நேரம் அதிகமாகிவிட்ட காரணத்தால், இத்துடன்
என்னுடைய உரையை முடித்துக் கொண்டு, ஆளுநர் உரைக்கு என் நன்றியை
தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : இன்றைய காலை நிகழ்ச்சி
கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

(மாலைக் கூட்டம்)

சட்டமன்ற பேரவை மீண்டும் மாலை 4.00 மணியளவில் மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில்
கூடியது.

**திருமதி டி. யசோதா** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்
களே, இந்த மாமன்றத்திலே உறுப்பினராக என்னைத் தேர்ந்தெடுத்ததற்காக
என்னுடைய தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கு என்னுடைய நன்றியையும்
வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



1980 ஜூன் 27] [திருமதி டி. யசோதா]

அதைப்போல, இந்த மாமன்றத்திலே என்னுடைய கருத்துக்களைச்
சொல்வதற்கு முன்பாக மறைந்த எங்கள் இளம் தலைவர் சஞ்சய் காந்தி
அவர்களுக்கு இந்த மாமன்றம் தெரிவித்த அனுதாபத்தையும் அன்னாருக்காக
தமிழ்நாடு அரசாங்கம் விடுமுறை தந்ததையும் நன்றியோடு கவனம் கூர்ந்து
எங்கள் அருமைத் தலைவருக்கு தமிழ்நாடு அரசின் சார்பிலே நீங்கள் இன்னும்
ஒரு படி மேலே சென்று நினைவுச்சின்னம் அமைக்க வேண்டுமென்று என்னு
டைய உரையைத் தொடங்குவதற்கு முன்னதாகப் பணிவோடு வேண்டிக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சட்டமன்றத்தை இன்றைக்கு கலைத்ததற்குப் பிறகு
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழகத்திலே ஏற்பட்டிருக்
கிறது. அதிலே பேசிய பெரியவர்கள் எல்லாம் என்ன சொன்னார்கள்
என்றால் குறிப்பாக கலைக்கப்பட்ட அரசாங்கத்தை மறுபடியும் மக்கள்
கொண்டு வந்திருக்கிற காரணத்தால் இந்தக் கலைப்பு சரியல்ல என்பதைத்
தமிழக மக்கள் தெரிவித்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். அதிலே
என்னைப் பொறுத்தமட்டில் சற்று கருத்து வித்தியாசமாகக் குறிப்பிட
விரும்புகிறேன். கலைத்தது 9 மாநிலங்களாக இருக்கும்போது 8 மாநிலங்
களிலே இருக்கிற மக்கள் கலைத்தது சரி என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள்.
தமிழ்நாட்டிலே மட்டும் கலைத்தது சரியல்ல என்று தீர்ப்பளிக்கவில்லை.
சில பல அரசியல் காரணங்களுக்காக இங்கே இந்த மாற்றம் கொடுக்கப்பட்டிருக்
கிறது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இங்கே குறிப்பிட்டவர்கள் பேசும்போது சொன்னார்கள்.
எங்களுடைய தலைமையில் இருக்கிற அமைச்சர்களை மிகக் கேவலமான
முறையிலே கடுமையாகத் தாக்கிப் பேசியதை இங்கே கேட்டுக்கொண்டிருக்கி
றீர்கள். தமிழ்நாட்டிலே கலைக்கப்பட்ட அரசாங்கம் மறுபடியும் வந்தது
என்று சொல்லும்போது, அதற்காக மானம், மரியாதை, சூடு சொரணை
இருக்கிற அமைச்சர்கள் இராஜிநாமா செய்யவேண்டாமா என்று சொன்னார்
கள். அவர்கள் 8 மாநிலங்களிலே மீண்டும் காங்கிரஸ் அரசைக் கொண்டு
வந்திருக்கும் நேரத்திலே, அங்கே புதிய அரசை உருவாக்கியிருப்பதற்கு அவர்
கள் என்ன பொறுப்பு ஏற்க இருக்கிறார்கள் என்று தெரிந்துகொள்ள ஆசைப்
படுகிறேன்.

இதற்கு ஒரு முன் உதாரணமாக அன்றைக்கு இருந்த ஜனதா அரசு
பாராளுமன்றத் தேர்தலிலே வெற்றி பெற்ற உடனே, வெற்றிபெற்ற மாநிலங்
களில் எல்லாம் சட்டமன்றத்தைக் கலைத்தார்கள். அப்போது அவர்களுக்கு

[திருமதி டி. யசோதா] [1980 ஜூன் 27

'லாலி' பாடினார்கள். அன்றைக்கு அவர்களுக்கு எல்லா வகையிலும் ஒத்துப் பாடினார்கள். அன்றைக்கு சரி என்று விவாதித்தவர்கள் இன்றைக்கு இந்திய தேசிய காங்கிரஸ் செய்தது சரியல்ல என்று சொல்கிறார்கள். அன்றைக்கு அவர்களுக்கும் அதே சூடு, சொரணை, மானம், ரோசம் இருந் திருக்க வேண்டாமா என்று கேட்க ஆசைப்படுகிறேன். அன்றைக்கு அந்த நிலையிலே இருந்துவிட்டு, இன்றைக்கு இப்படிப்பட்ட ஒரு நிலையைத் தேடிக் கொண்டிருப்பது நிச்சயமாக பாரபட்சமாகத்தான் இருக்கமுடியும் என்று கூற விரும்புகிறேன்.

அடுத்து இங்கே சொல்லவேண்டுமென்றால், தேர்தல் இங்கே சுமூகமாக நடைபெற்றதாக நம்முடைய கவர்னர் உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே சொல்லவேண்டுமென்றால் தேர்தல்—என்னுடைய தொகுதி யைப் பொறுத்தமட்டில் கூட—சுமூகமாக நடைபெறும் சூழ்நிலை இல்லை. அங்கே ஏற்பட்ட கலவரங்களை எல்லாம் அந்த மக்கள் தாங்கிக்கொண்டு, இந்திய தேசிய காங்கிரஸ் வெற்றிபெறும் சூழ்நிலையை உருவாக்கித் தந்தார் கள். அதற்குப் பிறகு கவர்னர் உரையிலே, 'கசப்பை மறந்துவிடுங்கள்' என்று சொல்லியிருக்கிறார்கள். மறந்துவிடுவதற்கு நாங்கள் முயற்சி செய்கிறோம். ஆனால் ஆளுகின்ற பொறுப்பிலே இருக்கிறவர்கள் மேலும் மேலும் என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டுமோ அத்தனையையும் செய்து கொண்டிருக்கிறார் கள்.

உதாரணமாக, ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் எனது வெற்றிக்காகப் பாடு பட்டவர், அரிசன சகோதரர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்—அவர் இன்றைக்கு 307-லே அங்கே சப்-ஜெயிலிலே இருந்துகொண்டிருக்கிறார். என்ன காரணம் என்பதை உற்று நோக்குகின்றபோது அங்கே இரண்டு பேர்களுக்கு நீண்டகாலமாகத் தகராறு இருந்து வருவதுதான் காரணம். ஆனால் அந்தத் தகராறை இன்றைக்கு அரசியல் ஆக்கி, அதற்கு அரசியல் மூலாம் பூசி இன்றைக்கு அவர் உள்ளே வைக்கப்பட்டிருக்கிறார். அவரைக் கைது செய்வ தற்கு முன்னதாகவே நான் போய் போலீஸ் அதிகாரியைப் பார்த்தேன். எஸ்.பி. அவர்களைப் பார்த்தேன் அது ஒரு சொந்தக் காரணங்களுக்கான தகராறுதான் என்றும் சமாதானமான முறையிலே தீர்த்துக் கொள்ளலாம் என்றும் சொன்னபோது அந்த அதிகாரி அவர்கள் அதாவது எஸ். பி. அவர்கள் ஒப்புக்கொண்டு துணைப் போலீஸ் அதிகாரி ஒருவரை நியமனம் செய்து, நீங்களும் இன்னும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்களும், திராவிட முன்னேற்றக்கழகத்துக்காரர்களும்



1980 ஜூன் 27] [திருமதி டி. யசோதா]

காங்கிரஸ்காரர்களும் சேர்ந்து பல பெரியவர்களையும் வைத்துக்கொண்டு ஞாயிற்றுக்கிழமை மதியம் கூடி சமாதானமாக முடிவெடுத்து அந்தப் பகுதி யிலே சமாதானம் ஏற்படுத்துங்கள், நாங்கள் 307 செக்ஷன் போட மாட்டோம் என்று உறுதி கூறியபிறகும் 307 செக்ஷன் போடப்பட்டு இன்றைக்கும் அவர் வெளியே வராமல் இருக்கும்போது சமாதானக் கமிட்டியை எப்படி உருவாக்க முடியும் என்றுதான் நான் கேட்க ஆசைப்படுகிறேன். கசப்புக்களை மறந்து விடுங்கள் என்று சொல்வதை விட்டு அதைச் செயல்படுத்துங்கள் என்றுதான் இந்த நேரத்திலே நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

இன்னும் கூடச் சொல்லவேண்டுமென்றால் என்னுடைய தொகுதியாகிய ஸ்ரீபெரும்புதூர் உங்கள் அனைவருக்கும் தெரியும்—மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லுகின்றார்கள், நாங்கள் பள்ளிக்கூடம் சென்று வருகின்ற போது பசியோடு வருகின்றபோது எங்களுக்கு எங்கள் தாய் ஒரு கவளம் சோறு கூடக் கொடுக்க முடியாமல் துடித்து பட்ட வேதனையைப் புரியாதவன் அல்ல, அதைப்போல தமிழகத்திலே இருக்கின்ற தாய்மார்கள் துயர் துடைப்ப தற்குப் பாடுபடுவேன் என்று சொன்னார்கள். அந்த வாசகம் என்னைக் கூட உலுக்கியது. அப்படி எத்தனை தாய்மார்களை அந்த வாசகம் உலுக்கி இருக்குமோ தெரியவில்லை. ஆனால் நான் அதையே உங்கள் முன் வைத்து தெரிவித்துக்கொள்கிறேன், உங்களுக்கு ஒரு கவளம் சோறுகூடக் கொடுக்க முடியாமல் உங்கள் தாய் துன்பப்பட்டதை விட என்னுடைய தொகுதியிலே தாய்மார்கள் மாடு மேய்த்துவிட்டு வருகின்ற, பள்ளிக்கூடங்களுக்குச் சென்று வருகின்ற தங்கள் குழந்தைகளுக்கு ஒரு டம்ளர் தண்ணீர் கூடக் கொடுக்க முடியாமல் துடிக்கின்ற துடிப்பினை உணர்ந்து அந்தக் குடிதண்ணீர்ப் பிரச்சி னையைத் தீர்ப்பதற்கு முயற்சிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப் படுகிறேன். உங்களுடைய வாசகத்திலே கூறப்பட்டிருக்கும் அந்த நிலையினை உண்மையிலேயே நீங்கள் உணருவீர்களேயானால் என்னுடைய தொகுதியிலே மட்டுமல்ல, பல தொகுதிகளிலே குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையில் அதற்கான திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதியின் பெயர் ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, அங்குள்ள நிலை என்னவென்றால் எல்லா பஸ்களும் வரும், போகும். சென்னையிலே இருந்து காஞ்சிபுரம் போகும் பஸ் ஸ்ரீபெரும்புதூர் வழியாகத்தான் போகும். வேலூரிலே இருந்து சென்னைக்கு வரும் பஸ் அந்த வழியாகத்தான் வரும்.

[திருமதி டி. யசோதா] [1980 ஜூன் 27

எல்லா பஸ்களும் போகும், எல்லா பஸ்களும் வரும். ஆனால் அந்தத் தொகுதியிலே இருக்கின்ற மக்களுக்கு அந்த பஸ்களிலே ஏறுவதற்கு பாக்கியம் இடையாது. ஸ்ரீபெரும்புதூரிலிருந்து காஞ்சிபுரம் போகவேண்டுமென்றால் இடம் இல்லை என்று சொல்கிறார்கள். சென்னையிலே இருந்து நேராக காஞ்சிபுரம் செல்பவர்களை மட்டும்தான் ஏற்றிக்கொள்கிறார்கள். அது போலத்தான் வேலூரிலே இருந்து வருகின்ற பஸ்ஸிலும் வேலூரிலே இருந்து நேராக சென்னை வருபவர்களைத்தான் ஏற்றிக்கொள்கிறார்கள். ஆகவே அங்கே உள்ள மக்களுக்கு பஸ்ஸிலே ஏறுவதற்கு வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும். இரயில்வேயைப் பொறுத்தவரையில் எப்படி ஒவ்வொரு ஸ்டேஷன்களுக்கும் எத்தனை எத்தனை கோட்டா டிக்கெட் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறதோ அதைபோல பஸ்ஸிலே பயணம் செய்பவர்களுக்கும் வசதியாக கண்டக்டரிடத்திலே சொல்லி, இன்ன இன்ன இடங்களிலே இவ்வளவு இவ்வளவு பேர்களை ஏற்றிக்கொள்ள வேண்டும் என்று சொல்லுகின்ற அளவுக்கு ஒரு ஆணையை நீங்கள் கட்டாயம் பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல சுங்குவார்சத்திரம் யாருக்கும் தெரியாத ஒன்றல்ல. பல இடங்களுக்குச் செல்லுகின்றபோது நிச்சயமாக அதைத் தாண்டித்தான் செல்ல வேண்டும். அந்த சுங்குவார்சத்திரம் சாதாரணமாக பயணிகள் இறங்குகின்ற இடம். அப்படி இறங்குகின்றபோது அங்கேயுள்ள பெண் பயணிகளுக்கு ஒதுங்குவதற்கு ஒரு சிறிய கக்கூஸ் வசதி கூட அங்கு இல்லை. ஒரே ஒரு கக்கூஸ் இருக்கின்றது. அதிலேயும் முள்ளை அடைத்து வைத்திருக்கிறார்கள் உள்ளே யாரும் போக முடியாது. அது மிகச் சிறிய பஞ்சாயத்தாக இருப்பதால் வருமானம் குறைவாக இருக்கின்ற காரணத்தால் அங்கே இருக்கின்ற அந்த கக்கூஸைப் பஞ்சாயத்து யூனியனால் பராமரிக்க முடியாத காரணத்தால் அங்கே வருகின்ற பெண் பயணிகள் மிகவும் பரிதாபத்திற்குரிய சூழ்நிலையில் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது முக்கியமாகத் தீர்க்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தாற்போல நான் அந்தத் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். அரிசனங்களுக்கு சிறப்பான திட்டத்தை அறிவிக்க இருக்கின்றோம் என்று சொல்கிறீர்கள். ஆனால் மொத்தமாக அப்படிச் சொல்லாமல் குறிப்பிட்டு சிறப்பாக



1980 ஜூன் 27] (திருமதி டி. யசோதா)

என்னென்ன திட்டங்களை அறிவிக்க இருக்கிறீர்கள் என்பதை சொன்னால் எங்களுக்கு அது நன்றாக இருக்கும் என்பதைத்தான் நான் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

தாழ்த்தப்பட்டவர்களுக்காக பல கமிஷன்கள் அமைக்கப்பட்டு, அவர்கள் அறிக்கைகள் கொடுத்திருக்கிறார்கள். அப்படி பல அறிக்கைகள் வந்திருக்கின்றன. அந்த அறிக்கைகள் எல்லாம் எந்த நிலையிலே இருக்கின்றன; அந்த அறிக்கைகள் வந்திருக்கிறது. இளையபெருமாள் அறிக்கை பரமேஸ்வரன் அறிக்கை வந்திருக்கிறது. இன்னும் பல அறிக்கைகள் வந்திருக்கின்றன.

(மாலை 4.10)

அந்த ஹரிஜன மக்கள் பற்றிய அறிக்கை மீது என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்று நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். இறுதியாக ஒன்று கூறி விடைபெறலாம் என்று நினைக்கிறேன். இந்த கவர்னர் உரையை பழரசம் என்று சொன்னார்கள். இது பழரசமாக எங்களுக்குத் தென்படவில்லை. ஷர்பத் வண்டியை எடுத்துச்செல்லும்போது அந்த ஷர்பத் வண்டியில் பல பாட்டில்கள் இருக்கும். அவற்றில் கலர் தண்ணீர் எடுத்துச் செல்வார்கள். அதேபோல்தான், இந்தச் சாயத் தண்ணீர் போல்தான் இந்த கவர்னர் உரை இருக்கிறது என்று கூறி, விடைபெறுகிறேன்.

**திரு. சேலம் மு. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீண்டும் இந்தச் சட்டப்பேரவையில் எனக்கு ஒரு வாய்ப்பினை நல்கிய எனது தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், அத்தகைய சூழ்நிலையை உருவாக்கித் தந்த நம்முடைய தமிழக தானைத் தலைவர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு நாலரைக்கோடி தமிழக மக்களின் நலனைப் பாதுகாக்கக்கூடிய அரசு நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில் ஏற்பட்டு இருக்கக் கூடிய புதிய அரசாகும். இந்தப் புதிய அரசாங்கத்தின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் கோடிட்டுக் காட்டவேண்டியதுதான் ஆளுநர் அவர்களின் உரையின் சாராம்சமாகும். எனக்கு முன் பேசிய சகோதரி யசோதா அவர்கள் எங்களுடைய ஆளுநர் அவர்களுடைய உரை பழரசம் என்று சொன்னதை எதிர்த்து ஷர்பத் வண்டியில்கொண்டு செல்லக்கூடிய பாட்டில்களில் அடைத்து

(திரு. சேலம் மு. ஆறுமுகம்) [1980 ஜூன் 27

வைத்திருக்கும் பலதரப்பட்ட வண்ணங்களைக் கொண்ட கண்ணீர் என்று அவர்கள் கூறினார்கள். அது எதைக் குறிக்கிறது என்று சொன்னால் காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சளாகத் தெரியுமாம். அதே போல்தான் அவர்களுடைய கண்களுக்கு அது பலவித வண்ணங்களாக தெரிந்திருக்கிறது, அது அவர்களுடைய கண்ணில் இருக்கக் கூடிய கோளாறே தவிர இது பழு ஆறு என்று சொல்லி, விஷயத்திற்கு வருகிறேன்.

1980-ம் ஆண்டு ஜனவரி திங்களில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் முடிவுகள் வந்தபிறகு, அந்தத் தேர்தலின் முடிவுகளை வைத்துக்கொண்டு இன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையில் இருக்கக்கூடிய நண்பர்கள் ஆடிய ஆட்டம் என்ன? பாடிய பாட்டு என்ன? அரசாங்கத்தைப் பிடிக்கவில்லை, ஆனால் அவர்கள் செய்த ஆர்ப்பாட்டத்திற்கு அளவு எது? கோட்டையைப் பிடிக்கவில்லை ஆனால் அவர்கள் செய்த, அடித்த கொட்டம் கொம்மாளத்திற்கு அளவு எது? புரட்சித் தலைவர் அவர்களின் அரசு கலைக்கப்பட்டு, தேர்தல் நடந்து முடிந்த இடைக்காலத்திலேதான், கடந்த மூன்று மாதகாலமாக தமிழக தலைமைச் செயலகத்திலும் மாவட்ட தலைநகரங்களிலும் ஆளக்கூடிய கட்சியைச் சேர்ந்தவர்கள்போல் தங்கள் அதிகாரத்தைக் காட்டிக்கொண்டிருந்தார்கள். பல மாவட்டங்களில், பல அமைச்சர்கள் பட்டியலைப் போட்டுக்கொண்டு அதிகாரிகளை மிரட்டி வந்தார்கள். என்னுடைய சேலம் மாவட்டத்தில் ஒருவர் போக்குவரத்துத் துறை அமைச்சர் என்று சொல்லிக்கொண்டு அங்கே போய் வந்துகொண்டிருந்தார்கள். அதன் பெயர்தான் போக்குவரத்துத் துறை அமைச்சர். இன்று நாடகத்தில் வருவதைப்போல், ஒரு அமைச்சர்கள் பட்டியலைத் தயார் செய்து நாடகம் ஆடியவர்கள்தான் இன்றையதினம் நம்மைப் பார்த்து நகைக்கிறார்கள். நாங்கள் நகைக்கவில்லை. அவர்களைப் பார்த்து சமுதாயம் எள்ளி நகைக்கட்டும், அவர்களை மக்கள் கிள்ளி எறிந்து விட்டார்கள் கடந்த தேர்தலில். நாடாளுமன்றத் தேர்தலின்போது அவர்கள் கூறியது என்ன? இந்தியாதான் இந்திரா என்றார்கள். மக்கள் அவர்களுக்கு வாக்களித்தார்கள். அதை அவர்கள் தவறாகப் பயன்படுத்திக்கொண்டு, மக்கள் எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு எதிராக தீர்ப்பு அளித்துவிட்டார்கள் என்று நினைத்தார்கள்.

இந்த நாட்டு மக்கள் புரட்சித் தலைவர் மீது நம்பிக்கை இழந்து விட்டார்கள், ஆகவே நீங்கள் பதவியை விட்டு விலக வேண்டும், இராஜிநாமா செய்யுங்கள் என்று கூறினார்கள். ஆனால் அவர்களை இன்று கேட்கிறேன்.



1980 ஜூன் 27] (திரு. சேலம் மு. ஆறுமுகம்)

அப்படி உங்களைப் போன்று ஆரியல் நாகரிகம் அற்றவர்கள் அல்ல நாங்கள், உங்களை பதிவுக்கு பதவி விலக வேண்டும் என்று சொல்ல. நாடாளுமன்ற தேர்தலின்போது எங்களைப் பார்த்து, நீங்கள் பெற்ற வெற்றிக்காக எக்காளம் இட்டீர்கள். ஆனால் இன்று நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் மக்கள் தீர்ப்பு எவ்வாறு இருக்கிறது என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அன்று அளித்த தீர்ப்பானது மத்தியிலே நிலையான ஆட்சி வேண்டும் என்பது. கடந்த 2½ ஆண்டு காலமாக ஜனதா ஆட்சியிலே ஏற்பட்ட நிர்வாகச் சீர்கேடு களை களைவதற்காக இந்திரா காந்தி அம்மையாரின் தலைமை வேண்டும் என்று மக்கள் அப்படி தீர்ப்பு அளித்தார்கள். ஆனால் இன்றையதினம் தமிழகத்திற்குத் தேவை எம்.ஜி.ஆரா அல்லது கலைஞரா என்று தீர்ப்பு அளிக்க வேண்டிய கட்டம் வந்தபோது, மக்கள் தெள்ளத் தெளிவாக எம்.ஜி.ஆரி னுடைய தலைமை தான் வேண்டும் என்று லட்சோப லட்சம் வாக்காளப் பெருமக்கள் தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். 72,498,000 வாக்காளர்கள் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வாக்களித்திருக்கிறார் கள், என்றால், வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ள, ஏழை எளிய பாட்டாளி மக்களுடைய ஒடுக்கப்பட்டவர்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கக் கூடியவர் புரட்சித் தலைவர் ஒருவர்தான் என்பதை நாட்டு மக்கள் நிரூபித்திருக் கிறார்கள். இன்றைக்கு நம்முடைய நண்பர்களைக் கேட்கிறேன். அன்றைய தினம் ஜனநாயகத்தைப்பற்றி வாய் கிழியப் பேசியவர்களைக் கேட்கிறேன், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசு கலைக்கப்பட்ட பிறகு பாப்புலர் கவர்ன்மெண்ட், மக்கள் சர்க்கார் ஏற்படக்கூடிய நிலையிலே அவசர அவசரமாக 4 மேலவை உறுப்பினர்களை நியமித்தது சரியா, முறையா, நியாயமா என்று கேட்கிறேன். பல சில நோக்கங்களில் சட்டத்தை வளைவானது என்பதை நீங்கள் மறந்து விடக் கூடாது. இன்றைக்கு ரெப்ரசன்டேஷன் 'ஆப் பீப்பிள்ஸ் ஆக்ட்'. மக்களுடைய பிரதிநிதித்துவ சட்டத்தின் கீழ் 1951 ஆம் வருடத்தில் 74 வது பிரிவிலே இதற்கு என்ன சொல்லி இருக்கிறார்கள் என்பதைப் பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டும். 74-வது செக்ஷனைப் பார்க்கிறோம். பொதுத் தேர்தல்கள் நடந்து முடிந்து காலியான மேலவை உறுப்பினர்களின் ஸ்தானங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, அத்துடன் கவர்ன ருடைய நியமனங்கள் சேர்ந்து முறைப்படி இன்று அறிவிக்கப்பட வேண்டும் என்று இருக்கிறது * *

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. ஜே. எஸ். இராசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது ஆளும் கட்சி உறுப்பினர் பேசும்போது ஆளுநரின் செயலைப் பற்றி கண்டித்துப் பேசுவது அவையின் மரபுக்கோ, சட்டத்திற்கோ உகந்தது தானா என்பதைத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆளுநரைப் பற்றி குறிப்பிட்டுப் பேசாமல் திரு. ஆறுமுகம் அவர்கள் தொடர்ந்து பேசலாம். யாரும் அவரைப்பற்றி பேசக் கூடாது.

(மாலை 4-20)

திரு. ஜே. எஸ். இராசு : இதுவரைக்கும் அவர்கள் பேசியதை நீக்கிவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஆளுநர் அவர்களைப்பற்றிக் குறிப்பிடவில்லை. ஆளுநர் அவர்களுக்குப் பின்னால் ஒரு சக்தி இருந்தது. அது கடந்த காலத்தில் ஆட்சிப் படைத்தது என்பதைத் தான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆளுநர் அவர்கள் ஆட்சிப் பற்றி யாரும் விமர்சிக்க முடியாது. எனவே, அவரைப்பற்றி பேசாமல் இருக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அவரைப் பற்றி பேசியதை நீக்கி விடுமாறு நான் உத்தரவிடுகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: இருக்கட்டும்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது என் கடமை. அவரைப் பற்றி பேசாதீர்கள்.

திரு. சேலம் மு. ஆறுமுகம் : சட்டசபை கலைக்கப்பட்ட பிறகு குடியரசு ஆட்சித் தலைவருடைய ஆட்சி நடைபெற்றது. அவருடைய நேரடித் தலைமையிலே ஏற்பட்டதைப் பற்றி . . .



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைத் தான் நான் சொன்னேன். அவருடைய ஆட்சிப் பற்றி, நடத்தையைப்பற்றி விமர்சிக்கக் கூடாது. அதனால் அவரைப் பற்றி பேசியதை நீக்கும்படி உத்தரவிட்டேன். ஆளுநர் அவர்களை விவாதத்திற்கு இழுக்கக் கூடாது. சப்ஜக்டுக்குப் போங்கள்.

திரு. என். சங்கரய்யா : ஜனாதிபதி ஆட்சி நடைபெற்றபோது சில தவறு தங்களுடைய பரிசிலனைக்கு ஒரு அம்சத்தை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஆளுநர் அவர்களுடைய ஆட்சியில் குறைகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த ஆளுநர் ஆட்சி, பதவியில் இருக்கின்ற ஆட்சியால் நடத்தப்பட்டது. அந்த நேரத்தில் தவறுகள், குறைகள் ஏற்பட்டதைப் பற்றிச் சொல்வதற்கு எவ்வாறு உரிமை இல்லை என்று தாங்கள் கூறுகிறீர்கள்? இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆளுநரின் நடத்தையைப் பற்றிப் பேசக்கூடாது.

திரு. என். சங்கரய்யா : ஆளுநரைப்பற்றி அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதத்திலே ஆளுநரை இழுக்கக் கூடாது. நீங்கள் சொல்கிறபோது 'பேக் கிரவுண்ட்' வேறு மாதிரியாக இருக்கிறது.

திரு. என் சங்கரய்யா : ஜனாதிபதி ஆட்சி நடைபெற்றபோது சில தவறுகள் நடந்தன. அந்தத் தவறுகள் நடைபெற்றதைப் பற்றிப் பேசுவதற்கு அவை உறுப்பினருக்கு உரிமை உண்டு. அப்படிப் பல விஷயங்களை பேசியிருக்கிறோம். ஆகவே, ஆளுநரைப் பற்றித் தனிப்பட்ட முறையில் பேசுவது ஒன்று. ஆளுநர் ஆட்சியில் நடைபெற்ற நடவடிக்கைகள் என்ற முறையில் குறிப்பிடுவது வேறு ஒன்று. ஏனெனில் இந்தத் தீர்ப்பு இன்றைக்கு . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஸ்பெசிக்காக சொல்லி விடுகிறேன். "குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநர் ஒருவரைப் பற்றியோ அல்லது நீதி மன்றம் ஒன்றின் நடத்தைக்கோ களங்கம் கற்பிக்கும் வகையில் பேசக்கூடாது; மேலும் விவாதத்திற்கு வலிவூட்டும் வகையில், ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவரின் பெயரைத் தவறான முறையில் பயன்படுத்துதல் கூடாது". எனவே, ஆளுநர் இப்படிச் செய்தார் என்று சொல்வது தவறு. ஆட்சியில் நடந்த தவறுகளைப் பற்றிப் பேசலாம்.

**திரு. ரா. உமாநாத் :** துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்ன அந்த விதியே தெளிவாக இருக்கிறது. ஆளுநர் பெயரைத் தவறான முறையில் பயன்படுத்தக்கூடாது. is the point. அவரைப் பற்றி பிரச்சினையாக இருக்க இல்லை. அட்மினிஸ்ட்ரேஷனைப் பற்றிப் பேசலாம். காண்டக்டைப் பற்றிப் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஏற்கெனவே ஒரு ரூலிங் கொடுத்திருக்கிறார்கள். அதாவது, ஆளுநர் அவர்களுடைய நடவடிக்கையைப் பற்றியோ, நடத்தையைப் பற்றியோ இங்கே விமர்சிக்கக்கூடாது. அவர் பேசும்போது, ஆளுநர் அவர்கள் செய்த நியமனங்களைப் பற்றிப் பேசினார். அவர் ஆட்சியைப்பற்றி விமர்சிக்கலாம். அவர் ஆக்டைப் பற்றி விமர்சிக்கக் கூடாது.

**திரு. சேலம் மு. ஆறுமுகம் :** அவர் அட்மினிஸ்ட்ரேஷனைப் பற்றித் தான் சொல்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பல போர்டுகளிலும், கார்ப்பரேஷன்களிலும் போடப்பட்ட தலைவர்களைப் பற்றிப் பேசப் பட்டிருக்கிறது. அந்த உரிமை இருக்கிறது. ஆட்சியின் நடவடிக்கையைப் பற்றிப் பேசுவது வேறு; அவருடைய நடத்தைப் பற்றிப் பேசுவது முற்றிலும் வேறு. ஆகவே, இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஜெனரலாக அட்மினிஸ்ட்ரேஷனைப் பற்றிப் பேசலாம். ஆளுநர் அவர்கள் குடியரசுத் தலைவர் ஆட்சியில், அந்த டைம்மிலே இருந்த அரசியல் கட்சிகளின் தூண்டுதலின் பேரிலே செய்திருப்பார் என்று ஒரு இம்பியூடேஷனில், ஆளுநர் நடத்தையை குவஸ்டின் பண்ணுகிற மாதிரி இருக்கக் கூடாது.

**திரு. சேலம் மு. ஆறுமுகம் :** எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்கள் தோல்வியை மறைப்பதற்காக பத்து லட்சம் போலி வாக்காளர்கள் சேர்க்கப் பட்டதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் நாடாளுமன்றத் தேர்தலின்போது அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வுக்கு வாக்களிக்கக்கூடிய ஏழை எளிய மக்கள் வாழக்கூடிய பகுதியில் 40,000 முதல் 50,000 வாக்காளர்கள் வரை நீக்கப்பட்டிருக்கிறார்கள். மாநிலத்திலேயே பெரிய நாடாளுமன்றத் தொகுதியான திருச்செங்கோடு நாடாளுமன்றத் தொகுதியில் 64,000 வாக்காளர்கள் விடப்பட்டிருந்தார்கள். டிசம்பர் மாதத்தில் அவ்வாறு நீக்கப்பட்டிருந்தார்கள்.





தமிழகம் எங்கும் 12 லட்சம் வாக்காளர்கள் பட்டியலிலிருந்து நீக்கப் பட்டிருந் தார்கள். இது திட்ட மிட்டு அவர்கள் செய்த காரியமாகும். அப்படிப்பட்டவர்கள் தான் தங்களை மீண்டும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று கோரி வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டார்கள்.

இன்றைக்கு நம்முடைய தமிழகத்தில் புரட்சித் தலைவர் ஒருவரால்தான் மீண்டும் நிலையான நல்லாட்சியை அமைத்திட முடியும் என்ற திடமான நம்பிக்கைக்கு மக்கள் வந்து விட்டார்கள். அந்த மக்கள் இன்றைக்கு அளித்த வாக்கின் அடிப்படையில் தமிழகத்தில் புதிய அரசு புரட்சித் தலைவர் தலைமையில் மலர்ந்திருக்கிறது.

இன்றைக்கு நாட்டிலே புரட்சிகளைப் பற்றிப் பேசக்கூடியவர்கள், தொழில் மயம் பற்றிப் பேசக்கூடியவர்கள், வளத்தைப் பற்றிப் பேசக்கூடியவர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். கடந்த சில மாதங்களில் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி பாதிக்கக்கூடிய வகையில் மத்திய அரசின் குறுக்கீடுகள் இடையூறுகள் இருந்து வந்ததைப் பார்த்தோம். தமிழகத்தில் மின்சாரப் பற்றாக்குறை இருக் கிறது. அதைப் போக்கி தமிழகத்தின் தொழில் வளம் பாதிக்கக்கூடாது என்பதற்காக மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலை மின்சாரப் பற்றாக்குறை காரணமாக பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக கேரள அரசோடு தமிழக அரசு பெறுகிற மின்சாரத்திற்கு அலுமினியம் தருவதாக ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது. இதற்கு முட்டுக் கட்டையாக மத்திய அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. எப்படி தொழில் வளர முடியும்? புதிய தொழில்கள் வளருவதற்கு முன்னால் இருக்கக்கூடிய தொழில்களே நசிந்து போகக்கூடிய அளவுக்கு மத்திய அரசின் நடவடிக்கை இருக்கிறது.

நடந்து முடிந்த தேர்தலில் மக்கள் 'நீங்கள் ஐந்து ஆண்டுகளுக்கு ஆளுங் கள்' என்று தீர்ப்பளித்திருக்கிறார்கள். மக்கள் தீர்ப்புக்குத் தலை வணங்கி தமிழக அரசு பொறுப்பேற்று நல்ல பல திட்டங்களைத் தீட்டி வருகிறது. எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் அந்தக் கூட்டணியைச் சார்ந்தவர்கள் தேர்த லின்போது மக்களுக்குப் பலவிதமான வாக்குறுதிகளை, அழகான வாக்குறுதி களை எல்லாம் தந்தார்கள். ஆனால் மக்கள் உங்களை நம்பவில்லை. புரட்சித் தலைவர் தலைமையில்தான் தமிழகத்தில் வளமான ஆட்சியை மீண்டும் காண முடியும் என்று மக்கள் நம்பியிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அரசு கொடுத்த வாக்குறுதிகளை படிப்படியாக நிறைவேற்றும். அதிலே எந்த

விதமான சந்தேகமோ, சந்தர்ப்பவாதமோ தேவையில்லை. வறுமைக் கோட்டுக் கீழேயுள்ள மக்களுக்கு அளித்துள்ள வாக்குறுதிகள் நிச்சயமாக படிப்படியாக நிறைவேற்றப்படும்.

தமிழ் பல்கலைக் கழகம் அமைக்கப்படும் என்று புரட்சித் தலைவர் அரசு அறிவித்திருப்பதை நிச்சயமாக எல்லா தமிழ் மக்களும் வரவேற்பார்கள். காரைக்குடியில் பல்கலைக் கழகம் உருவாவதும் வரவேற்கத்தக்கது. அலிகார், காசி பல்கலைக் கழகங்களை அரசு மேற்கொண்டது போல் தனியாரிடம் உள்ள, சிதம்பரத்திலுள்ள பல்கலைக் கழகத்தையும் அரசே மேற்கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 4-30)

**திரு. அ. ரகுமான்கான்:** ஒரே ஒரு விளக்கம். நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் ஆளுங்கட்சியைச் சேர்ந்த திரு. ஆறுமுகம் அவர்கள் சிறப்பாகப் பேசினார்கள். எனக்கு ஒரு சந்தேகம். வறுமைக்கோடு, வறுமைக்கோடு என்று சொன்னார், என்ன என்று விளங்கவில்லை. அதை விளக்கினால் நல்லது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வேண்டாம். நீங்கள் அமருங்கள்.

* **திரு. கு. ரமணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரையின்மீது எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் மதிப்புமிக்க அங்கத்தினர்கள் இரண்டு பேர்கள் எங்களுடைய கட்சியினுடைய கருத்துக்களை இந்த மாமன்றத்திலே முன் வைத்திருக்கிறார்கள். நானும் சில கருத்துக்களைச் சொல்ல இப்போது முன் வந்திருக்கிறேன். முதலில் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் தேர்தலில் தமிழகத்தில் இருக்கும்படியான மக்கள் தாங்கள் தேர்ந்தெடுத்து அமைத்த ஒரு அரசாங்கத்தை, ஐந்தாண்டுக்காலம் அதிகாரத்தில் இருக்கிற உரிமை அந்த அரசாங்கத்திற்கு இருக்கும் அந்த அரசாங்கத்தை எந்தவிதமான காரணமும் சொல்லாமல் செக்ஷன் 356-ன் கீழ் கவர்னருடைய ரிப்போர்ட்கூட அனுப்பாமல் வேறு எந்தவிதமான காரணமும் கூறாமல் கலைத்ததை மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது ஊரும் உலகமும் அறிந்த உண்மை. இதை யாரும் மறுப்பதற்கு முயல்வது பலன் அளிக்காது என்பது என்னுடைய கருத்து. கலைத்த அரசாங்கத்தை தாங்கள் மீண்டும்



ஆட்சியில் அமர்த்துவோம் என்று அமைத்திருக்கிறார்கள். அதிகாரம் முழுவதும் "All Powers Sovereign powers belong to the people" என்ற முறையிலே ஜனங்களுக்குத் தான் பரம அதிகாரம் உள்ளது. மத்திய அரசாங்கமோ சர்வாதிகார எண்ணம் கொண்ட ஆளுங்கட்சிகளோ அரசுகளை கலைக்கலாம். ஆனால் அவர்களால் மாநில அரசாங்கங்களை உண்டாக்க முடியாது. அதை ஜனங்கள்தான் செய்ய வேண்டும். செய்ய முடியும். அவர்கள் தான் செய்கிறார்கள். இப்போது அந்தக் காரியத்தைத்தான் ஜனங்கள் செய்து இருக்கிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தோடு உடன்பாடு கொண்ட கட்சிகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து தமிழகத்திலே உள்ள அனைத்து மக்களுடைய எண்ணங்களையும் கருத்துக்களையும் உருவாக்கி இந்த அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது என்பதை அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். எந்தவிதமான அரசியல் வித்தியாசமும் இருந்தாலும்கூட, அது இல்லாவிட்டால் ஜனநாயகம் என்பது பற்றி என்னதான் நாம் பிரமாதமாகப் பேசினாலும் அது எங்கே போய் நிற்கும் என்று தெரியவில்லை.

இங்கே ஒரு கான்ட்ராஸ்ட் எடுத்துக் காட்டப்படுகிறது. ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு 9 மாநிலங்களின் ஆட்சிகளைக் கலைக்கவில்லையா என்று சொன்னார்கள். இதே மாமன்றத்திலே அதற்கான சகல விவரங்களையும் அதற்கான எதிர்வாதங்களையும் தெள்ளத் தெளிவாக நாங்கள் சொல்லியிருக்கிறோம். நாட்டில் அப்போது ஒரு சர்வாதிகார ஆட்சி நடைபெற்றது, அரசியல் சட்டத்தை அமல்படுத்தாமல் விட்டால் அதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. சுப்ரீம் கோர்ட் உள்பட எங்கேயும் நாம் அரசியல் சட்டத்திற்கு விரோதமாகச் செல்வதை எதிர்த்து தாவா செய்ய முடியாது. ஒன்றரை லட்சம் மக்கள் அப்போது சிறையிலே தள்ளப்பட்டார்கள். கொடுமையான நிலைமை நாட்டிலே இருந்தது "Not a democratic atmosphere was there at all in this country" என்ற சூழ்நிலை நாட்டிலே இருந்தது. நாட்டிலே அப்படிப்பட்ட நிலைமையை கொண்டு வந்ததற்காக அப்போது இருந்த ஆளுங்கட்சியை மக்கள் பரிபூரணமாகத் தோற்கடித்த பிறகு மக்களின் அந்த எண்ணத்தை பிரதிபலிக்கின்ற முறையிலே சட்டப்படி 5 ஆண்டுக் காலம்தான் ஆட்சியிலே இருக்கலாம் என்றாலும்—சட்ட விரோதமாக அரசியல் நிர்ணய சபை கூட்டி அரசியல் சட்டம் மாற்றப்படாமல், அரசியல் சட்டத்திலே சொல்லப்படாத நிலையில்—6 வருடம் என்று உயிர் கொடுத்து, பாராளுமன்றத்திற்கும் சட்ட மன்றங்களுக்கும் உயிர் கொடுத்து.

(திரு. கு. ரமணி) [1980 ஜூன் 27

இருந்த நிலையில் காலாவதியாகிப் போன மாநில சர்க்கார்கள் ஏழு இருந்தன.
அப்படி அல்லாத சர்க்கார் இரண்டு. இப்படி ஒன்பது சர்க்கார்கள். அந்தச்
சர்க்கார்களைத்தான் கலைத்தார்கள். அப்படிக் கலைத்த பிறகு ஜனநாயகத்
தின் நடைமுறைப்படி அவர்கள் மக்களின் தீர்ப்பைப் பெற்று வந்தார்கள்.
அந்தத் தீர்ப்பை மக்கள் கொடுத்தார்கள். அதைத்தான் நாங்கள் அன்றைக்கு
சொன்னோமே தவிர, அல்லாமல் அன்றைக்கு அப்படி அந்தச் சர்க்கார்களைக்
கலைத்த ஒரு கட்சிக்கு நாங்கள் தவறாக வாலி பாடவில்லை. ஜனநாயக
முறையில் நியாயம் என்று உலகறிய எடுத்துச் சொன்னோம். இன்னும்
சொல்கிறோம். அதே மாதிரி 1976 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம்
தேதி திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தை, கேள்வி கேட்காமல் மத்திய
அரசு அன்று கீழே தள்ளினார்களே அதையும் அநியாயம் என்றுதான்
சொன்னோம். இன்னும் கூறுகிறோம், என்றைக்கும் கூறுவோம். அது ஜன
நாயகத்தின்பால் பட்டது அல்ல. ஆகவேதான் சொல்கிறோம், இந்த நடை
முறை சரியல்ல. நாட்டு மக்கள் அதைப் பிரதிபலிக்கிறார்கள். அதுதான்
பிரச்சினை என்பதால் முதலிலேயே அதைத் தெளிவாக்கிட விரும்புகிறேன்.

அடுத்து, ஆளுநர் அவர்களுடைய உரையில் தொழிலாளர்கள் கொள்கை
களைப்பற்றி விளக்கமான அளவிற்கு விவரங்கள் இல்லை. அந்த விளக்கத்தை
முழுவதும் சொல்ல முடியாது என்பது தெரியும். ஆனால் சில முக்கிய
அம்சங்களையாவது கோடிட்டுக் காட்டியிருக்க முடியும் என்பது எங்கள்
கருத்து. சென்ற கால அனுபவம், இந்த அரசாங்கத்திற்கு இரண்டரை ஆண்டு
கால அனுபவம் இருக்கிறது. எனவே, அதைக் கொஞ்சம் கோடிட்டுக் காட்டி,
இன்னும் கொஞ்சம் தெளிவாக வந்திருந்தால் அது சரியாக இருந்திருக்கும்
என்பது என்னுடைய கருத்து. ஆனால் 18-வது பத்தியில் ஒரு விஷயம்
சொல்லப்பட்டிருக்கிறது. ஆர்கனைஸ்ட் செக்டாரில் இருக்கும் தொழிலாளிக்கும்
அன்-ஆர்கனைஸ்ட் செக்டாரில் இருக்கும் தொழிலாளர்களுக்கும் சட்டம்
கொண்டு வருவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அது நல்ல அம்சம், அதை
நாங்கள் வரவேற்கிறோம். தொழிலாளர்களின் சில உரிமைகளைப் பாது
காப்பதற்காகப் புதிய சட்டங்களைக் கொண்டு வருவது வரவேற்கத்தக்க
அம்சமாகும். ஆனால் வேறு சில அம்சங்களைக் கணக்கில் கொள்ள வேண்டும்.
அப்படிக் கொண்டு வரும் சட்டங்களின் நோக்கங்கள் தோற்கடிக்கப்படாமல்
பாதுகாக்கப்பட வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம்
எடுத்துக் கொள்ள வேண்டும்.



1980 ஜூன் 27] [திரு. கு. ரமணி]

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், அன்-ஆர்கனைஸ்ட் இண்டஸ்
டிரீசில், கட்டுப்படுத்தப்படாத, ஸ்தாபன ரீதியாக ஸ்தாபிக்கப்படாத, பரவி,
சிதறிக் கிடக்கும் தொழில்களிலே பல்லாயிரக் கணக்கான தொழிலாளி மக்கள்
இருக்கிறார்கள். இந்தச் சென்னையைச் சுற்றியிருக்கும் பகுதிகளில் ஆடை
களை உற்பத்தி செய்து மேல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து நல்ல இலாபம்
சம்பாதிக்கும் தொழில்களில் தொழிலாளர்கள் சுமார் 30,000 பெண்
தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான
சட்டப் பாதுகாப்பும் இன்றைக்குக் கிடையாது. அவர்கள் பெண்கள் என்பதற்
காக இருக்கும் விசேஷ பாதுகாப்புகள்கூட இன்றைக்கு அவர்களுக்கு இல்லை.
அந்த உரிமைகளைக் கேட்பதற்காகச் சங்கம் வைத்தால் அவர்களை வேலை
யிலிருந்து நீக்கி விடுகிறார்கள். அப்படி நீக்கியிருக்கிறார்கள். மயிலாப்பூரில்
பாலு கார்மன்ட்ஸ் என்ற இடத்தில் சுமார் 500 பெண்கள் வெளியேற்றப்பட்டிருக்
கிறார்கள். மாதக் கணக்கில் அவர்கள் வெளியிலே இருக்கிறார்கள். அவர்
களுக்குப் பாதுகாப்பு இல்லை. அதே போன்று அம்பத்தூர் வட்டாரத்தில்,
இன்னும் பல பகுதிகளிலேயும் இப்படிப்பட்ட பெண் தொழிலாளர்கள்
இருக்கிறார்கள்.

அதுபோன்றே கல் உடைக்கும் தொழிலாளர்கள், கட்டிடம் கட்டும்
தொழிலாளர்கள் இருக்கிறார்கள். சிமெண்ட் இரும்பு போன்ற சாதனங்கள்
இன்றைக்குப் போதுவாகக் கிடைப்பதில்லை. அதற்கும் மத்திய அரசாங்கத்தின்
கொள்கைகள் காரணமாக இருக்கும் என்று ஆராய்ந்து பார்க்கச் சென்றால்,
அது நீண்டுகொண்டே போகும். எனவே, நான் இன்றைக்கு அதற்குள்
போக விரும்பவில்லை ; பட்ஜெட் வரும் காலத்தில் பார்த்துக்கொள்ளலாம்.
அப்படி வேலையில்லாமல் கஷ்டப்படும் தொழிலாளர்களுக்குச் சட்டப் பாது
காப்பு கிடையாது. குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்திருந்தாலும் அதை
நிறைவேற்ற காண்ட்ராக்டர்களிடமும் மற்றவர்களிடமும் வாதாட போராட
சங்கம் வைத்தாலும் அந்தச் சங்கத்திலேயிருந்து போராடக்கூடிய தொழிலாளர்
களை வேலையை விட்டு நீக்கி விடுகிறார்கள் ; சங்கத்தை உடைப்பார்கள் இது
நடக்கிறது.

அதேமாதிரி பாரம் தூக்கும் தொழிலாளர்கள், வண்டியிழுக்கும்
தொழிலாளர்கள், மரம் வெட்டும் தொழிலாளர்கள், மரத்தை அறுத்துத்
துண்டாக வெட்டி வீடு கட்டக் கொடுக்கும் தொழிலாளர்கள். மரம் ஏறும்
தொழிலாளர்கள் ஆகிய இப்படிப்பட்ட கடின உழைப்புச் செலுத்தும்

[திரு. கு. ரமணி]

[1980 ஜூன் 27

தொழிலாளர்களுக்கு, அன்-ஆர்கனைஸ்ட் செக்டாரிலே வரும் தொழிலாளர் களுக்கு சட்டப் பாதுகாப்பு இல்லை; பிராவிடன்ட் பண்ட் இல்லை கிராஜுடி இல்லை. காம்பன்சேஷன் ஆக்ட்படி உள்ள வேறுவிதமான சலுகை கள் ஆகிய இவைகளெல்லாம் இல்லாத சூழ்நிலைகள் இருக்கின்றன.

அதே மாதிரி சஸ்பெண்ட், டிஸ்மிஸ் செய்யப்பட்டால் அவர்களுக்கு எந்த விதமான உத்தரவாதமும் கிடையாது. அவர்கள் எங்கே போய் ரிப்போர்ட் செய்ய முடியும்? என்ன செய்ய முடியும்? இதைக் கணக்கில் கொள்ளவேண்டும். ஆர்கனைஸ்ட் இன்டஸ்ட்ரியிலில் இருக்கும் தொழிலாளர்கள் வேலையிலிருந்து தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டாலும், அந்தக் கேசை விசாரித்து முடி வரும் வரையில் அவர்கள் உயிரோடு இருக்க வேண்டாமா? மாதக்கணக்கில் அவைகள் இருக்கின்றன. அதற்கு வேண்டிய சப்சிஸ்டென்ஸ் அலவன்ஸ் எல்லாத் தொழிலாளர்களுக்கும் கொடுக்கப்படுவதில்லை. அதைக் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் முயற்சியெடுத்தால்கூட முதலாளிமார்கள் அதை அமலுக்குக் கொண்டு வர மறுக்கிறார்கள்.

(மாலை 4.40)

அதே மாதிரி இலட்சக்கணக்கான விவசாயத் தொழிலாளிகள் எந்தவித மான நிலபுலன்களும் இல்லாமல், சொந்த உழைப்பாளர்களாக இருக்கக்கூடிய வர்கள் நாட்டில் உள்ளார்கள். அவர்களுக்கும் பாதுகாப்பு இல்லை. குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் பண்ணியிருந்தாலும் லேபர் டிபார்ட்மென்ட் போல், அவர் கள் கூலிச் சட்டத்தை அமுல்படுத்த ஒரு ஏற்பாடே கிடையாது. தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் போன்றவர்களை ஏற்பாடு செய்திருந்தாலுங்கூட, அவர்களால், இலட்சக்கணக்கில் உள்ள தொழிலாளர்களது பிரச்சினைகளுக்கு நடவடிக்கை எடுத்து, தீர்வு காண முடியாத நிலைமை இருக்கிறது. இப்படிப் பட்ட அன்னார்கனைஸ்ட் தொழிலாளர்களுக்காகக் கொண்டு வரக்கூடிய சட்டம் தொழிற்சங்கத் தலைமைக்குப் பாதுகாப்பு கொடுக்கக்கூடியதாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட சட்டத்தை, யார் மீறினாலும், அவர்மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கொடுக் கும் நிலைமைகள் இருக்கவேண்டும். அப்படி சட்டத்தை மீறுபவர்கள் மீது, போலிசார் நடவடிக்கை எடுக்கிற உத்தரவாதம் இருக்க வேண்டும். அப்படிப் பட்ட அம்சங்களைக் கொண்டதாகச் சட்டங்கள் கொண்டு வரவேண்டுமென்பது தான் எங்களுடைய கருத்தாகும்.



1980 ஜூன் 27]

[திரு. கு. ரமணி]

அதே மாதிரி, ஆர்கனைஸ்ட் செக்டாரில் இருக்கக்கூடிய தொழிலாளர்களுக் கும் பல கஷ்டங்கள் உள்ளன. அவர்கள் ஆர்கனைஸ்டாக இருக்கலாம். ஆனாலுங்கூட, அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற கஷ்டங்களை இன்றைக்கு நாம் பார்க்க வேண்டும். சென்ற காலத்தில் நமக்கு நல்ல அனுபவம் இருக்கிறது. சென்ற 2½ ஆண்டுக் காலத்தில் எத்தனையோ போராட்டங்கள் நடைபெற்றன, மாதக்கணக்கில் நடைபெற்றன. அந்தப் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வரக்கூடிய சரியான உத்திகள் பயன்படவில்லை, லேபர் டிபார்ட்மென்டை பயன்படுத்தி அரிதாமாக முடிவுக்குக் கொண்டு வரமுடியவில்லை, அரசு செ வாக்கைப் பயன்படுத்தி, அவற்றை முடிவுக்குக் கொண்டு வர காலதாமதம் ஏ, பட்டது. ஒரு சரியான அணுகுமுறை இல்லாமல் போய்விட்டது. உதாரண மாக இந்த அரசாங்கம் பதவி ஏற்கின்ற காலத்தில், கோயம்புத்தூர் லட்சுமி மெஷின் ஒர்க்ஸ் ஸ்டிரைக் 5½ மாதம் நடைபெற்றது. திருச்சி சிம்கோ மீட்டர்ஸ் ஸ்டிரைக் 4 மாதம் நடைபெற்றது. பள்ளிபாளையம் பேப்பர் மில்லில் 4 மாதம் ஸ்டிரைக் நடைபெற்றது. டி.வி.எஸ். போராட்டம் பெரிய உருவெடுத்து. அது பல மாதங்களாக மூடப்பட்டிருந்தது, பலர் பழி வாங்கப் பட்டனர். அம்பத்தூர் சைக்கிள் பாக்டரியிலே, அந்த முதலாளிக்கு தொழிற் சாலையை நடத்த சக்தி இல்லை, இலாபம் போதவில்லை, ஆகவே தொழிலாளர் களைக் குறைக்க வேண்டுமென்று முதலாளி ஆரம்பித்த தகராறிலே தொழி லாளிகள் பலர் பழி வாங்கப்பட்டார்கள். டி. வி. எஸ், தொழிலாளிகள் பழி வாங்கப்பட்டார்கள். இன்ஜின் வால்வ்ஸ் தொழிற்சாலையில் 10 மாதங்கள் தொழிலாளர்கள் போராடி இருக்கிறார்கள். தென்னாற்காடு மாவட்டத்திலே திண்டிவனத்திலே, அரோ ரூட் தொழிற்சாலையிலே அடிக்கடி வேலை நிறுத்தம் நடக்கும். கோவையிலும், தமிழகத்திலும் 1½ இலட்சம் பஞ்சாலைத் தொழி லாளர்கள்—கோவையிலே மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் உள்ள தொழிலா ளர்கள் ஒன்றுபட்டு, தங்கள் சக்தியையெல்லாம் பிரயோகித்து, போராட்டம் நடத்தினார்கள். அதற்குமேல் ஒற்றுமையாகப் போராட்டம் நடத்த முடியாது. ஆனாலும் நியாயமான அளவிற்கு, மனதிற்குத் திருப்தி அளிக்கக்கூடிய அளவுக்கு, அன்றைக்கு இருந்த நிலைக்கு அவர்களுடைய நியாயத்திற்கு ஒத்த அளவிற்கு அதில் ஒப்பந்தம் ஏற்படுத்த முடியவில்லை. அந்த நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, ஆர்கனைஸ்ட் செக்டாரில் உள்ள தொழிலாளர்களுக்குச் சட்டத் திருத்தம் கொண்டு வருகிற காலத்தில், அவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கிற நிலைமைகள் இருக்க வேண்டும். இப் பொழுது, அவர்களுக்குப் பாதுகாப்பில்லாமல் பழி வாங்கப்படுகிற நிலைமைகள் ஏற்படுகின்றன.

இரண்டாவதாக, பிரச்சினைகள் ஏற்பட்டால், அவைகளைத் தீர்ப்பதற்காக,
அவற்றின் மீது உடனுக்குடனே நடவடிக்கை எடுப்பது என்பது கொள்கை
வழி ஏற்பாடாக இருக்க வேண்டும். தொழில் தகராறுகள் போராட்டங்களாக
வடிவெடுக்கும் முன் அவசர உணர்வோடு சமரசம் காண முயற்சிக்க வேண்டும்.
அதே மாதிரி தவிர்க்க முடியாத நேரங்களில் போராட்டங்கள் ஏற்பட்டு
விட்டால், காலதாமதம் செய்யாமல், இரு தரப்பினரையும் கூப்பிட்டு, தொழி
லாளர் நல அதிகாரிகளையும் வைத்துக்கொண்டு, தொழிலாளர் நலச் சட்டங்
கள் என்று சொல்கிறோமே, அந்தச் சட்டங்களை. எந்த அளவுக்குத் தொழி
லாளர்களுக்குச் சாதகமாக, நியாயமான முறையில் பயன்படுத்துகிற வகையில்
பயன்படுத்தி, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயற்சிக்க வேண்டும். சென்ற
கால அனுபவங்களிலேயிருந்து கிடைத்துள்ள படிப்பினைகளை எடுத்துக்
கொண்டு, தொழில் தகராறுகளை எவ்வளவு துரிதமாகத் தீர்க்க முடியுமோ,
அந்த அளவு துரிதமாகத் தீர்க்க வேண்டும். தொழிலாளர்களுடைய ஜன
நாயக உரிமைகள் மறுக்கப்பட்டு விடக் கூடாது.

தொழிலாளர்களுடைய போராட்டம் நடப்பதற்கு முன்பே போலீஸ் வந்து
விடும். ஆனால் முதலாளி லாக்-அவுட் செய்தால், போலீஸ் வராது. தொழி
லாளியை வேலை நீக்கம் செய்வதாக அறிவிப்புக் கொடுத்தாலே, உடனே தடை
உத்தரவு வந்து விடும். ஆனால், லாக்-அவுட் செய்தால், முதலாளிக்குப் பாது
காப்பு கிடைக்கும். ஆகவே, சட்டத்தைப் பயன்படுத்தும்போது, இரண்டு
பக்கமும் கூர்மையுள்ள கத்தியாக, தொழிலாளர்களிடம் அது பயன்படுத்தப்
படுகிறது. அந்த நிலைமைக்கு இடம் வைக்கக் கூடாது.

இதை அரசாங்கத்தினுடைய கொள்கையாகக் கொண்டு வரவேண்டும்.
இல்லாவிட்டால் எப்படி வரும் தெரியுமா. குற்றச்சாட்டு எல்லாம் தொழி
லாளர்கள் மீதுதான் வரும். எல்லா தொழிலாளர்களும் இன்டிசிப்ளின் உள்ள
வர்கள், அவர்களிடம் கட்டுப்பாடு இல்லை, அவர்கள் ஒழுங்காக நடப்பது
இல்லை, அவர்கள் சொன்னபடி செய்வதில்லை, அவர்கள் ஸ்டாண்டிங் ஆர்டர்
படி நடப்பதில்லை, அவர்கள் முதலாளிகள் சொன்னால் கேட்பதில்லை,
ஆகவே அவர்கள் மீதுதான் தப்பு என்று சொல்லுவார்கள். இப்படிப்பட்ட
நிலைமை ஏற்படாமல் அந்த சட்டங்களை நல்லமுறையில் ஏற்பாடு செய்து
அரசாங்கம் அமலுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதுதான் என் தாழ்மை
"unorganised sector as well as organised யான வேண்டுகோள்.
sector" களில் இப்படிப்பட்ட சட்டங்களை அரசாங்கம் கொண்டு
வரும்போது, உழைக்கின்ற மக்கள், தொழிலாளி மக்கள் அனைவும் பலனைப்



பட்டப் பகுதி மக்களுக்குச் சேவை செய்வதுதான் இன்றைக்கு இருக்கும்ப
யான முன்னணி கடமை என்று மத்திய சர்க்காரில் இருந்து, கீழே இருக்கி
அத்தனை அரசாங்கங்களும் பேசுகின்றன. ஆயின் நடைமுறையாவதில்லை
இந்த அரசாங்கம் வெறும் பேச்சோடு மட்டுமல்ல, நடைமுறைக்குக் கொண்
வரவேண்டும் என்று பல சந்தர்ப்பங்களிலே எடுத்துச் சொல்லி வாக்குறுதி
களைத் தந்திருக்கிறது இந்த அரசாங்கம். ஆகவே அப்படிப்பட்ட நடை
முறைப்படுத்துகிற நிலைமை ஏற்பட வேண்டும் என்று நான் கேட்டு
கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது). இன்னும் ஒரு விஷயத்தை மட்டு
விளக்கிச் சொல்லி முடித்துக் கொள்ளுகிறேன். அதாவது தொழிலாள
களுடைய வாழ்க்கைக்கான போராட்டங்கள் நிச்சயமாகத் தொடர்ந்து நடக்க
வேண்டிய சூழ்நிலை இன்றைக்கு இந்தியாவிலே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது
அண்மையிலே கொண்டு வரப்பட்டிருக்கும் மத்திய சர்க்கார் பட்ஜெட் பற்றி
நேற்றைய தினம் இங்கே பேசும்போது எனது தோழரும், இந்த மாமன்றத்தின்
உறுப்பினருமான தோழர் திரு. வரதராஜன் அதை எடுத்துக் கூறி இருக்
கிறார். 1,417 கோடி ரூபாய் பற்றாக்குறை. அது பூர்த்தி செய்யப்படாத
பள்ளமாக விடப்பட்டிருக்கிறது. நோட்டு அடிப்பதற்கான டெபிசிட் பட்ஜெட்
டாக இருக்கிறது. இது ஊர் அறிந்த உண்மை. அது போக 223 கோடி
ரூபாய்க்கு எக்சைஸ் டூட்டி போடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பொருளுக்கும்
விலைவாசி ஏறும்போது நாம் பஞ்சப்படி கேட்க வேண்டி வரும். 223 கோடி
ரூபாய்க்கு வரிப் போடப்பட்டிருப்பதாக நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜெட்
டிலே குறிப்பிட்டார்கள். ஆனால் உண்மை நிலை என்ன?

'The Special Excise duty now extended to several other items would have more far reaching effect on the prices of manufactured goods than the Budget indicated. This was said by the Finance Ministry Secretary and the revenue would be Rs. 476 crtres for a full year".

476 கோடி ரூபாய்க்கு இந்தப் பணம் வசூலாகப் போகிறது. ரயில்வேக்கு
300 கோடி ரூபாய் அதிகக் கட்டணம் போடப்பட்டிருக்கிறது. அதிலே 10
கோடி ரூபாய்க்கு கடைசியாக, சரக்குக்கும் மற்றவைகளுக்கும் கொஞ்சம்
விட்டுக் கொடுத்திருக்கிறார்கள். பெட்ரோலுக்கு 2,461 கோடி ரூபாய் விலை
யேற்றி வரி போட்டிருக்கிறார்கள். வெளிநாட்டில் இருந்து இறக்குமதியான
பெட்ரோல் முழுவதற்கும் என்ன விலை ஏறுகிறதோ அத்தனைக்கும் விலை
நாம் கொடுக்க வேண்டும். இங்கே இருக்கிற ஜனங்கள் தலையில் அது போடப்
பட்டிருக்கிறது. அப்படியானால் இதுவே 4,659 கோடி ரூபாயாகும். இது
நமக்குத் தெரிந்த கதை. அது இல்லாமல் என்னத்தையோ இருக்கும் அதைத்
தான் திரு. வரதராஜன் சொல்லும்போது 5,000 கோடி ரூபாய்க்கு இப்படிப்

பட்ட வரி அல்லது எக்சைஸ் டூட்டி போடப்பட்டிருக்கிறது என்று சொன்னார். அதனால் விலைவாசிகள் ஏறப்போகின்றன. இது வரும்போது நிச்சயமாக உழைப்பாளி மக்கள், தொழிலாளிகள், விவசாயிகள் யாராக இருந்தாலும் உழைத்துப் பிழைக்கின்ற மக்கள் கருத்தாலும், கரத்தாலும் உழைத்துப் பிழைக்கின்ற மக்கள் அவர்கள் சம்பளமும் பஞ்சப்படியும் போதாமல், அதை அதிகப்படுத்திக் கொள்வதற்கான போராட்டங்கள் நடைபெறும். அந்தப் போராட்டங்கள் நடைபெறும்போது, இந்தத் தமிழக அரசை நம்பி இவ்வளவு கஷ்டங்கள் சென்ற காலத்தில் இருந்த போதிலும், ஜனநாயகத்திற்காக, சர்வாதிகாரத்தை எதிர்த்து மக்களுடைய உரிமைகள், தொழிற்சங்க உரிமைகள் தொழிலாளர்களுடைய போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பு கொடுக்கின்ற ஒரு அரசு வேண்டும் என்ற முறையில், தொழிலாளர்கள் இந்த அரசாங்கத்தை நம்பி, ஓட்டளித்து வெற்றி பெறச் செய்துள்ளார்கள். அந்தத் தொழிலாளர்கள் பக்கத்திலே இந்த அரசாங்கம் நிற்க வேண்டும். அரசாங்கப் பாதுகாப்பும், சட்டத்தின் பாதுகாப்பும், அரசாங்கத்தின் செல்வாக்கும் அந்தத் தொழிலாள மக்களுக்குக் கிடைக்க வேண்டும். அவர்கள் கொடுக்கிற நியாயமான கோரிக்கைகளுக்கு—எல்லாவற்றிற்கும் அல்ல—செவி சாய்த்து உதவி செய்ய வேண்டும், லேபர் டிப்பார்ட்மெண்டைப் பயன்படுத்தி நல்ல முறையில் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். டி.வி.எஸ். கம்பெனியிலும் பள்ளிப் பாளையம் பேப்பர் மில் போன்றவைகளில் பழி வாங்கப்பட்ட தொழிலாளர்களைத் திருப்பி எடுப்பதற்காகவும், அம்பத்தூர் சைக்கிள் பாக்டரியிலும், இன்ஜின் வால்வ் தொழிற்சாலையிலும் பழி வாங்கப்பட்ட தொழிலாளர்களைத் திருப்பி எடுத்துக் கொள்வதற்கு இந்த அரசாங்கம், இவ்வளவு பெரிய மக்கள் ஆதரவைப் பெற்று, மாசில் மேன்டேட்—வந்திருக்கிற இந்த அரசாங்கம், தனது செல்வாக்கைப் பயன்படுத்தி முதலாளிகளை கூட்டி வைத்து, தொழிற்சங்கத் தலைவர்களையும் அழைத்துப் பேசி முடிவு பண்ணி அவர்களுக்கு வேலைக்கு உத்தரவாதம் தர வேண்டும். அந்த மகத்தான கடமையை அரசாங்கம் செய்யவேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்ளுகிறேன்.

* **டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** பெருமதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை ஈன்றெடுத்த தாய் தந்தையர் பாதம் பணிந்து, தமிழகத்தை ஆளுவதற்கு தமிழர்களின் ஆதரவை ஓட்டு மொத்தமாக ஓட்டுக்களாய்ப் பெற்ற ஒப்பற்றத் தலைவர், ஒரே தலைவர் அன்னை



(மாலை 4-50)

சத்தியாவின் திருவுருவம், அன்புச் சத்தியத்தின் ஓர் உருவம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் 'செய்யும் தொழிலில் எல்லாம் சிறந்த தொழில் நெய்யும் தொழில்' அந்த நெய்யும் தொழிலில் மட்டுமல்ல, நெய்க்கும் பெயர் பெற்ற தொகுதி, ராசிக்கு ஒரு புரம்—ஆம்—அது இராசிபுரம்—அந்த இராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில் 5½ ஆண்டுகாலம் படித்து, கல்லூரிக்குச் சென்று படித்து டாக்டர் பட்டம் பெற்ற எனக்கு (குறுக்கீடு) (அதற்காகத் தான் கல்லூரிக்குச் சென்று படித்து டாக்டர் பட்டம் பெற்ற என்று சொன்னேன். அவர் கல்லூரியில் படித்து இருக்கிறார்.) வாக்களித்து இந்த மன்றத்திலே பேச வாய்ப்பளித்த—நான் உயிரினும் மேலாக மதிக்கிற என் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், என் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியறிதலை உள்ளாக்கி, ஆளுநர் உரையில் கலந்து கொண்டு என் கன்னிப் பேச்சைத் துவக்குகிறேன்.

நடந்த முடிந்த சட்டமன்ற தேர்தலில் மக்கள் முன் வைக்கப்பட்ட பிரச்சினை மீண்டும் தமிழகத்தில் மக்கள் தலைவர் புரட்சித் தலைவர் அவர்களின் தலைமை தேவையா இல்லையா என்ற பிரச்னையும், தமிழகத்தில் அன்னாவின் அரசு கலைக்கப்பட்டது நியாயமா அநியாயமா என்ற பிரச்னையும் தானே தவிர வேறொன்றும் இல்லை. அதற்கு மக்கள் நல்லதொரு தீர்ப்பையும் வழங்கி தமிழகத்தை ஆளத் தகுதி படைத்த உத்தமர் நாங்கள் தோல்வியைத் தழுவிய கட்சிகளைச் சார்ந்த நாடாளுமன்ற புரட்சித் தலைவர் தான் என்று தீர்ப்பளித்து விட்டார்கள். ஆனால் இன்றைக்கு உறுப்பினர்களை ராஜினாமா செய்யச் சொல்லும் அளவிற்கு கீழ்த்தர அரசியலை நடத்த அவசியமில்லை.

ஆளுநர் உரையிலே 12-வது பாராவிலே குறிப்பிட்டுள்ளபடி தமிழகத்திற்கு மத்திய அரசால் தொழில் தொடங்குவதற்கு மொத்தமாக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 15,668 கோடி. ஆனால் 1979 ஆம் ஆண்டு வரை செலவிடப் பட்டதோ ரூ. 616 கோடி. இது மொத்த ஒதுக்கீட்டில் 4 சதவீதம் மட்டும் தான். இதைத்தான் அறிஞர் அண்ணா அவர்கள் 20—7—1968-இல் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

"Industrial undertaking is a State subject, but issuing licence is under the control of Central Government".

அதாவது தொழில் துறையை பாதுகாக்கின்ற பொறுப்பு மாநில அரசிடமும், தொழிலை தொடங்குவதற்கான அனுமதியை வழங்கும் அதிகாரம் மத்திய அரசிடமும் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். இது எப்படி நியாயம்

ஆகும். தமிழகத்தில் தொழில் துறை வளர்ச்சி அடைய வேண்டுமென்றால் தொழில்களை துவங்குவதற்கான அனுமதி வழங்குகின்ற அதிகாரமும், மாநில அரசுக்கு வழங்கப்பட்டாக வேண்டும். மத்திய அரசு தமிழகத்தை தொழில் துறையில் பிற்படுத்தப்பட்ட மாநிலமாக அறிவித்து அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று இந்த அவை நிர்மானம் நிறைவேற்றி மைய அரசை வலியுறுத்த வேண்டுகிறேன்.

மொழிக்கொள்கையில் நேருவின் உறுதிமொழி தேர்தல் பிரச்சாரத்தின் போது மாண்புமிகு பிரதமர் அவர்கள் காப்பாற்றப்படும் என்று பத்திரிகைக்கு அறிவித்து இருக்கிறார்கள். அதன் முதல் கட்டமாக,—தென்னிந்திய ரயில்வேத் துறையில் உள்ள பயண ரிசர்வேஷன் தாளில் தற்பொழுது ஒரு பக்கம் ஆங்கிலத்திலும், மறுபக்கம் இந்தியிலும் உள்ளது. இதை மாற்றி ஒரு பக்கம் ஆங்கிலத்திலும், மறு பக்கம் தமிழிலும், அச்சடித்துத் தந்திட வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் வாயிலாக மத்திய அரசிற்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.

தமிழகத்தை சுற்றுலா பயணிகளின் சொர்க்கமாக மாற்ற எத்தனையோ வாய்ப்புகள் இருந்தபோதிலும் நிதிப் பற்றாக்குறை மிகப் பெரிய பிரச்னையாக உள்ளதால், மத்திய அரசு மாநிலத்தின் சுற்றுலா வளர்ச்சிக்கு அதிக நிதி ஒதுக்கீடு தந்திட வேண்டுமென்று இந்த அவை மைய அரசை வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றையதினம் எதிர்க்கட்சி உறுப்பினர் மாண்புமிகு திரு. நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது எங்களுக்காகவே மக்கள் குரல் பாடுபடுகிறது என்று குறிப்பிட்டார். ஆம், மக்கள் குரல், தமிழகத்து மக்கள் குரல் ஒலித்த காரணத்தினால்தான் மக்கள் திலகத்தின் தம்பிகளான எங்கள் குரல் இந்த மாமன்றத்தில் ஒலிக்கின்றது.

எதிர்க்கட்சி உறுப்பினர் மாண்புமிகு இராமலிங்கம் அவர்கள் பேசும்போது தி.மு.க. ஆட்சிகாலத்தில் ஆரம்பிக்கப்பட்ட பாலங்கள் கட்டப்படவில்லை என்று கூறினார்கள். அவர்கள் ஆட்சிக் காலத்தில் பாலங்கள் எப்படி எலும்பு விடப்பட்டன என்ற கோலத்தை அறியாதவர்கள் தமிழகத்து மக்கள் அல்ல.

கப்பல் தொங்குவதைப்பற்றி பேசினார்கள். கப்பலைத் தொங்கவிட்ட உங்களைத்தான் மக்கள் தலைகீழாகத் தொங்கவிட்டுவிட்டார்களே. அப்புறம் என் பேசுகின்றீர்கள் ?



மதிப்பிற்குரிய பெரியவர் மாண்புமிகு இஸ்மாயில் அவர்கள் 18 வயதினருக்கு வாக்குரிமை எதற்கு என்று குரல் கொடுத்தார்கள். நாட்டுச் சேவைக்கு ஆபத்து வருகின்ற காலத்தில் இளைஞர்களை அழைக்கின்றார்கள்; தேவைப் படுகிறார்கள். சுவாமி விவேகானந்தர் அவர்கள் கூட தன்னிடம் இளைஞர்களைத் தாருங்கள் இந்த நாட்டை திருத்திக் காட்டுகின்றேன் என்று முழங்கினார்கள். சாக்ரடீஸ் அவர்களும் சமுதாயத்தை சீர்திருத்த ஏதென்ஸ் நகரத்து இளைஞர் பெருமக்களைத்தான் அழைத்தார். ஆனால் இளைஞருக்கு வாக்குரிமை என்றவுடன் முதியவர் இஸ்மாயில் எதிர்க்கிறார். ஒருவேளை அவர்கள் கட்சியில் இளைஞர்கள் குறைவு என்பதால் ஆளுநர் உரையில் குறை காணுகின்றாரோ ?

மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் ஜே. எஸ். இராஜு அவர்கள் தி.மு.க. வைப்பற்றி குறிப்பிடுகையில் சூரியன் மறைவதாகத் தோன்றும். ஆனால் அது மீண்டும் எழும் என்று கூறினார். 'எங்களைக் கேட்டுத்தான் எழுகின்ற சூரியன் கூட எழும் விழும்' என்று ஆர்ப்பரித்த ஆங்கிலேயர்கள் கூட இன்று ஒரு குறுகிய வட்டத்திற்குள் தள்ளப்பட்டுவிட்டார்கள். அதே போல் இங்கும் ஆட்சிக் கலைப்புக்குப் பின் வெற்றி நமதே! ஆளப் பிறந்தவன் நான்தான் என்றெல்லாம் மார் தட்டியவரும், வங்கக் கடலோரம் துஞ்சும் என் அண்ணாவை மறந்து தங்கக் கடலோரம் தங்க வியாபாரிகள் சூட்டிய மலர் கிரீடத்தை தரித்து நானே முதல்வர் என்று முழங்கியவரும் கூட 48-ஐ 38 ஆகக் குறுக்கிக்கொண்டு எதிர்க்கட்சித் தலைவராக அமர்ந்துள்ளார். அவர் கூட இடைக்காலத்தின் எதிர்க்கட்சித் தலைவர் ஆக ஆக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. மேல்சபையிலே எதிர்க்கட்சித் தலைவர் அந்தஸ்தை இழந்துவிட்டார்கள். அந்த நிலை இங்கும் வந்துவிடுமோ என்ற அச்சம் உருவாகி இருக்கிறது.

தோழமைக் கட்சிகளைப்பற்றி குறிப்பிடுகையில் எதிர்க்கட்சி உறுப்பினர் கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்று சொன்னார்கள். ஆம். உண்மையான பத்தினிப் பெண்கள் அப்படித்தான் நடந்துகொள்வார்கள்.

மேலும் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவர் இடைக்கால எதிர்க்கட்சித் தலைவராக ஆகும் சூழ்நிலை வந்தாலும் வரும் என்று சொன்னேன். அண்ணாநகர் சட்டசபை தொகுதியில் போட்டியிட்ட மாண்புமிகு சுகாதார அமைச்சர் எச். வி. ஹாண்டே அவர்கள் வழக்கு மன்றத்திற்குச் சென்றால் இந்த நிலை உருவானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

[டாக்டர் கே. பி. இராமலிங்கம்] [1980 ஜூன் 2,

போராடிய கால்நடை மருத்துவர்களின் கோரிக்கைகளை ஏற்று, மேலும் 20 ஆண்டு காலமாக இயங்காமல் இருந்த கால்நடை மருத்துவ பேரவையை இயங்க அனுமதி அளித்ததற்கும், ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன்களிலும் ஒரு கால்நடை மருத்துவரை நியமிப்பதாக அரசு அளித்த உறுதி மொழிக்கும் நன்றி தெரிவித்து, மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் அறிவித்துள்ள நல்ல திட்டங்களை வாழ்த்தி வரவேற்று விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. எம். ஆறுமுகம் :** மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மன்றத்திலே பேசுவதற்கு வாய்ப்பினைக் கொடுத்த அவிநாசி தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, கவர்னர் உரையிலே கொடுத்திருக்கக்கூடிய விஷயங்கள் பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டம் சம்பந்தமாக குறிப்பிட்டு, பட்டதாரிகளுக்கு உதவித் தொகை விரைவிலே தருவோம் என்று கவர்னர் உரையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. பட்டதாரிகள் மட்டுமல்ல. நமது நாட்டிலே படித்து, பட்டம் பெற்று வேலையில்லாத இளைஞர்கள் இலட்சக்கணக்கானவர்கள் இருக்கின்ற காரணத்தால் பட்டதாரிகள் மட்டுமல்லாமல் எஸ்.எஸ்.எல்.சி. படித்து, வேலையில்லாமல், வேலைக்கு பதிவு செய்திருக்கக்கூடிய அத்தனை பேர்களுக்கும் கொடுக்கக்கூடிய வகையிலே அதை விரிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல விவசாயிகள் கடன்சுமையைக் குறைக்கின்ற வகையில் எடுக்கின்ற நடவடிக்கைகளை வரவேற்கிறோம். அதேநேரத்தில் அவர்களுடைய விளைபொருட்களை கொள்முதல் செய்யும்போது கூடுதல் விலை கொடுக்கவும், அதிக விலை நிர்ணயம் செய்யவும் வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசு கோதுமைக்கு விலை நிர்ணயம் செய்திருக்கிறது. அதைப் போல நெல் கொள்முதல் செய்வதற்கும் அரசாங்கமே விலை நிர்ணயம் செய்ய வேண்டும்.

(மாலை 5-00)

மத்திய அரசு ஒப்புக்கொள்ளாவிட்டால் மாநில அரசு விலை நிர்ணயம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.



1980 ஜூன் 27] [திரு. எம். ஆறுமுகம்]

அடுத்து விவசாயிகள் பிரச்சினைகள் சம்பந்தமாக கோவை மாவட்டத்தில், அது விவசாயிகளையும் தொழிலாளர்களையும் நம்பி இருக்கின்ற பகுதியாக இருப்பதால் பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தை உடனடியாக அமல் நடத்துவதற்கு மத்திய அரசிடம் பேச்சுவார்த்தை நடத்தி அதற்கான திட்டங்களைத் திட்டவேண்டும் என்று இந்த நேரத்திலே இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவுத்துறை சம்பந்தமாக அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருப்பதை வரவேற்பதோடு, கோவை மாவட்டத்தில் இருக்கின்ற சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி என்ற அந்த அங்காடியில் இருக்கின்ற அதிகாரிகள் மீண்டும் கூட்டுறவுத்துறை தனியார் கையிலே போய்ச் சேருகின்ற வகையில் ஊழல்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். சிந்தாமணி கூட்டுறவுத்துறையில் மட்டும் கிட்டத்தட்ட இலட்சக்கணக்கான ரூபாய்களை இப்போது ஊழல் செய்து இருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத்துறை வலுப்படுத்த வேண்டும் என்று நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கக் கூடிய சூழ்நிலையில் பெரிய கூட்டுறவு அங்காடியிலே இவ்வாறு ஊழல் நடைபெறக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. அப்படிப்பட்ட நிலையின் காரணமாக அந்த கூட்டுறவுத்துறையிலே பணியாற்றிக்கொண்டிருக்கின்ற 1,500 தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள் ஆகவே அவர்களுக்கு மீண்டும் வாழ்வளிக்கக்கூடிய முறையிலே கூட்டுறவுத் துறையினை மேலும் வலுப்படுத்தக்கூடிய முறையிலே அந்தமாதிரி ஊழல்களைக் களையக்கூடிய முறையிலே அந்த அதிகாரிகள் மேல் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அண்டை மாநிலங்களோடு சுமுகமான உறவுகள் இருக்க வேண்டும் என்பதை வரவேற்பதோடு கேரளா மாநிலத்தோடு உடனடியாக பேச்சுவார்த்தை நடத்தி மின்சாரம் பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோவை மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 103 பஞ்சாலைகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட கோவை மாவட்டத்தில் கிட்டத்தட்ட 4 மாத காலமாக மின்சாரத்தட்டுப்பாடு இருப்பதன் காரணமாக 35 ஆயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். கிட்டத்தட்ட 35 ஆயிரம் பேர் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறார்கள். பெர்மனன்ட்டாக வேலை செய்யக்கூடிய தொழிலாளிகளுக்கு சட்டத்திலே இடம் இருந்தாலும் டெம்பரியாக வேலை செய்யக்கூடிய கேஷுவல் லேபர் லேர்னர் என்று சொல்லக் கூடியவர்களுக்கு எந்தவிதமான வசதியும் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே

பெர்மனன்ட் தொழிலாளர்களுக்கு ப்ரேக் டவுன் காலத்திலே காம்பென்சேஷன் என்ற அளவிலே கொடுக்கப்படுவதைப் போல இந்தத் தொழிலாளிகளுக்கும் மின்சார வெட்டுக் காலத்திலே அவர்களுக்குப் பாதிச்சம்பளம் கொடுப்பதற்கு நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல, உடனடியாக அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டாலும்கூட சமீபத்திலே பஞ்சாலைத் தொழிலாளர்கள் கூட்டத்திலே, தமிழக அரசு பொதுவாக நியாயமாக, அமைந்திருக்கக்கூடிய கோரிக்கைகளை நிறைவேற்றித் தர வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆகவே, தமிழக அரசு அவர்களுக்கு நியாயம் கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறியைப் பொருத்தவரையில், அதில் ஈடுபடக்கூடிய தொழிலாளர்கள் இலட்சக்கணக்கில் இருக்கிறார்கள். கோவாப்பிரேடிவ் சொசைடி மூலமாக அவர்களுக்கு கொடுக்கக் கூடிய நூல் வகைகள் தரமானவையாக இல்லை. பாலியஸ்டர் ரக நூல்களை அவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் உற்பத்தி செய்கிற துணிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. அவர்களுக்கு நியாயவிலை கிடைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். கைத்தறி விசையிகள் உற்பத்தி செய்கிற துணி வகைகள் தேங்கிக் கிடக்கின்ற நிலை இருந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையைப் போக்குவதற்கு கோவாப்பரேடிவ் சொசைட்டி மூலமாக கடன் உதவி வழங்குவதற்கும் அவர்கள் உற்பத்தி செய்திருக்கிற துணி வகைகளுக்கு நல்ல விலை கிடைப்பதற்கும், பாலிஸ்டர் நூல் ரகங்கள் குறைந்த விலையில் கிடைப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

பல்கலைக் கழகங்களை கோவையிலும் திருச்சியிலும் நிறுவ இருப்பதாக சொல்கிறார்கள். வரவேற்கிறோம். அது மட்டும் அல்லாமல் சமீபத்தில் ஒரு உத்தரவு, அதை உத்தரவு என்று சொல்லக் கூடாது, பத்திரிகையில் வந்த செய்தி என்று தான் சொல்லவேண்டும். அப்படி பத்திரிகையில் வந்த செய்தியின் படி ஹையர் செகண்டரி மாணவர்கள் எல்லோரும் முழுவதுமாக பாஸ் செய்யப்படுவார்கள் என்று கூறியிருந்தார்கள். ஆனால் தாராபுரம், அவிநாசி போன்ற பகுதிகளில் படிக்கக் கூடிய மாணவர்கள், ஹையர் செகண்டரி வகுப்பில் பெயிலாக்கப்பட்டிருக்கிறார்கள். என்ன நோக்கத்தில் அப்படி





நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஆகவே ஹையர் செகண்டரி படிக்கும் எல்லா மாணவர்களுக்கும், எல்லாப் பகுதிகளில் இருக்கும் எல்லா மாணவர்களுக்கும்—அதாவது ஹையர் செகண்டரி வகுப்பு படிப்பவர்கள் அனைவருக்கும் இந்த உத்தரவை போட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியிருக்கிறார்கள். அதை வரவேற்பதோடு, 18 வயது அடைந்த ஆண் பெண் அனைவருக்கும் வாக்களிக்கின்ற உரிமையை கொடுக்க வேண்டும் என்று கம்யூனிஸ்ட் கட்சியும், மாணவர்கள் குழுவும் வெகுநாட்களாக கேட்டுக் கொண்டு வந்துள்ளது. அது இப்போது நிறைவேற்றப்பட இருப்பதை மாணவர்கள் சார்பிலும், கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் என்ற சார்பிலும் வரவேற்கிறேன்.

அதேபோல தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சிறப்பு 5 ஆண்டு திட்டம் கொண்டு வரப்படும் என்று அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. சிறப்பு ஐந்தாண்டு திட்டம் கொண்டு வருவதை வரவேற்கிறோம். அது மட்டும் அல்ல. தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக பாடுபடுவதாக திராவிட முன்னேற்றக் கழக நண்பர்களும், காங்கிரஸ் கட்சி நண்பர்களும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்டவர்களை பாதுகாப்போம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் என்னுடைய தொகுதியிலே ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. அங்கே நடைபெற்றிருக்கிற சம்பவத்தைப் பற்றி புரிந்துக் கொள்ள வேண்டும். ஒரு உயர்ஜாதிக்காரன் அங்கே இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்டவர்களுக்கு பாதுகாப்பாக இருந்தார் என்ற காரணத்திற்காக காங்கிரஸ் கட்சிக்காரர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் அவரை அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். கோபால் என்ற அந்த இளைஞனை அடித்து நொறுக்கி கொலை செய்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு பாதுகாப்பு கொடுத்த காரணத்தினால் அவர் இப்படி கொலை செய்யப்பட்டிருக்கிறார். அவரை வெறி நாயை அடிப்பது போல் அடித்து கொன்றிருக்கிறார்கள். ஆகவே, தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உயர் ஜாதிக்காரன் தாழ்த்தப்பட்டவர்களுக்கு பாதுகாப்பாக நிற்கிறான் என்றால், தேர்தலிலே தோல்வி அடைந்து விட்ட ஆத்திரத்தில், அந்த உயர் ஜாதிக்காரனை அடித்துக் கொல்லும் நிலை ஏற்பட்டால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு என்ன பாதுகாப்பு கொடுக்கிறார்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தினரும், காங்கிரஸ் கட்சியினரும் என்று இந்த மன்றத்திலே இருக்கிற எதிர்க்கட்சி நண்பர்கள் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே

கவர்னர் உரையிலே சொல்லியிருக்கக் கூடிய சிறப்பு ஐந்தாண்டு திட்டத்தை வரவேற்பதோடு, அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கும் வகையில் மேல் சாதிக்காரர்களும், கீழ் சாதிக்காரர்களும் கொண்ட குழு ஒன்றை அமைத்து அங்கே வரக்கூடிய சம்பவங்களை அங்கேயே பேசி முடிவுக்கு கொண்டு வரக்கூடிய நிலையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாலை, தேயிலைத் தோட்ட தொழிலாளர்களுக்கு கூலி மிகவும் குறைவாக இருக்கிறது. தமிழ்நாட்டில் மட்டும் அல்ல, இந்தியாவிற்கே அன்னியச் செலாவணி ஈட்டிக் கொடுக்கிற தொழிலாக தேயிலைத் தோட்ட தொழில் இருந்து வருகிறது. அந்த தேயிலைத் தோட்டங்களில் பல தொழிலாளர்கள் வெளிமாநிலங்களிலிருந்து கூட வந்து வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு 7 ரூபாய் முதல் 8 ரூபாய் வரை தான் கூலியாக இருக்கிறது. இது மிகவும் குறைவான சம்பளம். அன்னியச் செலாவணி ஈட்டக்கூடிய ஒரு தொழிலில் அவர்களுக்கு குறைவான சம்பளம் கொடுப்பது சரியல்ல. அவர்கள் கோரிக்கையில் இது மிகவும் பிரதானமாக இருக்கிறது. அவர்கள் கோரியிருக்கிற ஒப்பந்தங்களில் இந்த சம்பளம் உயர்த்தும் கோரிக்கையாவது நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்காக ஒரு கமிட்டி அமைத்து அவர்களுடைய பல்வேறு கோரிக்கைகளை பரிசீலனை செய்து, அதன்மீது நடவடிக்கை எடுக்க முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பஞ்சாலை மற்றும் பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி இல்லை. வீடுகளில் மின்சாரம் கிடையாது. இவைகளை அவர்களுக்கு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பீடி சுற்றும் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு 8 மணி நேரத்திற்கு மேலும் கூட பீடி சுற்றினால்தான் ரூபாய் 4 முதல் 5 வரையில் சம்பளம்—அதாவது கூலி கிடைக்கும். இதில் எப்படி அவன் வசிக்க முடியும்? வாழ்க்கை நடத்த முடியும்? அப்படி கஷ்டப்பட்டு வேலைசெய்பவர்களுக்கு பாதுகாப்பு வேண்டும். இருக்கக் கூடிய சட்டத்தையே அந்த முதலாளிகள் அமுல் நடத்துவது இல்லை. அவர்கள் நடைமுறையில் இருக்கும் சட்டத்தை உடனடியாக அமுல் நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படி அமுல் நடத்தாத முதலாளிகளை சிறையில் போட வேண்டும். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தால் அவனை வேலையை விட்டு நீக்கம் செய்கிறார்கள், சஸ்பெண்ட் செய்கிறார்கள். இன்னும் பல தண்டனைகளை அளிக்கிறார்கள். ஆனால் இருக்கிற சட்டத்தையே அமுல் நடத்த மறுக்கும், சட்டத்தை ஏற்றுக்



கொள்ள மறுக்கும் இந்த முதலாளிகளை சிறையில் தள்ளினால் மட்டும் போதாது, சங்கிலியால் கட்டி வைத்து நாய்போல் இழுத்துக் கொண்டு செல்வதற்கு இந்த நாட்டில் சட்டம் கொண்டு வரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வதோடு, (மணியடிக்கப்பட்டது) பீடித் தொழிலாளர்களுடைய வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படக் கூடிய வகையில் சட்டத்தை திருத்தி அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். *(மணி அடிக்கப்பட்டது)*

*(மாலை 5-10)*

*திரு. கே. குப்புசாமி :* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்றுப் புகழ்மிக்க இந்த மன்றத்தில் பேசுவதற்கு இன்று ஒரு வாய்ப்பினைப் பெற்றமைக்கு என்னைத் தேர்ந்தெடுத்த பழம்பெரும் பாண்டிய நாட்டின் ஒரு பகுதியாம் ஒட்டன்சத்திரம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எங்களது இதயத் தெய்வமான புரட்சித் தலைவர் அவர்களுக்கும் உளம் நிறைந்த நன்றியை உரித்தாக்குவதில் உள்ளபடியே பூரிப்படைகிறேன். பாராளுமன்ற மரபுப்படி ஐந்தாண்டுகளுக்கு தமிழக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட புரட்சித் தலைவரின் அண்ணாவின் அரசை இரண்டரை ஆண்டுக் காலத்தில் கலைத்து மீண்டும் தேர்தல் நடாத்தப்பட்டு மீண்டும் புரட்சித் தலைவரின் அரசு இன்று அமைந்திருப்பதை நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அரசியலமைப்புச் சட்டத்தில் கூட, நமது இந்தியத் துணைக் கண்டத்து அரசியலமைப்புச் சட்டம் ஒரு பெடரல் செட்-அப், கூட்டாட்சி அமைப்புத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதை நாம் அறிவோம். கூட்டாட்சி அமைப்பு முறையில் மத்தியில் ஒரு ஆட்சி மாநிலத்தில் வேறு ஒரு ஆட்சி அல்லது மாநிலத்தில் ஒரு ஆட்சி மத்தியில் வேறு ஒரு ஆட்சி அமைவதற்குரிய நல்ல வாய்ப்பு ஏற்படுத்தித் தருவதுதான் கூட்டாட்சி அமைப்பின் தத்துவம் யூனிட்டி இன் டைவர்ஸிட்டி, வேற்றுமையில் ஒற்றுமை என்பதுபோல் இனம், மொழி, பல்வேறு கலாசாரங்கள் இவற்றைக் கொண்ட மக்கள் இந்தியத் துணைக்கண்டத்தில் இணைந்திருக்கிற ஒரு ஒற்றுமைதான் 'யூனிட்டி இன் டைவர்ஸிட்டி' வேற்றுமையில் ஒற்றுமை காண்பதாகும். அத்தகைய தத்துவத்தைக் கொண்டதுதான் நமது இந்திய அரசியலமைப்புச் சட்டம். அந்தத் தத்துவதற்கு நேர்மாறாக மத்தியில் இருக்கிற அதே கட்சி மாநிலத்திலும் ஆட்சி செய்யவேண்டும் என்ற நோக்கம் குறுகிய நோக்கமாகும். ஜனநாயக முறைப்படி ஐந்தாண்டுகளுக்கு என்று தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு இரண்டரை ஆண்டுக் காலத்தில் கலைக்கப்பட்டு தேர்தல் நடத்தப்பட்டு தமிழக மக்கள் மீண்டும் அரசியல்மைப்புச் சட்டத்தில் உள்ளது போன்ற கூட்டாட்சி முறைதான் நம் நாட்டிற்கு என்று

அறிவிக்கிற முறையில் பல மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிற
முறையில் மத்தியில் இருக்கிற கட்சியின் ஆட்சி மறுபடியும் இங்கு வர விடாமல்
அண்ணாவின் அரசாகிய அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகத்தின் அரசை புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் இங்கே
அமைத்து நம் நாட்டு மக்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக விளங்குகிறார்கள்.
நேற்று பேசிய திருமயம் சுந்தரராஜ் அவர்கள் விவரம் புரியாத மக்கள் வோட்டு
போட்டு வெற்றி பெற்றீர்கள் என்றார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்
கொள்வேன், விழிப்புணர்ச்சி பெற்ற தமிழக மக்கள் விவரம் அறியாதவர்களா
அல்லது மாண்புமிகு உறுப்பினர் விவரம் குறைந்தவர்களா என்ற முடிவை
நான் அவர்களுக்கு விட்டு விடுகிறேன்.

பின்னர், நேற்று பேசிய மாண்புமிகு உறுப்பினர் நெல்லிக்குப்பம் கிருஷ்ண
மூர்த்தி அவர்கள் தமிழக விவசாயிகள் மீது தனியாக ஒரு பச்சாதாபம், தனி
யாக ஒரு பரிவு, தனியாக ஒரு கனிவு காட்டி இங்கே பேசினார்கள். தமிழக
விவசாயிகளின் கடன்களை ரத்து செய்யாதது பற்றி பல குறைகளை எடுத்
துக் காட்டினார்கள். நான் அவர்களுக்கு பணிவோடு ஒன்றைச் சொல்லிக்
கொள்வேன். உங்கள் அரசாங்கம் ஆட்சியில் இருந்தபோது, இன்று எதிர்க்
கட்சித் தலைவராக இருப்பவர் அன்று முதல் அமைச்சராக இருந்த காலத்தில்
—நீங்களும் விவசாயத் துறையில் அக்கறை கொண்டவர்கள்தான், அந்த
இயக்கத்தில் இருந்திருக்கிறீர்கள்—என்ன செய்தீர்கள் ? அன்று ஒன்பது
பைசாவாக இருந்த மின்கட்டணத்தை பத்து பைசாவாக உயர்த்தியபோது
இதே விவசாயிகள் ஒரு பைசா கட்டணத்தில் குறைக்கவேண்டும் என்று
கோரி போராடிய காலத்தில் நீங்கள் அவர்களை காக்காய், குருவிகளைப்
போல் சுட்டுப்பொசுக்கினீர்களே, அவர்களது ரத்தத்தைச் சுவைத்தீர்களே,
அன்று இந்த இரக்கம், பச்சாதாபம் எங்கே போனது என்று இந்த நல்ல
நேரத்தில் அவர்களுக்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.
உங்களுடைய ஆட்சிக் காலத்தில் 9 பைசா 10 பைசாவாக ஆகி, அது 14
பைசாவாக ஆகி அதை 12 பைசாவாகக் குறைத்து விவசாயிகளுக்கு நன்மை
செய்துள்ள இந்த அரசைப் பார்த்து குறை கூறுவதைப் பார்த்தால் விவசாய
மக்களே கூறாத குறைகளை மாண்புமிகு எதிர்கட்சி உறுப்பினர்கள் கூறு
வதைப் பார்க்கும்போது " ஆடு நனைகிறதே என்று ஓநாய் ஓலமிட்ட " கதை
தான் என் நினைவிற்கு வருகிறது.

அதோடு இன்னொன்றையும் அவர்கள் பேச்சிலே சொன்னார்கள். தேர்த
லுக்கு முன்னாலே நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இந்த
கடன் ரத்தைப் பற்றி ஏதோ ஒரு கருத்தை வெளிப்படுத்தினார்கள் என்றும்,
அதற்கு முரண்பட்ட கருத்தை முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்



என்றும், அதற்குப் பிறகு ஆளுநர் உரையிலே வேறு ஒரு கருத்து வந்திருக்கிறது போலவும், அதனால் முதலமைச்சர் அவர்கள் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை கைவிட்டு விட்டதைப் போலவும் எள்ளி நகையாடுவது போல் பேசினார்கள். அவர்கள் இயக்கத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் 16 பேர்கள் இருக்கிறார்கள். பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னாலே, இங்கே தமிழகத்தைச் சேர்ந்த ஒருவர், அங்கே துணை அமைச்சராக இருக்கிறார்கள். அவர்தான் மத்திய அமைச்சரவையிலே உள்ள திரு. ஆர். வி. சுவாமிநாதன் அவர்கள். அவர் பாராளுமன்றத் தேர்தல் நேரத்திலே சொன்னார்கள். எங்கள் ஆட்சி ஏற்பட்டால், விவசாயக் கடன் சுமை முழுவதையும் குறைத்து, கடனை ரத்து செய்வோம் என்று பிரசாரம் செய்தார்கள். ஆனால், அதே கருத்தை தேர்தல் முடிந்த பிறகு மத்திய அமைச்சர் அவையிலே உள்ள நிதி அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் அதை மறுத்தார்கள். விவசாயக் கடனை ரத்துசெய்வது நியாயமல்ல. அதை ரத்து செய்ய முடியாது என்று தமிழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் துணை அமைச்சர் சொன்னதைக் கைவிட்டார். அப்போது நாடாளு மன்றத்திலே 16 உறுப்பினர்களைக் கொண்ட தமிழக உறுப்பினர்கள் ஏன் கேட்கவில்லை ? மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இதை எடுத்துக் காட்டாதது, உண்மையிலேயே வேதனையாகவும், வியப்பாகவும் இருக்கிறது.

அதோடு அல்லாமல், அவர்கள் பல்கேரியா கப்பல் விவகாரத்தைப் பற்றிச் சொன்னார்கள். அது நீதி மன்றத்திலே இருக்கின்ற பிரச்னை என்பதை நான் உணர்ந்திருக்கிறேன் என்றாலும், அந்தப் பிரச்னைக்கு குந்தகம் ஏற்படாத வண்ணம் நான் ஒரு கருத்தைக் கூறுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சர் அவர்கள்மீது ஊழல்கள் பற்றி இந்த மாமன்றத்திலே பல குற்றச்சாட்டுகள் எழுப்பிய நேரத்திலே, மிகப் பெருந்தன்மையாக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் எழுந்து, நானே அந்த விசாரணைக்குத் தயாராக இருக்கிறேன் ; ஒரு சுப்ரீம் கோர்டு நீதிபதி தலைமையில் விசாரணைக்கு ஆட்படுத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறேன் என்று கூறி, அதற்கேற்ப சுப்ரீம் கோர்டு நீதிபதி விசாரணைக்கு பிரதமருக்குத் தாமே கடிதம் எழுதிய முதலமைச்சர் இந்த இந்தியத் துணைக் கண்டத்திலே புரட்சித் தலைவர் அவர்களைத்தவிர, வேறு யாருக்கும் அந்தத் தனித்தன்மை இல்லை என்பதை இந்த நாடு அறியும் ; இந்த நாட்டு மக்கள் அறிவார்கள்.

[திரு. கே. குப்புசாமி] [1980 ஜூன் 27

அதே நேரத்தில் இன்னொன்றையும் நான் இந்தச் சபையிலே எடுத்துச் சொன்னால், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என்னைத் தவறாகக் கருத மாட்டார்கள் என்று எண்ணுகிறேன். அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்தில், அவர்கள்மீது சில குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டது. அந்த வழக்குகள் சுப்ரீம் கோர்ட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அப்படி அந்த வழக்குகள் சுப்ரீம் கோர்ட்டுக்கு வந்த நேரத்தில், 'முதல் அமைச்சர் அவர்கள் தனிப்பட்ட நபர் அல்ல ; அரசாங்க அலுவலர்'
'He forms part of the Government; He is a Government Servant"
அவர் அரசு அலுவலர் என்ற முறையில் அங்கே எடுத்துச் சொல்லப்பட்டது. அது தவறு ; அந்த பிரார்சை ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று நான் கூற வில்லை. அதேமாதிரி முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள்மீது வந்த போது, விசாரணை போட வேண்டுமென்பது, உண்மையிலேயே அப்படி கோருவது புரியாத புதிராக இருக்கிறது. விவரம் அறிந்த உறுப்பினர் இப்படியெல்லாம் பேசுவது எனக்கு வேதனையைத் தான் ஏற்படுத்துகிறது.

அதோடு, இங்கே மின்சாரத்தைப் பற்றி எதிர்க் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். மின்சார கட்டுப்பாடு பற்றிப் பேசியவர்கள், அன்றைக்கு சமயநல்லூர் அனல் நிலையத்தை மலிவு விலைக்கு. மார்க்கெட்டுக்கு அனுப்பியதை சிந்தித்திருக்க வேண்டும். அன்று அந்த நிலை என்றால், இன்று குந்தா நீர் மின் நிலையம், காடம்பாறை மின் நிலையம், தூத்துக்குடி அனல் மின் நிலையம், குறைந்த மலிவு விலையில் மார்க்கெட்டுக்குப் போகாது என்பது என்ன உத்தரவாதம்? அந்த அளவிலே மின் நிலையங்கள் எல்லாம் இங்கே செயல்பட வைத்த புரட்சித் தலைவர் அவர்கள் அரசு மின் உற்பத்தியைப் பெருக்குகின்ற பணியிலே ஈடுபட்டு இருப் பதை எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பாராட்டாதது உண்மையிலேயே வேதனைக் குரிய ஒன்றாகும்.

இந்த இரண்டரை ஆண்டு காலத்தில் எதுவும் செய்யவில்லை இந்தப் புரட்சித் தலைவர் அரசு என்று இங்கே பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள்.

(மாலை 5-20)

நான் அவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். இரண்டரை ஆண்டு காலத்தில் குறிப்பாக 214 போராட்டங்களை எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் நடத்தியும், தூண்டிவிட்ட பிறகும் அதை வெற்றிகாமாகச் சமாளித்தது ஒன்றே மிகப் பெரிய சாதனை அல்லவா என்றுதான் நாட்டு மக்கள் கேட்கிறார்கள்.



1980 ஜூன் 27] [திரு. கே. குப்புசாமி]

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலைமை கடந்த இரண்டரை ஆண்டு கால புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டதை உறுப்பினர்கள் மறந் திருக்க மாட்டார்கள். குமரி முனை கடற்பாறையில் குறளி. கன்னியா குமரியில் வள்ளுவர் நினைவாலயம், தமிழ்ப் பண்பாட்டு மையம், வறுமையில் வாடும் புலவர்களுக்கு மாதம் 250 ரூபாய் உதவித் தொகை, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பக் கழகம், பெரியாரைப் போற்றும் வகையில் பெரியார் மாவட்டம், பாவேந்தர் பாரதிதாசன் பெயரில் விழா. தமிழ்த் தென்றல் திரு.வி.க. பெயரில் விழா. பெரியார் நினைவாக எழுத்துச் சீர் திருத்தம், பிற்பட்டோர் நலம். அரிசன நலம் இப்படி பலவிதமான காரியங் களை இந்த இரண்டரை ஆண்டு காலத்தில் செய்து முடித்த ஒரு பெருமை புரட்சித் தலைவர் ஒருவருக்குத்தான் உண்டு என்பதை நாட்டு மக்கள் நல்ல முறையில் உணர்ந்திருக்கிறார்கள். ஆகவே, மீண்டும் பதவியில் அமர்த்தியிருக் கிறார்கள் என்பதை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உணர்ந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

ஆளுநர் உரையில் எதிர்காலத்தில் ஆற்ற இருக்கும் பணிகள் பற்றி நிறைய சொல்லப்பட்டிருக்கிறது. எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் பல் கலைக் கழகம் அமைப்பதைப் பற்றிச் சொன்னார்கள். கோவையிலே பல்கலைக் கழகம், திருச்சியிலே பல்கலைக் கழகம் அமைப்பதற்கு உத்தரவுகள் போடப்பட்டிருக்கின்றன. காரைக்குடியில் பல்கலைக் கழகம் அமைய இருக்கிறது. இதுவரை இல்லாத அளவுக்கு தமிழ் பல்கலைக் கழகம் ஒன்று அமைய இருக்கிறது.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க திட்டங்கள், வேலையற்ற பட்டதாரிகளுக்கு உதவித் தொகை ஆகியவை பற்றியெல்லாம் ஆளுநர் உரை யில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தேர்தல் காலத்தில் சொன்ன வாக்குறுதிகள் அனைத்தும் ஆளுநர் உரையில் சொல்லவில்லை என்று எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அங்கலாய்த்துக் கொண்டார்கள். அவர்கள் அந்த வாக்குறுதிகள் எல்லாம் வருகிற பட்ஜட் கூட்டங்களில் படிப்படியாக நிறை வேற்றப்படும் என்பதை உணர்ந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

என்னுடைய தொகுதியிலே இருக்கிற சில பிரச்சினைகளைப் பற்றிக் கூறி விட்டு முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். என்னுடைய தொகுதி திருச்சி மாவட்டம், கோவை மாவட்டம். மதுரை மாவட்டம் ஆகியவற்றின் எல்லைக் கோட்டில் இருக்கும் பிற்பட்ட பகுதி. பொருளாதாரத் துறையில், நீர்ப்பாசனத் துறையில், தொழிற் துறையில் மிகவும் பின்தங்கிய தொகுதி

[திரு. கே. குப்புசாமி] [1980 ஜூன் 27

ஒட்டன்சத்திரம் தொகுதி. அந்தத் தொகுதியில் நல்லதங்காள் ஓடையையும், நற்காஞ்சி ஓடையையும் கங்கப்பட்டி பகுதியில் அத்திக்கலம்பை ஓடையையும் எடுத்து அவற்றின் குறுக்கே சிறு சிறு நீர்த்தேக்கங்கள் கட்டினால் நீர்ப்பாசன வசதி இல்லாத பகுதிகள் நீர்ப்பாசன வசதி பெறும். வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் உழவர் பெருமக்களுக்கு பேருதவியாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இண்டஸ்ட்ரியலி பாக்வார்டு—தொழிற் துறையில் பின்தங்கிய பகுதி என்று அந்தப் பகுதியை அறிவிக்கவேண்டும். கிராம வளர்ச்சி ஒருங்கிணைப்புத் திட்டம்—இன்டகிரேடெட் ரூரல் டெவலப்மென்ட் ப்ரோகிராம் கூட சரியில்லை. என்னுடைய தொகுதியை அதன் கீழ் சேர்த்து புதிய தொழில்களை நிறுவ அரசு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும்.

பெரும்பாலான பகுதிகளில் சாலை இணைப்புகள் இல்லை. பஸ் போக்குவரத்து இல்லை. குடிநீர் வசதி முழுமையாக இல்லை. ஒட்டன்சத்திரத்தில் அரசினர் மருத்துவ மனைக்கு போதிய கட்டிட வசதி இல்லை. இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டும் கூட வேலை நடைபெறாமல் இருக்கிறது. மக்கள் 20 மைல் தூரத்திலுள்ள பழனிக்கோ, திண்டுக்கல்லுக்கோ செல்ல வேண்டிய பரிதாப நிலையை மாற்ற அங்கே அரசு மருத்துவ மனைக்கு புதிய கட்டிடத்தைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வரலாற்று ஆசிரியர்கள் புத்தர் காலத்தை பொற்காலம் என்று கூறுவார்கள். அதே போன்று கடந்த இரண்டரை ஆண்டு கால ஆட்சியையும், எதிர்காலத்திலே புரட்சித் தலைவரின் ஆட்சியையும் நிச்சயமாக வரலாற்று ஆசிரியர்கள் அந்தப் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தைப் பொற்காலம் என்று சொல்வார்கள் என்று கூறி ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. நா. சுந்தரராஜ் :** சார், ஒரு தன்னிலை விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது நான் ஏதோ புரியாத மக்கள் அண்ணா தி.மு.க.-வுக்கு வாக்களித்துவிட்டார்கள் என்று பேசியதாகச் சொன்னார்கள். நான் அந்த வகையில் பேசவில்லை. மோசடிகள் பல இடங்களிலே நடைபெற்றன என்றுதான் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** போதும். அதோடு நிறுத்திக் கொள்ளுங்கள்.



1980 ஜூன் 27]

***திரு. பாபு ஜனார்த்தனன்:** மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய உரையைத் துவக்குவதற்கு முன்பு என்னுடைய இதய தெய்வமான அறிஞர் அண்ணா அவர்களுக்கும், செய்யாறு தொகுதியிலே தி.மு.க. வேட்பாளராக என்னை நிற்க வைத்த தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் பொதுச் செயலாளர் அவர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலக்கணமாகத் திகழ்ந்த என்னுடைய வெற்றிக்காகப் பாடுபட்ட புலவர் கோவிந்தன் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு ஐந்தாவது முறையாக திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளரை வெற்றிபெறச் செய்த செய்யாறு தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆளுநர் உரையிலே விவசாய மக்களுக்கு நன்மை செய்வதாக எந்தவிதமான திட்டமும் சொல்லப்படவில்லை. விவசாயிகளுக்குப் பல நன்மைகள் செய்வதாகவும் விவசாயிகளுடைய கடன்களைப் பூரணமாக ரத்து செய்வதாகவும் மக்களுக்கு வாக்குறுதி அளித்துவிட்டு இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே வந்தபிறகு சிறு விவசாயிகளுக்குத்தான் கடனை ரத்து செய்வோம் என்று தெரிவித்து இருப்பது ஒரு நாணயமுள்ள செயலாகத் தெரியவில்லை என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இன்றைய தினம் வெற்றிக் களிப்பிலே இருக்கின்ற அமைச்சர் பெருமக்களும், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் சற்று நாட்டினுடைய விவசாயி நடப்பை நன்கு கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயிகளுக்குத் தேவைப்படுகிற உர விலையை ஏற்றியதால்—ஒரு மூட்டைக்கு 30 ரூபாய் என்ற அளவிற்கு ஏற்றியபோது—ஆட்சிப் பொறுப்பிலே உள்ளவர்கள் அன்றைய தினத்திலே வியாபாரிகளிடத்திலே எவ்வளவு ஸ்டாக் இருந்தது என்பதைக் கணக்கு எடுக்கவில்லை. வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கவனிக்கவில்லை. அப்படிக் கணக்கு எடுக்காத காரணத்தால் பல மொத்த வியாபாரிகள், விலையேற்றத்தைப் பயன்படுத்திக்கொண்டு—ஏற்கனவே விலையேற்றத்திற்கு முன்னாலே இருந்த இருப்பிலே உள்ள மூட்டைகளை பழைய விலைக்குத்தான் விற்க வேண்டும். இனி வருகின்ற மூட்டைகளுக்குத்தான் விலையை ஏற்றவேண்டும்—அவர்கள் லட்சக்கணக்கான ரூபாய் சம்பாதித்து இருக்கிறார்கள். இதன் காரணத்தால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். முப்பது ரூபாய் வீதம் ஏற்றிய உடனேயே

அவர்கள் இருப்பைக் கணக்கு எடுத்து இருக்க வேண்டும், ஆனால் வெற்றிக் களிப்பிலே அவர்கள் இருந்தார்களே ஒழிய விவசாயிகளுக்குச் செய்ய வேண்டிய தங்கள் கடமைகளைச் செய்யவில்லை.

அதுமட்டுமல்ல, தென் ஆற்காடு மாவட்டத்திலேயும் வட ஆற்காடு மாவட்டத்திலேயும் உள்ள விவசாயிகளுக்கு 90 நாட்களுக்குள்ளாக மின்சாரம் தருவதாகச் சொல்லி அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஆணை பிறப்பித்தது. அதனால் பல ஏழை விவசாயிகள், பாட்டாளி மக்கள் தங்களிடம் இருந்த நகைகளை, வீட்டை அடமானம் வைத்து 90 நாட்களிலே மின் இணைப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கையிலே மோட்டார் பம்புசெட்டுகளை வாங்கி வைத்துவிட்டார்கள். மின்சாரத்துறை அதிலே போதுமான கவனம் செலுத்தாத காரணத்தால் இன்றைக்குப் பல விவசாயக் குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றன. 90 நாட்களுக்குள் மின் இணைப்புக் கொடுப்பதாகச் சொன்னது யார்? அவ்வாறு கொடுக்காததற்குக் காரணம் என்ன? அதிலே உள்ள மர்மம் என்ன? ஏன் விவசாயிகளைத் துன்பப்பட வைத்தார்கள்? அவர்கள் தங்களுடைய நகைகளை, வீட்டை இழக்கின்ற நிலைமைக்கு ஆளாக்கியதற்கு யார் பொறுப்பு என்பதைப் பற்றியெல்லாம் கவர்னர் உரையிலே எதுவும் குறிப்பிடப்படவில்லை.

(மாலை 5-30)

அதுமட்டுமல்ல, எங்கள் பகுதியிலே நெசவாளர்கள் அதிகம். நூல் விலை ஏற்றத்தின் காரணமாக அந்த நெசவாளப் பெருமக்கள் இன்னல் படுகிறார்கள். அதுமட்டுமல்லாமல், தேங்கியிருக்கின்ற கைத்தறி துணிகள் விலைக்குப் போகாமலும் அந்த நெசவாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கோவாப்டெக்ஸைப் பற்றிப் பலவிதமான திட்டங்களுக்கான அறிவிப்பு கவர்னர் உரையிலே இருக்கிறதே தவிர, கோவாப்டெக்ஸில் பணி செய்யும் ஊழியர்களைப்பற்றிக் காணப்படவில்லை. எப்படி, யூனியன் ஆசிரியர்களை அரசுப் பணியாளர்களாக ஏற்றுக்கொள்கிறோம் என்று இந்த அரசு அறிவித்ததோ, அதைப்போல கோவாப்டெக்ஸில் பணியாற்றும் ஊழியர் களையும் அரசு ஊழியர்களாக ஆக்குவதற்கு வழிவகை காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நீண்ட நெடுங்காலமாகக் கோவாப்டெக்ஸில் பணிபுரியும் அந்த ஊழியர்கள் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.





அதுமட்டுமல்ல, மின்சாரத் திட்டத்தைப் பொறுத்தவரையில் செறிவான, தெளிவான, நேர்மையான நிலை இல்லாததால் பல கிராமங்களில் இன்றைய தினம் தெருவிளக்குகள்கூட இல்லாமல் மக்கள் அவதிப்படுகிறார்கள். அதனால் விஷ ஜந்துக்களால் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள். குடிதண்ணீர் வசதி கிடையாது, மின்வசதி கிடையாது. இப்படிக் கிராமப்புற மக்கள் மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், வடார்க்காடு மாவட்டத்தில் அமைதியில்லாத ஒரு நிலைமை இருக்கிறது. திருவண்ணாமலை, கலசப்பாக்கம் பகுதிகளில்,— வடார்க்காடு மாவட்டத்தில்—திருட்டுக்கள் அதிகமாக நடக்கின்றன. திருவண்ணாமலை, கலசப்பாக்கம் பகுதிகளில் பெண்கள் கடத்தப்படுவ தாகவும், பெண்கள் பலர் இரவிலே மானபங்கப்படுத்தப்படுவதாகவும், அதை அவர்கள் வெளியே சொல்லமுடியாத நிலைமையில் அந்தப் பகுதியிலே இருக்கிறார்கள். திருப்பத்தூரில் பயங்கரமான கொலைகள் நடக்கின்றன. ஆனால் இதுவரையில் அவைகள் கண்டுபிடிக்கப்படவில்லை. அதனால் மக்கள் துன்பப்படுகிறார்கள். விவசாயிகளின் வைக்கோல் போர்கள், மற்றச் சொத்துக்கள் எரியூட்டப்படுகின்றன. நாட்டில் அமைதியில்லாமல், சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்ற இடங்களில் பல்கலைக்கழகங்களை உருவாக்குவதாக அறிவித்து இருக்கிறார்கள். வடார்க்காடு மாவட்டத்தில் குறைந்தபட்சம் ஒரு சட்டக் கல்லூரியையாவது கொண்டு வருவதற்கு இந்த அரசு முயற்சிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

வடார்க்காடு மாவட்டம் ஒரு பெரிய மாவட்டம். அந்த மாவட்டத்தை இரண்டு பகுதிகளாகப் பிரித்து, திருவண்ணாமலை அடங்கியுள்ள மாவட்டத்தை அண்ணா பெயரிலே அமைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, திராவிட இயக்கக் கொள்கைகள் இந்த ஆட்சியிலே குழி தோண்டிப் புதைக்கப்படுகின்றன. பெரியாரின் சுயமரியாதைக் கருத்துக்கள் குழிதோண்டிப் புதைக்கப்படுகின்றன என்று சொன்னால் அது மிகையாகாது. திராவிட இயக்க வரலாற்றில் வந்தவர்கள் நாம். அது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, தி. க.-வாக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, அடிப்படைக் கொள்கைகள் நம்முடைய பெரியாரின் கொள்கைகள். ஆனால் ஆளுங்கட்சித் தலைவராக

இருப்பவர் சுயமரியாதைக் கொள்கைகளை அடியோடு விட்டு விட்டார். நம்முடைய நண்பர், ஆளுங்கட்சி வரிசையிலே முதல்வராக இருப்பவர் தனிப்பட்ட நபர் அல்ல; அவர் சர்க்காருக்குச் சொந்தம் என்ற நிலையில் இருப்பவர், ஆனால் அவர்கள் சுயமரியாதைக் கொள்கையை மறந்து விட்டு விட்டு மூகாம்பிகை கோயிலுக்குப் போயிருக்கிறார்கள். இது பெரியாரின் கொள்கைக்குக் கொடுக்கின்ற மரியாதையா என்பதைக் கேட்க விரும்புகிறேன். பெரியாரின் சிலையைக் காந்தியிலே வைக்க விடமாட்டேன் என்று சொன்னார்கள். அதை இங்கே இருப்பவர்கள் மனதிலே பாராட்டி இருக்கிறார்களே தவிர, வெளிப்படையாகப் பாராட்டவில்லை என்று சொன்னவர்கள். இந்த நாட்டின் முதல்வரவர்கள் அப்படியும் சொல்லிவிட்டு, பெரியாரின் சிலைக்கும் மாலை போடுகிறார்கள். ஆகவே இந்த நேரத்தில் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன், ஏதாவது ஒரு கொள்கையில் திண்மையாக இருங்கள் என்று இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய சுயமரியாதை அரசியல் கொள்கை நம்முடைய பாரம்பரியமான ஒரு நிலைமை 1967-லிருந்து மந்திரிசபை அமைக்கப்பட்ட பொழுது ஒரு பார்ப்பனர்கூட மந்திரிசபையிலே இல்லாத நிலைமை இருந்தது. அந்தக் கொள்கை இங்கே குழிதோண்டிப் புதைக்கப்பட்டு விட்டது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், சென்ற இரண்டரை ஆண்டுக்கால ஆட்சிக்காலத்தில் பல மாவட்டங்களில் ஆட்சித் தலைவர்களாகவும், ஐ.பி.எஸ். அதிகாரிகளாகவும் தமிழ்மொழி தெரியாதவர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன், தமிழ்க் கலாச்சாரம், தமிழ்ப் பண்பாடு என்று பேசுகின்ற அருமை ஆளுங்கட்சித் தலைவரவர்களே, இனியாவது ஆங்காங்கு தமிழ்மொழி தெரிந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களைப் போடுங்கள். அதேபோல் போலீஸ் அதிகாரிகளையும் தமிழ்மொழி தெரிந்தவர்களாகப் போடுங்கள். சமீபத்தில் வடார்க்காட்டில் தமிழ் மொழி தெரிந்த ஆட்சித் தலைவரை மாற்றிவிட்டு வேற்று மொழிக்காரர்களைப் போட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட செயல்களை இனி செய்யாதிருக்குமாறு இந்த அரசைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இங்கே, வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு, வறுமைக் கோட்டிற்கு அடியிலே உள்ளவர்களுக்கு ரூ. 1 என்ற அளவிலே உதவி தருகிற திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழே



இந்த நாடு வந்ததற்குக் காரணம் என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். ஒரே ஒரு புள்ளிவிவரத்தை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன். 1977-க்குப் பிறகு, இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, கேரள மாநிலத்திலிருந்து சென்னைக்குக் குடியேறியவர்கள் 36,000 குடும்பத்தைச் சேர்ந்த மக்கள். தமிழ்நாட்டிலே, பல கிராமங்களிலே, என்னுடைய தொகுதியிலே கூட, ஒவ்வொரு கிராமத்திலேயும் ஒவ்வொரு கேரளக்காரர், ஒரு மளிகைக்கடை வைத்திருக்கிறார், அல்லது பெட்டிக்கடை வைத்துப் பிழைக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. தமிழக மக்களை வாழ விடுங்கள், தமிழ் மக்களுக்குத் துரோகம் செய்யாதீர்கள் என்று இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, என்னுடைய கழகத்தையும், கழகத் தலைவரையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் "வேட்டை நாய்" என்று சொன்னார். (குறுக்கீடு). எங்களுடைய தலைவர் அதைப்பற்றி பின்னால் பேசுவார் என்பதால், அதை விட்டுவிடுகிறேன். ஆகவே, என்னுடைய கன்னிப் பேச்சை இந்த அளவோடு முடித்துக் கொள்கிறேன். தமிழ் மணம், தமிழ் உணர்வு, தமிழ் கலாச்சாரம் வளர இந்த அரசு முயலவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. ரா. கு. பெருமாள்:** மாண்புமிகு தற்காலிகத் தலைவரவர்களே, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது என்னை இந்த மன்றத்தில் பேச வைத்த, நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் பகுதியைச் சேர்ந்த வாக்காளர் பெருமக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக, இந்த கவர்னர் உரையிலே, சுட்டிக்காட்டக் கூடிய கொள்கைகள் பல இருக்கின்றன. விவசாயிகள் பிரச்னை, கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்னை, குடிநீர்ப் பிரச்னை, இப்படிப் பல்வேறு கோடிட்டு காட்டுகின்ற ஒவ்வொரு அம்சத்தையும் விரிவாக, விளக்கமாகக் கூறாவிட்டாலும் கூட கோடிட்டு காட்டுவதன் வாயிலாக, முன்பு நடந்த ஆட்சியிலே என்னென்ன செய்தோம் என்பதை எடுத்துக் காட்டுகின்ற வகையிலே இந்த கவர்னர் உரை அமைந்திருக்கிறது. குறிப்பாக, இந்த விவசாயப் பிரச்னையை எடுத்துக்கொண்டால், அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் பொதுவாக, இந்தியாவிலே, விவசாயிகளுடைய கடனை, குறிப்பாக சிறு விவசாயிகளுடைய கடனை ரத்து செய்ய யாரும் முன்வரவில்லை ஒருவரைத் தவிர, என்பதை ஒத்துக்கொள்வார்கள். இரண்டு ஆண்டுகளாக ஆட்சிப் பொறுப்பிலிருந்த முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள், விவசாயிகளது கடனை ரத்து செய்யும் வகையில் ரூ. 40 கோடி செலவு செய்தார்கள். அகில இந்தியாவிலே

எந்த மாநிலத்திலும் செய்யாத செயலை—அளிக்காத சலுகையை அவர்கள் செய்து காட்டினார்கள், அளித்தார்கள். விசைத்தறிகள் தடையை நீக்கி செய்ய தாங்கள் நிச்சயம் முயற்சி செய்வோம் என்று ஆளுநர் உரையாற்றியிருக்கிறார்கள். பெரியவர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்களுக்கு ஒன்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அவர், 5 ஆம் தேதி பெரிய ஊர்வலம் நடத்தப் போவதாக பத்திரிகையிலே அறிக்கை விடுத்துள்ளார். நான் அதைப் பார்த்தேன். போன ஆண்டு பருத்தி, குவிண்டால் ரூ. 350 ஆக இருந்தபோது, நாம் கட்டுகின்ற வேட்டியின் விலை ரூ. 25-ஆக இருந்தது. நடப்பு ஆண்டில் அதே பருத்தி ரூ. 250-க்கு விற்றது. ஆனால், நாம் கட்டுகிற வேட்டி, ரூ. 30-ஆக உயர்ந்து விட்டது. பொதுவாக, மாட்டுக்குத் தீவனம் போடுகின்ற பருத்திக் கொட்டையினுடைய விலை, பருத்தி விலை குவிண்டால் ரூ. 350-ஆக இருந்த போது, ரூ. 110-ஆக இருந்தது. இப்பொழுது குவிண்டால் ரூ. 250-ஆக விற்கும்போது, ரூ. 160-ஆக விற்கிறது. பொதுவாக, விளைந்த பொருள்களுக்கு விலை இறங்கி இருக்கும்போது, மில்லின் சொந்தக்காரர்கள் அதைப் பாவாக்கி, நெசவு நெய்து, நாம் உடுத்துகின்ற வகையில் கொடுக்கும்போது, விலை ஏறிக்கொண்டே போகிறது. அதைக் கட்டுப்படுத்துகிற அதிகாரம் மத்திய சர்க்காருக்கு இருக்கிறது, மாநில சர்க்காருக்கு இல்லை என்பதை பெரியவர் திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் நிச்சயம் உணர்வார்கள் என்று நம்புகிறேன். ஆகவே, இந்த நிலைமையிலே, இந்த அவையின் மூலமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றி, மத்திய சர்க்காருக்குத் தெரிவிக்கும்போது, அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன்.

பொதுவாக நம்முடைய எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒன்றை உணரவேண்டும். 1969 ஆம் ஆண்டு முதல் 1979 ஆம் ஆண்டு வரை மத்திய அரசு பல்வேறு மாநிலங்களில் செய்த மொத்த முதலீடு ரூ. 3,463 கோடி. அதில் தமிழ்நாட்டில் செய்யப்பட்ட முதலீடு ரூ. 262 கோடி. அதாவது சுமார் 8 சதவீதமாக இருந்தது. 1979 ஆம் நிதி ஆண்டு முடிவு வரையிலான மொத்த முதலீடான 15,668 கோடியில், தமிழ் நாட்டில் செய்யப்பட்ட முதலீடு ரூ. 616 கோடியாக அதாவது 4 சதவீதமாகக் குறைந்து விட்டது என்று ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(மாலை 5-40)

துறைமுகக் கோட்டின் நீர் வாழும் மக்களின் சதவீதத்தில் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அதிகமான அளவில் இருந்து வருவதற்கு இது ஒரு முக்கியமான காரணமாகும் என்று நாம் மத்திய அரசை வலியுறுத்தின் வகையில் இங்கே கவர்னர் உரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.





பொதுவாகத் தொழில் துவங்கவேண்டுமானால், மத்திய அரசு நிதி கொடுப்பது மட்டுமல்லாமல், உரிமங்களும் வழங்க வேண்டும். தொழிற்சாலைகளை ஊக்குவிக்கின்ற வகையில் உரிமங்கள் வழங்கப்படுகின்றபோது தொழில் துறை வளரும். தொழில் துறை வளர்ந்தால் தொழிலாளர்கள் நலம் பெறுவார்கள். வேலைவாய்ப்பு பெருகும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த உடனே சிறு தொழில்கள் பெருகுவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் மையங்கள் ஏற்படுத்தினார்கள். எந்தெந்த மாவட்டங்களில் என்னென்ன மூலப் பொருட்கள் கிடைக்கின்றன, அதை வைத்து என்ன தொழிற்சாலை தொடங்கலாம், என்பதைக் கருதி தொழில் மையம் ஏற்படுத்தி அதைத் தீவிரமாக செயல்படுத்தி வந்தார்கள். ஆனால் நம்மை இடையிலே வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள் இந்திரா காந்தி அம்மையார் பிரதமராக வந்தவுடன்.

இதற்கு முன்பு இருந்த அரசு 17 சிறிய தீப்பெட்டி உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்தியது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்று 2 ஆண்டுகாலத்திற்குள்ளாக, 57 கூட்டுறவு சங்கங்களை உருவாக்கி அதன் வாயிலாக லட்சத்திற்கும் மேற்பட்ட வறிய எளிய மக்கள், வாழ்வை இழந்து வாடுகின்ற பெண்கள், செய்யக்கூடிய தொழிலை உருவாக்கி, கிராமப்புறங்களிலே பொருளாதாரம் மேம்பாட்டையச் செய்து, வளர்ச்சி அடைகின்ற அளவுக்கு அதை உருவாக்கி இருக்கிறார்கள்.

எனவே, இன்னும் தொழில் துறையைப் பொறுத்த அளவிலே, சிறிய தீப்பெட்டித் தொழிற்சாலைகளைத் துவங்க அனைத்து மாவட்டங்களுக்கும் உரிமம் வழங்கியிருக்கிறார்கள். குளோரைட் கிடைக்க வழிசெய்தால் அதிலே 2 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வழியிருக்கிறது. மத்திய அரசை மேலும் வலியுறுத்தி, உரிமங்கள் பெறுவதோடு மட்டுமல்லாமல், முதலீடு பெறவும் அரசு முயற்சி செய்யவேண்டும். நாம் எந்த முறையிலே மத்திய அரசை அணுகினாலும், அங்கிருக்கிறவர்கள் நமக்கு இடங்கொடுக்காத காரணத்தால், இங்கே இருக்கிற அமைச்சர்களையும், அரசு செயலாளர்களையும் குறை கூறிப் பயனில்லை. எனவே, மத்திய அரசை மீண்டும் வற்புறுத்த வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

அதேபோல் அணைகளைப் பராமரிப்பதற்கும் பாலங்கள் கட்டுவதற்கும் திட்டங்கள் தீட்டப்படும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். என்னுடைய விளாத்திகுளம் பகுதியில், பொதுவாக, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆய்வு செய்யப்பட்டு, 'எக்கனாமிக், அன்எக்கனாமிக்'

[திரு. ரா. கு. பெருமாள்] [1980 ஜூன். 27

என்று பார்த்து, திட்டங்கள் தீட்டுவதை எடுத்து விட்டார்கள். ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பின்னர், எக்கனாமிக், அன்-எக்கனாமிக் என்று பாராமல், வானத்திலே பொழிகின்ற தண்ணீர் வீணாகக் கடலிலே கலக்காதவண்ணம் அணை கட்ட வேண்டுமென்ற திட்டங்களைத் தீட்டி, என்னுடைய விளாத்திகுளம் பகுதியிலே நெல்லை அணைக்கட்டு சுமார் 7 கோடி ரூபாய் அளவிற்கு திட்டங்களைத் தீட்டி, அரசு ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளார்கள். அந்த ஒப்புதலைப் பெற்று, அந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் துவங்குவதற்கு வசதியாக, இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே, ஒரு கூட்டுறவு நூற்பாலை ஏற்படுத்த வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாகவும், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தின் மூலமாகவும், தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள். வானம் பொழிந்தால்தான் பூமி விளையும் என்றிருக்கிற அந்தப் பகுதி மக்கள் நலன் கருதி, கூட்டுறவு நூற்பாலையை ஏற்படுத்துவதன்மூலம் தொழில்களைப் பெருக்க முடியும், அதனைச் செய்யவேண்டுமென்று இந்த மன்றத்தின்மூலம் கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தில், மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதியான விளாத்திகுளம் தொகுதியிலே "வைப்பார்" என்ற ஆறு ஓடுகிறது. கடல் நீர் அதிலே கலக்கிற காரணத்தாலும், அங்கே ஆற்றுத் தண்ணீர் அதிலே சேர்வதாலும், அந்தப் பகுதி ஆண்டில் 3 மாதங்களுக்கு தீவு போல காட்சி அளிக்கிறது. எந்தவிதமான போக்குவரத்து வசதியும் இல்லாத ஒரு தீவாக அது இருக்கிறது. ஏழை மக்கள் அங்கிருந்து வெளியூர்களுக்குச் செல்ல முடியாமலிருக்கிறார்கள். அந்த வைப்பாற்றில் ஒரு பெரிய மேம்பாலம் கட்டுவதற்கு திட்டம் தீட்டப்பட்டது. அது நிறைவேற்றப்படவில்லை. அதை பட்ஜெட்டிலே சேர்க்க வேண்டுமென்று கேட்பதோடு, நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் நிறைவேற்றித் தருவார் என்று கருதுகிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், இவர்கள் வீடு கட்டிக் கொள்வதற்காக 2,400 ரூபாய் கடன் கொடுக்கப்படுகிறது. அதே நேரத்தில் மானியம் கொடுக்கிறோம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை, 5,000 ரூபாயாக உயர்த்தி, ரூ. 4,000 கடனாகவும், ரூ. 1,000 மானியமாகவும் வழங்க உத்தரவிட்டால் நன்மை இருக்குமென்று என்னுகிறேன்.



1980 ஜூன் 27] [திரு. ரா. கு. பெருமாள்]

உழைப்புக்கு உணவு திட்டம் என்ற முறை கையாளப்படுகிறபோது, முன்பு மத்தியிலே இருந்த ஜனதா சர்க்கார் திட்டத்தைத் தீட்டுகிறபோது எவ்வளவு வேலைகளை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளுங்கள், அதற்காக அரிசியும் பணமும் கொடுக்கிறோம் என்று சொல்லி இருந்தார்கள். அதையொட்டி, சாலைகளைச் செப்பனிட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால், நடந்து முடிந்த தேர்தலுக்குப் பிறகு, இந்திரா காந்தி அம்மையார் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே, இந்தத் திட்டத்தை நிறுத்தி விட்டார்கள். அதனால் முன்பு செய்த வேலைகளுக்கெல்லாம் அரிசியும் கிடைக்கவில்லை, பணமும் கிடைக்க வில்லை. அது அப்படியே நின்று கொண்டிருக்கிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலேயும், பல இலட்சக்கணக்கான ரூபாய்கள் வேலை செய்து முடித்துவிட்டு, அரிசியும் கிடைக்காமல், பணமும் கிடைக்காமல் நின்று கொண்டிருக்கிறது. எனவே, தமிழக அரசு அந்த வேலையைத் தொடர்ந்து நிறைவேற்றுவதற்கும் அதே நேரத்தில் செய்து முடித்த வேலைகளுக்குப் பணம் கிடைப்பதற்கும் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு உத்தரவிட வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன், வணக்கம்.

**திரு. ஜி. மூர்த்தி:** மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, சரித்திரத்தின் ஏட்டிலே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஆளுநர் உரையிலே ஒரு சில வார்த்தைகளைக் கூறுவதற்கு அனுமதி கொடுத்த மன்றத் தலைவர் அவர்களுக்கும், என்னை இங்கே பேச அனுப்பி வைத்த எனது உயிருக்கும் மேலான பேரணாம்பட்டு சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அமைந்துள்ள அரசு பேரறிஞர் அண்ணா அவர்களின் இலட்சியக் கொள்கையின் அடிப்படையில் அரசை நடத்திச் செல்வோம் என்பது தமிழ் மக்களை பெருமைப்படுகின்ற விதத்தில் அமைந்திருக்கிறது என்பதை யாராலும் பாராட்டாமல் இருக்க முடியாது. அந்த வகையில் இங்கே ஆளுநர் உரையில் குறிப்புகள் இருப்பதைப் பார்க்கிறபோது தமிழ் மக்களின்பால் இந்த அரசு எத்தகைய அக்கறையைக் கொண்டு இருக்கிறது என்பதைக் காட்டுகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாபு ஜனார்தனன் அவர்கள் ஒரு சமுதாயத்தின் பெயரைப் பச்சையாகச் சொன்னார்கள். அதிலே கருத்து வேறுபாடு இல்லை. பார்ப்பனர்களை அரசு

[திரு. ஜி. மூர்த்தி] [1980 ஜூன் 27.

அதிகாரிகளாக, அமைச்சராக அமர்த்தி இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நான் ஒன்றைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். அப்படிப்பட்ட பார்ப்பன ஆதிக்கத்தை இன்றைக்குத் தலைமேல் தாங்கி வைத்துக்கொண்டு நீங்கள் இருக்கிறீர்கள் என்பதை மறந்து பேசியது நியாயம் தானா என்பதை இந்த நேரத்தில் நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

தமிழகத்திலுள்ள அனைத்து மக்களையும் ஒன்றாக நிறுத்திப்பார்த்து, அரசின் மேலான கவனம் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களை தனிக் கவனத்தோடு கவனிக்க திட்டங்கள் தீட்டி இருப்பதைக் குறித்து நாங்கள் பெருமைப்படுகிறோம். இனி ஏழை எளிய மக்கள் வாழ்வில் நம்பிக்கை நட்சத்திரம் தோன்றும் என்பதில் எங்களுக்கு ஐயமில்லை.

நாட்டின் முதுகெலும்பாம் விவசாயப் பெருங்குடி மக்களின் உயிர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு பல வழிகளைக் கையாண்டாலும் அவற்றைக் காலதாமதமின்றி பரிவோடும் ஆழ்ந்த சிந்தனையோடும் கவனிக்க விவசாயப் பெருங்குடி மக்கள் விரும்புகின்ற தீர்வு காண விவசாய வல்லுநர்கள் கொண்ட நலக்குழு ஒன்றை நிறுவவும், அக்குழுவில் விவசாயப் பெருங்குடி மக்களின் பிரதிநிதிகளையும் சேர்த்து அரசு ஆலோசிக்கும் என்கிற இத் திட்டம், தமிழக விவசாயிகளுக்கு ஒளிமயமான எதிர்காலம் இருப்பதை உணர்த்துகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்திட்டம் இந்திய அரசியலில் முற்போக்கானது மட்டுமல்ல, பெரிய திருப்பத்தை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை என்றும் கூறிக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்க இந்த அரசு முடிவெடுத்தது யாவராலும் பாராட்டப்படக்கூடிய ஒன்று. அதேபோல் அரசு உதவியோடு நடைபெறுகின்ற பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களையும் அரசு ஊழியர்களாக மாற்றுவது இச்சிறப்புக்கு பெருமைத் தேடித்தரும் என்று தாழ்மையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டில் நடைபெறுகின்ற அரசியல் விமர்சனங்களும், அரசியல் மாற்றங்களும் கிராமப்புறங்களில் உள்ள பெரும்பாலான மக்களும் புரிந்துகொள்ள முடிகிறது என்பதை கருத்தில் கொண்டும் வளர்ந்து வருகின்ற துடிப்பு மிக்க இளைஞர் சமுதாயத்தை பொறுப்புணர்ச்சியோடு கடமை ஆற்ற வகைசெய்யும் விதத்தில் 18 வயது நிரம்பியவர்களுக்கும் வாக்குரிமை அளிக்கக்கூடிய திட்டத்தை நாடு பெரிதும் வரவேற்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



சமுதாயத்தில் பின்னுக்குத் தள்ளப்பட்ட ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்களைப்பற்றி இவ்வரசு தனது ஆழ்ந்த சிந்தனைக்கு எடுத்துக்கொண்டதைப் பற்றி இந்திய குடியரசுக் கட்சி மனதாரப் பாராட்டுகிறது. இந்திய அரசியல் சட்டத்தில் டாக்டர் அம்பேத்கார் அவர்களால் வாங்கித்தரப்பட்ட சலுகைகள் தாழ்த்தப்பட்ட மக்களின் முழுமையான முன்னேற்றத்திற்கு போதாக் குறையாகவே உள்ளது. அம்மக்களின் சமூக, அரசியல், பொருளாதார முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு 5 ஆண்டு திட்டங்கள் மூலம் மேம்பாடு செய்ய அரசு எடுத்துள்ள சிறப்பான திட்டத்திற்கு தமிழக தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களின் சார்பில் எனது மனம் நிறைந்த பாராட்டினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

100-க்கு 90 சதவீத தாழ்த்தப்பட்ட மக்கள் சொந்த நிலமின்றி உடல் உழைப்பையே நம்பி உள்ளவர்கள். அவர்களுக்குப் போதுமான அளவு வேலை வாய்ப்பு அளித்திட வேண்டுகிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்குவதில் சென்ற 2½ ஆண்டு கால புரட்சித் தலைவரின் அரசு, மிகுந்த ஆர்வம் காட்டி வந்ததை நாடு நன்கு அறியும். இன்னமும் அவைகள் போதாக்குறையாகவே இருக்கின்ற காரணத்தால் அரசு புறம்போக்கு நிலங்களை அம்மக்களுக்கு பட்டா செய்து கொடுப்பது சாலச்சிறந்ததாகும். அரசு அறிவித்திருக்கின்ற சிறப்பான திட்டங்கள் பலவற்றை அதிகாரிகள் செயல்படுத்த தயங்குவதால், தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பல இடங்களுக்கு சாலை வசதி வருவது கிடையாது. அனுமதிக்கப்பட்ட குழாய்கள் வந்து சேருவது கிடையாது. இப்பிரச்னைக்கு அரசு தனிக் கவனம் செலுத்திட வேண்டுகிறேன்.

வளர்ந்து வருகின்ற பகுத்தறிவை தாழ்த்தப்பட்டோர் அல்லாத மக்கள் கடைபிடிக்க தயங்குவதால் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோர்களின் பகுத்தறிவு கொள்கையில் அக்கறையும் பாசமும் கொண்ட பெருமைமிக்க இவ்வரசு சாதித்துவேஷத்தைக் காட்டுகின்றவர்களை சட்டத்தின் மூலம் வகைப்படுத்தி தீண்டாமை அனுசரிப்போரின், சொத்துக்களை பறிமுதல் செய்கின்ற அளவிற்கு வகை செய்ய வேண்டுமென்று பெரிதும் கேட்டுக் கொள்கிறேன். அச்சட்டம் சிறந்த வகையில் செயல்படும் என்பதில் சந்தேகம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாலை 5-50)

நிலமற்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாழ்க்கையில் ஒளிவிளக்கு ஏற்றி வைக்கும் வகையில் 'அன் ரிசர்வ்டு ஃபாரஸ்ட்' என்ற பெயரால் கவனிப்பாரற்று கிடக்கின்ற அந்நிலங்களை அம்மக்களுக்கு பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜி. மூர்த்தி] [1980 ஜூன் 27

சமுதாய மாற்றத்தில் அக்கறை கொண்டுள்ள இவ்வரசு தாழ்த்தப்பட்ட பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு பெருமளவான சலுகைகள் அளித்து, அம்மக்களை வாழ வைப்பதை நாடு பாராட்டுகிறது. அவர்கள் எதிர்பார்க்கிற முன்னேற்றமடைய கட்டப்பட்டுள்ள விடுதிகளை விரிவுபடுத்தவும், பெண்களுக்கு தனியாக விடுதிகள் கட்டிடவும், தரமான உணவை போதுமான அளவு வழங்கிடவும் இவ்வரசு வகை செய்யும் என்று பெரிதும் நம்புகிறோம்.

இந்திய நாட்டின் முதல் சட்ட அமைச்சரும், சட்ட மாமேதையும் தாழ்த்தப்பட்ட மக்களின் இரட்சகருமான டாக்டர் அம்பேத்கார் அவர்களின் திருவுருவப் படத்தை சட்ட மன்றத்தில் வைத்திட வேண்டும் என்ற மாபெரும் கோரிக்கை இருக்கிறது. இந்திய நாட்டு அரசியல் சட்டச் சிறப்பை உலக நாடுகளுக்கு உணர்த்தி, சிறப்பைப் பெற்றுத் தந்தவர்; இந்திய நாட்டின் முதல் சட்ட அமைச்சராக இருந்தவர் டாக்டர் அம்பேத்கார் அவர்கள். ஆகவே, அவருடைய திருவுருவப் படத்தை இந்த மாமன்றத்தில் திறந்து வைக்க வேண்டுமென்ற கோரிக்கையை புரட்சித் தலைவர் அவர்கள் விரைவிலே நிறைவேற்றித் தரவேண்டுமென்று புரட்சித் தலைவர் அவர்களையும் இந்த மாமன்றத்தையும் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய பேரணாம்பட்டு தொகுதியைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பேரணாம்பட்டு மிகவும் வறட்சியான பகுதி. அங்கே சாலைகள் இல்லை; குடிதண்ணீர் வசதி இல்லை; பள்ளிக் கூடங்கள் இன்றைக்கும் ஓலைக் கூரை கட்டடத்தில்தான் இருக்கின்றன. இப்படிப்பட்ட பேரணாம்பட்டு தொகுதியை ஒரு வறட்சிப் பகுதி என்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கே இருக்கிற மக்களில் பெரும்பான்மையானவர்கள் பீடித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதற்கு அடுத்து தோல் பதனிடும் தொழில் செய்கிறவர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய நலன்களைக் கருத்திற்கொண்டு சட்டம் இயற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரணாம்பட்டில் நடைபெற்ற காவல் சம்பந்தமாக போடப்பட்ட வழக்குகள் அப்படியே இருக்கின்றன. அந்த வழக்குகளை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டு, அந்தத் தொகுதி மக்களின் சார்பாக இதை ஒரு வேண்டுகோளாக விடுத்து, எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



1980 ஜூன் 27]

**திரு. ஏ. எம். சேதுராமன் :** பேரன்புமிக்க மாண்புமிகு சட்டப் பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களே, என்னை இங்கே இந்த மாமன்றத்திலே முதல் முறையாகப் பேசுவதற்கு அனுப்பி வைத்த எனது உயிருக்கும் மேலான வாக்காளர் பெருமக்களே உங்கள் அனைவருக்கும் எனது நன்றியையும் வணக்கத்தையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கோ. விஸ்வநாதன்) :** நீங்கள் அவைத் தலைவரைப் பார்த்துத்தான் பேச வேண்டும்; வாக்காளர்களைப் பார்த்து பேசக்கூடாது.

**திரு. ஏ. எம். சேதுராமன் :** மேதகு ஆளுநர் அவர்கள் இந்த மன்றத்திலே ஆற்றிய உரை தமிழக மக்களின் இதயத்தைத் தொடுவதாக இருக்கிறது. தமிழக மக்களின் நேர்மை, உண்மை, தெளிவு பற்றி ஆளுநர் அவர்கள் வியந்து பாராட்டியிருப்பது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது என்று தமிழக மக்களும் நாங்களும் கருதுகிறோம்.

இரு மொழிக் கொள்கை பற்றி மேதகு ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருப்பது குறித்து இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேலைக்கு உணவுத் திட்டம், வேலையில்லாதிருக்கின்ற பட்டதாரிகளுக்கு உதவிப் பணம் வழங்குதல், ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்குதல் போன்ற நல்ல திட்டங்களை ஏழை எளிய மக்களும், வேலையில்லாத பட்டதாரிகளும், ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களும் உண்மையிலேயே பெருமையோடு வரவேற்பார்கள், வாழ்த்துவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

மாண்புமிகு விவசாய அமைச்சர் அவர்கள் தலைமையில் விவசாய நலக் குழு அமைப்பதற்கு இந்த அரசு எடுக்கின்ற நடவடிக்கைகள் எல்லாவற்றுக்கும் சிறு விவசாயிகள் கடமைப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கடன் சுமையை பற்றி அரசு மேற்கொண்டிருக்கிற அக்கறையைப் பற்றியும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே நெசவுத் தொழிலிலும், இதர கைவினைத் தொழில்களிலும் ஈடுபட்டிருக்கிற தொழிலாளர்களுக்கு நமது அரசு கவனம் செலுத்தி ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் பல்கலைக் கழகம் என்றால் சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்கள் என்று இருந்ததை விரிவுபடுத்தி மேலும் கோவை, திருச்சி போன்ற நகரங்களிலும் பல்கலைக் கழகங்கள் அமைக்க திட்டமிட்டிருப்பது குறித்து பெருமைப்படுகிறோம்.

**அதேபோல்** வடார்க்காடு மாவட்டத்திலேயும் பல்கலைக்கழகம் ஒன்று கண்டிப்பாக நிறுவப்பட அரசு ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து பரிசீலித்து அதற்கு ஆவன செய்யுமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கிராமப்புறங்களுக்கு வைத்திய வசதியை விரிவுபடுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இந்த மாமன்றத்தில் தாழ்மையோடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கிராமப்புறங்களில் ஏழைகள், குறிப்பாக தாழ்த்தப்பட்டவர்கள் வாழும் பகுதிகளில் குடி தண்ணீர்ப் பிரச்சினை, வீட்டு மனைப்பட்டா, அரிசனங்களுக்கு வீடு கட்டும் திட்டம் போன்ற அத்தியாவசியப் பிரச்சினைகளுக்கு நமது அரசு உடனடியாக தீர்வு கண்டு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் சார்பாக வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து சிறிய விவசாயிகளுக்கு துரித மின் இணைப்பு கொடுக்கவும் ஏழை எளிய பிற்படுத்தப்பட்ட மக்களுக்குரிய குடிசைகளுக்கு மின் இணைப்பு எல்லாக் கிராமங்களுக்கும் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நெசவாளர்கள் பிரச்சினையில் தமிழக அரசு அக்கறை செலுத்தியுள்ளது மெச்சத் தகுந்ததாகும்.

உணவுத்துறையைப் பொறுத்தவரையில் தற்போது தமிழகத்திலே திருப்தியான வகையிலே இருக்கின்றது. ஆகவே இந்த விஷயத்திலே எந்த விதமான மாற்று கருத்தும் வேண்டாம் என்றும் சட்டத்தையும் மாற்ற வேண்டாம் என்றும் மிகத்தாழ்மையோடு எங்கள் வடார்க்காடு தொகுதி வியாபாரிகள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

இந்த விஷயத்தில் மில் அதிபர்களுக்கு வழங்கப்படுகின்ற ஹோல்சேல் லைசென்ஸ் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். 1977-க்குப் பின்னாலே இந்த லைசென்ஸ் வழங்குகின்ற முறை மாற்றப்பட்டு அது டி.ஆர்.ஓ. மூலமாக பெர்மிட் வழங்கப்பட்டு அதற்குப் பின்னாலே கலெக்டர் அவர்களாலே நியமிக்கப்பட்ட டி.எஸ்.ஓ. அவர்களால் லைசென்ஸ் வழங்கப்படுகிற முறை இருக்கின்றது. அந்த முறையை மாற்றி கலெக்டர் அவர்களாலே நேர்முகமாக வழங்கப்படுகிற முறையை அமுல்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் நேர்மையாக வழங்கப்படும். ஆகவே அந்த வகையில் மாற்றியமைக்கவேண்டும் என்று மிகவும் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அதனாலே பல



சங்கடங்கள் இருக்கின்றன. இலட்சக்கணக்கான, நெல், அரிசி வியாபாரிகள் இரண்டு வருடங்களாக மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதனால் அதிகாரிகள்தான் பலன் அடைகிறார்களே தவிர வியாபாரிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

அடுத்து விவசாயிகளுக்கு நெல் விலையை கூட்டித் தரும் முயற்சியை அரசு மேற்கொண்டுள்ளது பற்றி மிகவும் சந்தோஷப்படுகிறோம். என்னுடைய ஊரிலே பாலாற்றிலே வெள்ளம் வரும்போது அந்தத் தண்ணீர் அணைக்கட்டுக்குச் சென்று பிறகு திருப்பிவிடப்பட்டு வீணாவதைத் தடுத்து எங்கள் ஊர் பக்கத்திலே இருக்கின்ற ஏரிகளுக்கு அதைக் கொண்டு செல்ல வழிவகை செய்யவேண்டுமென்று உங்கள் மத்தியிலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆற்காடு தொகுதியில் நெல் அரிசி ஆகியவற்றின் மூலம் தொழில் நடத்துகின்ற ஏறக்குறைய பத்தாயிரம் தொழிலாளர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழில் வருங்காலத்திலே மிகவும் மோசமடையும் என்ற நிலை இருப்பதால் அங்கே வேறு தொழில் வசதியை ஏற்படுத்தவேண்டும். வடார்க்காடு தொகுதியிலே எந்தவிதமான தொழிற்சாலைகளும் கிடையாது. சிறிய தொழிற்சாலை கூட கிடையாது. ஆகவே அங்கே ஒரு பெரிய தொழிற்சாலையை நிறுவி சுமார் 500-க்கு மேற்பட்டு, ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலை பார்க்கக்கூடிய அளவில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் ஒரு தொழிற்சாலையை நிறுவித்தர மாண்புமிகு தொழில் துறை அமைச்சரவர்கள் மத்திய அரசை அணுகவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கல்வித்துறையைப் பொறுத்தவரையில் எங்கள் நகரிலுள்ள அரசினர் உயர்நிலைப்பள்ளியில் ஹையர் செகண்டரி வகுப்பை உடனடியாக,— பிளஸ் 2 வகுப்பை—ஏற்படுத்தித் தந்தது மிகவும் பாராட்டுக்குரியதாக இருந்தது. அதுகுறித்து மனுவை ஒரு வாரத்துக்கு முன்னாலேதான் கொடுத்தோம். உடனடியாக அதனை ஆரம்பித்து எங்களுக்கு மிகவும் சந்தோஷத்தை அளித்திருக்கிறார்கள். அதற்காக இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அடுத்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நாம் பாதுகாப்பாக இருக்கவேண்டும். அதாவது கலவைப் பகுதியிலேயும், வாழைப்பந்தல் பகுதியிலேயும் இருக்கின்ற தாழ்த்தப்பட்ட மக்கள் இரட்டை இலைக்கு ஓட்டுப்போட்டார்கள் என்ற காரணத்திற்காக உயர் ஜாதிக்காரர்கள் அவர்களைத் தாக்கி இருக்கிறார்கள். இது குறித்து போலீஸிலும் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும்

[திரு. வ. ஸம். சேதுராமன்] [1980 ஜூன் 27

...ரான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் கண்டிப்பாக ஒரு சரியான பாதுகாப்பு உடனடியாகத் தேவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாலை 6-00)

அடுத்து, நகர சாலைகள் செப்பனிடப்பட வேண்டும். நகரங்களிலே சாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அந்த நிலைமையை மாற்றி நல்ல சாலைகளை அமைப்பதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல்தான் கிராமங்களிலும் இருக்கின்றன. அங்கே இதைவிட மோசமான நிலைமை இருக்கிறது. சாலைகள் அங்கே கொஞ்சம் கூட சரியான முறையில் அமைக்கப்படவில்லை. மழை பெய்துவிட்டால், அந்த நேரத்தில் தேர்தலும் வந்து விட்டால், நிச்சயமாக அந்த கிராமங்களுக்குச் சென்று ஓட்டு கூட அவர்களை கேட்க முடியாத நிலைமை இருந்துக் கொண்டிருக்கிறது. அதை மாற்ற வேண்டும், நல்லவிதமான சாலைகளை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, 32 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனை கட்டுவதற்கான திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அதை துரித நடவடிக்கை எடுத்து, கட்டுமான பணிகளை மேற்கொண்டு, விரைவில் மருத்துவமனையை கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விரார் பகுதியில் போக்குவரத்து வசதியே கிடையாது. விராரத்திலிருந்து சென்னைக்கு நேரடியாக [illegible] நிலை இருக்கிறது. அதனால் விராரத்திலிருந்து சென்னைக்கு 147-ம் என்று நம்பர் கொடுத்து, இரண்டு பஸ்களை விடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பெரிதாக இருக்கும் ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாக பிரிக்க வேண்டும். [illegible] 30-க்கு மேல் இருக்கும் இடங்களில் இரண்டாக பிரித்து விட்டு பிறகு தேர்தல் நடத்தினால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, இந்த மன்றத்தில் பெரியாருடைய படம் இல்லை. ஆகவே பெரியாருடைய உருவ படத்தை இந்த மன்றத்தில் [illegible] வைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை கேட்டுக்கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



THIRU T. VENKATA REDDY: Hon. Temporary Speaker, Sir, I take this opportunity to thank the voters of Hosur Assembly Constituency for having elected me to this August Assembly. Also I thank my party for having given me a ticket to represent the policies of my party in this August Assembly.

I would like to submit that the Address by the Governor is an Address which has been prepared by the Chief Minister and his Cabinet. The Address, we all know, should contain the policies of the Government. The policies so formulated by the Government should ensure better living for the people of this State. We are at a loss to know the Address contained nothing except that they of 'Anna', How are they going to implement 'Anna's Policies'? They are silent about them. A good Government is a government which ensures better living, which ensures better prospects for employment, which increases per capita income of individuals. A good Government is not a Government which believes in empty slogans, which believes in changing of names of streets, which believes in naming of a building in the name of leaders. That Government is not going to ensure better living for the people of this State. A good Government is a government which brings forward good legislations. That legislation must be one which ensures better employment for the unemployed graduates and better living for the downtrodden people and better atmosphere for the industrialists.

During the discussion on the Governor's Address, if you see the speeches made by the ruling party bench, you will be at a loss to know that they have come here to praise their leader, calling him 'Makkal Thilakam', calling him 'Puratchi Thalaivar'. Of course, both the names are good. The word 'Puratchi' indicates 'a revolutionary thing'. In our State, 50 per cent of the people are downtrodden. They really deserve a revolutionary legislation. But what is the legislation that our benign Government has brought here. I am at a loss to understand that no such assurance has been given in the Governor's Address except that doles would be given to the unemployed graduates. Nothing has been mentioned about one rupee per day for a person who is not employed and hundred rupees per family where a person is not employed. These are acts which previously Maharajahs were doing to get the praise from the people. That is not expected of any Government. People want that they should be employed properly and that they must be given proper work. The people must be

சீரான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் கண்டிப்பாக ஒரு சீரான பாதுகாப்பு உடனடியாக தேவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாலை 6-00)

அடுத்து, நகர சாலைகள் செப்பனிடப்பட வேண்டும். நகரங்களிலே சாலைகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அந்த நிலைமையை மாற்றி நல்ல சாலைகளை அமைப்பதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல்தான் கிராமங்களிலும் இருக்கின்றன. அங்கே இதைவிட மோசமான நிலைமை இருக்கிறது. சாலைகள் அங்கே கொஞ்சம் கூட சரியான முறையில் அமைக்கப்படவில்லை. மழை வேறு பெய்துவிட்டால், அந்த நேரத்தில் தேர்தலும் வந்து விட்டால், நிச்சயமாக அந்த கிராமங்களுக்குச் சென்று ஓட்டு கூட அவர்களை கேட்க முடியாத நிலைமை இருந்துக் கொண்டிருக்கிறது. அதை மாற்ற வேண்டும், நல்லவிதமான சாலைகளை அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து, 32 படுக்கைகள் கொண்ட, ஒரு மருத்துவ மனை கட்டுவதற்கான திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அதை துரித நடவடிக்கை எடுத்து, கட்டுமான பணிகளை மேற்கொண்டு, விரைவில் மருத்துவ மனையை கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விஷாரம் பகுதியில் போக்குவரத்து வசதியே கிடையாது. விஷாரத்திலேயிருந்து சென்னைக்குக்கூட வரமுடியாத நிலை இருக்கிறது. அதனால் விஷாரத்திலிருந்து சென்னைக்கு 147-ஏ என்று நம்பர் கொடுத்து, இரண்டு பஸ்களை விடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பெரிதாக இருக்கும் ஊராட்சி ஒன்றியங்களை இரண்டாக பிரித்து விட வேண்டும். முப்பதுக்கு மேலிருக்கும், அதாவது பஞ்சாயத்து யூனியன்கள் 30-க்கு மேலிருக்கும் இடங்களில் இரண்டாக பிரித்து விட்டு பிறகு தேர்தல் நடத்தினால் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, இந்த மன்றத்திலே பெரியாருடைய படம் இல்லை. அதனால் பெரியாருடைய உருவ படத்தை இந்த மன்றத்தில் உடனடியாக திறந்து வைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை கேட்டுக்கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

activised so that they could become better citizens building a powerful, strong and prosperous State. At this juncture, I am reminded of an episode in Dwaraka. When Lord Hanuman, a cherished baktha of Rama visited Dwaraka, he saw people going. When he asked people where they were going, they said that they were going to Annadhatha 'Balarama's chatram where they will take food. Lord Hanuman jocularly said Balarama will make all the people beggars because Annachatra will make people lazy, if they took food in annchathra without doing work. This is not expected from a good Government. A good Government should make people realise that they must become good citizens. That should be the role of a good Government. I am at a loss to know that our benign leader, Puratchi Thalaivar, and his Cabinet have not taken steps to introduce revolutionary legislation to give good benefits to the people.

In this Governor's Address, I have also seen that nothing has been mentioned for industrial advancement. Our State is not industrially advanced for the last few years. For the lack of industrial development, they attribute lack of encouragement from the Central Government, lack of assistance by the Central Government. But we all know that entrepreneurs will come to our State without going to other States, if the industrial atmosphere is good in our State. It is the duty of the Government to make atmosphere congenial for the development of industries. What are the steps the benign Government has taken so far? If you see the papers, if you study the reports—economic reports—and also statements of great industrialists, you will be able to see that the official do have not helped them to start industries in our State. There is no use in saying that the Central Government has not given proper assistance. We are at a loss to know whether our Government has approached the Central Government properly for funds. They are silent about that. When they did not approach the Central Government for proper assistance, it is incumbent on the Central Government not to give assistance. But we all know that for the last two and a half years, when the Janatha Government was there, when Morarji Desai Bai was there as Prime Minister, when Charan Singh was Prime Minister, the present ruling party was also part and parcel of that ruling party at the Centre. What steps, the present ruling party has taken even at that time, to get assistance to make our State industrially developed? We all know that during the Congress regime, our





State stood third or fourth in the industrial development map. From third or fourth, our State is going down, down in the ladder. That is only the reflection of the non-performance of the Government. It is a reflection on the ruling party which simply say 'Puratchi Thalaivar' Makkal Thilakam' etc. Is it not the duty of the Government to bring industrial development in order to enable our graduates, downtrodden people to get more employment opportunities. My submission is the non-performance has been the panacea of the ruling party.

*(மாலை 6-10)*

* **மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, குறுக்கிடுவதற்காக வருந்துகிறேன். கன்னிப் பேச்சிலே நான் திருத்தம் எதுவும் சொல்லவில்லை. அவர் சொல்லியதை யொட்டி பேசயிருக்கிறேன். 1967-லே இருந்து 77 வரைக்கும் சென்ட்ரல் இன்வெஸ்மென்டைப் பொறுத்தவரையில் தமிழகத்திற்கு 4 சதவிகிதம் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்லாமல், தொழிற் சாலகைள் கொண்டு வருவதற்கு 1977-லே இருந்து அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சிப் பொறுப்பை எற்றதற்குப் பின்னால், ஏறத்தாழ 100 தொழிற் சாலைகளுக்கு தனியார் துறையிலும், அதைப்போல அரசாங்கத் துறையிலும் தொழில்கள் துவங்குவதற்கு லைசன்சுக்காக மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். அப்படி அனுப்பப்பட்டு, லைசன்சு வராமல் ஏறக்குறைய 100 தொழிற்சாலைகளுக்கு அனுமதி வழங்காமல் தேங்கிக் கிடக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் எனவே, அவர்கள் தன் செல்வாக்கைப் பயன்படுத்தி, அதிலே சில தொழிற் சாலைகளுக்காவது அனுமதி பெறுவார்களானால் நானும், தமிழக மக்களும் நன்றி உடையவர்களாக இருப்போம்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

**திரு. நா. சுந்தரராஜ் :** பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தில் ஜனாதா அரசாங்கம் தமிழகத்திலுள்ள கோச் பாக்டரியைப் போல், கோவை மாவட்டம், திருப்பூரிலே உருவாக்குவதற்கு நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொண்ட நேரத்தில், தமிழக அரசு ஒத்துழைக்காத காரணத்தினால், அது ஆந்திர பகுதிக்குச் சென்ற காரணத்தைச் சொல்ல முடியுமா?

[1980 ஜூன் 27

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு ஒத்துழைக்கவில்லை என்று சொல்வது பொது மேடையிலே யாரோ சொன்ன ஆதாரத்தை வைத்துக்கொண்டு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். தொழிற்சாலைகளைத் துவங்க, தனியார்கள் முயற்சிக்கின்றபோது, அவர்களுக்கு எந்த மாநிலத்தில் துவங்குவது, அவர்களுக்கு வசதி இருக்கும். . .

**டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே தனியார் துறையைப்பற்றி அல்ல. கோச் பாக்டரி, இங்கே இருப்பதைப் போல், சென்னைக்குப் பக்கத்திலே இருப்பதைப்போல், அங்கே ஒரு தொழிற்சாலை அமைப்பதற்கு அங்கே இடங்களைக் கேட்டு, அதற்கான பைல்கள் எல்லாம் அனுப்பப்பட்டு, காரமடையிலே உள்ள விவசாயிகள் தங்களுடைய நிலங்களை குறைந்த விலைக்கு தருவதற்குச் சம்மதம் அரசுக்கு அளித்தும்கூட, அதைத் தமிழ்நாடு அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை என்பதுதான் குற்றச்சாட்டு, அதற்குத் தான் விளக்கம் தேவை.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** நீங்கள் குறிப்பிட்ட அந்தத் தொழிற்சாலையைப் பற்றி இப்போது என்னிடத்தில் விவரம் இல்லை. ஆனால், ஒட்டுமொத்தமாக சொல்லப்பட்ட குற்றச்சாட்டுக்குப் பதில் சொன்னேன். இதைப்போல், அரசுத் துறையானாலும் சரி, தனியார் துறையானாலும் சரி தமிழகத்திலே தொழிற்சாலைகள் குறைந்திருப்பதாகச் சொல்வது அ.தி.மு.க. ஆட்சியிலே மட்டுமல்ல. தி.மு.க. ஆட்சியிலும் அதாவது 67-லே இருந்து 77 வரை மொத்தமாக இந்த 10 ஆண்டுக் காலத்தில் மத்திய அரசு தமிழகத்திற்கு ஒத்துழைக்கவில்லை. அதனால்தான், மூன்றாவது இடத்திலே இருந்த தமிழகம் 13, 14 ஆம் இடத்திற்கு வந்திருக்கிறது. தி. மு. க. ஆட்சியிலும் சரி, அ. தி. மு. க. ஆட்சியிலும் சரி மத்திய அரசின் கடைக்கண் பார்வை தமிழகத்தின்மேல் விழவில்லை. விழவேண்டும். அதற்கு காங்கிரஸ் உறுப்பினர் கவனம் செலுத்தி உதவி செய்யவேண்டும்.

**திரு. அ. ரகுமான்கான் :** பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். . ;

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இப்படி ஒவ்வொருவராக கேட்டுக் கொண்டிருந்தால் எப்படி ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு பேச்சாளர் பேசிக் கொண்டிருந்தபோது, அமைச்சர் விளக்கம் கொடுத்தார். உடன் அந்தப் பேச்சாளர் தம் பேச்சைத் தொடர





அனுமதிக்க வேண்டும். பேச்சாளரை விட்டு உறுப்பினர்களே ஒருவருக் கொருவர் விளக்கம் கேட்கும் அளவுக்குப் போனால் விவாதம் வேறு எங்கோ போகும். தயவுசெய்து அந்தப் பேச்சாளரை பேச அனுமதிக்க வேண்டும்.

**டாக்டர் மு. கருணாநிதி :** நான் அவை முன்னவர் அவர்களிடத்தில் மிகுந்த பரிவோடு கேட்டுக்கொள்கிறேன். பெரியவர் முதல் முதலாகப் பேசிக் கொண்டிருக்கிறார். கன்னிப் பேச்சைப் பேசுகின்ற அவரிடத்தில் அமைச்சர் விளக்கம் கேட்டது முறைதானா ? அனுபவம் மிக்க எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் நான் இதை எடுத்துச் சொல்லியும் கூடக் கேட்காமல், தொழில் அமைச்சர் அவர்கள் விளக்கம் கேட்டது முறைதானா ? அதை அவை முன்னவர் விளக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** சாதாரணமாகக் கொண் டிருக்கும் மரபு அது. முதன் முதலாக மனம் அங்கத்தினர் பேசும்போது யாரும் குறுக்கிடக் கூடாது. அந்த முறையை எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும். அதிலே இரண்டு தரப்பும் தவறி இருக்கும் காரணத்தால் இனி மேலாவது அதைச் சரியாக எல்லோரும் கடைப்பிடிக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** நான் அவரிடத்தில் விளக்கம் கேட்கவில்லை. ஒரு வேண்டுகோளாகத்தான் சொன்னேன்.

THIRU T. VENKATA REDDY Anyway I am thankful to the Hon. Minister for having accepted that during their regime much progress has not been made in the Industrial Development. I am also thankful to the Leaders for having given me this opportunity and observed that maiden speakers should not be interrupted.

So far as Electric power is concerned we all agree that our State is deficient in electric power. But this deficiency, we know, does not prevail only now but it is there for the last so many years. We know that everyday the demand for the electric power is on the increase. But Government has not taken steps to see that Thermal Stations or any new Project for generating electric power has not been taken up so far. The Central Government is also now thinking of having a Central Grid so far as Electric Power is concerned. I and also my party people welcome that proposal because in the interest of our own State it is better that the Centre should take up the Power issue.

We know that Kerala, Karnataka and other States have got lot of potentials for generating power. Those potentials could be properly and purposefully utilised if the Centre takes up these projects and distribute the power equally to the needy states. That will only assure the Industrial Development because the Industrial Development mostly depends upon power. When you do not have sufficient power you cannot assure good industries. So, in this regard I request the State Government to agree for the Central Grid so far as power is concerned.

With due respect to the Government, so far I have been saying as good Government, I would like to submit that instead of giving Rs. 50 to unemployed graduates, if they are given self-employment by giving them a lumpsum amount to enable them to utilise that amount in their own private work—for instance for sheep breeding, poultry rearing, piggery and also for dairy development—either free of interest or freely, it will help them to become citizens depending upon their own income instead of depending upon doles of Government.

*(மாலை 6-20)*

Rs. 50 in these days is only a pocket money for a graduate which they will spend within an hour. He must get a benefit out of that amount. You must make them benefitted permanently and also make them contribute something to the State Exchequer by way of tax. So, that is the motive of encouraging the graduates.

So far as my constituency is concerned I am representing the most backward area in Dharmapuri District. Dharmapuri District is the most backward area we all know. In that backward district, Hosur is the most backward area. Only recently we got some industries; and some more good industries are coming in that area. It will soon become, according to official estimate, a "City" within five years. Hosur will become a City with a population of one lakh and odd. But in that growing City we need a lot of amenities. Hosur is very near to a garden City of India, namely Bangalore, which is 25 miles from that place, 44 kilo meters.

We do not have adequate bus facilities for the passengers. The buses are not adequate. We need a number of buses from Bangalore to Hosur and also from Krishnagiri to Bangalore and





also in rural areas. Most of the villagers have to walk 10 to 15 miles to reach a motorable road. We do not have adequate facilities so far as transport is concerned. So, the Government has to look into that thing also.

The other aspect which I want to bring to the notice is the agriculturists problem. At present agriculturists throughout Tamil Nadu are watering the gardens during nights. The night service is done with pump sets. They have to switch on, only during nights. But that is a practice which any farmer will oppose. A farmer cannot go during night time to his gardens to water his plants. So, I request the Government to effect a change in hour of power supply to the farmers so that they can better utilise the water for their gardens. (Chairman sounded the gong). I thank you Mr. Deputy Speaker for having given me this opportunity to speak a few minutes in this Assembly. Thank you.

**திரு. பொ. விஜயராகவன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய உரையின்மீது நான் சார்ந்திருக்கிற ஜனதா கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களை எடுத்துரைக்க விழைகிறேன். இந்த உரையைப் பொறுத்தவரையில் புதிய அரசு அமைந்த பிறகு பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். முக்கியமாக நான் தெரிவிக்க வேண்டியது நான் பாராட்ட வேண்டிய ஒன்று, பல காலமாக இருந்துகொண்டிருந்த ஒரு பெரிய பிரச்சினை ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்க அரசு முடிவெடுத்துள்ளது. அதை நான் பாராட்டத் தலைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்திலே பல்வேறு பிரச்சினைகளை எடுத்துச்சொல்கிறபோது ஆளுநர் உரைக்கு முன்னால் 1980 ஆம் ஆண்டிலே ஜனவரி மாதம் 30 ஆம் தேதியில் ஒரு ஆளுநர் உரையை அளித்து அந்த உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நாம் நிறைவேற்றி அனுப்பினோம். அதற்குப் பிறகு சட்டமன்றம் கலைக்கப்பட்டு, நாம் தேர்தலை எதிர்நோக்கி, சட்டமன்றத்தை கலைத்தது சரியா தவறா என்பது கேள்வியாகவே எழுந்து அந்தக் கேள்விக்கு உரிய பதிலை தமிழகத்து மக்கள் அளித்து இருக்கிறார்கள். ஆனாலும் கடந்த ஆளுநர் அறிக்கையில் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லி, அந்தக் கருத்துக்கள் மீண்டும் இதில் இடம் பெறாவிட்டாலும்கூட, அதை நினைவுபடுத்த வேண்டியது என்னுடைய கடமை என்ற காரணத்தினால் அதை நினைவு படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த உரையின்போது, "நிர்வாகச் சீரமைப்புகளைத் தேவைப்படும் போதெல்லாம் தொடர்ந்து செய்து வரும் தமிழக அரசு, வரும் ஆண்டில் வருவாய் வாரியத்தை நீக்கி, அதற்குப் பதிலாக தனித்தனியான துறைத்

[திரு. பொ. விஜயராகவன்] [1980 ஜூன் 27]

தலைவர்கள் Heads of Department அமைப்பதென முடிவு எடுத்துள்ளது" என்று சொல்லி, போர்ட் ஆஃப் ரெவின்யூவை ஒழிப்பது என்ற முடிவெடுத்து அதற்கு முனைப்பாகச் செயல்படுவோம் என்று சொன்னார்கள். அதை இந்த மன்றத்தில் கடந்த முறை சொல்லியதை, இந்த அரசு எடுத்த முடிவில் உறுதியாக இருந்து அதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்னொன்றையும் எடுத்துச் சொன்னார்கள். "தமிழ் மொழிப்பற்று, அதன் பாதுகாப்பு இவற்றிற்காகவும் தமிழ் பேசும் பகுதிகள் தமிழகத்துடன் இணையவேண்டுமென்ற ஆர்வத்துடன் செயல்பட்டதாலும், இன்னலுற்ற தியாகிகளுக்கு உதவித் தொகை வழங்க சட்ட வரைவு ஒன்றை அரசு தயாரித்து வருகின்றது. இது, விரைவில் சட்டமன்றத்தின் ஒப்புதலுக்காக கொண்டு வரப்படும்" என்று கடந்த உரையில் சொல்லியிருந்தார்கள். அது இந்த உரையிலும் இருக்குமென்று எதிர்பார்த்தோம். ஏற்கனவே முன்னாலிருந்த அரசு தாய்த் தமிழகத்தோடு இணைவதற்காகப் போராடி வீர தீரச் செயல் புரிந்தவர்களுக்கு உதவிப் பணமும் பட்டயமும் கொடுத்ததை நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்றையதினம் அவசரக் கால நிலைமையிருந்தபொழுது தடைசெய்யப்பட்டு, அது மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று இந்த மாமன்றத்திலே பல முறை எடுத்துரைத்தும், இந்த மாமன்றத்தில் உள்ளவர்கள் அதில் ஒருமித்த கருத்து உடையவர்களாக இருந்தபொழுதும், கடந்த இரண்டரை ஆண்டு காலமாக அதை நடைமுறைக்குக் கொண்டு வராமல், சட்ட வரைவு கொண்டு வரப்படும் என்ற அளவில் வாக்குறுதிதான் இருக்கிறதே அல்லாமல் வாக்குறுதி நிறைவேற்றப்படும் சூழ்நிலை இல்லை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் பல காரியங்களை எடுத்துச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். இங்கே பேசுகின்றபொழுது சொன்னார்கள், 8 சதவீதமாக இருந்த மத்திய அரசின் முதலீடு 4 சதவீதமாகக் குறைந்தது என்று. ஏற்கெனவே ஒரு விவாதம் வந்து, மத்திய அரசால் 1978-79 இல் ஒரு கோச் தொழிற்சாலை, இரயில்வே நிர்வாகத்தால் நடத்தப்பட வேண்டிய தொழிற்சாலையைத் தமிழ்நாட்டில் அமைக்க அனுமதி கேட்டு, நடவடிக்கை எடுத்து, பிறகு என்ன காரணத்தினாலோ அந்தத் தொழிற்சாலை இங்கே வராமற்போய்விட்டது. அது எப்படிப் போனது என்பது பலருக்குப் புரியாத புதிராக இருக்கிறது. அந்தப் பதிலை விரைவில் தருகிறேன் என்று மாண்புமிகு தொழில் அமைச்சரவர்கள் இங்கே சொன்னார்கள்.



1980 ஜூன் 27] [திரு. பொ. விஜயராகவன்]

அடுத்து, இந்துஸ்தான் டெலிபிரிண்டர் என்ற மத்திய அரசின் நிறுவனம், தொழிலை விரிவுபடுத்தும் அளவில் இன்னொரு தொழிற்சாலையைத் துவங்கும் நிலைமை ஏற்பட்டிருப்பது மட்டுமல்லாமல், அதைத் தமிழகத்தில் துவங்க லாமா என்ற ஆய்வில் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதையாவது இந்த அரசு முனைந்துபெற்று தமிழகத்திற்குத் தர வேண்டும்; அதிலும் குறிப்பாக நான் சொல்ல வேண்டுமானால் கனரகத் தொழிற்சாலையே இல் லாத கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அந்தத் தொழிற்சாலையை நீங்கள் தர வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்து இந்துஸ்தான் ஃபோட்டோ ஃபிலிம்ஸ் என்று சொல்லும் நிறுவனம், கலர் பிலிம் தொழிற்சாலையைத் துவங்குவதற்கான முயற்சி நடக்கிறது. அந்தத் தொழிற்சாலையைத் தமிழகத்திற்குப் பெற்றுத்தர வேண்டும். அந்தத் தொழிற்சாலையின் ஒரு பகுதி உதகமண்டலத்தில் இயங்கிக்கொண்டிருக் கிறது. இன்னொரு பகுதியாக, மிகப் பெரிய தொழிலாக, ஏறக்குறைய 30 அல்லது 40 கோடி ரூபாய் முதலீடு செய்து அமைக்கவிருக்கும் கலர் பிலிம் தொழிற்சாலையை அமைக்க வேண்டுமென்ற நிலைமை இருப்பதை நான் இந்த அரசுக்குச் சுட்டிக்காட்டி, அதை நீங்கள் பெற்றுத் தர வேண்டும்; அதற்கான இயற்கை வாய்ப்பும் வசதிகளும் இருக்கின்ற குமரி மாவட்டத் திற்குப் பெற்றுத் தர வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அறிக்கையைப் பொறுத்தவரையில் விவசாயிகளுக்கு என்று பல காரியங்களைச் சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகளினுடைய கடன்களை ரத்து செய்து விடுவோம் என்ற அளவிற்கு—ஏறக்குறைய 200 கோடி ரூபாய் கடன்களை ரத்து செய்வோம் என்ற அளவிற்கு வாக்குறுதிகளைத் தந் தார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கும் நிலைமைகளைப் பார்க்கும் பொழுது வேதனையாக இருக்கிறது. சிறிய விவசாயிகள், பெரிய விவ சாயிகள் என்றும், பணக்கார விவசாயிகள், பணம் இல்லாத விவசாயிகள் என்றும் சொல்வதாக நான் கேள்விப்படுகிறேன். அப்படியானால் அரசி னுடைய கொள்கையே அர்த்தமற்றதாகப் போய்விடும் அல்லவா என்று சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாலை 6-30)

நான் லான்ட் சீலிங் போட்டுவிட்டு, நிலத்திற்கு உச்சவரம்பு விதித்து விட்டு, இவ்வளவு ஸ்டான்டர்ட் ஏக்கர்வரைதான் ஒருவர் வைத்துக்கொள்ள முடியும் என்று உச்ச வரம்பு போட்டுவிட்டு, அதற்குப் பிறகு பெரிய விவசாயி,

சிறிய விவசாயி என்று போடுவது என்றால், என்ன அர்த்தம் என்று கேட்க விரும்புகிறேன். உச்சவரம்பு இத்தனை ஸ்டாண்டர்ட் ஏக்கர் என்று போட்டுவிட்டு, பெரிய விவசாயி என்று சொன்னால், இந்த அரசுக்குத் தெரிந்தே ஏராளமான நிலம் வைத்திருப்பவர்கள் இருக்கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

இன்றைக்கு இரசாயன உரம், பூச்சி மருந்துகள் விலை அதிகமான அளவு ஏறிக்கொண்டு போகிற சூழ்நிலையை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதை நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசு என்ன செய்யப் போகிறது என்பதைத் தயவுசெய்து இந்த மாமன்றத்தில் தெரிவித்தாக வேண்டும்.

1978-ல் மழை, வெள்ளம் வந்தபோது, அன்றைய தினம் உடைபட்ட படுகைகள் பல பகுதிகளில் சரிப்படுத்தப்படவில்லை என்று நான் வேதனையோடு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், விளவங்கோடு தாலுகாவில் கீழ்க்குளம் ரெவின்யூ கிராமத்தைச் சேர்ந்த ஏறத்தாழ 100, 150 எக்கர் நிலத்திற்குப் பாசன வசதி அளிக்கக் கூடிய ஓர் வாய்க்காலில் ஓரிடத்தில் உடைப்பு ஏற்பட்டு, இன்னும் சரிசெய்யப் படவில்லை.

விளவங்கோடு தாலுகாவில் நல்லூர் கிராமத்தைச் சேர்ந்த கொடுங்குளம் என்னும் கிராமத்தில் படுகை இன்னும் சரிசெய்யப்படவில்லை. இரண்டு வருஷம் பொறுத்துப் பார்த்தார்கள். விவசாயிகள் எவ்வளவு காலம்தான் பொறுத்திருப்பார்கள் என்று நான் கேட்க விரும்புகிறேன்.

கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்தவரை ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். அதற்கு முன்னதாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். கூட்டுறவு நிறுவனங்களைச் சீரமைப்பதற்காக இந்த ஆளுநர் உரையிலே ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'கூட்டுறவு நிறுவனங்களைச் சீரமைப்பதற்கான சட்டத் திருத்தங்கள் செய்வதற்கு, அரசு சட்ட வரைவு ஒன்றை சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் மன்றத்தின் முன் வைத்தது. அது கூட்டுக் குழுவின் ஆய்வில் இருந்தபோது சட்ட மன்றம் கலைக்கப்பட்டு விட்டது. அரசு மீண்டும் அந்தச் சட்ட வரைவினை சட்ட மன்றத்தில் கொணர்ந்து அதனைச் சட்டமாக்குவதன் மூலம் கூட்டுறவு நிறுவனங்களுக்கு தேர்தல்கள் விரைவில் நடத்த முடிவு செய்துள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.



ஒரு செலக்ட் கமிட்டியில் ஒரு பொருளைக் கொடுத்து, இவ்வளவு காலத்திற்குள்ளாவது அறிக்கை அளிக்க வேண்டும் என்று குறிப்பிட்ட வரையறை இருக்கவேண்டும். அதல்லாமல், ஏதோ காலத்தைக் கடத்திக் கொண்டு போய், அதில் முடிவு ஏற்படுத்தாமல், இனி அது வந்த பிறகு தேர்தல் என்று சொல்வது முறையாக இருக்குமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதேபோல், நெசவாளர்களுக்கு உதவுவதற்காக, ராஜா சுப்பிரமணியம் என்ற தனி நபர் அறிக்கையை அரசு பெற்றுவைத்துள்ளது. அந்த அறிக்கையை இந்த அரசு இந்த மன்றத்திற்குக் கொண்டு வராமல், அதற்குப் பதிலாக, நாளையே ஒரு சட்டவரைவை கொண்டுவந்து, நிறைவேற்றி, நெசவாளர்களுடைய துயரைத் துடைக்கப் போகிறோம் என்று சொன்னார்கள். அதுவும் கூட்டுக் குழுவுக்கு விடப்பட்டது. சட்டமன்றம் கலைக்கப்பட்டதனால் அதுவும் என்னவாயிற்று என்று தெரியவில்லை. நெசவாளர்கள் பிரச்சினை அரசின் கவனத்தில் இருக்கும், ஆளுநர் உரையில் அதுபற்றி இருக்கும் என்று எதிர்பார்த்தேன். ஆனால், அதுபற்றி ஒன்றும் குறிப்பிடப் படவில்லை. ராஜா சுப்பிரமணியம் அறிக்கை இங்கே வைக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக, கூட்டுக் குழுவில் இந்த அறிக்கை, இன்னும் மற்றவைகளை எல்லாம் விவாதித்திருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, நெசவுத் தொழிலாளர்களது பிரச்னையைத் தீர்க்கின்ற வகையில், ஒரு நல்ல சட்ட வரையை இந்த அவையில் கொண்டுவந்து, விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மீனவர் பிரச்னைகளைப் பொறுத்தவரை தமிழகக் கடற்கரைகளில் ஏறத்தாழ 42,000-க்கு மேற்பட்ட கட்டு மரங்களில் மீனவர்கள் மீன்பிடித்து வருகிறார்கள். அதில் உழைப்பவர்கள்தான் அதிகமானவர்கள். அந்த மீனவர்களுக்குத் தனியாக ஒரு திட்டத்தை அரசு கொண்டு வரவில்லை. தனி ஒரு திட்டம் என்று சொல்கிறபொழுது, இதுவரை இருந்த எந்த அரசானாலும் சரி, அவர்களுக்கு உதவி என்று சொல்லும்போது, விசைப்படகுக்காரர்களுக்குத் தான் உதவி அளித்துள்ளார்கள். விசைப்படகு வாங்குவோர் பல்லாயிரக்கணக்கான ரூபாய் பணமாகக் கொடுக்க வேண்டும். அப்படி பணம் கொடுக்கிறவர் யாராக இருக்கமுடியும்? பணக்கார மீனவராகத்தான் இருக்க முடியும். ஆகவே பணக்கார மீனவர்களுக்குத்தான் சலுகை கிடைத்ததே தவிர, ஏழை மீனவர்களுக்கு, கட்டுமரத்திலே போகிறவர்களுக்குச் சலுகை கிடைக்கிறதா என்று பார்த்தால், மிகவும் குறைவாகத்தான் இருக்கும், ரூபாய், பைசா கணக்கில் பார்த்தால். ஆகவே, கட்டுமரங்களில் மீன் பிடிக்கும் மீனவர்களுக்குத் தனியாகத் திட்டங்கள் வகுக்க வேண்டும்.

அவர்களுக்கு என்று வலை மற்றும் உபகரணங்கள் எப்படி கொடுப்பது, எவ்வளவு குறைந்த விலையில் கொடுப்பது, எவ்வளவு மானியம் என்பது போன்றவற்றை, திட்டங்கள் தீட்டி—அவர்களுக்கு என்று தனியாக ஒரு திட்டத்தைத் தீட்டி—இந்த அரசு இயங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, பனைவெல்லத் தொழிலாளர்கள் உற்பத்தி செய்கின்ற கருப்பட்டி இடையிலே நல்ல மார்க்கட்டு இல்லாமல் இருந்தது. இப்போது நல்ல விலை கிடைக்கிறது. ஆனால், அவர்கள் சம்பாதிக்கின்ற பணம் வியாபாரிகளுக்கும், இடைத் தரகர்களுக்கும் தான் போய்ச் சேருகிறது. அந்தத் தொழிலாளர்களுக்குப் போய்ச் சேரவில்லை. விவசாயிகளுக்கு ஒரு அமைப்பு ஏற்படுத்துவதாகச் சொன்னார்கள். அதைப்போல இந்த பனை ஏறும் தொழிலாளர்கள் வாழ்வு மேம்பாடு அடைய ஒரு அமைப்பை ஏற்படுத்தி, அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற அளவுக்கு வாய்ப்பு வசதி ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் அவர்களை, பொருளாதாரத்தில் பின்தங்கி இருக்கும் அவர்களை, பொருளாதாரத்தில் தாழ்ந்து கிடக்கும் அவர்களுக்கும் இந்த அரசாங்கம் வீடு கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் பள்ளிக் கூடங்களின் நிலைமை மிகவும் வேதனையாக இருக்கிறது. பல பள்ளிக் கூடங்களில் இடவசதி கிடையாது. இடிந்து விழுந்துவிட்ட கட்டிடங்களும், இடிந்து விழுகின்ற நிலையில் உள்ள கட்டடங்களும்தான் இருக்கின்றன. உயர்நிலைப் பள்ளிகளும், நடுநிலைப் பள்ளிகளும் சரியான கட்டடம் இல்லாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றன. என் தொகுதியில் கருங்கல் கிராமத்தில் அரசு மேல்நிலைப்பள்ளி ஷெட் 3, 4 முறைகள் தீயிற்கு இரையாகிவிட்டது. அங்கே மாணவர்கள் உட்காருவதற்குக் கூட இடம் இல்லாமல் கஷ்டப் பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் உள்ள எத்தனையோ நடுநிலைப் பள்ளிகளையும் எடுத்துச் சொல்ல முடியும் உதாரணத்திற்கு. உதயமார்த்தாண்டத்தில் உள்ள ஒரு நடுநிலைப்பள்ளி எப்போது கீழே விழும் என்ற நிலைமையில் இருக்கின்றது. எனவே, அரசு பள்ளிக் கட்டடங்களுக்கு அதிக நிதி ஒதுக்கி புதிதாகக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பொறுத்தவரையில், உடல் ஊனமுற்றோருக்கு தனியாக இத்தனை பர்சன்டேஜ் என்று கோட்டா நிர்ணயம் செய்துவிட வேண்டும். அவர்கள் படித்துப் பட்டம் பெற்றிருந்தாலும்



அல்லது படித்துவிட்டு வந்திருந்தாலும் அவர்களுக்கு சாதாரணமாக வேலை செய்ய முடியாது. அவர்களுக்கு என்று தனியாக எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்ச் இருந்தாலும் ஒன்றும் செய்வதில்லை. தனியாக எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்ச் இருந்தாலும் சாதாரண சீனியாரிட்டியில்தான் அனுப்புகிறார்கள். எனவே, அவர்களுக்கு என்று தனியாக ஒரு பர்சன்டேஜ் நிர்ணயம் செய்து கொடுத்தாவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குடிநீர் பிரச்சினை. இது மிகவும் பெரிய பிரச்சினையாகும். இன்னும் நாம் கிராமங்களுக்குக் குடிநீர் கொடுக்கவில்லை என்று சொன்னால் இந்த அமைப்பே கேலிக்குரியதாக ஆகிவிடுகிறது. என் தொகுதியில் கருங்கல்லில் குடிநீர் கேட்டிருக்கிறோம். அதை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டும். குமரி மாவட்டத்திலே தேர்தல் காலத்திலே நாங்கள் செல்லும்போது எங்கு பார்த்தாலும் தெருவிளக்கு எரிவதில்லை என்ற புகார்கள் வந்தன. அது பேரூராட்சியாக இருந்தாலும், நகராட்சியாக இருந்தாலும் இதே புகார்தான். (மணி அடிக்கப்பட்டது). தமிழகத்தின் மற்றப் பகுதிகளில் எப்படியோ அது எனக்குத் தெரியாது. ஆனால் தெருவிளக்குப் பிரச்சினையை உடனடியாக நிவர்த்திக்கவேண்டும் என்று கேட்டு, இன்னும் பல பிரச்சினைகளைப்பற்றி பேசவேண்டி இருக்கிறது. (குறுக்கீடு). பட்ஜெட்டிலே பேசிக்கொள்ளலாம் என்று சொல்லுகிறார்கள். அதன்படி பட்ஜெட்டிலே பேசிக்கொள்ளலாம் என்று சொல்லி, வாய்ப்பு தந்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

(மாலை 6-40)

* **திரு. எஸ். ஜகத்ரட்சகன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வரலாற்று சிறப்புமிக்க இம் மாமன்றத்தில் பேசுகின்ற வாய்ப்பு நல்கிய என்னுடைய உத்திரமேரூர்த் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எங்களை எல்லாம் எடுத்து வளர்த்து இந்த அவையில் இங்கே நின்று பேசுகின்ற வகையில் என்னை ஆளாக்கி உருவாக்கிய தானைத் தலைவர், தன்னேரில்லாத புரட்சித் தலைவர் அவர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொன்மனச்செம்மல் எங்கள் புரட்சித் தலைவரின் உன்னதமான கோட்பாடுகளுக்கு உறுதி சேர்க்கும் வகையில், மீண்டும் நீங்கள்தான் வந்து தமிழகத்தை ஆண்டு உயர்த்த வேண்டும் என்ற அடிப்படையில் "வழிந்தோடும் புதுவெள்ளத்தை வரவேற்கும் உழவரைப் போல் எழுந்தோடி வந்து வாக்களித்து" ஈடில்லா வெற்றியை ஈட்டித் தந்த தமிழக மக்களின் ஆர்வக் கனவுகளுக்கு வடிவம் கொடுக்கும் வகையில் மேதகு ஆளுநர் அவர்களின் நல்லுரை அமைந்திருப்பதை நான் மனதார வரவேற்கிறேன். பாராட்டுகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஏழை எளிய மக்கள் நல்வாழ்வும் முழுவாழ்வும் வாழவேண்டும் என்ற அடிப்படையில் நமது சித்திரத் தமிழகத்தின் கீர்த்தி வாய்ந்த அரசியலின் கோட்பாட்டினையும் வர்க்காளர்களின் கடமை உணர்வுகளையும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கல்லிலே பொறித்துக் காட்டிய உத்திரமேரூர் தொகுதி மக்கள் வாக்களித்தபடியே, தேர்தல் வாக்குறுதிகளை மெய்ப்பிக்கும் வகையில் புரட்சித் தலைவரின் ஆட்சி பொலிவாக அமைந்ததாக காட்டும் வகையில் ஆளுநர் உரை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, மொழிப் பிரச்சினையில் எங்கள் இயக்கக் கொள்கை திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இருமொழிக் கொள்கையை நாங்கள் எப்படியும் எப்போதும் நிறைவேற்றுவோம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. நேரத்திற்குத் தகுந்தாற்போல், தாங்கள் சேருகின்ற கூட்டிற்குத் தகுந்தாற்போல் கொள்கையை மாற்றிக்கொள்ளும் போக்கு எங்களுக்கு இல்லை என்பதையும் திட்டவட்டமாகத் தெரிவித்து இருக்கிறோம். இந்தியாவில் ஏறத்தாழ 14 மொழிகள் ஆட்சி மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றில் 13 மொழிகளுக்குப் பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. தமிழ் மொழிக்கு மட்டும் இல்லாமல் இருந்தது. தமிழ் மொழிக்காக உயிர் உள்ளவரை உழைப்பேன் என்று சொன்னவர்கள் இதைச் செய்து காட்ட முடியாது போனார்கள். ஆனால், எங்கள் ஒப்பற்ற தலைவர் தமிழுக்காவே, தமிழ் மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்துக்கொண்ட புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ்ப் பல்கலைக்கழகம் துவங்க இருப்பது குறித்து அறிவிப்புத் தந்து இருக்கிறார்கள். தமிழ் மக்களின்பால் மிகுந்த நம்பிக்கையும் பாசமும் வைத்துள்ள இந்த நல்ல சிறப்பான இந்த அறிவிப்பைச் செய்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் ஒரு படத்தில் ஒரு பாடல் எழுதி இருந்தார்கள். "காகித ஓடம் கடல் அலை மேலே போவது போலே" என்று. மக்களுடைய உணர்ச்சி வெள்ளத்திலே காகித ஓடமாக இப்போது அவர்கள் கவிழ்ந்து போய்விட்டார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேற்றையதினம் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் 'நாமம்' பற்றிச் சொன்னார். தமிழ் மக்களால் தங்கள் நெற்றிகளில் நாமம் பூசப்பட்டவர்கள் நாமத்தைப் பற்றிப் பேசியிருக்கிறார்கள். 'நாமம்



என்ற சொல்லுக்கு பாரதி சொன்னான், "நாமம் என்றால் பெயர், புகழ் என்று". ஆகவே, பாரதி சொல்லியிருக்கிறபடி பார்த்தால் "அண்ணா நாமம் வாழ்க" என்று சொல்கிறபோது, அண்ணா புகழ் வாழ்க, அண்ணா பெயர் வாழ்க என்பதைக் குறிக்கிறது என்பதை நினைவூட்டுகிறேன். அண்ணா என்ற பெயரையே மறந்து விட்டவர்கள், தங்களுடைய நிலைமைக்கேற்றவாறு கொள்கைகளை மாற்றிக் கொள்பவர்கள் இப்படிச் சொல்வதற்கு அருகதை அற்றவர்கள் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்ததாக, ஒரு உறுப்பினர் குறிப்பிட்டார் 'அமரர்' என்று சொல்வது சரியா என்றும் அது தெய்வீகத்தைக் குறிக்கிறது என்றும் சொன்னார்கள். பகுத்தறிவைப் பல ஆண்டு காலமாகத் தமிழகத்தில் பரப்பி வருகிறோம் என்று சொல்லி, அப்படி நீங்கள் சொல்லலாமா என்று கேட்டார்கள். "அமரர்" என்று சொன்னால் "மரணத்தை வென்றவர்" என்று பொருள். பேரறிஞர் அண்ணா அவர்கள் மரணத்திற்கு அப்பாற்பட்டவர். அதனால் தான் அவரை அண்ணா என்று கூறிக்கொண்டு வருகிறோம். நாங்கள் கட்சி மாறியவர்கள் அல்ல, கொள்கையை மறந்தவர்கள் அல்ல. அண்ணாவை மறந்தவர்கள் அல்ல, என்பதை அழுத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய அருமை நண்பர் மாண்புமிகு எதிர்கட்சி உறுப்பினர் திரு. பாபு ஜனார்த்தனன் அவர்கள் பகுத்தறிவைப் பற்றிச் சொன்னார்கள். தாங்கள் தான் பகுத்தறிவுப் பாசறையினர் என்று சொன்னார். அவர்கள் உண்மையான பகுத்தறிவு வாதிகள் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். காரணம், மழையில்லை என்ற காரணத்திற்காக கோயிற் குளத்திற்குச் சென்று தூர் வாரியவர்கள் உண்மையான பகுத்தறிவு வாதிகள் தான் என்று நான் ஒப்புக்கொள்கிறேன். திருவாரூத் தேர் ஓட்டியவர்கள்—ஒப்புக்கொள்கிறேன்—அவர்கள் தான் பகுத்தறிவுவாதிகள். தாங்கள் நடத்தும் பத்திரிகைக்கு 'குங்குமம்' என்ற பெயர் வைத்தவர்கள்—பகுத்தறிவு வாதிகள் என்று நான் ஒப்புக்கொள்கிறேன். நாம் தான் பகுத்தறிவு வாதியாயிற்றே நமக்கு என்ன 'குங்குமம்' வேண்டும் என்று நான் கேட்கிறேன். ஒரு காலத்தில் 'சங்கராச்சாரியாரின் படத்தைப் போட்டவர்கள் நீங்கள்? ஆமாம் பகுத்தறிவு வாதிகள் என்று நான் ஒப்புக்கொள்கிறேன். நாங்கள் பேரறிஞர் அண்ணா வழி வந்தவர்கள். பெரியாரின் கொள்கையில் நின்று கொண்டு இருப்பவர்கள். பெரியார் கொள்கை தமிழ் நாடு முழுவதிலும் நன்றாகப் பரவவேண்டும் என்பதற்காக மாவட்டந்தோறும் பெரியார் நூற்றாண்டு விழா நடத்தியவர்கள் என்பதை நாடு நன்கறியும், பெரியாரின் கொள்கைகளை திட்டங்களை அந்தந்த மாவட்டத்தில் பரப்பியிருக்கிறோம்.

எந்தக் காலத்திலும், எப்படிப்பட்ட எதிர்ப்புகள் வந்தாலும் எவரோடு கூட்டாக இருந்தாலும் எதிர்த்தாலும் எங்களுடைய கோட்பாடுகளிலிருந்து ஒரு கணம் கூட பின்வாங்கமாட்டோம். தந்தை பெரியார் அவர்களின் கொள்கைகளைத் தாங்கிக்கொண்டு, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழியில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை நெஞ்சிலே தாங்கிக்கொண்டு செயற்படுவதிலிருந்து கடுகளவும் தவறமாட்டோம்.

இறுதியாக என்னுடைய தொகுதியைப்பற்றி ஒன்றிரண்டு கூற ஆசைப்படுகிறேன். தமிழ்நாட்டிலேயே மிகவும் பின்தங்கிய பகுதியாக என்னுடைய தொகுதி உள்ளது. உத்தரமேரூர்த் தொகுதி மிகப்பெரிய பகுதியாக, 74 பஞ்சாயத்துக்களைக் கொண்டதாக அமைந்திருக்கிறது. இதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒரக்காட்டுப்பேட்டையில் தரைப்பாலம் ஒன்று அமைப்பது அரசின் ஆய்வில் இருக்கிறது. விரைவினில் அதை அமைத்துத்தர வேண்டுகிறேன்.

அடுத்தபடியாக சிதை நூற்பாலை. இராமன் 14 ஆண்டுகள் வனவாசம் போனதாகப் புராணம் கூறுகிறது. அதைப்போல வாலாஜாபாத்தில் இருக்கிற "சிதை நூற்பாலை" 14 ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கிறது. அதைத் திறப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, என்னுடைய முதலாவதான இந்த உரையை முடித்து அமைகிறேன்.

**திரு. ஜே. எஸ். இராசு :** சார், பாயின்ட் ஆஃப் பர்சனல் எக்ஸ்பிளனேஷன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வேண்டாம். அவருடைய கருத்தைச் சொன்னார். அவ்வளவுதான்.

* **திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு கவர்னர் உரையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கடைசியாக எனக்கு பேசுவதற்கு நேரம் கொடுத்ததற்காகவும் நன்றி செலுத்த கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் ஏதோ 4 பெண்கள்தான் இருக்கிறோம். அதிலும் நான் 1957 முதல் 1967 வரையில் உறுப்பினராக இருந்திருக்கிறேன். எங்கள் தலைவர் வராததால் எனக்கு பேசுவதற்கு வாய்ப்புக் கொடுங்கள் என்று கேட்டு, இன்று காலையிலிருந்து இந்த இடத்தைவிட்டு அகலாமல் இங்கேயே உட்கார்ந்துகொண்டிருக்கிறேன். கடைசியாக இப்போதாவது பேச அழைத்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



இந்த அரசாங்கம் நியாயமானது, நேர்மையாவது என்பதற்கு ஒரு உதாரணத்தை மட்டும் சொல்லிவிட்டு மற்ற விஷயங்களுக்குச் செல்ல நான் விரும்புகிறேன். தேர்தலிலே ஓட்டுக்கேட்டுச் செல்லும்போது அங்கே இருந்த மக்கள் 'நீங்கள் வருவதற்காக, உங்களுக்குப் ஓட்டுப் போடுவதற்காக நாங்கள் தவம் செய்துகொண்டிருக்கிறோம்; நீங்கள் வரவேண்டும், அதன் மூலம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக வரவேண்டும்' என்று சொன்னார்கள். ஏன் அப்படி என்று கேட்டேன். ஏதோ 6, 7 ஆண்டுகளாக நாங்கள் மெடிக்கல் காலேஜ், எஞ்சினீயரிங் காலேஜ் போன்றவைகளுக்கு மனுப் போட்டுவிட்டு, நடையாக நடந்து, பணம் செலவழித்து, இடம் கிடைக்காமல் விட்டுவிட்டோம். இப்போது ஏனோ தானோ என்று மனு போட்டோம். எங்கள் வீடு தேடிவந்து, இடம் கிடைத்தது என்று பெருமையோடு சொன்னார்கள். இதைவிட நியாயமான அரசு, நேர்மையான அரசு, மக்களுக்கு சேவை செய்ய வந்திருக்கிற அரசு என்று சொல்வதற்கு வேறு சான்று தேவையில்லை என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக நம்முடைய மாண்புமிகு கவர்னர் உரையிலே சட்டமன்ற அங்கத்தினர்களைப்பற்றி, மக்களுக்கு சேவை செய்ய வந்தவர்கள், விடிவெள்ளி போன்றவர்கள் என்றெல்லாம் அழகாக கூறியிருக்கிறார்கள். அந்த பெமையை நாம் அத்தனை பேரும் ஏற்றுக்கொண்டு, தொண்டு செய்வதற்கு தீவிரமாக இருக்கிறோம். ஆனால் என்னைப் பொறுத்தவரையில்—நான் ஆஸ்டலிலே தங்கி இருக்கிறேன். அந்த ஆஸ்டல் எப்படி இருக்கிறது என்று சொன்னால், ஓட்டக்கூத்தர் சொன்னதாக நினைக்கிறேன், "நெற்கொண்டு போம் அளவும் நில்லாய் நெடுஞ்சுவரே" என்று சொன்னார். அதைப்போல காலையிலே எழுந்து, நான் சட்டமன்றத்திற்கு வந்துவிடுகிறேன்; திரும்பிச் சொல்லும்வரையில் அந்த சுவர் விழாமல் இருக்க வேண்டுமே என்ற எண்ணம் ஏற்படுகிறது. அந்த அளவுக்கு சுவர்கள் இருக்கின்றன. பெண்கள் தங்கக்கூடிய ஆஸ்டல் பகுதி அப்படியே தனித்தனியாகத் தொங்குகிற சுவர்கள் உள்ளதாக இருக்கிறது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதை கவனிக்க வேண்டும். தேர்தல் முடிந்தவுடன் அதில் வந்து தங்குவார்களே, அதை சரிசெய்ய வேண்டுமே என்ற எண்ணம் அவர்களுக்கு இருந்திருக்க வேண்டும். அங்கே என்ன ஓட்டை, கோளாறு இருக்கிறது என்று அவர்கள் கவனிக்கவில்லை. அதனால் சுவர் ஆடிக்கொண்டே இருக்கிறது.

நான் எப்படி ஆனாலும் பரவாயில்லை; மறு தேர்தல் வரும். ஆனால் என்னைத் தேடி தினசரி 20, 30 பேர்கள் வந்துபோகிறார்கள். அவர்களுக்கு ஒன்றும் ஆகாமல் இருக்க வேண்டும். அவர்கள் வந்தவுடனே சுவரிலே

சாயாதே, சாயாதே என்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அவை முன்னவர் அவர்களும், பொதுப்பணித் துறை அமைச்சரவர்களும் தயவு செய்து உடனடியாக அதைப் பார்வையிட்டு, ரிப்பேர் செய்து, உயிரை கையிலே பிடித்துக்கொண்டிருக்கிறோம், எங்களை காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாலை 6-50)

அடுத்து நாம் சுதந்திரம் அடைந்து 33 ஆண்டுகள் ஆகிவிட்டன. காங்கிரஸ்காரர்கள் 20 ஆண்டுகள் அரசாங்கத்திலே இருந்தோம், இல்லை என்று சொல்லவில்லை. ஆனாலும் தொகுதிகளுக்குச் செல்லுகின்றபோது ரோடு வசதி இல்லை தண்ணீர் வசதி இல்லை என்று எல்லோரும் சொல்லக்கூடிய நிலை இருக்கின்றது. ஆகவே இப்படிப்பட்ட குறைகளை உடனடியாகப் போக்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். ரோடு, லைட், குடிதண்ணீர் இவற்றுக்கெல்லாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சரவை எழுதி உடனடியாக அதாவது 90 நாட்களுக்குள்ளாக இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்தாக வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். லிங்க் ரோட்ஸ் என்று இருப்பதை முதலில் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தண்ணீருக்காக குழாய்க் கிணறு போட்டிருக்கிறார்கள். அவையெல்லாம் சரியாக இல்லாத நிலை இருக்கின்றன. ஆகவே இவைகளை எல்லாம் எவ்வளவு சீக்கிரத்தில் தீர்க்க முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் தீர்ப்பதற்கு நம்முடைய அமைச்சரவை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சொல்லி விரைவிலே தீர்க்க வேண்டும் என்று பணிவோடு வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து லைட் ஒரு ஊரிலே கூட இல்லை. போகிற இடங்களில் எல்லாம் அதுபற்றிச் சொல்லப்படுகிறது. இருக்கின்ற லைட்டும் எரியவில்லை, ஆகவே மின்சாரத்துறையிலே இருந்து லைட்டுகளை எல்லாம் மாற்றி அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். இதையெல்லாம் 30 நாட்களுக்குள் போட்டுவிடலாம். ஆகவே அதையும் போடுவதற்கு ஏற்பாடு செய்தால் உங்களுக்கு நேர்மையான முறையிலே ஓட்டளித்தவர்களுக்கு பரிகாரங்கள் செய்ததாக இருக்கும் என்பதை மிகவும் பணிவோடும் அன்போடும் அமைச்சரவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வேலையில்லாத் திண்டாட்டம்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். கிராமப்புறங்களிலே வேலை இல்லாதவர்களுக்கு என்று வேலைக்கு உணவு திட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தின் படி வேலை



செய்பவர்கள் மூலம் தண்ணீர் கிடைக்கக்கூடிய இடங்களிலிருந்து தண்ணீர் கிடைக்காத இடங்களுக்கு தண்ணீர் கொண்டு வருகின்ற அளவில் குழாய் கிணறுகளை அமைக்கும் பணியைச் செய்யலாம். அப்படியெல்லாம் செய்தால் இந்த குடிதண்ணீர் பிரச்சினையை தீர்ப்பதற்கு வழி வகுத்தவர்கள் ஆவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து படித்து வேலையில்லாதவர்களுக்கு 50 ரூபாய் உதவித்தொகை கொடுக்கிறோம். ஆனால் அவர்களுக்கு உதவக்கூடிய வகையில் சிறு தொழில்களை ஆங்காங்கே ஏற்படுத்தவேண்டும். எஸ்.எஸ்.எல்.சி., பி.யு.சி. படித்துவிட்டு வருகின்றவர்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள். அதிலே பெண்கள் நிறையப்பேர் இருக்கிறார்கள். ஐ.சி.டி.எஸ். என்ற ஒரு ஸ்கீம் இருக்கின்றது. அதன்மூலம் பலருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டது. ஆகவே மத்திய அரசை அணுகி மறுபடியும் அந்தத் திட்டத்தை தமிழகத்திலே ஏற்படுத்துவதற்கு வழிவகை செய்யவேண்டும். அப்போது நிறையப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க முடியும். தயவுசெய்து அந்தமாதிரி திட்டங்களை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தப்படியாக என். ஜி. ஓ. பிரச்சினை இருக்கின்றது. அவர்கள் எல்லோரும் மாதாமாதம் ஒரு ரூபாய் கொடுக்கிறார்கள். அவர்களில் யாரேனும் இறந்துவிட்டால் 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோம். இது ரொம்பவும் வரவேற்கக்கூடியதுதான். ஆனால் அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்றால் ஒரு ரூபாய்க்கு பதிலாக 10 ரூபாய் கொடுக்கிறோம், அந்த பத்து ரூபாயை வைத்துக்கொண்டு எங்களுக்கு ரிட்டையர் ஆகும்போது 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். கிட்டத்தட்ட 15 இலட்சம் என்.ஜி.ஓ. இருக்கிறார்கள். அவர்களிடம் மாதம் 10 ரூபாய் வசூலிப்பது என்றால் கிட்டத்தட்ட $1\frac{1}{2}$ கோடி ரூபாய் நமது அரசாங்கத்திற்கு கிடைக்கும். ஆகவே அந்தத் திட்டத்தை அமல்படுத்தினால் நல்லது. மேலும் ரிட்டையர் ஆகும் வயது வரம்பை இப்போது 58 என்று உயர்த்தி இருப்பதால் இன்னும் $2\frac{1}{2}$ வருடங்களுக்கு யாரும் ரிட்டையர் ஆக மாட்டார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை அமல் படுத்தினால் அரசாங்கத்திற்கு மாதாமாதம் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் கிடைக்கும். மேலும் அவர்கள் ரிட்டையர் ஆகும்போது 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பதன்மூலம் ஒரு நல்ல பெயரை இந்த அரசாங்கம் பெற்றுக் கொள்ளும் என்பதை வலியுறுத்தி கூறிக்கொள்கிறேன்.

அடுத்து ஆசிரியர்களுக்கு 10 ஆண்டு 15 ஆண்டுகள் ஆகியும் வேலை கிடைக்காத நிலை இருக்கின்றது. ஆகவே எங்கெங்கே 30 குழந்தைகள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் ஒரு ஆசிரியர் போடவேண்டும் என்ற நிலையை

ஏற்படுத்தி ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே வைகை ஆற்றிலிருந்து நீரை கொண்டு வந்து ஒரு 10,000 (பத்தாயிரம்) ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதை நான் 62-லிருந்து கேட்டு வந்தாலும், நடுவில் என்னுடைய சட்டமன்ற தொடர்பின் தொடர்ச்சி விட்டுப் போய்விட்டது. தொடர்ந்து சட்டமன்றத்திற்கு நான் வர வாய்ப்பிருந்தால், வாய்ப்பு ஏற்பட்டிருந்தால், இதை நிறைவேற்ற முயற்சி எடுத்துக் கொண்டிருப்பேன். நமது அமைச்சரவை இந்த விஷயத்தில் எப்படியாவது முயற்சி செய்து விவசாயிகளுக்கு, அவர்களின் நிலங்களுக்கு தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்தால், என்னுடைய தொகுதி மக்கள் சார்பிலே, ஏழை விவசாயிகளின் சார்பிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள நான் கடமைப்பட்டவளாவேன்.

கோவையிலும் திருச்சியிலும் இரண்டு புதிய பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்த போகிறீர்கள். பாராட்டக் கூடியது, வரவேற்கக் கூடியது. தமிழ் பல்கலைக் கழகமும் உருவாகப் போகிறது. மகிழ்ச்சி. வரவேற்கிறேன். அதே சமயத்தில் இன்னொன்றை நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். நம்முடைய பல்கலைக் கழகத்தில் படித்து விட்டு வரக்கூடிய மாணவ, மாணவிகளின் மார்க்கைப் பார்த்தால் மிகவும் குறைவாக இருக்கிறது. மற்ற பல்கலைக் கழகங்களிலிருந்து படித்து வெளி வந்த மாணவர்களின் மார்க்குகளையும், நம்முடைய பல்கலைக் கழகத்திலிருந்து படித்து வெளிவந்த மாணவர்களின் மார்க்குகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது நம்முடைய பல்கலைக் கழக மாணவர்களின் மார்க்கு மிகவும் குறைவாக இருக்கிறது. பாஸ் பண்ணியவர்களைப் பற்றித்தான் சொல்கிறேன். ஏதோ பார்டரில் பாஸ் பண்ணியிருக்கிறார்கள். அவர்கள் பாஸ் பண்ணி என்ன உபயோகம்? வேலையும் கிடைக்க மாட்டேன் என்கிறது. மேற்கொண்டு படிக்கவும் முடியவில்லை. அந்த மார்க்குக்கு வேலையும் கொடுக்க மாட்டார்கள். மேற்படிப்பிற்கும் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். அதனால் அவர்களுக்கோ நாட்டிற்கோ என்ன உபயோகம்? அதனால் கொஞ்சம் மார்க் கூட அவர்களுக்குப் போட வேண்டும். அதிகமாகப் போடச் சொல்லவில்லை. பாஸ் பண்ணியவர்களுக்கு 25 மார்க் பாஸ்மார்க் என்றிருந்தால் மேற்கொண்டு 5 மார்க் போட்டால் அவர்களுக்கும் வேலை கிடைப்பதற்கு உபயோகமாக இருக்கும். பாஸ் பண்ணாதவர்களைப் பற்றி சொல்லவில்லை. அவர்கள் இன்னொரு முறை படிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இருமொழி





திட்டத்தை அமுல் நடத்தும் நம் அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். அதே சமயம் வேறு மொழி படிக்க விரும்புபவர்களையும் தடுக்காமல் இருக்க வேண்டுகிறேன். ஆனால் பாஸ் பண்ணுகிற மாணவ, மாணவிகளுக்கு கொஞ்சம் கூடுதலாக மார்க் போட்டால் அவர்களுக்கு வேலை தேடுவதற்கோ, மேற்படிப்பு படிப்பதற்கோ உதவியாக இருக்கும்.

இன்னொரு விஷயம் இருக்கிறது. அதோடு முடித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் வத்தலகுண்டு அதிக ஜனத்தொகை கொண்ட இடம். பக்கத்திலிருக்கும் ஊர்களில் உள்ளவர்கள் கோடைக்கானல் மற்றும் சுற்றுப்புற நகரங்களில் உள்ளவர்கள், அதிகமாக வருகிற ஊர் இது. இங்கே 32 படுக்கைகள் கொண்ட ஒரு ஆஸ்பத்திரியை அமைத்து தந்தால் மிக நன்றாக இருக்கும். இந்த அமைச்சரவைக்கு நான் கடமைப்பட்டவள் ஆவேன். அடுத்து கடைசியாக, தலைவர் அவர்கள் அனுமதிக்க வேண்டும் முக்கியமான விஷயம், அதை சொல்லிவிட்டு முடித்துக் கொள்கிறேன். சென்னையிலே கணவனோடு படுத்து தூங்கிக் கொண்டிருந்த பெண்ணை மான பங்கம் செய்ததாக பத்திரிகையில் பார்த்தேன். இது எவ்வளவு வேதனையான விஷயம். அந்தச் செயலைச் செய்தவன் யாராக இருந்தாலும் சரி, எப்பேற்பட்ட அந்தஸ்த்தில் இருந்தாலும் சரி அவனைக் கண்டு பிடித்து தண்டிக்க வேண்டும். குடும்ப பெண்ணுக்கு மானபங்கம் ஏற்படுத்துபவனை கடுமையாக தண்டிக்க வேண்டும். இரண்டு கைகளையும் வெட்டிப்போட வேண்டும். அவர்களை கண்டு பிடித்து தண்டிப்பதற்கான வழி வகைகளை இந்த அமைச்சரவை விரைவில் செய்ய வேண்டும். அதை இந்த அமைச்சரவை கட்டாயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

* திருமதி தா. இராசாம்பாள் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களது உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தையொட்டி நான் சில கருத்துக்களை இந்த மன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன்.

இந்த அரசு விவசாயிகள் நலக் குழு ஒன்றை அமைக்க இருப்பதை வரவேற்கிறேன். ஆனால் அதை எவ்வளவு காலத்திற்குள் அமைக்கப் போகிறோம் என்பதை முதல்வர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளது கடன் சுமையைக் குறைக்க மாநில நிதி வசதியைக் கொண்டே கடன் தள்ளுபடி செய்வோம் என்று முன்பு தேர்தல் அறிக்கையில் கூறிவிட்டு கடன் நிவாரணத்திற்காக மத்திய அரசை அணுகுகிறோம் என்று இப்போது திசை திருப்பி இருப்பது விவசாயிகளை ஏமாற்றுவதாக இருக்கிறது.

[திருமதி தா. இராசாம்பாள்] [1980 ஜூன் 27.

விவசாயிகள் தவணை தவறிய கடன்காரர்களாக இருப்பதாலும் அரசாங்கத்தின் கடன் நிவாரணங்களை எதிர் பார்த்துக் கொண்டிருப்பதாலும் கூட்டுறவு சங்கங்கள் விவசாயிகளுக்கு மிகவும் அவசியமான பயிர் மகசூல் கடன்களைக் கூட தருவது இல்லை.

ஆகவே, தவணைத் தவறிய விவசாயிகளும் நடப்பு பருவத்திலேயே பயிர்க் கடன்களைப் பெறும் வகையில் ஓர் இடைக்கால ஏற்பாடாக கூட்டுறவு விதி முறைகளை மாற்றுவதானாலும் மாற்றி, அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய கூட்டுறவு நிறுவனங்களுக்கு எவ்வளவு நாளில் தேர்தல்கள் நடத்தப் படும் என்று ஆளுநர் உரையில் குறிப்பிடப்படவில்லை. மூன்று மாதங் களுக்குள்ளாகவாவது தேர்தல்களை நடத்தி நிர்வாகங்களைப் பொது மக்களின் பிரதிநிதிகளிடத்திலே ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

மின்சார உற்பத்தியில் அக்கறை காட்டாமலேயே கடந்த சில மாத காலமாய் விநியோகத்தில் மட்டும் முனைந்து நின்றதன் விளைவாக இன்று மிக நெருக்கடியான பற்றாக்குறையைச் சந்தித்து விட்டோம். தாறுமாறான கொள்கைகளை இவ்விஷயத்தில் பின்பற்றியதாலும் நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் முறைகேடாக அணுகியதாலும் விவசாயிகளது மோட்டார்களில் ஏராளமானவை தீய்ந்து போயின. இவ்வாறு ஏராளமான மோட்டார்கள் தீய்ந்து போனதாலும், போதுமான நேரத்திற்கு மின்சாரம் வழங்கப்படாததாலும் பல லட்சம் பெறுமானமுள்ள பயிர்கள் பட்டுப் பாழாகிவிட்டன. இதனால் விவசாயிகளுக்கு பெருமளவில் இழப்பு ஏற்பட்டுள்ளது.

குறிப்பாக எனது தலைவாசல் தொகுதியில் இருக்கின்ற மின் விநியோக அமைப்பை நீர ஆராய்ந்து அவற்றைச் சீர்திருத்தம் செய்து ஒழுங்கு படுத்தினாலேயே, தமிழ்நாட்டிலுள்ள மின்சாரத் துறையின் குறைகள் ஓரளவு குறையும் என்று நம்புகிறேன்.

மின் உற்பத்திக்கு முன்னுரிமை தந்து கீழ் மேட்டூர் திட்டத்தையும், மேட்டூர் அனல் மின் திட்டத்தையும் விரைவில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.



1980 ஜூன் 27] [திருமதி தா. இராசாம்பாள்]

(இரவு 7-00)

தாழ்த்தப்பட்டோருக்காக சிறப்பு ஐந்தாண்டுத் திட்டம் ஒன்றை தமிழ் நாடு அரசு நிறைவேற்ற இருப்பதை வரவேற்கிறேன். அத்திட்டம் அரிஜனங் களது மெய்யான பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதாக இருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலம் உள்ள அரிஜன விவசாயிகளும் தங்களது பம்ப் செட்களுக்கு மின் இணைப்பு கோரியிருக்கிறார்கள். கணக்கிட்டுப்பார்த்தால் மாவட்டத்திற்கு இவர்கள் 100 அல்லது 200 பேர்கள் மட்டும்தான் இருப்பார்கள். மற்ற சலுகைகளைப் போலவே இதிலும் இவர்களை தனி வரிசைப்படுத்தி முன்னுரிமை தந்து இவர்களது பம்பு செட்டுகளுக்கு விரைவில் மின் இணைப்பு கொடுக்க இந்த அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அமைப்பே இல்லாத தினக்கூலிகளான தொழிலாளர்களுக்கு அமைப்புக் களை ஏற்படுத்தி அமைப்பு மூலமாயுள்ள தொழிலாளர்கள் பெறும் எல்லாச் சலுகைகளையும் பெற்றுத் தரத்தக்க வாய்ப்பினை உண்டாக்குவதாக சென்ற முறையும் இந்த அரசு அறிவித்திருந்தது. ஆனால் அது ஏட்டோடு நின்று போய் விட்டது. அதுவேதான் இன்னும் ஆளுநரது உரையில் இடம் பெற்றிருக்கிறது. இனியாவது குறிப்பிட்ட காலவரம்பிற்குள் அந்தப் பாமர தொழிலாளர்கள் நலனைக் காக்க இதயபூர்வமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம் மாநிலத்திலிருந்து ஏராளமான தொழிலாளர்களை சில தரகர்கள் அதிகக் கூலிக்கு ஆசை காட்டி அழைத்துச்சென்று விஜயவாடா, குண்டூர் பகுதிகளிலே உள்ள பெரிய காண்ட்ராக்டர்களிடம் அடகு வைத்து விடுகிறார்கள். பின் குறைந்த கூலியினால் வாழ முடியாமல் அவர்கள் திண்டாடுகிறார்கள். தரகன் பெற்றுச் சென்ற பெருந்தொகை இந்தத் தொழிலாளர்களது தலை மீது கடனாக சுமந்துவிடுகிறது. இதனால் அந்தத் தொழிலாளர்கள் அங்கே இன்று கொத்தடிமைகளாக நடத்தப்படுகிறார்கள்.

ஒரு விதவைத் தாய் தனது கடனுக்கு ஈடாக இளம் குழந்தைகளை அடகு வைத்து வந்துள்ள சோகக்கதையை ஒரு கேள்வி மூலம் இந்த மாமன்றத்திற் குத் தகவல் தந்திருக்கிறேன்.

தனித்தனியாக இல்லாமல் ஒட்டுமொத்தமாக அங்கே அனாதைகளாகயுள்ள அப்பாவிகளை இந்தக் கொத்தடிமைக் கொடுமையிலிருந்து விடுதலை செய் வதற்கு தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திருமதி தா. இராசாம்பாள்] [1980 ஜூன் 27

என்னுடைய தொகுதி மக்கள் கூட இந்தக் கொடுமைகளுக்கு ஆளாகி அங்கேயிருந்து வர இயலாமல் தவிக்கின்றார்கள் என்பதையும், இதுபற்றி இந்த அரசுக்கு ஏற்கனவே ஐக்கிய விவசாய சங்கத் தலைவர் குறிப்பு ஒன்று தந்துள்ளார் என்பதையும் ஆனால் அதன்மீது இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். என் தொகுதி மக்கள் என்று மட்டுமல்ல, என் உறவினர்கள் 200 பேர்களுக்கு அதிகமாக குழந்தைகளுடன், கணவன் இங்கே திரும்பி வந்து அவர்கள் அங்கேயே அனாதைகளாக கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

பாசன வசதிகளைப் பற்றி குறிப்பாக ஒன்றை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அடிக்கடி வறட்சி பேலிடுகிற நமது மாநிலத்தில் மழைக் கால நீரை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக ஆங்காங்கே தேக்கமுடியுமோ அவ்வளவையும் தேக்குவதற்கு சரியான திட்டங்களைத் தீட்டி வறட்சியிலிருந்து மீட்கவேண்டும். ஆளுநர் உரையில் இதற்கு போதுமான முன் உரிமை தரப்படவில்லை.

அணைத் திட்டம், ஏரித் திட்டம், கசிவுநீர் குட்டைத் திட்டம் தூர்ந்து போன ஏரி குளங்களை தூர் எடுக்கும் திட்டம், கால்வாய்களை நவீனப்படுத்தும் திட்டம் ஆகியவற்றினை நிறைவேற்றினால்தான் நம் விவசாய நிலங்களுக்கு தடையின்றி பாசனவசதி கிடைக்கும்; கிணறுகளில் நீர் பெருகும், கடுமையான சோதனைகளில் நம்மை அடிக்கடி ஆழ்த்திவருகிற குடிநீர்ப் பஞ்சமும் தணியும். ஆகவே அரசு இதில் முனைந்து செயல்படவேண்டும்.

எனது தொகுதியில் சொக்கனார் ஏரித்திட்டத்தையும், ஆறகலூர் ஏரி தூர் எடுக்கும் திட்டத்தையும், காட்டுக்கோட்டை அணை, தலைவாசல் அணை ஆகியவற்றிலிருந்து பிரிந்துவரும் ஆற்றுவாய்க்கால்களை அகலப்படுத்தி நவீனப்படுத்தும் திட்டத்தையும், நாவலூர் ஏரிக்கு சுவேத நதியிலிருந்து கால்வாய் வெட்டும் திட்டத்தையும் உடனடியாக நிறைவேற்றி அங்கு நிலவும் வறட்சியைப் போக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளது துயரம் ஒரு தனி காவியமாக இன்று உருவாகி வருகிறது. உழவனின் உள்ளத்தில் எழுகின்ற புயலை அடக்கினால்தான் நாட்டில் அமைதி நிலவும் என்பதை இந்த அரசு அனுபவபூர்வமாக உணர்ந்திருக்குமானால் விவசாயிகள் குறைகளை விரைவில் தீர்த்து வைக்க இந்த அரசு முனைப்பாக செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1980 ஜூன் 27] [திருமதி தா. இராசாம்பாள்]

பள்ளிக்கூட பிள்ளைகள் அனைவருக்கும் புத்தகங்கள் வழங்கும் விதத்தில் மிகவும் காலதாமதம் ஏற்படுகிறது. அதனால் பிள்ளைகளுக்குத் தேவையான புத்தகங்களை சிலர் பழைய புத்தகங்களாகப் பெற்றுவிடுகின்றனர். சிலர் புதிய புத்தகங்களைப் பெறுகிறார்கள். புத்தகங்களைப் பெற்ற பின் அவர்களுக்கு புத்தகங்கள் வழங்கினால் இத்திட்டத்தினால் எவ்விதமான பயனும் இல்லை. ஆகவே பள்ளிக்கூடங்கள் திறந்தவுடன், பிள்ளைகளுக்கு பாடங்கள் ஆரம்பிப்பதற்கு முன்னால் கூடுமானவரையில் புத்தகங்களை வழங்கினால்தான் அவர்களுக்கு அனுகூலமாக இருக்கும் என்று கூறி இந்த வாய்ப்பினை அளித்த இந்த மன்றத் தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை (28—6—1980) 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7.05 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்'

10. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தில் சில
திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 13—12—1979 ஆம் தேதி
யிடப்பெற்ற 3066 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்
நாடு 1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (தமிழ்நாடு
சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

11. தமிழ்நாடு 1940 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தில் சில
திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் 24—3—1930 ஆம் தேதியிடப்
பெற்ற 888 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு
1939 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம்
4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

12. தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு மதுபான (உரிமம்-அனுமதிச்சீட்டு) விதி
களில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் (மதுவிலக்கு-
ஆயம் IV) 7—9—1979 ஆம் தேதியிடப்பெற்ற 2253 ஆம் எண் அரசாணை
யில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்
தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன்
வைக்கப்பெற்றது.]

13. தமிழ்நாடு 1960 ஆம் ஆண்டு மதுபான (உரிமம்-அனுமதிச்சீட்டு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் (மதுவிலக்கு-ஆயம் IV ) 3—11—1979 ஆம் தேதியிடப்பெற்ற 2745 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் போவைமுன் வைக்கப்பெற்றது.]

14. தமிழ் நாடு 1960 ஆம் ஆண்டு மதுபான (உரிமம்—அனுமதிச் சீட்டு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் மதுவிலக்கு—ஆயம் IV ) 13—8—1979 ஆம் தேதியிடப்பெற்ற 2024 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் போவைமுன் வைக்கப்பெற்றது.]

15. உள்துறையில் 14—6—1979 ஆம் தேதியன்று வெளியாகி, 4—7—1979 ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் பாகம் II பிரிவு-2 பக்கங்கள் 356-358-ல் (ஆங்கிலத்தில்) வெளியான II (2) உள்துறை/3[illegible] ஆம் எண் அறிவிப்பில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் போக்குவரத்து I ) 23—2—1980 ஆம் தேதியிடப்பெற்ற 514 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் போவைமுன் வைக்கப்பெற்றது.]

16. பயணியர் வண்டிகளின் உரிமையாளர்கள் வைத்து வருகிற அ[illegible] பயன்படுத்துகிற பயணியர் வண்டிகளைப் பொறுத்தவரையில் 1979-80 ஆம் ஆண்டிற்கு 66 சதவீதம் என்ற வரிவீதத்தில் கூடுதல் மேல்வரி விதிப்பது குறித்து உள்துறையின் (போக்குவரத்து I ) 14—3—1980 ஆம் தேதியிடப்பெற்ற 790 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1[illegible] மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்[illegible]74) [illegible] (2) பிரிவின்கீழ் போவைமுன் வைக்கப்பெற்றது.]

இ. அ[illegible]கள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை

2305

V211.31 N80

N80.1.6

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY.

1. Account Test Institute, Egmore, Madras-8.
2. The City Book Company, Madras-4.
3. Higginbothams (Private) Limited, Madras-2.
4. P. Varadachary and Company, Madras-1.
5. C. Subbiah Chetty and Company, Madras-5.
6. The Universal Book House, Moore Market, Madras-3.
7. C. Sitharaman and Company, Madras-14.
8. Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9. C. Venkatesan Chetty and Company No. 8-C, Pycrofts Road, Madras-5.
10. The South India Saiva Siddhanta Works Publishing Society, (Tirunelveli) Limited, Madras-1.
11. The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12. New Century Book House (Private) Limited, Madras-2.
13. Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1. A. Venkatasubban and Company, Velore (North Arcot) District.
2. Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3. P. V. Nathan and Company, Kumbakonam (Tanjore) District.
4. Appar Book Stall, Thanjavur.
5. P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6. Palaniappa Bros., Tiruchirappalli-2.
7. S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8. B. Aruldoss, Villupuram (South Arcot District).
9. Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10. Mercury Book Company 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11. S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchi-1.
12. Ganesh Stores, South Car Street, Sivakasi.
13. Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14. A. K. Chandriah Chettiar and Sons, Salem-1.
15. Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16. Meenakshi Pathippagam, Pudukkottai.
17. K. V. Narayana Iyer and Sons, Dindigul, Madurai District.
18. Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19. Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20. Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-18.
21. Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22. Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23. Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24. Ajentha Book Centre, Salem-1.
25. Sri Vidya, 63, Tennure High Road, Tiruchy-2.
26. Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi Madurai-1.

### IN OTHER STATES

1. Jain Book-Agency, New Delhi-1.
2. International Book House, Trivandrum.
3. The Book Syndicate, Hyderabad-1.
4. Labour Law Publications, Hyderabad.
5. Puthaghalayam, Pondicherry.
6. Prabu Book Service, Gurgaon, Haryana.
7. K. P. Bagchi and Company, 286, B. B. Ganguli Street, Calcutta-17.

---

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.